# இலக்கிய வரலாறு

முதற் பகுதி

கழக வெளியீடு

அரசு

கழக வெளியீடு, கக௪

# இலக்கிய வரலாறு

## (முதற் பகுதி)

ஆசிரியர்

தாகூர் சட்ட விரிவுரையாளர், தமிழ்ப் பேராசிரியர்

திரு கா சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்

எம் ஏ, (ஆங்கிலம்), எம் ஏ, (தமிழ்), எம் எல்

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்

திருநெல்வேலி-6 சென்னை-1

1960

© காந்திமதிநாதன் சுப்பிரமணிய பிள்ளை (1889-1945).

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Ed 2 Jan 1958
Reprint Aug 1960

O31v211.N5
K0.1

# ILAKKIYA VARALARU - I

Appar Achakam, Madras-1.

# பதிப்புரை

நாடின பண்பாட்டையும், நாகரிகத்தையும் நன்கெடுத்துக் காட்டுவன பொய்யா நாவின் நல்லிசைப் புலவர் நவின்றருளிய நயனுர் இலக்கண இலக்கிய நன்னூல்களேயாகும். உடலாகிய கூட்டுக்கு இன்றியமையாச் சிறப்பிற்ருய் ஆருயிர் அமைந்திருப்பது போன்று வீட்டுக்கு மெய்யுழைப்பாளர்கள் உயிராவர். நாட்டுக்கு அறுவகை உறுப்புக்களுடன் பொருந்திய ஆட்சித் தலைவர் உயிராவர். அத் தலைவர்க்கு நல்லிசைப் புலவர் நல்லுயிராவர். அப் புலவர்க்கு "ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்ருேர்" உயிராவர். சான்ருேர் எனினும், தெய்வப் பெற்றியரெனினும், மெய்யறிவினரெனினும், முற்றுணர்வினரெனினும், சிவஞானத்தரெனினும், நல்லார் எனினும் ஒன்றே.

நாடும் மொழியும், நன்னெறியும் ஒருவர்க்கு உறையுளும், உடலும், உயிரும் போல்வன. இம்மூன்றனுள் நடுநின்ற மொழி விழியொப்பது. விழியிலார் மக்கட் பிறப்பின் பெரும் பயனைச் சிறப்புற எய்தார். அதுபோன்று தாய்மொழிப் பற்றும், அம்மொழியினை நாளும் வளம்படுத்தும் உளமிகு செல்வமும் உடையாரே தமக்கும் பிறர்க்கும் நன்னலம் புரியும் திருவுடையாராவர். அவர்களே பரந்துபட்ட இவ்வுலகினுக்குக் கலங்கரை விளக்காய் எடுத்துக் காட்டும் எழிலுடையாராவர். அவர்கள் ஆக்கியருளிய பழம்பெருஞ் செல்வமாம் நூல்களை அவர்தம் கால்வழியினர் பொன்னேபோற் போற்றியொழுகுங் கடப்பாடும் கிழமையும் உடையாராவர். நாம் பண்டுள்ள நூல்களைக்

கண்டுணர்ந்தாலன்றி உண்மையான ஒழுக்கத்தில் ஒழுக லும், இன்பநலம் எய்திச் சிறப்புற வாழ்தலும் இயையா என்க.

தொன்றுதொட்டு இன்றுகாறும் அழியா நாகரிகப் பண்புடன் நிலைபெற்றுவரும் நன்மக்கள் நம் செந்தமிழ் மக்களே. அவ்வுண்மையினை நடுநின்றுய்ந்த மேனுட்டாசிரி யர்களும், வடநாட்டாசிரியர்களும், நம் நாட்டாசிரியர்களும் வலிய பல சான்றுகளுடன் நிலைநாட்டியுள்ளார்கள். உலகுக்கு நாகரிகம் வழங்கிய நல்லாரும் நம் முன்னேரே யாவர். பல நூருயிரம் ஆண்டுகளுக்குமுன் உலகத்தில் முதன்முதல் மக்கள் தோன்றி வாழ்வதற்குப் பல்லாற்று னும் வாய்ப்புடைய இடம் உலக நடுக்கோட்டை யடுத்த தென்பாங்கரேயாம் என்பது நிலநூல்வல்லார் ஆய்ந்து கூறிய முடிபாகும். அம் மக்கள் படிப்படியாக எல்லா வகையிலும் வளர்ச்சியுற்று நனிநாகரிகராய் வாழ்ந்த இடம் கடல் கொண்டொழித்த பெருநிலப் பரப்பாகிய குமரிக் கண்டமாகும். இப்பெருநிலத்தே நானிலவளமும் செழித்து நல்லாட்சியும், நல்லிசைப் புலவர்களும், நல்லார்களும் நன்னெறி யொழுகி வசையில் இசையுடன் வாழ்ந்தனர். அக்காலத்துத் தலைச்சங்கமும் நடைபெற்று வந்தது. அந்நிலம் கடலுள் மூழ்கப் பின் திருச்சீரலைவாயாகிய கபாட புரத்தின்கண் இடைச்சங்கம் நிகழ்ந்தது. அதுவும் சிறு கடல்கோள் ஒன்றுல் அழிவெய்திற்று. பின் கூடலம்பதி யாகிய தென்மதுரைக்கண் கடைச்சங்கம் நிகழ்ந்தது. அதுவும் வேற்றுப்புலமன்னர், வேற்றுமொழியினர், வேற்று நெறியினர் வருகையினல் அருகுவதாயிற்று. தலைச்சங்க இடைச்சங்க நூல்களாக நமக்கு இஞ்ஞான்று கிடைப்பன சிற்சில பாட்டுக்களும், முழுமுதற் றனிப்பெரு நூலாம் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியமுமேயாம்.

கடைச்சங்க நூல்களாக உள்ளன எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் பயனுர் பழம்பெரு நூல்களாகும். அதன்பின் தோன்றியவை சிவ நெறிச் செல்வர்களும், திருமால் நெறியினரும், புத்த, சமண கிறித்துவ, மகமதிய நெறியினரும் ஆக்கிய நெறிநூல் களும், இலக்கண இலக்கியங்களும், அளவை நூல்களும் பிறவுமாகும். இவற்றுள் சிலபல உருவகக் கதை தழுவிய புராணங்களாகும். பிறப்பு இறப்பு இல்லா முழுமுதற் கடவு ளுக்குப் பிறப்பு இறப்புக் கூறும் புனைந்துரைக் கதைகளும் பெருகின. இவற்றின் சிறப்புச் சிறப்பின்மைகளை நடுநிலை யுடன் ஆய்ந்து உண்மை காட்டும் ஒப்பிலா ஒருநூல் இக் காலத்துக்கு இன்றியமையாது வேண்டப்படுவதாயிற்று.

அக்குறையினை நிறைவு செய்து பெருநூலொன்று ஆக்கித் தந்த பெரியார் பேராசிரியர் மும்மொழி வல்லார், தாகூர் சட்ட விரிவுரையாளர், தமிழிலும் ஆங்கிலத்திலும் முதுபுலவர் என்னும் எம். ஏ. பட்டமும், சட்டக்கலையிலும் அதுபோல் எம். எல். பட்டமும் எய்திப் பன்னூலாசிரிய ராய்ப் பயன் பல அளித்துத் திகழ்ந்த சிவத்திரு, **கா. சுப்பிர மணிய பிள்ளை**யவர்களாவர். அதுவே **"இலக்கிய வரலாறு"** என்னும் இந் நூலாகும். இஃது இரண்டு பகுதிகளை யுடையது. இதன்கண் எல்லாத் தமிழ் நூல்களின் இயல் களும், அவற்றை விளக்கும் இனிய பாட்டுக்களும், அவ்வந் நூல்களின் ஆசிரியர்களும், அக்காலங்களும், அக்காலங் களில் செந்தமிழையும், செந்நாப் புலவர்களையும் சிறப்புற ஓம்பி வளர்த்த முடியுடை வேந்தர், குறுநில மன்னர், பெருநிலக் கிழார், பெரும்பொருட் புரவலர்கள் ஆகியோர் இயல்புகளும் செவ்விதாக விளக்கப்பட்டுள்ளன. இவ் வொரு நூலே உண்மைகாணும் வேட்கையோடு ஆய்வார்க் கும், நூல்களின் சிறப்புணர்ந்து கற்பார்க்கும், கற்பிப்

பார்க்கும், அம்முறையின் நூல்யாப்பார்க்கும், சிறந்த வழி காட்டியாகும்.

இஃது இருபகுதிகளாக அமைந்துள்ளது. முதற்பகுதி "தமிழர்கள் யார்?" என்பது முதலாக "கடைச்சங்க நூல்கள்" ஈறுக ஏழு பெருந்தலைப்புகளையும் பல உட்டலைப்பு களையும் கொண்டு திகழ்கின்றது. இரண்டாம் பகுதி "மாணிக்கவாசகர் காலம்" என்பது முதற் "தற்காலம்" என்பது ஈறுகப் பதினெட்டுப் பெருந்தலைப்புகளையும், பல் வேறு உட்டலைப்புகளையும் கொண்டு திகழ்கின்றது. மேலும் ஆசிரியரவர்களின் முகவுரையும், அதிகாரத் தலைப்புகளின் பொருட்குறிப்புகளும் இதன்கண் சேர்க்கப்பட்டுள்ளன.

'அதிகாரம் உச தற்காலம்' என்ற தலைப்பில் இந் நூலாசிரியரவர்களால் எழுதாமல் விடப்பட்டுள்ள பல குறிப்புகளை மூன்றும் பகுதியாக யாங்கள் எழுதித் தொடர்ந்து வெளியிடக் கருதுகின்றோம். அக் கருத்து இனிது நிறைவுறத் திருவருளை வேண்டுகின்றோம்.

இந் நூலினைச் செந்தமிழ்ச் செல்வர்களும், ஆசிரியர் களும், மாணவர்களும், ஆய்வுத்துறை அறிஞர்களும் கற்றுப் பெரும்பயன் எய்துவார்களாக.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# முன்னுரை

ஒரு மொழியின் இலக்கிய வரலாறனது அம்மொழியிலுள்ள செவ்விய நூல்களின் தோற்றத்தையும் தன்மையையுங் கால முறைக் கேற்ப வகுத்துக்காட்டி அம்மொழி பேசும் மக்களுடைய கருத்துகள், இலக்கியங்களுள் எம்முறையிலமைந்துள்ளன வென்றும், அவர்களது மணவாழ்க்கையின் வரலாற்றினை அவர்கள் இலக்கியங்கள் எவ்வாறு விளக்கிக் காட்டுகின்றன என்றுந் தெரித்து, இலக்கியமென்பது மக்கள் வாழ்க்கைப்படம் என்று தெளிவுற அறிவுறுத்தும் கருவி நூலாகும். அத்தகைய நூல் ஆங்கிலம் முதலிய மேலைநாட்டு மொழிகளுக்குச் செம்மையாக அமைந்துள்ளது. வடமொழிக்கும் ஆங்கில மொழிப் புலவ ரொருவராலும் பிறராலும் அஃது எழுதப் பட்டுள்ளது. நமது தமிழ் மொழிக்குச் சுருக்கமாயதோரழகிய இலக்கிய வரலாறு திருவாளர் M. S. பூரணலிங்கம்பிள்ளையவர்களால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தமிழிலே சுன்னுகம் குமாரசுவாமிப் புலவர் எழுதிய புலவர் சரித்திரம் காலமுறைக் கேற்ப எழுதப் படவில்லை. தக்க புலவர்கள் சிலரைப்பற்றிய குறிப்பும் அதன்கண் காணப்படுமாறில்லை. சபாபதி நாவலரவர்களது திராவிடப் பிரகாசிகை யென்னும் நூலும் சிறந்த சில இலக்கியங்களின் இயல்பையே தொகுத்து இயம்புகின்றது. அதனை ஓர் இலக்கிய வரலாறென்று முற்றிலுங் கருத இடமில்லை. தஞ்சைத் திருவாளர் சீனிவாசபிள்ளை

யவர்கள் தமிழ் வரலாறு முற்றுப்பெறுமையானும் அவர் கொள்கைகள் சில ஒவ்வாமையானும் அதனின் வேறுய ஒரு தமிழிலக்கிய வரலாறு இன்றியமையாததாயிற்று. தமியேனினுஞ் சிறந்த முறையில் எழுதத்தக்க அறிஞர் அம் முயற்சியை மேற்கொள்ளாமையால் எனது குறைவு பட்ட தமிழறிவுக் கெட்டியவரை இத் தமிழிலக்கிய வரலாற்றினை எழுதத் துணிந்தனன். இதன்கட் குறை பாடுகள் பல் உள்ளன எனினும் அவற்றை அறிஞர் ஆராய்ந்து திருத்தமான கொள்கைகளை வெளியிடுதற் கொரு வாயிலாக இந்நூல் இப்போது வெளியிடப்படு கின்றது.

இதனுள் முதற்கண் தமிழர் வரலாற்றினைச் சுருக்கிக் கூறிய பின்னர்த் தலைச்சங்க நூலாகிய அகத்தியமும் இடைச்சங்க நூலாகிய தொல்காப்பியமும் ஆராயப்பட்டன. பின்னர்க் கடைச்சங்க காலத்துப் புலவர் வரலாற்றினை இயம்புமிடத்தே பரணர், கபிலர், நக்கீரர் என்னும் மூன்று பெரும் புலவர்கள் வெவ்வேறு காலத்தினரெனவும், ஒருவர்க்குப் பின்னொருவராய்த் திகழ்ந்தனரெனவும் முடிவு கட்டப்பட்டது. அக் காலத்து மூவேந்தர் வரலாறும் அன்னோர் காலத்துப் புலவர் பாடல்களும் ஒரு சிறிது தொகுத்துரைக்கப்பட்டன. கடைச் சங்ககாலம் கி. பி. மூன்றும் நூற்றுண்டின் முற்பகுதியோடு முடிவடை கின்றது. கி. பி. ௩ ஆம் நூற்றுண்டின் பிற்பகுதி முதல் நான்காம் நூற்றுண்டின் நடுப்பகுதியின் முடிவு வரையில் உள்ள காலம் மாணிக்கவாசகர் காலத்தைச் சார்ந்த வர லாற்றுப் பகுதிக்குரியதென்று கருதப்பட்டது. அதற்குப் பின் ஆறும் நூற்றுண்டு வரை சமணகாலம் கணிக்கப் பட்டுள்ளது. அக் காலத்தே சமணருடைய கீழ்க்கணக்கு நூல்களும் பெருங்கதை என்னும் காப்பியமும் எழுந்து

நிலவின. ஆறும் நூற்றாண்டிலேயே மூர்த்தி நாயனர் மதுரையில் அரசாட்சி எய்தின காலம் முதல் சைவ நூல்கள் தழைத்தோங்கின. பின்னர் ஏழாம் நூற்றாண்டும் எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியும், தேவாரகாலமாகும். எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் ஒன்பதாம் நூற்றாண்டின் முடிவுவரை வைணவ ஆழ்வார் காலமாகும். பத்தாம் நூற்றாண்டிலே சமணக் கிளர்ச்சி மீண்டும் தொடங்கிச் சிந்தாமணி முதலிய ஜைனப் பெருங் காப்பியங்கள் எழுந்தன. பத்தாம் நூற்றாண்டே சைவர்களது திருவிசைப்பாக் காலமாகும். பத்தாம் நூற்றாண்டுமுதல் பன்னிரண்டாவது நூற்றாண்டு வரை, தமிழ்ப்பெருங் காப்பியக் காலமாகும். பன்னிரண்டுமுதற் பதினன்காவது நூற்றாண்டு வரை தொல்காப்பிய உரையாசிரியர்கள் காலமாகும். பதின்மூன்றாவது நூற்றாண்டுடன் சமணரியக்கங் குன்றியொழிந்தது. கி. பி. பதின்மூன்று முதல் பதினறாவது நூற்றாண்டு வரை வைணவ மணிப்பிரவாள உரைக் காலமாகும். அருணகிரிநாதரும், வில்லிபுத்தூராரும் சந்த விருத்தங்களின் பொருட்டு வடசொற்களை மிகுதியும் ஆண்டமையால் வடமொழித்தாக்கு மிகுதிப்பட்ட காலம் இதுவேயாகும். கி. பி. பதினறு முதல் கி. பி. பதினெட்டு முடிய சைவாதீனத்தார் காலமுந் தலபுராணக் காலமுமாகும். கி. பி. பதினேழாவது நூற்றாண்டிலும் முறையே மகமது சமயக் கருத்துக்களும் கிறித்துவ சமயக் கருத்துக்களும் தமிழிற் கலந்தன. பதினெட்டாவது நூற்றாண்டு முதல் தற்கால உரைநடை நூற்காலந் தொடங்கிற்று. பத்தொன்பதாவது நூற்றாண்டிலே ஆங்கிலச் சார்பு தமிழ்க்கண் மிகுந்து பொது நோக்கம் சிறப்புற்றது. இருபதாவது நூற்றாண்டிலே புதிய வரலாற்றாராய்ச்சிமுறை தொடங்கிற்று.

இதுகாறும் கூறிய காலப் பகுதிகளிலெழுந்த நூல்களின் வரலாறும் புலவர் வரலாறும் மிகச் சுருக்கி இதனுள் வரையப்பட்டுள்ளன. இந்நூல் தமிழ்நூல் வரலாற்றினை முற்றிலும் ஒருவாறு தொகுத்துரைப்பதாமாகலின், தமிழிலக்கிய வரலாறென்னும் பெயர் இதற்கு அமைக்கப் பட்டது. இதன்கண் மலிந்துள்ள குறைபாடுகளை ஒழிப்பதற்குத் துணைபுரியும் அறிஞர்க்குப் பெரிதும் நன்றி உணர்வல். இந்நூல் அடுத்த பதிப்பில் இதனினும் திருந்திய வடிவம் அமையுமென்பது என் நம்பிக்கை.

இதனை எழுதுவதற்குத் துணைபுரிந்த கல்வியிலாகாவில் பள்ளிக்கூடத் துணைப் பரிசோதகராய்ப் (Junior Deputy Inspector of Schools) இப்பொழுதிலங்கும் திருவாளர் வி. சங்கரலிங்கம்பிள்ளை, பி.ஏ., எல்.டி., அவர்களுக்கும், 'செந்தமிழ்ச் செல்வி' இதழாசிரியராய்த் திகழ்ந்த பண்டிதர் திரு. சு. பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்) அவர்கட்கும், நூல் அச்சிடுங்காலை முன்னிதழ்களைத் திருத்தஞ் செய்யத் துணைபுரிந்த சீவில்லிபுத்தூர் வித்துவான் திரு. பெ. கோவிந்த மூப்பனார் முதலிய நண்பர்களுக்கும் எனது நன்றியுணர்வு உரித்தாகின்றது.

திருநெல்வேலி,
6-6-1930.

இங்ஙனம்:
கா. சுப்பிரமணியம்.

# உள்ளுறை

பக்கம்

௧. தமிழ் மக்கள் யார்? ௩—௨௫

தமிழ் மக்கள் இந்நாட்டவரே ௩

இவ்வுலகம் கதிரவனிலிருந்து தெறித்து விழுந்த பெரும்பொறி ௫

பேச்சு உண்டாகிய காலம் ௬

நடுக்கோட்டின் இருபக்கமே மக்கள் வாழ்விற்குத் தக்க இடம் ௮

உடற்கூற்றுல் மக்கள் மூன்று பிரிவினராவர் ௯

குமரிமுனைத் தென்ருடு காய்சினவழுதிக்குரியது ௧௧

குமரிமுனைக்குத் தென்பாலுள்ள தமிழர் பண்டு இந்திய நாடு எங்குமிருந்தனர் ௧௭

மோகெஞ்சொதாரோவில் ௬000 ஆண்டுகளுக்குமுன் வழங்கியது தமிழ் ௧௯

சூரன் வரலாற்றுண்மை ௨௧

௨. முச்சங்கங்களின் காலம் ௨௫—௪0

தலைச்சங்கம் இருந்ததற்குச் சான்று ௨௫

பட்டிமண்டபம் ௨௬

ஸ்காட் எலியட் கூறும் கடல்வெள்ளம் ,,

முச்சங்ககால அளவு சோதிவட்டக் கணக்கு ௨௭

பண்டைத்தமிழர் நான்மறை ௨௯

பாரதப்போர் ௨௮

இலங்கையில் தமிழரது அரசு ௩௧

சூரன் போர் ௩௨

தலைச்சங்க காலம் ௩௫

சதபதப் பிராமணம் கூறும் கடல்வெள்ளம் ௩௯

மீனக்கொடி ௩௭

தென்னட்டின் தொன்மை ௩௮

| | | பக்கம் |
|---|---|---|
| ௩. | பண்டைத் தமிழ்ப் புலவர் | ௪௧—௯௧ |
| | அகத்தியர் | ௪௧ |
| | அகத்தியர் சமயம் சிவநெறி | ௪௬ |
| | தொல்காப்பியனார் | ௫௧ |
| | தமிழ் திராவிடமென்னும் சொல்லின் திரிபன்று | ௫௨ |
| | அறம் பொருள் இன்பம் வீடுணர்த்தும் பண்டை நூல்கள் தமிழ் நான்மறை | ௫௩ |
| | மகேந்திர மலையில் அருள் நூல்கள் (சிவாகமம்) | ௫௪ |
| | தொல்காப்பியம் | ௫௬ |
| | ஐந்திரம் தொல்காப்பியத்திற்கு முதனூல் அன்று | ௫௮ |
| | தொல்காப்பியர் சிவநெறியினர் | ௬0 |
| | தொல்காப்பிய எழுத்து, சொல், பொருள் விளக்கம் | ,, |
| | பாரதகாலம் | ௬௫ |
| | பாணினிக்குமுன் வடமொழி இலக்கணங்கள் அறுபத்துநான்கு | ,, |
| | தொல்காப்பியர் காலத்தில் ஆண்டுத் தொடக்கம் ஆவணி | ௬௬ |
| | தொல்காப்பியர் காலம் ஐயாயிரம் ஆண்டுகளுக்குமுன் | ,, |
| | அவிநய நூல் | ௬௮ |
| | தொல்காப்பியப் பொருளதிகாரம் | ௬௬ |
| | ,, அகப்பொருள் | எ௧ |
| | ,, புறப்பொருள் | எ௫ |
| | ,, களவியல் | எ௬ |
| | ,, கற்பியல் | எஎ |
| | ,, பொருளியல் | எ௮ |
| | ,, மெய்ப்பாட்டியல் | ,, |
| | ,, உவமவியல் | ,, |
| | ,, செய்யுளியல் | எ௬ |
| | ,, மரபியல் | ௮௨ |
| | கடவுள் வழிபாட்டிற்குரிய தமிழ்ப் பார்ப்பாரும் வேளாளரே | ௮௩ |
| | இடைச்சங்ககாலத்துப் புலவரும் நூல்களும் | ௮௪ |

பக்கம்
இறையனாரகப்பொருள் அ௬
முத்தமிழ் அ௭
சிவனாரது திருமணம் அஅ
தமிழ்மக்கள் பெலுசித்தானம்வரை பரவியிருந்தமை அ௯
தமிழர்க்கே உள்ள மணமுறை ௯0

௪. கடைச்சங்க காலம் ௯௨—௧0௫
மெகஸ்தனிஸ் குறிப்பிட்ட பெண்ணரசி ௯௩
பதிற்றுப்பத்தில் இரண்டாம்பத்து ,,
,, மூன்றாம் பத்து ௯௪
,, நான்காம் பத்து ௯௫
பெருஞ்சேரலாதனும் கரிகால்வளவனும் பொருதமை ௯௬
நெடுஞ்சேரலாதனும் பெருநற்கிள்ளியும் ,, ௯௭
ஏலேலசிங்கன் ,,
பெண்கொலை புரிந்த நன்னன் ,,
ஐந்தாம் பத்து, பரணர் காலத்துப் புலவர்கள் ௯அ
ஆறாம் பத்து ௯௯
ஏழாம் பத்து ,,
எட்டாம் பத்து ௧0௨
குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன்
கி. பி. ௨௨-௪௨ ௧0௩
சோழன் செங்கணான் கணைக்காலிரும்பொறையைச்
சிறையிடல் ௧0௪
பன்னாடுதந்த மாறன்வழுதி நற்றிணைதொகுப்பித்தவன் ௧0௫
உக்கிரப்பெருவழுதி ,,
ஐங்குறுநூறு கலித்தொகை தொகுத்த மன்னர்கள் ,,
வரகுண பாண்டியனும் மாணிக்கவாசகர் காலத்துப்
பாண்டியனும் ,,
கி. பி. ௩00-க்குமேல் காஞ்சிபுரத்தில் பல்லவராட்சி ,,

௫. தமிழர் நெஞ்சப்பாங்கும் இலக்கியப் போக்கும்
௧0௬—௧௨0
இலக்கியம் என்னும் சொல்லாய்வு ௧0௬
தொல்காப்பியத்தால் விளங்குபொருள் உண்மைகள் ,,

| | பக்கம் |
|---|---|
| அறவாழ்க்கையின் விளக்கம் | க0அ |
| தொல்காப்பியத் தமிழின் உயர்நிலை | க0கூ |
| சமயப் பொறுமை | ,, |
| புலவர்கள் மன்னருக்குள் ஒற்றுமை வேண்டுமென அறிவுறுத்தினர் | ,, |
| சமயச்சார்பான வடசொல் மிக்கு வழங்கின | கக0 |
| இறந்த வீரரை வணங்கும் வழக்கம் | ,, |
| இயற்கை நயங்களை உள்ளவாறுணர்த்தல் | கக்க |
| திருமுருகாற்றுப்படையும் பரிபாடலும் சமயச் சார்பானவை | ,, |
| ஆரியக் குருக்களுட் பலர் சிவநெறியைக் கைக் கொண்டனர் | ககஉ |
| மாணிக்கவாசகர் காலம் கி. பி. மூன்றும் நூற்றுண்டின் பிற்பகுதி | ,, |
| கடவுட் புகழ்மாலை பாடும் வழக்கம் பரவல் | ,, |
| கீழ்க்கணக்கு நூல்களின் தோற்றம் கி. பி. ச-ரு | ககங |
| சைவசித்தாந்தக் கொள்கை நூல் கி. பி. சு | ,, |
| கல்லாடச் சிறப்பு | ,, |
| புறச்சமயக் கண்டனம் கி. பி. எ | ,, |
| இலக்கண நூல்களும் உரை நூல்களும் கி. பி. அ | ககச |
| வைணவக்கிளர்ச்சி கி. பி. கூ | ,, |
| பெருங்காப்பியங்கள் க0-கஉ | ககரு |
| நன்னூல் கி. பி. கங-கச | ககசு |
| சிறுகாப்பியம் திருப்புகழ் முதலியன கி. பி. கரு | ,, |
| தலபுராணங்கள் கி. பி. கசு | ககஎ |
| பிள்ளைத்தமிழ், கோவை முதலிய சிறுகாப்பியங்கள் | ககஅ |
| கிறித்துவப் பெருங்காப்பியம் கி. பி. கஅ | ,, |
| ஆசிரியர் சிவஞானமுனிவர் வடமொழியும் தமிழும் வெவ்வேறென்றல் | ககக |
| ஆரியக் கட்டவிழ்ப்பு | ,, |
| தனித்தமிழ்க் கொள்கை | ,, |

பக்கம்

சு. கடைச்சங்ககாலப் புலவர் வரலாறு கஉ0—கசுசு

முடத்திருமாறன் கஉ0
முரஞ்சியூர் முடிநாகராயர் ,,
உதியஞ் சேரலாதன் கி. மு. ச கஉக
முதுகுடுமிப் பெருவழுதி ,, ,,
இவனைப் பாடிய புலவர் காரிகிழார் ,,
'ஆனிலையுலகம்' சிவதருமோத்திர ஆகமத்திலும் கூறப்பட்டுள்ளது ,,
முக்கட் செல்வர் வழிபாடு கஉஉ
நெட்டிமையார் ,,
நெடும்பல்லியத்தனார் கஉங
குமட்டூர்க்கண்ணனார் ,,
இம்மென்கீரனார் கஉச
பாலைக்கொட்டிலார் சோழர் ஆரியப் படையை வென்றதைப் பாடியுள்ளார் ,,
பாலைக் கௌதமனார் கொற்றவை வணக்கம் கூறினர் கஉரு
குடவாயிற் கீரத்தனார் வடுகர் வரவு குறித்தனர் ,,
தொடித்தலை விழுத்தண்டினார் இளமை நிலையாமையைக் கூறினர் கஉசு
காப்பியாற்றுக் காப்பியனார் ச-ஆம் பத்துப் பாடிப் பரிசுபெற்றவர்
கள்ளில் ஆத்திரையனார் மோரியரை விதத்தல் கஉஎ
முக்காலமும் உணர்ந்த மாமூலனார் ,,
மழவர் கஉஅ
மோரியர் மலைப்பகுதியில் வழியமைத்தல் ,,
ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் வஞ்சினம் கஉகூ
இவன் தேவியார் தீப்பாயும்போது பாடியது ,,
நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி கங0
தொல்பரணர் ஆயுதச் சிறப்பை உவமைநயந்தோன்றப் பாடினர் கஙக
பெருஞ்சேரலாதன் வடக்கிருத்தல் ,,
பொருநராற்றுப்படை பாடிய முடத்தாமக் கண்ணியார் கஙஉ

பக்கம்

பட்டினப்பாலை பெரும்பாணாற்றுப்படை பாடிய
உருத்திரங்கண்ணனார் கநரு
வணிகர் பெருஞ்சிறப்பு கநசு
கரிகால்வளவன் சிறப்பு கநஎ
கைம்மை வழக்கம் கநஅ
பேகன் கண்ணகியை மீண்டும் சேர்த்துக்கொள்ளும்படி
பரணர் வேண்டல் கநகூ
கொல்லிமலையில் கடவுள் எழுதிய பாவை கசO
மாமூலனார் கழாத்தலையார் பரணர் முறையே ஒருவர்பின்
ஒருவர் வாழ்ந்திருந்தனர் கசக
பாலைபாடிய பெருங்கடுங்கோ கசஉ
மருதம் பாடிய இளங்கடுங்கோ கசந
வெள்ளிவீதியார் கசச
கயமனார் முதுபாலைத்துறையமையப் பாடல் ,,
ஈழத்துப்பூதன்தேவனார் ,,
புல்மேல் பிண்டம் வைத்தல் கசரு
நக்கண்ணையார் ,,
மலைபடுகடாம் பாடிய கௌசிகனார் கசசு
ஆறும்பத்துப் பாடிய நச்செள்ளையார் கசஎ
ஏணிச்சேரி முடமோசியார் கசஅ
கபிலர் சசக
மலையமான் திருமுடிக்காரி கருரு
நப்பசலையார் கருகூ
வன்பரணர் ,,
மதுரைக்காஞ்சி பாடிய மாங்குடி மருதனார் கருஅ
குறுங்கோழியூர்கிழார் யானைக்கட் சேயை வியந்தது கசுO
ஔவையார் ஒருங்கிருந்த மூவேந்தரையும் முத்தீக்கு
ஒப்பென்றல் கசுக
,, அதியமானை வாழ்த்துதல் கசுந
இறந்தார்க்குப் பாடை கசுரு
மருதன் இளநாகனார் கசுசு
தகடூர் யாத்திரை இயற்றிய பொன்முடியாரும்
அரிசில்கிழாரும்

| | பக்கம் |
|---|---|
| சிறுபாணாற்றுப்படை பாடிய நல்லூர் நத்தத்தனார் | கசுஅ |
| புறத்திணை நன்னாகனார் | கசுகூ |
| பாண்டியன் அறிவுடைநம்பி | ,, |
| பிசிராந்தையார் | கஎ0 |
| கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார் | கஎஉ |
| பெருங்குன்றூர்கிழார் | கஎச |
| நரிவெரூஉத்தலையார் | கஎரு |
| கோவூர்கிழார் | ,, |
| உறையூர் முதுகண்ணன் சாத்தனார் | கஎஅ |
| தாமப்பல் கண்ணனார் | கஎகூ |
| ஐயூர்முடவனார் | ,, |
| பனையோலையில் உணவுகோடல் | கஅக |
| ஆலத்தூர் கிழார் | கஅஉ |
| மாறோக்கத்து நப்பசலையார் | ,, |
| கடவுட் பெயரை மக்கட்கிடும் வழக்கம் | கஅச |
| காவலர் பழிக்கும் இடங்கள் | ,, |
| முசிறியில் யவனர் மிளகேற்றிச் செல்லல் | கஅரு |
| கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார் | கஅசு |
| காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் | ,, |
| பெருந்தலைச் சாத்தனார் | கஅஎ |
| இளங்குமணனிடம் குமணன் வாள் காட்டல் | கஅஅ |
| பெருஞ்சித்திரனார் குமணன்பாற் பெற்ற பொருளை வழங்கக்கூறல் | ககூ0 |
| களவழி பாடிய பொய்கையார் | ,, |
| மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் | ககூக |
| மருதக்கலி பாடிய மதுரை மருதனிளநாகனார் | ககூஉ |
| முல்லைக்கலி பாடிய சோழன் நல்லுருத்திரனார் | ககூ௩ |
| நெய்தற்கலி பாடிய ஆசிரியர் நல்லந்துவனார் | ,, |
| பகட்டுவமை பாடிய மருத்துவன் தாமோதரனார் | ககூரு |
| மணிமேகலை இயற்றிய சீத்தலைச்சாத்தனார் | ககூசு |
| குறுந்தொகை தொகுப்பித்த பூரிக்கோ | ககூஎ |
| அகநானூறு தொகுப்பித்த உக்கிரப்பெருவழுதி | ,, |

| | | பக்கம் |
|---|---|---|
| எ. | **கடைச்சங்க நூல்கள்** | ௨00—௨௬௯ |
| | சிவபெருமானைக் குறித்துச் செய்த ஊன்பயிலா வேள்வி | ௨00 |
| | **1. எட்டுத்தொகை** | ௨0௧ |
| | பன்னாடுதந்த மாறன்வழுதி தொகுப்பித்த நற்றிணை | ,, |
| | பாடிய பாட்டின் சொற்களால் சில புலவர்க்குப் பெயரமைதல் | ௨0௩ |
| | அகநானூறு | ௨0௪ |
| | அகநானூறு தொகுத்தவர் உப்பூரிகுடிகிழார் மகன் உருத்திரசன்மன் | ௨0௫ |
| | குறுந்தொகை | ௨0௭ |
| | இத்தொகை தொகுப்பித்தவர் பூரிக்கோ | ௨0௮ |
| | ஐங்குறுநூறு | ௨0௯ |
| | இத்தொகை தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார் | ௨௧0 |
| | பதிற்றுப்பத்து | ௨௧௧ |
| | ௨, ௩, ௪-ஆம் பத்துக்கள் | ௨௧௨ |
| | பரிபாடல் | ௨௧௩ |
| | திருமாலைப் பற்றிய பாடல்கள் | ௨௧௫ |
| | முருகக் கடவுளுக்குரிய பாடல்கள் | ௨௧௬ |
| | கலித்தொகை | ௨௧௮ |
| | பாலைக்கலி | ௨௧௯ |
| | குறிஞ்சிக்கலி | ௨௨0 |
| | மருதக்கலி | ௨௨௧ |
| | முல்லைக்கலி | ௨௨௨ |
| | நெய்தற்கலி | ,, |
| | ஆற்றுதல்...பொறை என்னும் ஒன்பதின் சிறப்பியல்புகள் | ௨௨௩ |
| | **2. பத்துப்பாட்டு** | ௨௨௪ |
| | திருமுருகாற்றுப்படை | ௨௨௫ |
| | பொருநராற்றுப்படை...ஐந்தாவது முல்லைப்பாட்டு | ௨௨௬ |
| | ஆறாவது மதுரைக்காஞ்சி | ௨௨௭ |

பக்கம்


நெடுநல்வாடை உஉக

குறிஞ்சிப்பாட்டு உஉ௫0

3. முத்தொள்ளாயிரம் உ௫க

4. சிலப்பதிகாரம் உ௫உ

கண்ணகி விழாவில் கயவாகு மன்னன் கலந்து
கொள்ளுதல் (கஎக-க௱௫ A. 1) உ௫௪

குமரிக்குத் தெற்கேயுள்ள தமிழ்நாட்டைக் கடல்
கொண்டமை உ௫௬

கண்ணகி வஞ்சினங் கூறிச் செய்தமை உ௪௫

கோவலன் வெட்டுண்டமைக்குத் தெய்வம்
கூறிய ஏது உ௪௪

சேரன் செங்குட்டுவன் சிவபெருமானைத் தொழுதமை உ௪௪

5. மணிமேகலை உ௪௬

இந்திரனுக்கு உ௮ நாள் விழா உ௪எ

மணிமேகலை உவவனஞ் செல்லல் உ௪௮

ஆமகன் வரலாறு உ௫க

காயசண்டிகையின் யானைத்தீ நோய் நீங்கல் உ௫௫

மணிமேகலை சாவகநாட்டிற்கு விண்வழியாகச்
செல்லுதல் உ௫௪

6. பதினெண்கீழ்க்கணக்கு உ௫௬

திருக்குறள் ,,

திருக்குறள் கி. மு. ௫-ஆம் நூற்றுண்டு உ௫எ

இறையனாகப்பொருள் கி. மு. ௪-ஆம் நூற்றுண்டு உ௬0

திருக்குறளின் பாலியல் அதிகாரமுறை உ௬க

,, கடவுட் கொள்கை தமிழ்ச்சொற்களாலாயவை ,,

வள்ளுவர் கருத்து வடவர் கருத்துக்கு மாறு உ௬உ

வள்ளுவர் பாயிர வைப்புமுறை உ௬௫

வள்ளுவர் அதிகார வைப்புமுறை ,,

வள்ளுவர் கருத்தோடொத்த திருமந்திரக் கருத்து உ௬௪

சேரமான் பெருமாள் எடுத்தாண்ட திருக்குறள் உ௬௬

திருவள்ளுவர் நூலே முப்பால் உ௬௮

# இலக்கிய வரலாறு

## க. தமிழ் மக்கள் யார்?

தமிழ்மொழியானது எக்காலத்திலே எந்நாட்டிலே முதன்முதலிற் றோன்றி எத்தகைய மக்கள் நாவிற் பயின்று வளர்ந்ததென்பதைப் பற்றிய ஆராய்ச்சி சிறிது காலமாகப் பல தமிழறிஞரால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. தமிழர் என்பார் இந்தியாவிற்கு வடமேற் புறத்தினின்று இங்கே வந்த பலதிறப்பட்ட ஆரியருள் ஒருவகையாரென்பர் ஒரு சாரார். மற்றொரு சாரார் அவர்கள் ஆரியரல்லர், ஆரியரின் எதிரிகளான துரானிய வகுப்பைச் சேர்ந்தவரென்பர். இக் கருத்துக்களொருபுறமிருப்ப, இப்போது **மெசபட்டோமியா**[1] என்று சொல்லப்படுவதாயும், முற்காலத்தே **அக்கேடியா**[2] என்றும் **சால்டியா**[3] என்றும் பெயர்பெற்றதாயுமுள்ள மேலை ஆசிய நாட்டிலிருந்து இந்நாட்டிற்குத் தமிழர் ஆதியிற் கடல் வழியாகவும் நில வழியாகவும் வந்தவரென்ற கொள்கையுஞ் சின்னாட்களாக வெளிப்பட்டுலாவுகின்றது.

தமிழர் இந்நாட்டிற்கு வருவதன்முன் இவண் வேறு மொழி பேசிய மக்கட் பிரிவினர் இருந்தார்களென்பதற்குப்

1. Mesopotomia. 2. Acadia. 3. Chaldea.

போதிய சான்று யாதுமில்லை. தமிழரினின்றும் வேறுபட்ட உடற்கூறுடைய மக்கட் பிரிவினரே நீலகிரி முதலிய மலைகளில் வாழ்கின்ற தோடர்[1] முதலியோரென்பது உறுதியாக நிலைநாட்டப்பட்டதொன்றன்று. ஏனெனில், அன்னோர் வழங்குஞ் சொற்கள் பெரும்பான்மையும் தமிழாகவே காணப்படுதலின் எஞ்சின இப்போது தமிழிற் காணப்படாவிடினும் அடிப்படைத் தமிழ்ச் சொற்களாயிருந்து வழக்கொழிந்திருத்தல் கூடுமெனக் கருத இடமுண்டு. தெலுங்கு, கன்னடம், துளுவம் முதலிய மொழிகள் தமிழோடு பெரும்பான்மையு மொத்துச் சிறுபான்மையே வேறுபடுவன. அவை யாவும் தமிழ்ப்பெருங் குடும்பத்தின் பகுதிகளேயென்பது மொழி நூலார் கொள்கை. பிறிதொரு நாட்டினின்று இந்நாட்டிற்குத் தமிழ்மக்கள் ஒருகாலத்து வந்தனரென்றால், அவர்கள் அந்த நாட்டிற்கு எந்த நாட்டினின்றும் போந்தனரென்ற கேள்வி யெழும். அக்கேள்விக்கு விடையினை ஆராயுங்கால் முதன்முதல் மக்கட் படைப்பு இஞ்ஞாலத்திலே யாண்டு நிகழ்ந்திருத்தல் கூடுமென்ற ஆராய்ச்சி பிறக்கும். அவ்வாராய்ச்சியினாலே மக்கள் வாழ்வதற்குத் தக்கதாக முதற்கண்ணே செம்மைப்பட்ட நிலப்பகுதியின் கண் அவர்கள் தோன்றியிருத்தல் கூடுமென்பது முடிவாகும். அதனைத் தீர்மானிப்பதற்கு நிலநூல், வானநூல், தொல்லுயிர்நூல் முதலிய பன்னூலாராய்ச்சி வேண்டப்படும். கடவுளாற் படைக்கப்பட்ட உலகங்கள் எண்ணிறந்தனவாய்ப் பல்வேறியல்பினவாய் வானிலே உலாவுகின்றன. அவற்றை யெல்லாம் நிலைகுலையாமல் வானிலே நிலவச் செய்து படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிற்கு அவற்றை உட்படுத்துவது கடவுளுடைய அருட்டிறனாகும்.

---

1- Todas of Nilgris.

" அந்தரத் தகில கோடி
தாமாம ணிலைநிற்க வில்லையோ."

என்றார் தாயுமான அடிகள்.

" உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்."

என்றார் கல்வியிற் பெரிய கம்பரும்.

வானில் உலாவுகின்ற உலகங்கள் பல தொகுதிகளாக அமைந்துள்ளன. ஒவ்வொரு தொகுதிக்கும் அண்டமென்ற பெயரை நம்முடைய முன்னோர் வைத்து வழங்கினர்போலும். அண்டமென்பது அண்டியுள்ளது; அஃதாவது நெருங்கியுள்ளதென்பதாகும். நாம் வாழும் இஞ்ஞாலத்துக்கு ஒளிதரும் கதிரவனும் அவனைச் சுற்றித் திரியும் உலகங்களும் ஓரண்டமாகுமெனக் கூறலாம். ஐம்பொருள்களுள் வான் முதலாவதாகவும், பின்னர்க் காற்றும் அதற்குப்பின் தீயும், அதற்குப்பின் நீரும், இறுதியாக நிலமும் உண்டாயின. பரிபாடல் 2 ஆம் பாட்டினுள்,

" விசும்பி னூழி யூழூழ் செல்லக்
கருவளர் வானத் திசையிற் றோன்றி
உருவறி வாரா வொன்ற னூழியும்
உந்துவளி கிளர்ந்த வூழூ ழூழியும்
செந்தீச் சுடரிய வூழியும், பனியொடு
தண்பெயல் தலைஇய வூழியும், அவையிற்று
உண்முறை வெள்ள மூழ்கி யார்தருபு
மீண்டும் பீடுயர் பீண்டி யவற்றிற்கும்
உள்ளீ டாகிய விருநிலத் தூழியும்."

என்றது காண்க.

இவ்வுலகமானது கதிரவனிலிருந்து தெறித்து விழுந்த ஒரு பெரும் பொறியென்று கருதப்படுகின்றது. அவ்வுண்மை நிலத்தின் மேற்பகுதியிலிருந்து முப்பது கல்

அளவு கீழே அகழ்ந்து சென்றால் ஆண்டுள்ள பகுதி முற்றும் அனற்பிழம்பின் தன்மையதாகக் காணப்படுவதி னாலும், கதிரவன் பேரழற்பிழம்பாதல் கண்கூடாதலினாலும் தெள்ளிதின் உணரப்படுமென்க. தழல் வடிவமாயிருந்த உலக வுருண்டையின் மேற்புறமானது நாளடைவிற் குளிர்ந்து நீரும் நிலமுமாயிற்று. இந்நிலவுலகத்திலுள்ள எல்லா வுயிர்களின் உடம்பிலும் நீரே பல பொருள்களோடு கலந்துள்ளது. நிலவுருண்டையின் உட்பாகத்திலுள்ள எரி பொருள்கள் அங்குள்ள நீரின் கொதிப்பால் நிலத்திற்கு மேற்புறத்தில் எறியப்பட்டகாலை அவை குன்றுகளாக மாறினவென்ப. உலகத்தின் மேற்பகுதி குளிர்ந்து எத்தனை கோடி ஆண்டுகளாயினவோ தெரியவில்லை. நிலத்தின் மேற்புறம் முதலிலே மக்கள் குடியிருப்பதற்குத் தக்க நிலையை யடையவில்லை. எல்லாவற்றிற்கும் முற்பட்டுக் கடற்பூண்டுகளும் தலையோடில்லாத உடம்புடையுயிர்களும் உண்டாயின வென்றும், பின்னர் மலைப்பூண்டுகளும், மீன் களுந் தோன்றின வென்றும், பின்னர்ச் சிறு செடிக ளடர்ந்த காடுகளும், ஊர்ந்து செல்வனவாய பாம்பு முதலியவைகளும் உண்டாயினவென்றும், அதற்குப் பின் தழை செறிந்த பெருமரக் காடுகளும் விலங்கின முதலா யினவும் உளவாயின வென்றும், இறுதியாகவே மக்கள் தோன்றி வாழ்ந்தனரென்றும் நிலநூல்வல்லார் கூறுகின் றனர். இப்பொழுது காணப்படும் வடிவத்தை மனிதன் அடைவதற்கு எத்தனையோ காலங்கள் சென்றனவெனவும் கூறுவர்.

உலகத்திலே மக்கள் தோன்றிச் சிலகாலங் கழித்த பின்னரே பேச்சு உண்டாயிருக்க வேண்டுமென்பது கருதப்படுகின்றது. மக்கள் தோன்றியபின் நிலத்திலும் கடலிலும் எத்தனையோ மாறுபாடுகள் ஏற்பட்டன.

முதலிலே நிலவுருண்டையின் நடுப்பாகங் குளிரப்பெற்றுப் பின் ஏனைப் பாகங்களும் குளிர்வனவாயின. கதிரவனைச் சுற்றும் நிலவுருண்டையின் நடுப்பகுதி ஏனைப் பகுதிகளி னும் மிக விரைந்து சுழலுவதாகலின் அஃதே முதலிற் சூடாறி யிருக்கவேண்டும் என்பதும் அதன் பின்னரே இருதுருவத்திலு முள்ள ஞாலப் பகுதி குளிர்ந்திருக்க வேண்டு மென்பதும் துணியப்படும். உட்சூடு ஆறியபின் ஞாயிற்றின் கதிர்கள் செங்குத்தாய் விழுதலால் உளதாம் ஒளியோடு கூடிய சூடு ஞாலத்தின் நடுப்பகுதியிற் சேர்த லால் ஆண்டு மிகுந்தும், துருவங்களிலே மிகச் சாய்ந்து விழுதலால் ஆங்குக் குறைந்தும் இருத்தல் இயல்பேயாகும். இந்தியாவிலே விந்தியமலை யடிவாரந் தொடங்கி நிலத்தின் நடுக்கோட்டிற்குத்[1] தெற்கே நெடுந்தொலை வரையுமுள்ள இடமானது கடல்கோட் படாதிருந்த காலத்தே விந்திய மலைக்கு வடபாலுள்ள நிலப்பரப்பு யாவும் நீருள் அமிழ்ந்து கிடந்தன வென்று நிலநூல் வல்லார் கருதுகின்றனர். கடல்கோட் படாதிருந்த அப்பேரிடமே இப்போதுள்ள தமிழகமும் அதற்குத் தெற்கிலிருந்த பெரு நாடுகளுமாம். இதன் ஒரு பகுதியே உலகத்தில் முதன்முதல் மக்கள் வாழ்வதற்குரிய சீரிடமா யடைந்ததெனக் கருதுவது தவறாகாது. இப்பேரிடத்தின் கீழ்ப்பகுதியிலுள்ள சாவ கத்தீவின் பாங்கர் மக்கள் வாழ்க்கை தொடக்கத்தில் உண்டாயிருத்தல் கூடுமென்று உடல்நூற் பேராசிரிய ராகிய கீன்[2] என்பார் 'முற்கால இக்கால மனிதன்'[3] என்னும் நூலிற் கூறுகின்றார்.

நிலநூல்வல்ல மேனாட்டுப் புலவர்கள் **கருத்தின்படி**, (முற்கால இக்கால மனிதன்-பக்கம் ௪௫௨-௪௫௩) ஐந்து நூறாயிரம் ஆண்டுகட்கு முன்னரே மனிதர் தென்னாசியா

**1. Equator. 2, Keane. 3. Man, Past and Present,**

வில் முதற்கட்டோன்றி வடக்கேயுள்ள பல நாடுகளிலும் குடியேறினர். அங்ஙனங் குடியேறினவர்கள் உயரமும் வெண்ணிறமு முடைய வடநாட்டினரும், அவ்விரண்டிலுங் குறைபாடுடைய நடுக்கடற்கரை[1] நாட்டினருமென இரு திறப்படுவர். நெடுந்தலையினராகிய அவ்விரு திறத்தினரும், நடு ஆசியாவிற்கும் நடு ஐரோப்பாவிற்கும் வடக்கேயுள்ள வெளி நிலங்களில் முதலில் வாழ்ந்திருந்து பனிக்கால முடிவிற் கிழக்கும் மேற்குஞ் சென்று ஐரோப்பாவின் தென் பாகங்களிலும் ஆசியாவின் மேற்குப் பாகங்களிலும் குடியேறினர். அவரைக் 'காக்கேசிய' ரென்ற பெயரால் உடற் கூற்றுநூல் வல்லார் அழைப்பர்.

இனி, அவருள் ஒரு சாரார் முதன்முதலிலே தெற்கே தோன்றிய மக்களுள் ஒரு பகுதியார் ஆப்பிரிக்காவின் கீழ்ப்பாகத்திற்குச் சென்று பின் வட ஆப்பிரிக்கா முற்றிலும் பரவின ரெனவும், அவருட் பழைய எகிப்தியர் சிறந்த நாகரிகங்கட்குக் காரணமாக விருந்தாரெனவுங் கூறுப. மற்றொரு பிரிவினர் தென்னாட்டிலிருந்து ஆசியாவின் நடுப்பாகங்களிற் சென்று வாழ்ந்து அங்கிருந்து மேற்கே பரவினரெனவும், அவர்கள் அகன்ற தலையினரெனவுங் கூறுப. அன்றியும், மக்கள் தென்னாட்டிலிருந்து கீழை நாடுகளுக்கும் பரவினதாக அறிகின்றோம். ஆதலால் ஆசியாவின் தென்பகுதிக்கண்ணே முதன்முதல் மனிதர்கள் தோன்றினார்களென்று நினைக்க இடமுண்டு. அவர்கள் பல நாடுகளுக்குஞ் சென்றது மொழி தோன்றியதற்கு முன்னரோ அல்லது பின்னரோ என்று துணிதல் ஆராய்ச்சியின் பாலதாம்.

'ஹெக்கெல்'[2] என்னும் ஜெர்மானியப் புலவர் குமரி முனைக்குத் தெற்கேயுள்ள ஞாலத்தின் நடுக்கோட்டிற்கு

1. Mediterranean Sea. 2. Haickel.

இருமருங்கு மிருந்த நிலப்பகுதிகளே மக்கள் வாழ்விற்குத் தக்க நிலையை முதற்கண் அடைந்தனவென்றும், அவண் மக்கள் முதற்கண் தோன்றி வளர்ந்து நாகரிகத்திற்கு வித்திட்டனரென்றுங் கூறியுள்ளார். தென்னிந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள பாறைகள் மிகவும் பழமையான காலத்தில் உண்டாயின வென்றும், ஒரு பெரிய மலைத் தொடர் இந்தியாவின் மேலைக்கரையிலிருந்து தெற்கே சென்று மேற்குங் கிழக்குமாக நீண்டிருந்த தென்றும் **இழந்த இலெமூரியா**[1] என்னும் நூலில் **ஸ்காட் எலியட்**[2] என் பவர் கூறியுள்ளார். அம்மலைத் தொடர்ச்சியே ஆசியா விற்கு இமயமலையும், ஐரோப்பாவிற்கு ஆல்ப்சு[3] மலையும், வட அமெரிக்காவுக்கு இராக்கி மலையும், தென் அமெ ரிக்காவுக்கு ஆண்டசு மலையும் பேராணாக விருப்பது போல இலெமூரியாக் கண்டத்திற்கும் பேராணாக விருந்த தென்றும் பெரும் புலவராகிய **அக்சிலி**[4] என்பார் கருது கின்றார். இன்னும் இலெமூரியா நாட்டில் வழங்கிய மொழியோடு சீனமொழி மிகவுந் தொடர்புடைய தென்றும், அந்நாட்டில் வாழ்ந்த மக்கள் கஉ அல்லது கரு அடி உயரமுள்ளவர்களாய் மூன்றாவது கண்போன்ற ஓர் உறுப்பினைத் தலையிலுடையவர்களா யிருந்தனரென்றுங் கூறுவர். அந்நாடு இருமுறை நிலை பிறழ்ந்ததென்றும் அப்போதுண்டாகிய மாறுதல்கள் இன்னவென்றும் ஸ்காட்எலியட் என்பவர் மேற்கூறிய நூலில் கூறியுள்ளார். தென்னிந்தியா, இலெமூரியாவின் வடபகுதியாக இருந்த காலத்தில் அந்நூலிற் காட்டிய படத்தின்படி எகிப்து[5] நாடு நீருணின்று நிலத்துக்குமேல் நிவந்து தோன்ற வில்லை ஆதலால் எகிப்து நாட்டினும் தமிழகமே பழமை

---

1. Lost Lemoria. 2. Scott Elliot. 3. Alps.
4. Huxley. 5. Egypt.

யானது என்று கொள்ளல்வேண்டும். இலெமூரியாவிற்கும் சீன நாட்டிற்கும் முன்னூழியில் தொடர்பு இருந்ததாகத் தெரிகின்றது. அப்போது வங்காளக் குடாக்கடலென்பது நிலமாக விருந்தது. இதனால் சீனநாடும் முதலில் இலெமூரியாவின் வடகிழக்குப் பகுதியாக விருந்தது என்று கொள்ளலாம். இதுவரை நிலப்பகுதிகளைப் பற்றித் தெரியவேண்டுவன கூறினோம்.

இனி, இங்கே எடுத்துக்கொண்ட இலக்கிய வரலாற்றின் ஆராய்ச்சிக்கு மக்களின் உடற்பகுப்பைப் பற்றியும் நாகரிக வளர்ச்சியைப் பற்றியுமுள்ள மேலைநாட்டுக் கொள்கைகள் சிலவற்றை யறிந்துகொள்ளுதல் ஒருதலையாக வேண்டப்படுவ தொன்றாகையால் அவற்றைப்பற்றி ஈண்டுச் சுருக்கமாக ஒரு சிறிது வரைகின்றாம்.

மக்களின் நாகரிக வளர்ச்சியை ஆராய்வோர் பழங்கற்காலம், புதுக்கற் காலம், செம்புக் காலம், வெண்கலக் காலம், இரும்புக் காலமென்று அவ்வப்போது வழங்கிய கருவிகள் செய்வதற்குப் பயன்பட்ட நிலக்கனி[1]யினை வைத்துக் கால வரையறை செய்திருக்கின்றார்கள். மேலைநாட்டுப் புலவர்களது ஆராய்ச்சியின்படி நானூறாயிரம் ஆண்டுகட்கு முன்னர் மக்கள் வேலை நயமில்லாத கருவிகளைக் கல்லினாற் செய்யத் தெரிந்த காலத்தில் அவர்கள் உலகத்தின் பல பகுதிகளினுஞ் சென்று தங்கி ஆங்காங்கிருந்த தட்ப வெப்ப நிலைகட்குத் தக்கவாறு நாகரிக வாழ்க்கை செய்ய முயன்றனர். அஃது ஈண்டுக் கூறுவனவற்றால் விளங்கும்.

தென்னிந்தியாவிலும், தென்னாப்பிரிக்கா, எகிப்து முதலிய விடங்களிலும் கண்டு பிடிக்கப்பட்ட கற்கருவிகள்

---

1. Metal.

மிகவும் தம்முள் ஒத்த வடிவினவாக உள்ளன. ஐரோப்பாக் கண்டத்தில் சாம்[1], சீன்[2], தெமசு[3] என்னும் ஆற்றோரங்களிலுள்ள திடர்களில் வெட்டி யெடுக்கப்பட்ட கற்கருவிகள் எகிப்தில் நீலநதியின் பாங்கர்க்கண்டெடுத்த கற்கருவிகளோடு மிகவும் ஒத்திருப்பனவாகத் தெரிகிறது. ஜாவா[4]விற் காணப்பட்ட முதன் மனிதன் எலும்புக்கூடும், ஜெர்மனியில் எயிடல்பர்க்கு[5] என்னுமிடத்தில் தோண்டியெடுத்த மோவாயெலும்பின் பகுதியும், சீமையில் சசெக்சு[6] என்னுமிடத்திற் காணப்பட்ட மண்டையோடும் தம்முள் ஒரு தன்மையன வாகக் காணப்படுகின்றன.

உடல்நூல் வல்லார் உலகத்திலுள்ள மக்களை உடற்கூற்றினாலே காக்கேசியர், மங்கோலியர், நீகிரோவர் என மூன்று பிரிவினராக வகுத்தனர். ஐரோப்பாவிலும், மேலை ஆசியாவிலும், இந்தியாவிலும், வட ஆப்பிரிக்காவிலும் உள்ளவர்கள் பெரும்பாலும் காக்கேசியராவர். இவர்கள் மெல்லிய தலைமயிரும், நெடிய மண்டையும், கூரிய மூக்குமுடையவர்கள். கீழையாசியாவிலுள்ள சீனு, ஐப்பான் முதலிய விடங்களில் வதிகின்றவர்கள் மங்கோலியராவர். இவர்கள் வளைவில்லாத நேரிய தலைமயிரும், மஞ்சள் நிறமும், தட்டை மூக்கும், சிறிதுகோணலான கண்ணுமுடையவர்கள். நடு ஆப்பிரிக்காவிலும், தென் ஆப்பிரிக்காவிலும் உள்ளவர்கள் நீகிரோவர் ஆவர். இவர்கள் தடித்த உதடும், குவிந்து குறுகிய கூழைமயிரும், கருநிறமுமுடையவராவர். இம் மூன்று பிரிவினருள் நிலத்தின் நடுக்கோட்டிற்குத் தென்பாகத்திலுள்ள கடற்றீவுகளிலும், ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய விடங்களிலுமிருந்த

---

1. Somme. 2. Seine. 3. Thames.
4. Java. 5. Heidelberg. 6. Sussex.

பண்டைமக்கள் வேறிடங்கட்குப் பெரும்பாலுஞ் சென்றதாகத் தெரியவில்லை. மங்கோலியரும், காக்கேசியரும் தத்தம் தாய்நாட்டிலிருந்து பிறநாடுகளுக்குப் போக்குவரவு செய்தனராயினும் அந்நாடுகளிற் பெரும்பாலுந் தங்கினரெனத் தெற்றெனப் புலப்படவில்லை. தங்கிய மக்கள் ஆண்டுள்ள மக்களோடு பயின்று அவரோடு கலந்தனர். தென்கட லிடைத் தீவுகளில் வாழ்ந்தோர் கருமையும் ஒரு சிறிது சிவப்புங் கலந்த தலைமயிருமுடையவரா யிருந்தனர். அமெரிக்காவிலுள்ள பண்டைய மக்கள் கபிலநிற முடையவர்கள். அவர்கள் அமெரிக்க இந்தியரென அழைக்கப்படுகின்றனர். இது நிற்க,

உலகத்திலே இற்றைவரை நேர்ந்துள்ள கடற்பெரு வெள்ளங்களுள் (பிரளயம்) முதன்மையானது. பத்து நூறுயிரம் ஆண்டுகட்கு முன்னர் நேர்ந்திருத்தல் கூடுமென்றும், இரண்டாவது வெள்ளம் எண்ணூறுயிரம் ஆண்டுகட்கு முன்னரும், மூன்றுவது வெள்ளம் இருநூறுயிரம் ஆண்டுகட்கு முன்னரும், நான்காவது வெள்ளம் எண்பதிஞயிரம் ஆண்டுகட்கு முன்னரும், ஐந்தாவது வெள்ளம் ஏறக்குறைய ஒன்பதாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னரும் நிகழ்ந்திருத்தல் கூடுமென்றும் '**ஸ்காட் ஏலியட்**' என்னும் நிலநூல் வல்லார் கூறுகின்றுர். இவர் கூறும் பெரு வெள்ளங்கள் இந்தியநாட்டுப் பண்டை நூல்களுட் கூறப்படும் ஊழி முடிவுகளோடு (யுக முடிவுகள்) ஒருவாறு ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கன. முதல் ஊழி முடிவு இருபது நூறுயிரம் ஆண்டுகட்கு மேலாயினவென்றும், இரண்டாவது ஊழிமுடிபு எண்ணூறுயிரம் ஆண்டுகட்கு மேலாயினவென்றும், மூன்றுவது ஊழி முடிவு ஐயாயிர ஆண்டுகட்கு மேலாயின வென்றுங் கூறுப. எவ்வாறுயினும பற்பல காலங்களிற் கடற்பெரு வெள்ளம்

ஏற்பட்டுக் குமரிமுனைக்குத் தெற்கிலிருந்து நிலப்பகுதி களைக் கொள்ளை கொண்டன வென்பதும், வடக்கே பல நாடுகள் நீருணின்று வெளிப்போந்தன வென்பதும் நன் கறியக் கிடக்கின்றன. (இம் மாறுபாடுகள் ஏற்பட்ட காலத்தே மக்கட் பகுதியினர் தென்றிசைக்கணின்றும் வடதிசைக்கட் போந்திருத்தல் கூடுமெனவும், அப் பகுதியினருட் சிலர் குளிர் பொறுக்க இயலாமையால் மீண்டுந் தென்றிசைக்கட் டிரும்பியிருத்தல் கூடுமெனவும் கோடலே அமைவுடைத் தென்க.

நமது தென்னாடானது கடல்கோட்படுவதன் முன் மேற்றிசையிலுள்ள ஆப்பிரிக்காக் கண்டத்தோடும், கீழ்த் திசையிலுள்ள ஜாவா முதலிய தீவுகளின் தொகுதியோடும் தொடர்புடையதாயிருந்தது. ஆதலால் மேற்குப் பாகத்தில் வதிந்த நீகிரோவர்களோடும் கீழ்ப் பாகத்தில் வதிந்த மங்கோலியரோடும் தென்னாட்டிலிருந்த மக்கட் பகுதியின ருக்குத் தொடர்பு உளதாயிருத்தல் இயல்பேயாம்.

செங்கோன்றரைச் செலவு, எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, சிலப்பதிகாரம், இறையனாரகப்பொருளுரை முதலிய சங்கநூல்களுட் காணப்படுஞ் சில குறிப்புக்களாலே குமரி முனையைச் சார்ந்த தென்னாடானது தமிழ் வளர்த்த பாண்டியனாகிய காய்சினவழுதிக் குரியதாயிருந்த தென்பது தெள்ளிதின் விளங்கும். ஆண்டு வதிந்திருந்தோர் இப்போ துள்ள தமிழ்நாட்டில் வாழ்வாரோடு ஒத்த இனத்தவ ரென்பதுந் தெளிவாம். அன்னோரை மங்கோலியரென்றுதல் நீகிரோவரென்றுதல் கூறவியலாது. தமிழ்நாட்டிலுள்ள பண்டைக் குடிகளாகிய பறையர், பள்ளர் முதலியோருந் தமிழே பேசுகின்றனர். அன்னாரைத் தமிழரெனப்படுவோர் அடிமைகளாக்கிக்கொண்டனரென்றும், அவர்கள் உடற்

கூற்றினால் தமிழரின்றும் வேறுவரென்றும் சிலர் கருதுகின்றனர். அவர்கள் உடற்கூறு ஏனையோரது உடலமைப்பிற்குச் சிறுபான்மை வேறுவதற்குக் காரணம் அவர்கள் வதியும் நிலத்தின் தட்பவெப்ப நிலையும், தொழில் வேற்றுமையுமேயாம். நீகிரோவர், மங்கோலியர் முதலியோரைப்போல இவர்கள் ஏனைத் தமிழரினின்றும் பிறப்பாலமைந்த உடல் வேறுபாடுடையரல்லர். இவர்கள் வதிந்த நிலத்தை வளம்படுத்தும் நிலைமையொன்றையே கருதி அடிமைத் தொழிலுடையராக இருந்தனரே யன்றிக் கால் நடைகள் போலச் சிறிதும் உரிமையற்ற அடிமைகளாயிருந்தனரென்று தோன்றவில்லை. ஒரே நிலையான மக்கட் பெரும் பிரிவினுள் உயர்வு தாழ்வுடைய பல பகுப்புக்கள் ஏற்பட்டுப் பொருள் வளத்திலும், ஆட்சியிலும் (அதிகாரத்திலும்) மிகக் குறைவுபட்ட பகுதியார் தாழ்ந்த நிலை யெய்தி வேறினத்தார் போலக் கருதப்படுதலியல்பே.

இதனை,

"ஒப்புரவி னால்வருங் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து." (குறள். உஉ0)

என்னும் அருமைத் திருக்குறளா னறிக.

இதனால் பொருட்கேடு முதலிய காரணம்பற்றி ஒருவரொருவருக் கடிமையாதல் தெற்றெனப் புலனாமென்க; ஆதலால் இஞ்ஞான்று பறையரெனத் தாழ்த்தப்படுவோர் தமிழரின் வேறினத்தா ரல்லாரெனத் துணிந்து கூறலாம்.

மலையில் வாழுஞ் சில வகுப்பினரைத் தமிழரின் வேறுபட்டவரெனக் கொள்ளப் பண்டைத் தண்டமிழ் நூல்கள் இடந்தரவில்லை. ஏனெனில், தமிழிலக்கண நூலார் மலைக்குரிய மக்களையும், காட்டில் வாழும் மாந்தரையும், கடற்கரையி லுறைவோரையும், மருதநிலத்து வதியும்

மக்களினின்றும் வேறாகப் பிரித்தோதினும் அவர்களனை வருந் தமிழ்மக்களென்றே குறித்துள்ளனர். மருத நிலத்தில் வதியும் பல வகுப்பினரை மட்டும் தமிழரெனக் கருதுவோர்க்கே குறிஞ்சிக்குரிய மக்கள் வேறாகத் தோன்றுவர். வெவ்வேறு நிலத்து வாழ்வார் பேசு மொழிகள் அவர்க்குச் சிறப்பாகக் காணப்படுதல் பற்றி அவைகள் பண்டைத் தமிழ்ச் சொற்களல்லவெனக் கொள்ளலுந் தவறாகும். என்னை? அச்சிறப்பு மொழிகளோடு வழங்கும் ஏனைமொழிகள் தமிழ்மொழியாகவே காணப்படுதலால்.

இனி, ஒருசாரார் பெருவெள்ளங்கள் நிகழ்ந்தகாலைக் கடல்வழியாகத் தென்றமிழ் நாட்டிற்குச் சென்றவர்கள் மனுவென்னு மொரு தலைவரை யுடைத்தாயிருந்தன ரென்றும், அவர்கள் வடமேற்கு ஆசியாவிலிருந்து வந்தே தென்னாட்டுள்ள பொதியின் மலைப்பாங்கர் வதிந்திருத்தல் கூடுமென்றுங் கருதுகின்றனர். அவர் கூற்றுக்குப் போதிய சான்றின்றென்பது தெற்றெனப் புலனாகின்றது. குமரி முனைக்குத் தென்பாற் கடல்கொண்ட நாட்டினின்று அவர்கள் அந்நாட்டிற்கு அணித்தாய் வடபாலிருந்த பொதியமலைச்சாரலுக்கு ஏன் வந்திருத்தல் கூடாது? சால்டியா, அக்கேடியா முதலிய இடங்களிற்றான் முதலிலே நாகரிகம் தோன்றித் தமிழ்நாட்டிற் பின் பரவிற்றெனக் கொள்வதற்குத் தக்க சான்றுகளில்லை. அந்நாட்டுச் சொற்கள் தமிழ்ச் சொற்களோடு ஒருபுடை யொத்திருத்தலொன்றே கருதி அங்ஙனந் துணிதல் பொருந்தாது. தமிழ் நாட்டினின்று மேற்றிசை நாடுகளோடு கடல் வாணிகஞ் செய்தோர் அச்சொற்களை அந்நாடுகளிற் றங்கிய காலத்து வழங்கியிருத்தல் கூடுமென்பதே இயைபுடைத்து.

'இருக்கு வேத இந்தியா' என்னும் நூலெழுதிய **அபினாஸ் சந்திரதாஸ்** என்பவர் பாணிகள் என்ற வணிகர்

வடநாட்டிலிருந்து தென்னாட்டுள் புகுந்து நாகரிகத்தைப் பரப்பினர் என்பர். அக் கூற்றுப் பொருந்தாது. அவர் 'பாணிகள்' என்ற சொல்லின் மூலத்தை அறிந்திலர். அது வணிகர் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபெனக் கொள்க. பண்டைநாளில் கடல்வாணிகத்தில் சிறந்திருந்தவர்கள் தமிழ்வணிகரே யாதலாலும், ஆரியர் கடற் செலவில் மிகுதியும் பயின்றவரல்லர் ஆதலாலும், பாணிகள் ஆரியர்களுக்கு எதிரிகளாயிருந்தோர் என்று காலஞ் சென்ற திரு. பி. டி. சீனிவாச ஐயங்கார் அவர்கள் 'தமிழர் வரலாறு' என்ற நூலில் கூறுதலாலும் பாணிகள் ஆரியச்சார்பினர் அல்ல ரென்பது தெளியப்படும்.

பெலுசித்தானத்திற் காணப்படும் பிராகுயி[1] என்னும் மொழியானது பெரும்பான்மையும் தமிழ்ச் சார்புடையதென மொழிநூல் வல்லார் கூறுகின்றனர். தென்னாடே மக்கள் முதலில் வதிந்த நாடாமெனின் ஆண்டிருந்தே வடக்கிலுள்ள பிறநாடுகளுக்கு மக்கட் பகுதியார் சென்றிருத்தல் இயல்பாமன்றோ

இனி, ஸ்பெயின்[2] நாட்டுப் பழங்குடிகளாகிய பாசுகு[3]களோடும், இந்து சேர்மானியரோடும் காக்கேசியரோடும், உடலுறுப்புக்களிலும் தலையமைப்பிலும் தமிழர் ஒற்றுமையுடையரென ஹெக்கெல் என்பார் அறிவிக்கிறார். அக்சிலி என்பார் தமிழரை வடஆப்பிரிக்கரோடும், தென்ஐரோப்பியரோடும் சேர்ப்பார். பிளவர்,[4] இலெடெக்கர்[5] முதலிய புலவர்கள் அவர் வெள்ளை மக்களோடொத்த இனத்தவரென்றும், நீகிரோவரோடு பெரிதுந் தொடர்பு மட்டுமுடைய ரென்றுஞ் செப்பினர். (இதனால், தமிழர் காக்

1. Brahui. 2. Spain. 3. Basque.
5. Flower. 5. Lydeker.

கேசியப் பெருவகுப்பைச் சேர்ந்த உடற்கூற்றின ரென்பதே மேலைநாட்டுப் புலவர் பலர்க்கும் ஒப்பமுடிந்த வொரு பெருங்கொள்கையாம்.

இனிச் சிலர் நாகரென்ற ஒரு வகுப்பினர் தமிழரோடு கலந்துள்ளனரென்றும், கள்ளர், வேடர் முதலியோர் அவ்வினத்தைச் சேர்ந்தவரென்றுங் கருதுகின்றனர். **எம். சீனிவாச ஐயங்கார்** எழுதிய 'தமிழ் வாசகங்கள்'[1] என்ற நூல் வடநாட்டு நாகர்கள் மங்கோலியர் என்றும், தென்னாட்டு நாகர்கள் தமிழர்க்கு முன்னர் இந்நாட்டில் வதிந்த மக்கட் பிரிவின ரென்றும் கூறுகின்றது. சிலப்பதிகாரம் முதலிய பண்டைத்தமிழ் நூல்கள் நாகர்களில் ஒரு சாரார் மலையில் வதிந்தவரென்றும், நாகநாடென்பது தமிழ் நாட்டுக்குக் கிழக்கே அல்லது தென்கிழக்கே யுள்ள ஒரு பெருந்தீவென்றுங் கூறுகின்றன. நாகம் என்ற சொல் மலையினைக் குறிக்கும். மலைத்தொடர் மிகுந்த வோரிடத்தை நாகநாடென்பது மிகையாகாது.

மணிமேகலையிற் சாதுவன் என்னும் வணிகன் கீழைக் கடற்கண் மரக்கலம் ஓட்டிச்சென்றபோது அம்மரக்கலம் உடைந்துபோக அலையால் ஒதுக்கப்பெற்று "நக்க சாரணர் நாகர்வாழ் மலைப்பக்கஞ் சார்ந்தனன்" என்றும், ஆண்டுள்ள நயமின் மாக்கள் அவனைக் கொன்றுதின்ன விரும்பியகாலை அவன் தாங்கள் பேசும் மொழியைக் கற்றிருப்பதை யறிந்து அவ்வாறு செய்யாது விலகின ரென்றும், அவருடைய தலைவன்,

> "கள்ளடு குழிசியுங் கழிமுடை நாற்றமும்
> வெள்ளென் புணங்கலும் விரவிய இருக்கையில்

1, Tamil Studies.

எண்குதன் பிணவோ டிருந்தது போலப்
பெண்டுட னிருந்த பெற்றி.'' (மணி : ௧௬, ௬௬-௬௬)

எனவுங் கூறப்பட்டமை காண்க.

நாகநாடென்பது, 'நானூறு யோசனை' அளவுடைய தாய்க் கீழைக் கடலிடையுள்ளதென்று அக்காப்பியஞ் செப்பும்.

"கீழ்நிலை மருங்கில் நாகநா டாளும்
இருவர்.'' (மணி: ௮, ௫௪-௫௫)

எனவும்,

"நாகநன் னாட்டு நானூறு யோசனை
வியன்பா தலத்து வீழ்ந்து கேடெய்தும்''
(மணி: ௯, ௨௧-௨௨)

எனவும் கூறியது காண்க.

அந்நாட்டை யாண்ட வளைவணன் என்னும் மன்னன் புதல்வியான பீலிவளை யென்பாள் சோழமன்ன னொருவனை மணந்து ஓர் ஆண் குழந்தையைப் பெற்ற செய்தி கூறப் படுகிறது.

"நாக நன்னா டாள்வோன் றன்மகள்
பீலிவளை யென்பாள் பெண்டிரின் மிக்கோள்
பனிப்பகை வானவன் வழியிற் றோன்றிய
புனிற்றிளங் குழவியொடு பூங்கொடி.''
(மணி: ௨௫, ௧௭௮-௧௮௧)

"வென்வேற் கிள்ளிக்கு நாகநா டாள்வோன்
றன்மகள் பீலி வளைதான் பயந்த
புனிற்றிளங் குழவியை.'' (மணி: ௨௯, ௫-௬)

என்றது காண்க.

நாகபுரமென்பது சாவக நாட்டிலுள்ளதாகக் கூறப் பட்டுள்ளது. சாவகமென்பது இப்போது சொல்லப்படுகிற சாவாத்தீவு. நாகருள் ஒரு சாரார் நன்னிலை யடைந்தும்,

மற்ருெரு சாரார் நயமின் மாக்களாய்த் தாழ்ந்த நிலையில் உடையுமிலராயு மிருந்தனரெனத் தெரிகிறது.

இக்காலத்தே சாவக முதலிய நாடுகளிலுள்ளோர் மங்கோலிய வகுப்பைச் சேர்ந்தவராகக் காணப்படுகின்றனர். 'நக்க சாரணர் நாக'ரென்றது அந்தமான் தீவுகள் முதலியவற்றிலுள்ள நாகரிகமில்லாத நீகிரோவர் வகுப்பாரைக் குறித்த சொற்ருெடர் போல்வது. அன்னுரே மக்களின் ஊனையுண்ணும் தாழ்ந்தநிலையிலுள்ளோர். நாகரென்பார் கீழைக்கடலிலுள்ள தீவுகளினின்று இந்நாட்டிற் குடியேறிய வேறு வகுப்பினராயின் அவர்கள் நீகிரோ வகுப்பினையாதல் அல்லது மங்கோலிய வகுப்பினையாதல் சேர்ந்தவரா யிருத்தல்கூடும். அவ்வாறன்றி அவர்கள் இந்நாட்டின் மலைகளில் வதிவாரோடு ஒத்தவரென்ருல் குறிஞ்சிலநில மக்களாவர். கள்ளர், மறவர் முதலியோர் தமிழ் மக்களி னின்றும் பெரிதும் வேறுபட்ட உடற்கூறுடையவராகத் தோன்றவில்லை.

இதுகாறுங் கூறியவற்ருல் குமரிமுனைக்குத் தென்பா லுள்ள பெருநாட்டில் வதிந்த நாகரிக நன்மக்களே ஒரு காலத்தில் இந்திய நாடெங்கும் பரவிய தமிழர் என்னும் மக்கட் பெரும்பிரிவின ரென்பதும், அவர் நீகிரோவர், மங்கோலியர் முதலிய வகுப்பினரோடு சிறுபான்மை கலப் புற்றவராய்க் காக்கேசிய ரென்பாரோடு பெரிதும் ஒற்றுமை யுடையராய்த் திணைநிலமாக்களெனவும், உயர் நன்மக்க ளெனவும் இருதிறப்படுவாராயின ரென்பதும், இவர் பிற் காலத்தே வடமேற்கினின்றும் இந்தியாவிற் புகுந்த ஆரிய ரோடு தொடர்புடையராயின ரென்பதும், இவருட் சிற்சில பகுதியார் கடல்வழியாகவும், நிலவழியாகவும் பெலுசித்தான், மெசபடோமியா முதலிய வடமேற்கு ஆசிய நாடுகளிற் சென்று வைகினரென்பதும், தென்னுட்டிலே

இவர் பேச்மொழி தமிழே என்பதும் உய்த்துணரப்படும். காக்கேசிய மலையின் பாங்கரும் அவர்கள் தங்கியிருந்தனரென்பது ஆண்டுள்ள நாடுகளில் வழங்கிய மொழிகளோடு தமிழ்மொழி ஒருபுடை யொற்றுமையுடையதெனடாக்டர் கால்டுவெல்[1] முதலிய ஆசிரியர் கூறுவதினின்றும், பண்டை வரலாற்றுக் குறிப்புக்களினின்றும் தெள்ளிதினுணரப்படும்.

பிற ஆங்கில ஆசிரியர்கள் சிலரின் கருத்தும் இதனை வற்புறுத்தும்.

"சமக்கிருதம், எபிரேயம், கிரேக்கு என்னும் மூன்று உலக இலக்கிய மொழிகளில் தமிழ்ச்சொற்கள் காணப்படுகின்றன."[2]

"இந்து ஐரோப்பிய மொழிகளின் சொற்கள் பலவற்றின் மூலங்கள் தமிழில் காணப்படுகின்றனவென்பது ஊகையன்று; அகன்ற ஆராய்வின் பின் கொண்ட முடிபு."[3]

"சுமேரியமொழி மிகப் பழமையுடையது. தமிழ் மொழியிலுள்ள மிகப்பழைய சொல்வடிவங்களோடு பிற்

---

1. Dr. Caldwell.

2. The three classic languages of the world namely, Sanskrit, Hebrew and Greek contain Tamil words in the Voc bulary.

—Rhys Davids.

3. That the roots of a large majority of Indo-European words are to be found in ancient Tamil is not a mere theory but a fact ascertained by extensive induction.

The Sumerian speech, old as it is, appears comparatively young when viewed in the light of earliest world terms which Tamil displays and of which Sumerian forms are a later development.

—Rev. S. Gnanapragasar.

காலத்தில் வளர்ச்சியடைந்த சுமேரிய சொல்வடிவங்களை ஒப்பிடும்போது சுமேரியமொழி தமிழுக்கு இளமையுடைய தாகக் காணப்படும்."

"வடஇந்தியாவில் வாழ்ந்த மோகெஞ்சொதாரோ மக்கள் திராவிடமொழியையே வழங்கினார்கள். அவர்கள் வழங்கிய சொற்கள் பெரிதும் தமிழிற் காணக் கிடைக்கின்றன. இப்பொழுது வழங்கும் மொழிகள் எல்லாவற்றுள்ளும் தமிழ் மிகப் பழமையுடையதென்னும் கொள்கையை இது வலியுறுத்துகின்றது."[1]

மோகெஞ்சொதாரோ என்னும் இடத்தில் சுமார் 6,000 ஆண்டுகளுக்குமுன் வழங்கிய மொழி தமிழ்ச்சொற்கள் நிறைந்துள்ளதெனப் பாதிரியார் ஹீராஸ் கூறுகின்றார்.

இது நிற்க, இந்தியநாட்டிலே வழங்குகின்ற பெருங் கதைகளுள் கந்தபுராணக் கதை முதலில் நடைபெற்றதென்றும், இராமாயணக் கதை பின்னர் நிகழ்ந்ததென்றும், அதற்குப் பின்னரே பாரதப்போர் நிகழ்ந்திருக்க வேண்டுமென்றும் கூறுப. கந்தபுராணத்துட் சிறப்பித்துக் கூறப்படும் சூரபதுமனுடைய அரசநகர் தென்கடலிடை ஒரு தீவின்கண் விளங்கியதென்றும், அதற்கு வடக்கே நெடுந் தூரத்தே இலங்கை யிருந்ததென்றும் அறிகிறோம்.

தமிழர் கடவுளாகிய முருகவேள் சூரபதுமனை வென்றழித்தமையால் அச் சூரபதுமனைச் சார்ந்த மக்கள் தமிழர்க்

1. "Being Dravidians, the inhabitants of Mohenjo Daro in Northen India naturally spoke a Dravidian language in which the largest proportion of the words used are found in Tamil. This confirms the common belief that Tamil is the oldest of the present languages."

—Rev. Heras.

குப் பகைவரென்பது கருதப்படும். தென்னாட்டில் வதிந்த தமிழருக்கும் அவர் மருங்கே அவரோடொத்த நாகரிகமும் திறமையுமுடையவராய் விளங்கிய மற்றொருவகைத் தமிழருக்கும் போர் நிகழ்ந்ததென்பதே கந்த புராணக் கதையால் விளங்குகிறது. சூரன் ஆட்சிக்குட்பட்ட அரசரை மக்கட்பெருங் குடும்பத்தில் ஒரு பகுதியாராகிய மங்கோலிய வகுப்பை அல்லது நீகிரோவர் வகுப்பைச் சார்ந்தவரெனக் கொள்வாருமுளர். அல்லது, அன்னோர் தென்னாட்டில் முதலிற்றோன்றிய தமிழ்ப்பெருங் குடும்பத்தின் ஒரு பகுதியினர் என்று கொள்ளவும் இடமுண்டு. சூரனோடு போர் நிகழ்ந்த காலம் மிகப் பழமையானது. அவனைப்பற்றிய கதை ஆரியத்தில் எழுதியவண்ணமே இப்போது கிடைத்திருக்கின்றது. ஆரியருள் தேவர் அசுரர் என்பார் ஒரு தந்தையின் புதல்வர்களாய்த் தம்முட் பகை கொண்டவர்கள் என்பது ஆரிய வேதத்தையும், பாரசீகரது 'செண்ட் அவெத்தா'[1] என்னும் பழைய நூலையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நன்கு விளங்கும். தேவர் என்ற சொல் தக்கவர்களையும், அசுரர் என்ற சொல் தகாதவர்களையும் உணர்த்துவதாக வேதத்துட் காணப்படும். ஆனால் அவெத்தாவில் அசுரர் என்பதற்கு நேரான அகுரர் என்னும் சொல் தக்கவர்களையும், தேவர் என்னும் சொல் தகாதவர்களையும் உணர்த்தி நிற்கின்றன. முதற் பாரசீகரும் இந்திய ஆரியரும் பிறப்பால் ஓரினத்தவரே. தென்னாட்டில் நிகழ்ந்த சூரன் கதையை வடமொழியிற் கூறியகாலை அம் மொழியிலுள்ள சொற்களாலேயே அக் கதைக் கருத்துக்களை விளக்கினமையால் அஃது ஆரியக் கதையாகத் தோன்றும். தென்னாட்டின்கண்ணுள்ள ஊர்கட்கும் வடமொழிப் பெயர் கொடுத்தே ஆரிய நூலோர்

1. Zend Avesta.

வழங்கிவிட்டனர். சூரனுடைய அரசநகர் வீரமகேந்திர மென்னப்பட்டது. அது நிலத்தின் நடுக்கோட்டிற்குத் தென்பாகமாகத் தென்கடலைச் சார்ந்திருந்தது. சூரனும் அவனைச் சார்ந்தாரும் கரியஉடலுஞ் செந்தலையும் உடைய ரென்று புராணங் கூறுகின்றது. தலைமயிர் சற்றே சிவந்திருத்தல் இப்போதுள்ள ஐரோப்பியரிடத்துங் காணப்படுகின்றது. குளிர்மிகுந்த இடங்களில் மயிர் அங்ஙனமாதல் இயல்பு. நடுக்கோட்டிற்குத் தெற்கே செல்லச் செல்லக் குளிர் மிகுதிப்படுமாதலின் சூரன்மரபினர் செங்குஞ்சியராய்த் திகழ்ந்தனர் என்பது வியப்பன்று. தென்னாட்டினர் சூடுமிகுதிபற்றிக் கருநிற முடையராதல் யாவரு மறிந்ததே. கடலுள் அமிழ்ந்த கண்டத்திலே வதிந்தாருள் ஒரு சாரார் தலைமயிர் கறுத்தவர்களாயும் மற்றொரு சாரார் தலைமயிர் சிவந்தவர்களாயும் இருந்திருத்தல் நிகழத்தகாத தொன்றன்று. ஐரோப்பாவில் தென்பாகத்திலுள்ளவர்களும் நடுப்பாகத்திலுள்ளவர்களும் உடல்நிறத்தால் ஒருவாறு ஒற்றுமையுடையவராயினும் தலைமயிரளவில் முன்னையோர் கறுப்பு மயிரும் பின்னையோர் சிவப்பு மயிரும் உடையராயிருத்தல் உற்றுநோக்கற்பாலது.

சூரனும் அவன் தம்பிமாரும் காசிபரின் புதல்வர்கள். காசிபர் என்றொரு முனிவர் ஆதிசைவகுல முதல்வர் ஐவருள் ஒருவராவர். சூரன் முதலியோர்களும் தமிழ் நாட்டுப் பண்டைச் சமயமாகிய சிவநெறியினையே கைக்கொண்டு ஒழுகினாரென்பது கந்தபுராணத்தால் நன்கு விளங்குகின்றது. (இக்காரணங்களால் சூரபதுமன் வகையாரும் ஏனைத் தமிழ்மக்களும் ஒரே மக்கட் கூட்டத்தின் இருபகுதியார்போற் காணப்படுகிறார்கள்.) சூரபதுமன் முதலியோர் தமது உடம்பை வருத்திக் கடுந்தவம் புரிந்ததையே ஆரிய நூலார் கடுவேள்வி செய்ததாகக் கூறினர்

போலும். சூரபதுமன் காலத்திலேயே அகத்தியர் முதலி யோர் இருந்ததாகத் தெரிகின்றோம். சூரபதுமனுடைய தம்பியாகிய தாரகனுடைய புதல்வர்களே திரிபுரத் தசுரர்க ளென்று புராணம் இயம்புகின்றது. அவர்களும் சிவ வழிபாட்டிற் சிறந்து விளங்கியவர்களே. அகத்தியர் காசி பர் முதலிய ஐம்முனிவர்க்கும் அருள்நூல் அறிவுறுத்திய வர் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளே. அவரும் அகத்தியனாரும் தலைச்சங்கமிருந்து தமிழாய்ந்தனரென்று களவியலுரை கூறுகின்றது. இச்செய்திகளால் கந்த புராணக் கதை கடல்கொண்ட நாட்டிலிருந்த தமிழருள் இருபெரும் பிரிவினர்க்குள் நிகழ்ந்த போரைப் பற்றிய தென்று அறியப்படும்.

தமிழர் ஆரியரென்பாரை மிலேச்சரென்று ஒரு காலத்திற் கருதினரென்பது பிங்கலந்தை நிகண்டினால் தெளிவாமாகலின், தமிழர் ஆரியருள் முதன் முதல் இந்தி யாவுக்கு வந்த ஒரு பகுதியாரென்று கருத இடமில்லை. ஆரிய மொழிச்சொற்களும் இலக்கணமும் தமிழ்மொழிச் சொற்களினின்றும், இலக்கணத்தினின்றும் பெரிதும் வேறு பாடுடையன. ஆதலின் அக்காரணம் பற்றியும் தமிழரை ஆரியரெனக் கூறுதல் தவறென்பது புலனாம். தமிழ் மக்களுள் மங்கோலியக் கலப்பு ஏற்பட்டிருத்தல் கூடுமே யொழிய மங்கோலியருள் ஒரு பகுதியாரே முதற் றமிழர் என்று கூறுதற்குப் போதிய சான்றில்லை. தமிழ்மொழிக் கும் சீனமொழிக்கும் பொதுவாயுள்ள சில சொற்கள் காணப்படுதல்பற்றி அவ்வாறு துணிதல்கூடாது. தட்ப வெப்பநிலையின் ஒற்றுமை ஏதுவாக இருவேறு இடங் களில் ஒரு தன்மையான பேச்சு ஒலிகள் ஏற்படுதல் கூடும். ஆகவே, தமிழர் காக்கேசிய ரென்பாரோடு ஒத்த உடல மைப்புடையராய்த் தட்பவெப்ப நிலைக்கேற்ற உடல்

நிறத்திலும் தலைமயிர் நிறத்திலும் சிறுபான்மை வேற்றுமை யுடைய பல வகுப்பினர் அடங்கிய மக்கட் பிரிவினரென் பது போதரும். இனி அவருட் சிறந்தோராகிய நூலாசிரி யர்களையும் நூலையும்பற்றிய ஆராய்ச்சி காலமுறையின் வைத்துச் செயற்பாலது.

---

## ௨. முச்சங்கங்களின் காலம்

தமிழ்நாட்டிலே முச்சங்கங்கள் வெவ்வேறு காலங் களில் தழைத்தோங்கின என்பதை நம்பாதிருப்பதற்கு இடமில்லை. அவற்றை நிறுவி நடத்திய அரசரையும், புலவ ரையும் பற்றிக் கூறப்படும் செய்திகளில் ஒரு சிறிது பொருத்தமின்மை காணப்படுதல் ஒன்றேபற்றி அவைகள் உண்மையில் நிலவியிருந்ததில்லை என்று கூறுதல் அடாது.

தலைச்சங்க மிருந்த தென்பதற்கு இறையனாரகப் பொருளுரை, சிலப்பதிகாரவுரை, கம்பராமாயணம், பெரிய புராணம் முதலிய நூல்களில் சான்றுள்ளன. "தலைச் சங்கப்புலவனார் தம்முள்" என்ற பெரியபுராண வாக்கும் "அகன்பொதியில் திருமுனிவன் தமிழ்ச்சங்கம்" என்ற கம்பராமாயண வாக்கும் காண்க. சங்கமிருந்த தென்பது பத்துப்பாட்டுள் ஒன்றாகிய மதுரைக்காஞ்சியாலும், புற நானூற்றாலும் தெளியப்படும். அதனை நூலுட் காண்க.

"கூடலினாய்ந்த ஒண்டீந்தமிழ்" என்ற மணிவாசகத் திருவாக்கால் சங்கமிருந்தமை குறிப்பா லுணர்த்தப்பட் டது. "மதுரைத் தொகையாக்கினன்" என்ற சம்பந்தர் அருளுரையும், "நன்பாட்டுப் புலவனாய்ச் சங கமேறி" என்ற அப்பர் மொழியும் ஐந்தாவது ஆறாவது நூற்றாண்டி

விருந்த சைவத்தமிழ்ச் சங்கத்தைக் குறிப்பன என்று சிலர் கூறுவர். 'பட்டி மண்டபம்' என்பது சங்கத்தார் வதிந்த இடம் என்று பொருள் கொள்ளும்படியாகத் தொல்காப்பியம் செய்யுளியல் களகூ ஆம் சூத்திரத்திற்குப் பேராசிரியர் உரையில் ஒரு குறிப்புக் காணப்படுகின்றது. "தெற்கண் வாயில் திறவாத பட்டி மண்டபத்தார் பொருட்டு நக்கீரர் ஒருவன் வாழவும் சாவவும் பாடிய மந்திரம் அங்கதப் பாட்டாயின" என்பதவ்வுரை.

பட்டிமண்டபம் என்பது சமயவாதிகள் தத்தம் பொருளினைக் கூறும் மண்டபம் என்னும் பொருளில் மணிமேகலையுள் வந்துள்ளது. "பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்" என்பது மணிமேகலை. "பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை, எட்டினோ டிரண்டும் அறியேனையே" என்ற திருவாசகமும் காண்க.

சங்கப்பலகை ஒன்றிருந்ததென்ற கருத்துப் பழைய திருவிளையாடலிற்றான் முதன்முதலில் காணப்படுகின்றது. "மொழியறி சங்கப்பலகை," "பாவறி சங்கப்பலகை" என்ற சொற்றொடர்கள் காண்க.

குமரிமுனைக்குத் தெற்கிலிருந்த நாட்டிலே தலைச் சங்கமிருந்ததாகத் தெரிகின்றோம். தலைச்சங்கம் நிலவியதன் பின் பெரிய கடற்பெருக்கொன்று நிகழ்ந்திருக்கின்றது. அஃது எப்போது நிகழ்ந்ததென்று துணிதல் எளிதன்று. ஸ்காட் எலியட் என்பவர் சொல்லுகின்ற ஐந்தாவது கடல் வெள்ளம் ஏறக்குறைய கூ௫00 ஆண்டுகட்கு முன் நிகழ்ந்ததாகும். அதுவே தலைச்சங்கத்திற்குப்பின் நிகழ்ந்த கடல் கோளாமெனின் அத்துணைக் காலத்திற்கு முன்னமேயே தலைச்சங்கம் ஏறக்குறைய ச௫00 ஆண்டு அகூ அரசர்களின் தொடர்ந்த ஆட்சியில் நடைபெற்றிருந்த

தாகக் களவியலுரையால் அறிகின்றோம். முச்சங்கங்களுக்குக் களவியலுரையில் கூறப்பட்டிருக்கும் கால அளவு சோதிவட்டக் கணக்கு என்பதில் வைத்துத் தீர்மானிக்கப் பட்டதாகும். அக் கணக்கு யாதெனில் கூறுதும். (கதிரவனோடு ஒரே நேரத்தில் கீழ்த்திசையில் சோதி என்கின்ற விண்மீன் "ஆயிரத்துநானூற்றெண்பதாண்டுகளுக்" கொருமுறை தோன்றுமென்று வானநூலார் கூறுகின்றார்கள்.) அச் சோதி விண்மீனை "Sirius" என்று ஆங்கிலத்தில் கூறுவர்; கசஅ0 என்ற கணக்கு ஒரு மாதத்திற்கு ௩0 நாள் என்ற சாந்திரமானத்தின்படியாகும். சூரியனை வைத்துக் கணிக்கின்ற காலமுறைப்படி (சௌரமானப்படி) அது கசசு0 க்கு ஒரு முறையாகும். களவியலுரைகாரர் சாந்திரமானப்படியே சோதி வட்டத்தின் ஆண்டுகளைக் கணித்து, சோதிடவட்டக் கணக்கின்படி முச்சங்க காலங்களைக் கணக்கிட்டுரைத்தார். முதற்சங்கம் இருந்த காலம் சசச0 என்பது மூன்று சோதி வட்டமாகும்.

இரண்டாவது சங்கம் நிலவிய காலம் $2\frac{1}{2}$ சோதிவட்டமாகும். மூன்றாவது சங்கம் நிலவிய காலம் $1\frac{1}{4}$ சோதி வட்டமாகும். இச் சோதிவட்டக் கணக்குப் பண்டைத் தமிழருக்குள்ளும் எகிப்தியருக்குள்ளும் வழக்கிலிருந்தது.

அக் காலத்து மன்னர் நீடித்த ஆயுள் உடையராயிருந்தனரென்று கோடல் தவறாகாது. ஆதலால் இச் செய்தியைப் புனைந்துரையாகக் கருதவேண்டியதில்லை.

முதற்சங்கத்தை நிறுவிய முதல் மன்னன் பெயர் **காய்சினவழுதி** யென்றும், இறுதி மன்னன் பெயர் **கடுங்கோன்** என்றும் கூறப்பட்டுள்ளன. சங்கமிருந்தார் ஐஞ்ஞூற்றுநாற்பத்தொன்பதின்மர். ஆனால், அவர் யாவரும் ஒரே காலத்தவரென்று கூறமுடியாது. அவருள் விரிசடைக்

கடவுளும் குமரவேளும் சேர்க்கப்பட்டிருப்பதை நோக்கு மிடத்து அக் கடவுளர் மக்களுடன் ஒருங்கிருந்து தமிழா ராய்ந் திருத்தல் கூடுமா வென்கிற ஐயம் நிகழற்பாலதே. புராணத்தின்படி இவர்களே, சூரன் முதலியோர் திகழ்ந்த காலத்திலே, முறையே முப்புரமெரித்தும் குன்றமெறிந்தும் மன்னுயிர்களை உய்யக் கொண்டனராவர். அக் கடவுளர் தம்பால் அன்புவைத்த அடியார்கட்குத் தோன்றி யருளி மெய்யறிவு, கலைஞானம் முதலியவற்றை நல்கியிருத்தல் கூடுமேயன்றி, அவர்களே மக்களைப்போலச் சங்கமிருந்து தமிழாராய்ந்தாரென்று கொள்ளுதல் பொருந்துவதன்று. சிவபெருமான் ஆலமர் கடவுளாகி நான்கு முனிவர்களுக்குச் சிவநெறி காட்டிய அருஞ்செயல் தேவார திருவாசக முதலிய திருமுறைகளுள் நாட்டப்பட்டதாகும். அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கினையும் அம்முனிவர் களுக்கு அக் கடவுள் உணர்த்த அன்னோர் பண்டைத் தமிழில் நான்மறை யியற்றியிருத்தல் கூடுமென்பதைத் **திருநான்மறைவிளக்கத்துள்** விரித்துரைத் திருக்கின்றோம். ஆண்டுக்காண்க. கடவுள் தம் அடியார் வாயிலாக முதனூல் இயற்றியருளினரென்ற கொள்கை தமிழிலக்கண நூலாலும், திருமுறை முதலிய இலக்கியங்களாலும் இனிது துணியப் படும்.

> "வினையி னீங்கி விளங்கிய அறிவின்
> முனைவன் கண்டது முதனூலாகும்." (தொல்-மரபு-௯௪)

என்பது காண்க.

> "ஆலடைந்த நீழன் மேவியருமுறை
> சொன்ன தென்னே." (சம்பந்தர் தேவாரம்)

> "அறம் பொருளின்பம் வீடாறங்க
> வேதம் தெரித்தானை." (அப்பர் தேவாரம்)

என்பனவும் பிறவுங் காண்க.

சிவபெருமான் மிகப் பழமையான காலத்தே நான் மறை இயற்றுவித்தபின் மகேந்திர வெற்பினில் அகத்தியர் முதலிய ஐம்முனிவர்க்கும் அறிவு நூலாகிய ஆகமங்களை அறிவுறுத்தினர்.

" மற்றவை தம்மை மகேந்திரத் திருந்து
உற்றஐம் முகங்க ளாற்பணித் தருளியும்."

என்ற மணிவாசகத்தை நோக்குக.

அப் பரம்பொருள் குருந்த மரத்தடியில் மணிவாசக ருக்கு அறிவுறுத்த (ஞானோபதேசம் செய்ய) எழுந் தருளியபோது அடியார் குழாத்திற்குத் தலைமைபூண்டு திகழ்ந்தனரென்று தெரிகின்றோம். அவ்வாறே தலைச்சங்கம் தொடங்கிய காலத்தும் விரிசடைக்கடவுளும் முருகவேளும் தக்க அறிஞர்க்குத் தோன்றியருளித் தமிழறிவினை நல்கி யிருத்தல்கூடும். அகத்தியனார் இருவரிடமும் தமிழறிவு பெற்றாரென்று புராணங் கூறுகின்றது. அவரும் அவர் போன்ற பெரியாரும் முதற்கழகத்தில் உறுப்பினரா யிருந் திருத்தல்கூடும்.

இன்னொரு முறையாகவும் இதனைக் கொள்வதுண்டு. ஈண்டுக்குறித்த இருகடவுளரும் அக் கடவுளரது திருவரு ளாற்றல் நன்கமையப்பெற்ற சைவமரபைச்சார்ந்த பெரு மக்களென்று கொள்வாருமுளர். மார்க்கண்டேயர், வான் மீகர், கௌதமர் முதலியோரும் தலைச்சங்கப் புலவராய் விளங்கினரென்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் (தொல்-பொருள்) கூறுகின்றார். மார்க்கண்டேயர் கந்தபுராணத் துக்கு முந்திய காலத்தவராக அப் புராணம் இயம்புவதா லும் அவர் சிவநெறி யொழுகிய பெரியாராய்த் தமிழகத்தி லுள்ள திருக்கடவூரில் வதிந்த ஒரு முனிவரானதாலும் ஒருகால் தலைச்சங்கப் புலவராய் இருந்திருத்தல்கூடும்.

இராமாயணஞ் செய்த வான்மீகிமுனிவர் இடைச்சங்க காலத்தவராதலால் அவரே தலைச்சங்ககாலத் திருந்தாரெனக் கொள்ளின், அகத்தியனார்போல அவரும் நீண்ட ஆயுளுடையவராய் இருந்திருத்தல் வேண்டும். அன்றெனின், தலைச்சங்க வான்மீகியார் அவரின் வேறுதல் வேண்டும். கௌதமன் என்னும் பெயர் ஆகமங்கேட்ட ஐம்முனிவருள் ஒருவருக்கு இடப்பட்டுள்ளது. அவராதல் அவர்வழித் தோன்றியோராதல் தலைச்சங்கப் புலவரா யிருந்திருத்தல் கூடும். புறநானூற்றுள் கோதமனார் என்னும் புலவரொருவர் தருமபுத்திரனைப் பாடிய பாட்டொன்றுளது. அத் தருமபுத்திரர் யார் என்று இனிது விளங்கவில்லை. அவர் பாண்டவரில் முதல்வரெனின், அவர் தலைச்சங்க காலத்தவரென்பதைப் பற்றி ஐயம் நிகழற்பாலதே.

தலைச்சங்க காலத்தவராக இறையனாரகப் பொருளுரையுள் முரஞ்சியூர் முடிநாகராயர் என்பார் குறிக்கப்பட்டுள்ளார். பாரதப் போரிற் பெருஞ் சோறு வழங்கிய உதியஞ் சேரலாதனை முடிநாகராயர் பாடிய பாட்டொன்றுளது. அவர் தலைச்சங்கத்தைச் சார்ந்தவரெனின், தலைச்சங்க காலம் பாரதகாலத்திற்குச் சற்று முன்பு என்று கருதக்கூடும். பாரத காலம் கி. மு. பன்னிரண்டாம் நூற்றாண்டின தென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றார்கள். விஷ்ணு புராணம், வாயு மச்ச புராணங்கள், பாகவதம் முதலியவற்றில் நந்தர்கள் காலத்திற்குச் சுமார் ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்னே பரீட்சித்தின் காலம் கூறப்பட்டது. நந்தர் காலம் சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன்பென்று தெரிகின்றது. காஷ்மீர் அரசர் வரலாற்றினாலும், சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்புதான் பாரதம் நடந்ததென்று கருத இடமுண்டு. உதயணன் கதையினாலே அவன் பாண்டவர் மரபிலே

இருபதாவது தலைமுறையில் அரசாண்டவன் என்று தெரிகிறது. உதயணன் கி. மு. ஏழாவது நூற்றாண்டில் அரசாண்டதாகத் திரு. வி. கனகசபைப்பிள்ளை யவர்கள் கூறுவதால், பாண்டவர் காலம் கி. மு. பன்னிரண்டாம் நூற்றாண்டென்று கருத இடமுண்டு. வேறு சிலர் பாண்டவர் காலம் நாலாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முற்பட்ட தென்ப. வராகமிகிரர் என்பார் தமது கோள் (சோதிட) நூலிலே விக்கிரம சகம் தொடங்குவதற்குச் சுமார் இரண்டாயிரத்துஐந்நூறு ஆண்டுகட்கு முன்னே தருமபுத்திரன் அரசியற்றுங் காலத்தில் ஏழுமுனிவர்கள் (சப்த ரிஷிகள்) என்னும் விண்மீன் தொகுதி மகநட்சத்திரத்தில் இருந்ததென்று உரைப்பதாகத் திரு. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை யவர்கள் 'செந்தமிழ்' என்னும் வெளியீட்டின் இதழ் ஒன்றில் எழுதியிருக்கின்றார்கள். அதனை மறுப்பாரும் உளர். எவ்வாறாயினும் பாண்டவர் காலம் கி. மு. கஉ ஆவது நூற்றாண்டிற்குப் பின்னில்லை என்பது தெளிவு.

களவியலுரையுட் குறிக்கப்பட்ட முடிநாகராயர் உதியஞ்சேரலாதனைப் பாடியவரின் வேறானவரென்று கோடல் வரலாற்று முறைக்குப் பொருத்தமானதே. அதனை விளக்குதும்: வான்மீக இராமாயண காலம் கி. மு. ஏழாவது நூற்றாண்டிற்கு முன்னென வடமொழி இலக்கிய வரலாற்றாசிரியர் கூறினும் இராமாயணக் கதை பாரதக்கதைக்கு முற்பட்டதென்பதே யாவருக்கும் உடன்பாடாகும். பாரதக்காலத்தில் தலைச்சங்க மிருந்ததெனின் தலைச்சங்க மிருந்த தென்மதுரையைக் கடல் கொண்ட செய்தி அக்காலத்திற்குப்பின் நிகழ்ந்திருத்தல் வேண்டும். பாரதத்திற் பேசப்படுகின்ற பாண்டியன் நகர் மணலூராகும். அஃது இப்பொழுதுள்ள மதுரைக்குக் கீழ்த்திசையில் சிறிது தூரத்திலிருந்தது. வான்மீக இராமாயணத்திற் கூறிய

கபாடபுரம் பொருநையாறு கடலோடு கூடுமிடத்திலிருந்தது. 5 மணவூரிற் றலைச்சங்க மிருந்தபின் கடல்கோள் நிகழ்ந்து கபாடபுரத்திற்குப் பாண்டிய மன்னர் சென்று இடைச்சங்கம் நிறுவினரென்றால் வடக்கேயிருந்து தெற்கே அன்னோர் சென்றதாக முடியும். அங்ஙனங் கொள்வது முற்றும் பொருத்தமில்லாத தென்பது தெளிவு. கடல்கோளைப் பற்றிய கதையை நம்புதல் கூடாதென்றால் அதற்கு எதிரிடையான கதைக்குத் தக்க சான்று சிறிதுமில்லை. 6 ஆதலால், மணவூரில் தங்கிய பாண்டியர் தலைச்சங்கம் நிறுவினரென்று கோடல் தவறாகும். தலைச்சங்கம் கடல்கோட்கு முன்னிருந்த நாட்டில் நிலவியதென்பதும், கடல்கோள் நிகழ்ந்தபின் கபாடபுரம் என்னுமிடத்தில் இடைச்சங்க மிருந்ததென்பதும், அதற்குப் பின்னுங் கடல்கோள் நிகழ்ந்தே கடைச்சங்கம் நிறுவப்பட்டதென்பதும் களவியலுரை, சிலப்பதிகாரம் முதலிய நூல்களாற் றெளியப்படும். அதனை மறுப்பதற்குப் போதிய சான்று ஒன்றுமில்லை. 7. மார்க்கண்டேயர், கௌதமர், முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் பெயர்கள் தனித்தனியே அவ்வக் குடியில் வந்தார்க்கு அமைந்திருத்தல் இயல்பே. 8. தென்மதுரையில் நிலவிய ஒரு சங்கம் அவ்விடத்தைவிட்டுக் கபாடபுரத்திற்குப் பெயர்வதற்குக் கடல்கோள் ஏதுவாகற்பாலதே. கபாடபுரம் என்பது கடைச்சங்கத்தார் காலத்தில் இருந்ததாகத் தெரியாமையாலும், அவ்விடத்தை விட்டுக் கூடலம்பதிக்குச் சங்கம் பெயர்வதற்கு ஏதுவும் கடல்கோளே என்று கோடல் மிகையாகாதாகலானும் மேற்குறித்தவை வலியுறுமாறு காண்க.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை யென்பார் செந்தமிழில் வெளியிட்ட 'ஈழமும் தமிழ்ச்சங்கமும்' என்னுமொரு கட்டுரையில் கி. மு. ஐந்நூற்று நாற்பத்து மூன்றுவது

ஆண்டில் விசயன் என்னும் அரசன் சிங்கள அரசினை நிலை பெறுத்துவதற்குமுன் தமிழரது அரசு இலங்கையில் இருந்ததென்றும், ஈழநாட்டு வேந்தர்க்கு முடிநாகரென்ற பேர் இருந்ததென்றும், அந்நாட்டிற்கே நாகத்தீவு என்ற பேர் வழங்கியதென்றும், நாகர்கோயில், முசிரி என்ற பெயர்கள் ஈழநாட்டில் வழங்கினவென்றும், சோழன் மணந்த நாககன்னிகை அந்நாட்டு அரசன் மகளென்றும், இளநாகன் என்னும் அரசன் கி. பி. ௩அ இல் அவண் அரசாண்டனனென்றும் கூறுதலால், உதியஞ் சேரலாதனைப் பாடிய முடிநாகராயர் ஈழமன்னர் மரபினராயிருத்தல் கூடுமென்று கருதுதற்கு இடமுண்டு. இராவணன் புலத்தியரென்னும் முனிவரது மரபில் வந்ததாக இராமாயணங் கூறுகின்றது. புலத்தியரென்பார் அகத்தியருக்கு மைத்துனரென்று சித்தர் நூல் கூறும். இராவணனை இராக்கத குலத்தவனென்று வடநூல்கள் கூறுகின்றன. இராக்கதர்களின் ஒருவகையார் நிருதியென்னும் தென்மேற்குப் புலங்காப்பார்களின் (திக்குப்பாலகர்) வழிவந்தவர்களென்று நூல்களால் அறிகின்றோம். இந்தியாவிற்குத் தென்மேற்குப் பக்கத்திலிருக்கிற ஆப்பிரிக்காவிலுள்ள மக்கள் நீகிரோ வகுப்பைச் சேர்ந்தவர்கள். இராவணன் தமிழரொடு சிறுபான்மை கலப்புற்ற நீகிரோவர் வழியைச் சார்ந்த நாகர் என்பாரின் குல அரசனாக இலங்கையில் ஆண்டிருத்தல் கூடும். ஈழமண்டலத்திலிருந்த நாக அரசர்க்கும் பாண்டிய மன்னர்க்கும் அடிக்கடி போர் நடந்ததாக வரலாற்றால் அறிகின்றோம். நாகமன்னனாகிய இராவணன் பாண்டியமன்னனை வென்று தமிழ்நாட்டைத் தன் ஆட்சிக்கு உட்படுத்த முயன்றகாலை அகத்திய முனிவர் அவனை இசையினால் வென்று அடக்கினரென்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுகின்றார். இராமன் இரா

வணை வெல்லுதற்காகப் பல அரசர்களினுதவியைத் தேடியகாலை அக்காலத்துப் பாண்டிய மன்னனது உதவியை யுந் தேடியது இராமாயணத்திற் குறிக்கப் பெற்றுள்ளது. இராவணன் நாகர்குலத் தலைவனாக இருந்தாலும் தமிழை வளர்த்தவனென்பதும், அவன் மரபிலே வந்தவர் முடிநாக ராயர் என்பதும் அறியக் கிடக்கின்றன.

**ஸ்காட் எலியட்** என்பவர் கூறிய கடற்பெருக்கில் ஐந்தாவது பெருக்கிற்கு முன்னேயே சூரன்போர் முடிந் திருக்கவேண்டும். "பார்முதிர் பனிக் கடலாகிய" (திரு முருகாற்றுப்படை, பரிபாடல்) தென்பெருங் கடலிலேயே சூரனது நகரிருந்தமையால் நிலவுருண்டையின் நடுக்கோட் டிற்கு மிகவுந் தெற்கே அவனுடைய நாடு இருந்திருக்க வேண்டும். கந்தபுராணத்துள்ளும் இலங்கைக்குத் தெற்கே ஆயிரம் யோசனைக்கு அப்பால் சூரனது நகர் இருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. அப்பகுதிகள் நெடுநாட்குமுன் கடலுள் அழிந்ததாகக் ஸ்காட் எலியட் கூறியிருக் கின்றார். தலைச்சங்கமானது காய்சினவழுதி முதல் கடுங் கோன் ஈறாக ஆண்ட அரசர்களால் ஏறக்குறைய நாலாயிரம் ஆண்டுகளாக நிறுவப்பட்டதென்று முன்னர்க் கூறினோம். இடைச்சங்கம் தொடங்குவதற்கு முன் சிறிதுகாலம் இடையீடாகக் கழிந்திருத்தல் இயல்பே. அவ்வாறு நிகழாது கடுங்கோனிற்கு அடுத்த மன்னன் சங்கத்தைத் தொடர்ச்சியாக நிறுவி யிருப்பானென்றால் அவன் நிறுவிய சங்கமும் தலைச்சங்கமென்ற பெயரையே யுடைய தாகும். இடைச்சங்கமென்று வேறாகப் பேச ஏதுவில்லை. ஆதலால், ஸ்காட் எலியட் கூறிய ஐந்தாங் கடற் பெருக்கானது தலைச்சங்கத்தின் இறுதியிலும் இடைச் சங்கத்தின் முன்னும் நிகழ்ந்திருக்கலாம். அவ் வைந்தாங் கடற் பெருக்கிற்குப்பின் பெரிதாகப் பேசப்படுகின்ற கடல்

வெள்ளம் கி. மு. ௩௫00 க்கும் உ௪0௫ க்கும் இடையே நடந்ததாகப் பல புலவர்கள் இயம்பியுள்ளார்கள். டெனன்ட்[1] என்பவர் எழுதியுள்ள இலங்கைச் சரித்திரம்[2] என்னும் நூலில் கி. மு. உ௩௮ஆம் ஆண்டில் ஒரு கடற்பெருக்கு நடந்ததாகக் கூறப்பட்டது. நோவா காலத்துப் பெரு வெள்ளமும் அதுவேபோலும்! அக் காலத்தில் நடந்த வெள்ளமே தலைச்சங்க காலத்திற்கும் இடைச்சங்க காலத்திற்கும் இடையே நிகழ்ந்த கடற்பெருக்கெனின், இடைச் சங்கத்திற்குக் குறித்த காலவரையறை தவறாகும். அது தவறுடையதே எனக்கொள்வார், இவ் வெள்ளம் நிகழ்ந்த காலமே தலைச்சங்க முடிவுகாலமென்பர். அவ்வாறன்றிக் களவியலுரைக்கு ஏற்பக் கணக்கிடுமிடத்துத் தலைச்சங்கம் ஐந்தாம் பெருக்கோடு முடிந்துவிட அதற்குச் சில காலத்திற்குப்பின் இடைச்சங்கம் தொடங்கி மேற்குறித்த கடற்பெருக்கின் காலம்வரை நடைபெற்றிருக்கவேண்டும். அவ்வாறன்றி, ஐந்தாம் பெருக்கிற்குப்பின் தலைச்சங்கம் தொடங்கியிருந்தால் நாட்டிற் பஞ்சம், போர் முதலிய ஏதுக்கள் பற்றிச் சங்கத் தொடர்ச்சிக்கு இடையூறு ஏற்பட்டிருக்கலாம். பின்னர் வெண்டேர்ச்செழியன் காலமுதல் இடைச்சங்கம் தென்மதுரையிலே தொடங்கியிருத்தல் கூடும். அவ் விடைச்சங்கம் நிறுவிச் சிலகாலங் கழிந்த பின்பு கடல்வெள்ளம் ஏற்படவே, சங்கம் நிறுவிய மன்னருள் ஒருவனாகிய நிலந்தருதிருவிற்பாண்டியனென்போன் தன் குடிகளைப் பிழைப்பித்தபின் மீட்டுங் கபாடபுரமென்னுமிடத்தில் அச் சங்கத்தைத் தொடர்ச்சிபெற நடத்தியிருத்தல் கூடும். அக்காலத்தேதான் இராமாயணக் கதை நிகழ்ந்திருத்தல் கூடும்.

---

1, Tennant.
2. History of Ceylon.

"தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தருதிருவின் நெடியோன்." (எசுக - ந)

என மாங்குடிமருதனார் மதுரைக்காஞ்சியிற் கூறியிருத்தலைக் காண்க.

தலைச்சங்கம் ஏற்பட்டதன்பின் நடந்த கடற்பெருக்கிலே 'பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக் கோடுங் கொடுங்கடல்' புக்கது. குமரியாறு கடல்புக்கதாகக் கூறப்படவில்லை. ஆதலால் இடைச்சங்க காலத்திற் குமரியாறு தென்எல்லையாகப் பனம்பாரனாரால் குறிக்கப் பட்டுள்ளது. குமரியாறு கடல்கொள்ளப்பட்டதன் பின்பே முடத்திருமாறனால் கடைச்சங்கம் தொடங்கப்பெற்றது. பஃறுளியாறு முதற் கடற்பெருக்கிலே மறைந்தொழிந்தது. அங்ஙனமிருப்பப் புறநானூற்றுள்,

"நெடியோன்,
நன்னீர்ப்பஃறுளி மணலினும் பலவே." (புறம். க)

என்னுந் தொடர் முதுகுடுமிப்பெருவழுதியை வாழ்த்திய பாட்டிற் காணப்படுகின்றது.

நெடியோனுக்குப் பின்னே வாழ்ந்தவன் முதுகுடுமி என்பது தெளிவு. நெடியோன் காலத்திலேயே பஃறுளி என்னும் ஆறு கடல்கோட் பட்டதாயின் முதுகுடுமி காலத்தே அஃது எவ்வாறு நிலவியிருக்கும்? கடலுள் மறைந்த ஆற்றினைப்பற்றிப் புலவர் பாடுதற்கும் இடமில்லை. முதுகுடுமிக்குப்பின் முடத்திருமாறன் காலத்திலேதான் பஃறுளியாறு கடல்கொள்ளப்பட்டதெனின், குமரியாறும் அக் காலத்திலேதான் கடல்கொள்ளப் பட்டிருக்கும். பஃறுளியாறுங் குமரியாறும் ஒரேகாலத்தில் கடல்கோட் பட்டதென்றால் இடைச்சங்கத்தார் காலத்திற்குக் குமரி

யாறு தென்னெல்லை யென்பதும் இடைச்சங்கத்திற்கு முன்னே கடல்கோள் நிகழ்ந்ததென்பதும் தவருய் முடியும். ஆதலால் மேற்கூறிய புறநானூற்றுப் பாட்டினுட் போந்த பஃறுளியென்பது மறைந்த பஃறுளியாற்றுக்கு ஈடாக நெடியோனல் உளதாக்கப் பெற்றது போலும். இதனையே சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் 'குமரிப்பக்கத்த தோராறு'[1] என்ருரென்க. அஃது அரசனல் ஆக்கப்பட்டதாகலின், அதனைப் புலவர் விதந்தோதினரென்க. ஈண்டுக் கூறியவாற்ருல் களவியலுரையிற் கூறிய காலவரையறை போற்றப்படுதல் காண்க.

மேலே காட்டப்படும் ஏதுக்களால் கடைச்சங்கத்தார் காலம் மூன்ருவது நூற்ருண்டில் முடிவு பெற்றதாக விளங்கும். அதற்குமுன் ஆயிரத்தெண்ணூறு ஆண்டு கடைச்சங்கம் நிலவியதாகக் களவியலுரை கூறுவதால் கி. மு. கஉ ஆவது அல்லது கரு ஆவது நூற்ருண்டிலேயே கடைச்சங்கம் தொடங்கியிருத்தல் வேண்டும். திருவிளையாடற் புராணத்திற் கூறுகின்ற முறைப்படி பாண்டியர் எச பேர் திருவாதவூரடிகள் காலத்திற்கு முன்னே அரசாண்டதாகக் கேட்கப்படுவதால், அந்நூலுட் போந்த முதற்பாண்டிய மன்னர் காலமும் கி. மு. கஉ ஆவது நூற்ருண்டிற்கு முற்பட்டதென்பது போதரும். மணவூர் என்பதே பாரதத்துள்ளும் கேட்கப்படுதலால், கடைச்சங்கம் தொடங்கிய காலமே பாரத காலமாகக் கருதலாம். அக் காலத்திற்கு முன்னே ருஎ00 ஆண்டு இடைச்சங்கமிருந்தது. (ஆகவே ஏறக்குறைய கி. மு. ரு000 ஆண்டுகட்கு முன்னே தலைச்சங்கம் நிலவியிருத்தல் வேண்டும்.) சுமார் கி. மு. ரு000 ஆண்டுகட்குமுன் நிகழ்ந்த ஒரு வெள்ளத்தின் பின்னேயே இலங்கையானது தமிழ்நாட்டினின்றும் பிரிவுபட்டதென்ப.

1. சிலப். காடுகாண் காதை, கக இன் அரும்பத உரை.

அங்ஙனமாயின், அவ் விலங்கையை யாண்ட பெருமன்னனே இராவணனாகலின், இராமாயணம் கி. மு. ௩௫00 ஆண்டு கட்குப் பின்னும், கி. மு. ௧௫00 ஆண்டுகட்கு முன்னும் நடைபெற்றிருத்தல் வேண்டும். தலைச்சங்ககாலத்து நிலவிய நூல்களுள் ஒரு சிறு நூலின் பகுதியே இப்போது வெளியா யிருக்கின்றது. அது **செங்கோன்றரைச் செலவு** என்பது. அதற்குப்பின் தோன்றிய நூல்களுள் தொல்காப்பிய மொன்றே முதன்மையானது. தலைச்சங்கத்தார் காலத்த தாகக் கூறப்படும் அகத்தியம் இப்போது கிடைக்கப்பெற வில்லை.

மேற்குறித்தவாறன்றிக் கி. மு. ௩000 ஆண்டுகட்குப் பின் இடைச்சங்கம் நிலவியதென்றும், கி. மு. ௫00 ஆவது ஆண்டில் நிகழ்ந்த வெள்ளத்திற்குப்பின் கடைச்சங்கம் ஏற்பட்டதென்றுங் கூறுவாருமுளர். இன்னும் ஒருசாரார் கி. மு. ௧௨ ஆவது நூற்றாண்டிற்குமுன் தலைச்சங்க மிருந்த தென்றும், அது முதல் கி. மு. ௬ ஆவது நூற்றாண்டுவரை இடைச்சங்க மிருந்ததென்றும் அதற்குப்பின் கடைச்சங்க மிருந்ததென்றுங் கூறுவர். மற்றொரு சாரார் முச்சங்க மிருந்ததில்லை யென்றும் சங்கம் ஒன்றே யென்றுங் கூறுவர். இன்னோரன்ன கொள்கைகளெல்லாம் பண்டை நூல்களுட் குறித்த வரலாற்று முறைக்கு மாறானவையே.

கடற்பெருவெள்ளம் நிகழ்ந்ததென்பதைப்பற்றி வட மொழியில் **சதபதப்பிரமாணம்** என்னும் வேதநூலினும் விவிலியநூலின் பழைய ஏற்பாட்டிலும் விவரங் காண் கின்றோம். விவிலியநூலில் நோவா என்பவனது கப்பல் அராரத் என்னும் மலையில் தங்கினதாகச் சொல்லப்பட்டது. சதபதப்பிரமாணத்தில் மனுவினுடைய கப்பல் வடமலையிற் றங்கியதாகக் கூறப்பட்டிருக்கிறது. தெற்கேயிருந்து ஒரு

கப்பல் வடக்கு நோக்கிச் சென்றால் வடமலையென்பது பொதியமலையாய் முடியும். மனுவென்பவர் திராவிடத் தலைவரென்றும், மலையம் என்னும் பொதிய மலையில் அவர் தவம் புரிந்தா ரென்றும் மகாபாரதமும், பாகவதபுராணமுங் கூறுகின்றன. வைகை யாற்றிலே கடவுட்டன்மையுடைய மீன் அவருக்குத் தோன்றியதாகவும் கேட்கின்றோம். இக் கதையால் குறிக்கப்பெற்ற கடற்பெருக்கு மிகவும் பழைய காலத்தில் நிகழ்ந்ததாகத் தோன்றுகிறது. அங்ஙனமாயின் எலியட் என்பவர் கூறிய ஐந்தாம் பிரளயமாக அஃது இருத்தல்கூடும். ஏறக்குறையக் கி. மு. உருOO ஆண்டு களுக்கு முன்னே நிகழ்ந்த கடற்பெருக்கே இஃதாமெனின், அதைப்பற்றிய விவரம் தமிழ் நூல்களிற் காணப்படுமா றில்லை. ( மனுவென்பார் தமிழரின் தலைவராதலால், அவருக்குத் தோன்றிய மீனையே பாண்டியர்கள் தமது கொடி யடையாளமாகக் கொண்டார்களென்று பண்டிதர் திரு. சவரிராய பிள்ளை யவர்கள் கூறியுள்ளார்கள்.) சோழ அரசர் மரபில் பண்டை மனு ஒருவரிருந்து ஆவின் கன்றைக் கொன்ற தம் புதல்வனைத் தாமுங் கொன்று முறைசெய்தாரென்ற வரலாறு சிலப்பதிகாரத்துள்ளும் போந்தமை காண்க. அப் பேரரசர்க்கு முன்னரே சோழ மென்பது தென்றிசைக்கு ஒரு பேராதலால் சோழநாடு என்பது தென்னாட்டிற்கு ஒரு பெயரென்று காலஞ்சென்ற மாகறல் **திரு. கார்த்திகேய முதலியார்** செப்பினர். சோழ அரசர்க்கும் பாண்டிய அரசர்க்கும் முன்னோன் மனு வென்றால் சேர அரசர்க்கும் அவனே முன்னோனாதல் வேண்டும். அங்ஙனமாயின் தமிழ் வழங்கும் மூவேந்தர் நாடுகள் பிரிவுற்று நிலவுவதற்கு முன்னேயே இருந்த பண்டைத் தமிழர்க்கு மனு தலைவனாதல் வேண்டும். அங்ஙனமாயின் மனுவின்வழிப் பாண்டியர் தோன்றிய

பின்னர் மூவேந்தர் தனித்தனி பிரிந்து வெவ்வேறு அரசராய்த் திகழ்ந்தனரென்பதே பொருத்தமானது. இவ்வாறு கோடலன்றி எலியட் கூறிய ஐந்தாம் பெருக்கின் காலத்திலேயே மேலே ஆசியாவிலிருந்து தமிழர் இந் நாட்டிற்கு வந்தனரென்றால், அத்துணைப் பழமையாகிய காலத்திற்கு முன்னேயே அக்கேடியர் என்பார் மிக்க நாகரிக முற்றிருந்தாரென்பது தெரியவில்லை. (தமிழ்நாட்டிற் கூறப்படுங் கந்த புராணக் கதைகள் முதலியவற்றாலும், எக்கேல், அக்சிலி, டோபினூர்டு[1], பெர்குசன்[2], இவான்சு[3] முதலியோர் தென்னாட்டின் தொன்மையைப்பற்றிக் கூறுங் கருத்துக்களாலும், நிலநூல், தொல்லுயிர்நூல் முதலியவற்றின் சான்றுகளாலும், தென்னாட்டிற்கும் மேலை யாசியாவிற்கும் கப்பல் வாணிகம் மிகப்பழைய காலத்தே இருந்ததாகத் தெரிவதாலும் தமிழரின் ஒரு பகுதியாரே தென்னாட்டிலிருந்து அக்கேடிய முதலிய இடங்களுக்குச் சென்றனர் என்று கொள்ளுதலே பொருத்த முடைத்து.) ஆரியர் வடமேற்கு வழியாக இந்தியாவிற் புகுங்காலத்துப் பெலுசித்தானம் முதலிய இடங்களிலும், வடமேற்கு இந்தியாவிலும் தமிழ்ச் சார்பாய மொழிகள் வழங்கின என்பது பேராசிரியர் ராப்சன்[4] என்பவருடைய கருத்துமாகும். டாக்டர் மெக்லீன்[5] என்பவர் கூறுவதாவது :

'மக்கட்குல முறையான ஆராய்ச்சியால் மத்தியதரைக் குலத்தினருக்கும் அவர்களுக்கு வடக்கே உள்ளே குலத்

---

1. Topinard. 2. Fergusson. 3. Evans.
4. Prof. Rapson. 5. Dr. Maclean.

6. "Investigations in relation to race show it to be by no means impossible that Southern India was once the passage ground by which the ancient progenitors of northern and Mediterranean races proceeded to the parts of the globes which they now inhabit."

தினருக்கும் முன்னோர் தென்னிந்தியாவினின்றும் சென்றார்கள் என்று கூறுவது முடியாத காரியமல்ல.

திராவிட மொழிகளின் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு திராவிடர் துரானிய சித்திய மக்களோடும் ஆத்திரேலிய மக்களோடும் தொடர்புடையவர்கள் என ஒருகாலத்திற் கருதப்பட்டனர். தலைசிறந்த குலநூலாரால் இக் கொள்கை மறுக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஒரு கூட்டத்தின் தனிப்பட்ட குடும்பத்தினராகக் கொள்ளப்

---

Dr. Maclean (in his Madras Manual of Administration) says "They (the Dravidians) were at one time, on the ground of the general structure of their languages, classed with the Mangoloid (Turanian, Scythian) and even the Australian races, but that classification is rejected by all the leading Ethnologists. They form, in fact, with the other members of the group, a separate and distinct family, which is of the Dolichocephalic class, and which comes near the Indo-European or Aryan type.

Dr. Fergusson with a full understanding of the various aspects, says "Their (the Dravidian) settlement in India extends to such pre-historic times that we cannot even feel sure that we ragard them as immigrants or, at least, as either conquerors or colonists on a large scale, but rather as aboriginal in the sense in which that term is usually understood. The hypothesis that would represent what we know of their history most correctly is that which places their original seat in the extreme south, somewhere probably not far from Madura or Tanjore, and thence spreading fan-like towards the north. They have no traditions which point to any seat of their race outside India, or of their having migrated from any country with whose inhabitants they can claim any kindred. So far as we know they are indigenous and aboriginal."

படுகின்றனர். அவர்கள் நீண்ட தலையுள்ள இந்து ஐரோப்பிய அல்லது ஆரிய இனத்தைச் சார்கின்றனர்.

குல ஆராய்ச்சியின் பல தன்மைகளையும் நன்கு அறிந்த **பெர்குசன்** கூறுவது: "வரலாற்றுக் காலத்திற்கு மிக முன் தொட்டுத் திராவிட மக்கள் இந்தியாவில் வாழ்கின்றார்கள். அவர்கள் குடியேறும்பொருட்டு இந்திய நாட்டுக்கு வந்தார்களோ அல்லது வெற்றியாளராக வந்தார்களோ என்று நம்மால் அறிந்து கூறமுடியவில்லை. இக் கருத்தைக்கொண்டே அவர்கள் இந்திய நாட்டின் பழங்குடிகள் எனக் குறிப்பிடுகின்றோம். அவர்களின் பிறப்பு தென்னாடு என்பதை அவர்கள் வரலாறுகள் நன்கு வெளியிடுகின்றன. அவ்விடம் தஞ்சாவூர் அல்லது மதுரைக்கு அதிக தொலைவில் போகாது. அங்கிருந்தே அவர்கள் வடக்கு நோக்கிப் பரவினார்கள். அவர்களின் பிறப்பிடம் இந்தியாவிற்கு அயலிலுள்ளது, அல்லது அவர்கள் புதிதாக வந்து குடியேறினார்கள் என்று கூறுவதற்கு யாதும் வரலாறு இல்லை. நாங்கள் அறியக்கூடிய அளவில் அவர்கள் பழங்குடிகளாகவே இருக்கின்றனர்."

# ௯. பண்டைத் தமிழ்ப்புலவர்

## தலைச்சங்கமும் இடைச்சங்கமும்

இதுவரை பண்டைத் தமிழர் வரலாறும் முச்சங்கங்களின் காலமும் ஒருவாறு ஆராய்ச்சி செய்யப் பெற்றன. இனி அக்காலத்தில் வாழ்ந்த புலவர்களின் வரலாறு ஆராயற்பாலது. தமிழ் நாட்டுப் பண்டைப் புலவர்களைப் பற்றி ஆராயுங் காலத்தில் முதற்புலவராக முப்புரமெரித்தவரைக் கூறவேண்டும். பின்னர் அவர் புதல்வராகிய முருகவேளைக் கூறவேண்டும். பண்டைத்தமிழ் நான்மறைகளியற்றிய நான்கு முனிவரும் சிவபெருமானிடம் அறிவு பெற்றதாகப் பன்னிரு திருமுறைகள் முழங்குகின்றன.

சிவபெருமானிடத்தும் முருகவேளிடத்தும் நூல் கேட்டவர் **அகத்தியர்:**

> " ஆதியிற் றமிழ்நூ லகத்தியர்க் குணர்த்திய
> மாதொரு பாகனை."

என்பதால் அகத்தியர் நூலியற்றுதற்குமுன் வேறு தமிழ் நூலிருந்ததென்பது புலனாகும். இங்கு நூலென்றது தமிழிலக்கணத்தை. இதனால் அவர் நூல் முதலில் தோன்றிய இலக்கணம் என்று கருதவிடமில்லை. அகத்தியர் பொதியின்மலையில் தமிழ்ச்சங்கமொன்று வைத்து நடத்தியதாக இராமாயணத்தில் கூறப்பட்டது. "தென்றமிழ் நாட் டகன்பொதியில் திருமுனிவன் தமிழ்ச் சங்கம் சேர்கிற் பீரேல்" என்ற கம்பர் வாக்கும் காண்க. அது தலைச்சங்கமோ அதனின் வேறோ என விளங்கவில்லை. 'பொருப்பிலே பிறந்து' என்பதும் பொதியின்மலைச் சங்கத்தைக் குறிப்பதாகும்.

"ஓங்க லிடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் சுடராழி வெங்கதிரோன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்."

என்ற செய்யுளில் ஓங்கல் என்ற சொல் பொதிய மலைக்கு மென்ப.

முதற்சங்கம் தோன்றிய காலத்துச் சிறந்து விளங்கிய முனிவரும் அகத்தியரே. அகத்தியர் வேறு நான்கு முனிவரோடு மகேந்திரமலையில் ஆகமம் எனப்பட்ட அருள் நூல்களையுங் கேட்டனர். அகத்திய முனிவர் கந்தபுராணப் போர் நிகழ்ந்த பண்டைக் காலத்திலேயே கிரவுஞ்சம், விந்தம் முதலிய மலைகளை அடக்கின ரெனவும், வில்வலன் வாதாவி என்னும் அரக்கர்களை மடிவித்தா ரெனவும், உமை யம்மையார் திருமணத்தின்போது தென்றிசைக்கண் சென்று நிலங் காத்தாரெனவுங் கேட்கப்படுகின்றது அக் கந்தபுராணத்திலே விதர்ப்பர்கோன் மகளாகிய உலோபா முத்திரையை அவர் மணந்து சித்தன் என்னும் புதல்வனை அளித்தன ரெனவுங் கூறப்பட்டது. அவரது கமண்டலத்தினின்று காவிரி கவிழ்க்கப்பட்ட கதை மணிமேகலை யுள்ளுங் குறிக்கப்பட்டது.

"அமர முனிவ னகத்தியன் றனது
கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை."

(மணி. பதிகம் : கக, கஉ)

உலோபாமுத்திரை என்ற பெயர் வடமொழியாய் இருப்பதால் வடநாட்டுப் பெண்ணினை அகத்தியர் மணந் தாரென்பது தோன்றுகிறது. அவர் மனைவி புலத்திய னாரது உடன்பிறந்தாளென்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுகின்றார். புலத்தியர் மரபில் வந்தவன் இராவணன்; அவன் தென்னாட்டு மன்னன். புலத்தியர் என்ற சொல்லும்

அகத்தியர் என்ற சொற்போலத் தமிழாகக் கருதற்பாலது. பழைய வரலாற்றைத் தெளிவாக உணர முடியாத இக் காலத்திலே மாறுபட்ட இரண்டு கொள்கைகளுள் ஒன்றைத் துணிதல் எளிதன்று. அகத்தியர் ஒரு காலத்திற் புலத்தியருடன்பிறந்தாளை மணந்திருத்தல் கூடும்; பின்னர் விதர்ப்பர்கோன் மகளையும் மணந்திருக்கலாம். வடநாட்டு மக்களோடு பெண் கொண்டு கொடுக்கும் வழக்கம் அக் காலத்து இருந்ததென்பது ஊகிக்கப்படும். ஆண்டும் தமிழ்மக்கள் ஒரு காலத்தில் இமயம்வரை பரவியிருந்தனர். கதிரவன் வழிபாடு தமிழ்மக்களுள் நிலவிய தென்பது “கொடிநிலை வள்ளி”[1] என்ற தொல்காப்பிய நூற்பாவாலே இனிது துணியப்படும். கதிரவனையோ இந்திரனையோ புகழும் இருக்குவேதம் க0 ஆவது மண்டலத்தின் சுo ஆம் நூற்பாவுள் ‘அகத்தியரின் தங்கை மக்களுக்காக இணையற்ற செங்குதிரைகளைப் பூட்டி யோட்டுவிக்கின்ற’ என்னும் பொருளுடைய சொற்றொடர் காணப்படுகின்றது. அதனால் அகத்தியரின் தங்கை வடநாட்டில் மணவாழ்க்கை எய்தி அவள் பெற்ற புதல்வரின் கதை ஆரிய வேதத்துட் குறிக்கப்பட்டமை காண்க. இருக்கு வேதத்துள் அகத்தியர் தொடர்புடையனவாக உசு பாடல்கள் காணப்படுகின்றன. வடமொழி வான்மீக இராமாயணத்துள் மலைய மலைத்தொடர்ச்சிக்கண் பொதியில், காவிரித் தோற்றம், கோதாவரித் தோற்றம் என்னுமிடங்களில் அகத்தியரின் இருக்கைகள் இருந்தனவாகவும், அகத்தியரை நாடி இராமர் சென்று வழிபட்டுத் தமக்கு வேண்டிய போர்க் கருவிகள் (ஆயுதங்கள்) பெற்றதாகவும் கூறப்பட்டிருக்கின்றது. இராமாயண வரலாறு வருமாறு: “தண்டகாரணியத்திற் பல முனிவர்களையுங் கண்டு அவரோடு சில காலம்

1. புறத்திணையியல், ௩௩.

வதிந்திருந்த இராமர், சுதீக்கணர் என்னும் முனிவரை நோக்கி அகத்தியர் இருக்கைக்கு வழி யாதென்று வினவியபோது, (முதலில் அவர் அகத்தியரின் தம்பி யிருக்கையைக் காட்டிப் பின்னர் அதற்கப்பால் ஒரு யோசனைக்குள் அகத்தியர் இருக்கை இருப்பதாகக் கூறினார். இராமர், இலக்குமணர், சீதையென்போர் அகத்தியர் தம்பியின் இருக்கையை அடைந்தபோது அதன் பாங்கர்த் தூயநீரில் மூழ்கித் தாங்களே கொய்த மலரால் அந்தணர் பலர் வழிபாடு செய்வதைக் கண்டார்கள். அவண் ஓர் இரவு தங்கி வில்வலன் வாதாவி கதையைக் கேட்டனர். பின்னர் அகத்திய ரிருக்கையை யடைந்தபொழுது வழிபாட்டுக்குரிய பூக்களை வழங்கும் மரங்களெல்லாந் தழைத்தோங்கி யிருப்பதைக்கண்ட இராமர் தம் தம்பியை நோக்கி "இவ்விடத்தில் மரங்கள் அடர்ந்து பசேலென்று தழைத்திருக்கின்றன. விலங்குகளும் பறவைகளும் பழகினவைபோல வெகு அமைதியா யிருக்கின்றன. ஆகையால் தூயதான உயிரையுடைய அகத்தியரிருக்கை அருகேயுள்ளது போலும்! இப்பக்கத்தில் சீலமிக்க இப் பெரியார் வந்ததுமுதல் அரக்கர்கள் தம் பகைமை நீங்கி அமைதியுள்ளவர்களாய் விட்டார்கள். இத் தென்றிசையும் அகத்தியர் திசையென்று மூவுலகிலும் புகழ்படைத்துள்ளது. அகத்திய முனிவரைக் கந்தருவர்கள் எல்லோரும் வழிபட்டு வருகின்றார்கள். இவ்விடத்திற் பொய்யுரைப்போன், கொடியவன், துன்புறுத்துவோன், நெஞ்சம் போனவழிச் செல்லுங் கெட்ட நடத்தை யுடையவன் முதலியோர் வாழமுடியாது. ஏனெனில் இம்முனிவர் மிக்க ஆற்றலுடையவர். இவ்விடத்திற் பெரியோர்களாகிய சித்தர்கள் தங்கள் உடம்பை விடுத்துக் கதிரவனுக்கொப்பான வானூர்தியில் ஏறிக்கொண்டு விண்ணுலகம் போகின்றார்கள்" என்று கூறினர். இவ்வாறுரைத்த பின்னர்

அகத்தியர் இருக்கையை யடைந்து, அம் மாமுனிவர்க்குத் தங்கள் வரவை அவர் மாணவர் வாயிலாகத் தெரிவித்து, அவரது விடைபெற்று உட்சென்று அவர் கடவுளை வழிபடு மிடத்தில் எல்லாக் கடவுளுக்கும் இடம் அமைந்துள்ளமை யைக் கண்டு வியந்தார்கள். கதிரவன்போல் ஒளியுடன் விளங்குகின்ற முனிவருடைய திருவடியில் இராமர் முதலிய மூவரும் விழுந்து வணங்கினார்கள். அவர் அவர்களை விருந் தினராகப் போற்றி யுண்பித்து இராமருக்குத் திருமாலி னது வில்லினையும் அவனால் அளிக்கப்பட்ட அம்பினையும் கொடுத்தனர். முனிவர் பணித்தபடியே அவர்கள் (பஞ்ச வடியிற்) சென்று தங்கினார்கள்.

பின்னர்த் தென்றிசைக்கு அனுமார் முதலியோரைத் தூதனுப்பியபோதும் பொருநையாற்றைக் கடப்பதற்குப் பொதியமலையில் வீற்றிருக்குங் கதிரவனுக் கீடான அகத் தியர்பால் விடைபெற்றுச் செல்லவேண்டுமென்று கட்டளை யிடப்பட்டது. பொருநைக்குத் தென்பாலிருந்த அழகிய மகேந்திரமலையில் ஒரு பகுதி கடலில் மூழ்கிக் கிடப்பதாக வும் அஃது அகத்திய முனிவராலேயே அங்கு வைக்கப்பட்ட தென்றும் இன்னும் மகேந்திரத்திற் கப்பால் புஷ்பிதகம் என்னும் பெருமலை கடலாற் சூழப்பட்டிருப்பதாகவும் அதற்குத் தெற்கே குஞ்சரம் என்னும் மலையொன்றிருப்ப தாகவும், அங்கே விசுவகருமன் அகத்தியருக்கு ஒருகோயில் கட்டியிருப்பதாகவும் கிட்கிந்தா காண்டம் சக ஆவது சருக்கத்தில் கூறப்பட்டது. யுத்தகாண்டத்தில், அகத் தியர் இராமருக்கு ஞாயிற்றினுள்ளம் (ஆதித்ய ஹ்ருதயம்) என்னும் மந்திரத்தை அறிவுறுத்தினமை கூறப்பட்டது.' இத்துணையுங் கூறியவைகளே அகத்தியரைப்பற்றி வான்மீ கத்திற் கண்டவைகள். வான்மீகி இராமாயணத்தின் சில படிகளில் மட்டும் பிற்காலத்திற் சேர்க்கப்பட்டுள்ள ஒரு

பகுதியில் அகத்தியர் காடுகெடுத்து நாடாக்கியது கூறப் பட்டது. அதன்கண்ணும் துவராபதி போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிவந்த அரசரை அழைத்துக்கொண்டு சென்றதாகக் கூறப்படவில்லை. ஆனல் ஆசிரியர் நச்சினர்க் கினியர், தமது தொல்காப்பியப் பாயிர உரைக்கண் அவ்வாறு வரைந்துள்ளார். அது தக்க சான்றுடையதாய்த் தெரியவில்லை. யமதக்கினியாருழைச் சென்று அவர் மகனர் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கொண்டு வந்ததாக நச்சினர்க்கினியர் புனைந்துரைத்தனர். "அத் திரணதூமாக் கினியாரையே தொல்காப்பிய ரென்றனர்." யமதக்கினியா ருடைய பாடல்கள் இருக்குவேதத்திற் காணப்படுகின்றன. யமதக்கினியின் புதல்வன் பரசுராமன் என்று வான்மீகி பாலகாண்டம் எச ஆவது சருக்கத்திற் கூறப்பட்டது. அங்கே குறித்த யமதக்கினியாராதல் அவர்க்கு முன்னே ராதல் இருக்குவேதப் பாடல்களைப் பாடி யிருக்கலாம். துவரைநகரிற் கண்ணன் ஆண்டது இராமாயணகாலத் திற்குப் பின்பு நடந்த பாரதகாலத்திலே யாதலின், கண் ணன் வழிவந்த அரசர் காலமும் இராமாயண காலத்திற்கு முன்னே பாடப்பெற்ற இருக்கு வேதத்துட் போந்த யம தக்கினியார் காலமும் ஒன்றல்ல. இராமாயண காலத்திற்குப் பன்னூட்கு முன்னரே வில்வலன் வாதாவி கதை நிகழ்ந் திருத்தல் வேண்டும். இறைவர் திருமணக் காலத்திலே தெற்கே புறப்பட்ட அகத்தியர் துவரைநகரிற் கண்ணன் வழியிலுள்ளாரை அழைத்துக் கொண்டு போதல்வரை யாண்டுத் தங்கினரோ அறிகிலோம். ஆதலால் ஆசிரியர் நச்சினர்க்கினியர் கூறும் வரலாறு கால முறைக்குச் சிறிதும் பொருத்தமில்லாததாகக் காணப்படுகிறது. சின்ன மனூர்ச் சாசனத்தில் அகத்தியர் குடும்பம், பாண்டிய மன்னர்க்குக் குருமரபாகக் கூறப்பட்டுள்ளது.

அகத்தியனார்க்குந் தொல்காப்பியனார்க்கும் நடந்ததாகப் பேசப்படும் வழக்கும் கேள்விச்செய்திகளில் (கருண பரம்பரை) ஒன்றே, அதுவுங் கொள்ளத்தக்கதன்று. வைகை நீர் இழுத்துச்சென்ற குமரியாரைத் தொல்காப்பியனார் ஒரு மூங்கிற் கோலை நீட்டிக் கரையேற்றியதற்காக அகத்தியனார் அவரிடங் குற்றங் கூறுதல் அவருக்கு இயற்கையாமோ? அகத்தியம் மறைந்தது ஏனைப் பண்டை நூல்கள் மறைந்த ஏதுவினாலேயா மென்க. மறைந்த ஒவ்வொரு நூலுக்கும் பழிக்கதை (சாபக்கதை) கட்டுவாரில்லை.

கந்தபுராணத்துள்ளும் வான்மீகத்துள்ளுங் கூறிய வாற்றால் அகத்தியர் பெருந்தவ முனிவர் என்பதும் அவர் தென்னாட்டின்கண் குஞ்சரம், மகேந்திரம், சையம் முதலிய இடங்களில் தமக்குக் கோயிலுடையவரா யித்தென்றிசைப் பகைவர் சிலரால் தமிழ்மக்களுக்குத் தீது வராது காக்கும் போராற்றலும் பெற்றியும் வாய்ந்தவராய்த் தமிழ் முதலாசிரியருள் ஒருவராய்த் திகழ்ந்தாரென்பதும், அவர் தம்பி, தங்கை, மனைவி, புதல்வன் முதலியோரை யுடையவராய் விளங்கிய குடும்பத் தலைவரென்பதும், அவர் மேரு, இமயம் முதலிய இடங்களில் தவங்கிடந்தனர் என்பதும், நீண்ட ஆயுளுடையவராய் நெடுங்காலம் வாழ்ந்திருக்கும் தவ வலிமை யுடையவரென்பதும், இராமர் முதலிய அரசர்களாலும் வான்மீகர் முதலிய முனிவர்களாலும் இந்திரன் முதலிய வானோர் பலராலும் அச்சத்தோடும் அன்போடும் வணங்கப்பட்டவரென்பதும் போதரும். அவர்க்குத் தமிழ் முனி யென்ற பெயரே யாண்டும் கந்தபுராணத்துள் வழங்குவதாகவும், பொதிய மலையே அவர் உறைவிடமென்று கம்பராமாயணம் நாடவிட்ட படலத்துட் கூறுவதாகவும் திரு. பண்டித வேங்கடசாமி நாட்டாரவர்கள் எடுத்துக்காட்டி யிருக்கின்றார்கள். அகத்தியர் வரலாற்றை

யும் அவர்கள் "செந்தமிழ்ச் செல்வி" யிதழில் விரிவாக எழுதினமையால் ஈண்டு விவரிக்கவேண்டியதில்லை. மதுரைக் காஞ்சி யியற்றிய மாங்குடிமருதனாரால் அகத்தியர்,

"தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
றொன்முது கடவுள் பின்னர் மேய."

(மதுரைக்காஞ்சி : சO-சக.)

என்று சிறப்பிக்கப்பட்டனர்.)

செங்கோன்றரைச்செலவின்" சிறப்புப் பாயிரத்தில் முத்தூர் அகத்தியன் என்னும் ஒரு புலவர் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அந்நூல் தலைச்சங்கத்தின் நூலாகத் தெரிகின்றது. அதனால் அகத்தியர் என்ற பெயர் தமிழ் நாட்டில் மாமுனிவர்க்கன்றி வேறு சிலர்க்கும் வழங்கிய தமிழ்ப்பெயராகத் தெரிகின்றது. இதனால் விளங்குவது யாதெனில் (தமிழ்நாட்டிலேயே தொன்முது குடியாகப் பேர்பெற்றுச் சிறந்த ஒரு மரபில் தோன்றிய பெரியாராய்த் தவவலிமையினால் வானோரும் ஏனையோரும் தம்மை வழிபட்டுப் பெரும்பயன் கொள்ளும் பெற்றிவாய்ந்தவராய்ச் சிவபெருமானிடத்து ஆகமமென்னும் அருள்நூல் கேட்டவராய்ப் பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருக்குந் தவப் பேறுடையவராய் அறிவர் தலைவராய் விளங்கினர் அகத்தியரென்பதே.) அகத்தியர் ஒருவரே ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்வது இயலாது என்று கொள்வார், அகத்தியரது குடும்பத்திற் பலர் அப் பெயருடையவராய் வெவ்வேறு காலங்களிற் சிறப்புற்று விளங்கினர் என்பர். முனிவர்கள் பலரும் மக்கள் வகுப்பினரே. மக்கள் வகுப்பினராயின் நிலவுலகத்தில் எந்நாட்டிலாவது அவர்கள் தோன்றியிருக்க வேண்டும். ஆரியநாட்டில் தோன்றினால் அவரை ஆரியரென்ப. தமிழ்நாட்டில் தோன்றினால் தமிழரென்ப. தக்க . முனிவரிடத்து ஒருசார்பாய பற்றில்லாதிருத்தல்

இயல்பே. ஆயினும் பிறந்தநாட்டை வைத்தும் மக்கள் வகுப்பை வைத்தும் அவரை இன்ன இடத்தார் இன்ன மரபினர் என்று கூறுவதாற் குற்றமில்லை. திருஞான சம்பந்தரை அந்தணரென்பதினும் திருநாவுக்கரசரை வேளாளரென்பதினும் குற்றமின்மை காண்க.

இனி, அமரமுனிவன் என்றமையால், அகத்தியர் இவ்வுலகத்திற் றோன்றாதவரென்பார் சிலர். "அவர் தேவமுனிவராகிய நாரதர் குடும்பத்திற் றோன்றியவரென்று நூல்கள் அதனை வற்புறுத்துமென்பர். அங்ஙனம் தோன்றினும் உலகத்தில் யார் நடுவில் முதன்முதல் தோன்றினரோ அவர் முன்னோர் மரபினர் ஆவாரென்க. திங்களது மரபென்றுங் கூறப்படும் சோழ பாண்டிய மன்னர் தமிழ் நாட்டினரே என்பது தெளிவு. அவ்வாறே அகத்திய முனிவரது மரபையுங் கொள்க.

அகத்தியர் சமயம் சிவநெறி யென்பது தெளிவு." சமணர் அவரை அவலோகிதன் என்பானிடத்து நூல் கேட்டதாகச் சொல்லுதல் அவர்களது பற்றுரையேயாம்; உண்மையன்று. அகத்தியர் முத்தமிழுக்கும் இலக்கணஞ் செய்தாரென்றும், அது பன்னிரண்டாயிரம் நூற்பாக்களை யுடையதா யிருந்ததென்றும் கேட்கப்படுகின்றது. அகத்தியம் இப்போது வெளிப்படவில்லை. அகத்திய நூற்பா என்று சொல்லப்படும் யாவும் அவருடையனவாகத் தெரியவில்லை. (அவர் ஆனந்தக்குற்றங் கூறினாரென்று குறித்தற்கு யாப்பருங்கலத்தில் எடுத்துக்காட்டிய நூற்பாக்களனைத்தும் பிற்காலத்தில் எழுந்தனவே என்பதை ஆசிரியர் நச்சினார்க்கினியர் நன்கு விளக்கியுள்ளார்.)

அகத்தியர்க்கு இயற்றமிழ் மாணவர்கள் பன்னிருவர். அவ்வாறே இசைத்தமிழுக்கும் வேறு மாணவர்கள்

இருந்திருத்தல் கூடும். "அவருடைய இயற்றமிழ் மாணவர் பன்னிருவர் இயற்றிய நூல் பன்னிருபடல மெனப்படு மென்று" புறப்பொருள் வெண்பாமாலையிற் கூறப்பட்டது. அதுவும் முற்றிலும் வெளிப்படவில்லை. அது புறப்பொருள் நூலென்பது தெளிவு. பன்னிருபடலப் பாயிரமாகக் கூறப் படுஞ் செய்யுளொன்றில் அகத்தியமென்பது குறிக்கப் படுகின்றது. அது,

> " ஆனைப் பெருமை அகத்தியன் என்னும்
> அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல்
> பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோன்
> நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும்."

என்றதாகும்.

அகத்தியம் என்னும் நூலே இயற்றப்படவில்லை யென்று கூறுதல் தவறாகும். இறையனாரகப்பொருட் களவியலுரையுள் தலைச்சங்கத்தார்க்கும், இடைச்சங்கத் தார்க்கும் நூல் அகத்தியமென்று கூறப்பட்டது. சிற் றகத்தியமொன்று பேரகத்தியத்தின் வேறாக இருந்ததற்குச் சான்று யாதுமில்லை. அகத்தியர் இயற்றிய நூலின் பயனையே நாம் நுகர்கின்றோமே யன்றி அந் நூலின் ஒரு நூற்பாவும் தெளிவாகக் கிடைக்கவில்லை.

> "ஏழியன் முறைய தெதிர்முக வேற்றுமை
> வேறெனை விளம்பான் பெயரது விகாரமென்
> றோதிய புலவனு முளனொரு வகையால்
> இந்திர னெட்டாம் வேற்றுமை யென்றனன்.'

என்னும் நூற்பா அகத்திய நூற்பாவா மென்னில் அது தொல்காப்பிய நூற்பாவோடு ஒத்து நிற்கவில்லை.

அகத்தியர் நக்கீரருக்கு இலக்கண மறிவுறுத்தியதாகத் திருவிளையாடற் புராணங் கூறுகின்றது. இக்காலச் சித்தர்

நூல்களுட் பல அகத்தியராற் செய்யப்பட்டன என்பர். அவற்றின் சொன்னடையையும், பொருள்நடையையும் நோக்குமிடத்து அகத்தியரை வழிபட்டோரால் அவை நெடுங்காலத்திற்குப்பின் இயற்றப்பட்டிருத்தல் கூடுமென்று கொள்ளுவதே பொருத்தமென்று தெரிகிறது.

அகத்தியருடைய மாணவர் பன்னிருவரென்பது,

"மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன்
தன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்
பன்னிரு புலவரும்."

(புறப். வெண்பாமாலை, சிறப்புப்பாயிரம்)

என்பதனால் விளங்கும்.

அவருள் தொல்காப்பியனாரே இப்பொழுதுள்ள நூல்களுள் முதலாவதாகிய பேரிலக்கணத்தைத் தம் பெயரால் இயற்றியருளினர். தொல்காப்பியத்திற்குச் சிறப்புப்பாயிரம் கூறினவர் பனம்பாரனார். 'அதங்கோட்டாசான்' என்பவர் தொல்காப்பியத்தைக் குற்றமற்றதெனக் கண்டு நிலந்தரு திருவிற்பாண்டியன் அவையத்து அதனை ஏற்றுக்கொண்டவராவர். அவிநயனார், காக்கைபாடினியார் முதலியோர் தனித் தனி இலக்கணநூல் இயற்றினாரென்பது யாப்பருங்கல உரையிற் சுட்டப்பட்டது. ஏனையோர் இயற்றிய நூல் இன்னவென்று தெரியவில்லை.

தமிழ்மொழிக்கு எக்காலத்தில் முதன்முதற் றிருந்திய இலக்கண இலக்கியங்கள் யாக்கப்பெற்றனவென்று துணிதல் அரிது. ஆசிரியர் தொல்காப்பியர் தமிழிலே முதனூல் வழிநூலென நூல் இருவகைப்படுமென்று கூறி முதனூல் இறைவனாலும் அவனருள்பெற்ற பெரியோராலும் இயற்றப்

படுவது எனக் குறிப்பித்தார். இம் மொழியானது சீர் திருத்தம்பெற்ற காலத்திலே 'இனிது' என்னும் பொரு ளுடைய தமிழ் என்னும் பெயர் இதற்கு அமைக்கப்பெற் றிருத்தல் வேண்டும். தமிழ் என்ற சொல்லை இம் மொழிச் சொல்லாகவே கருதி ஆசிரியர் தொல்காப்பியர்,

"தமிழென் கிளவியும் அதனோ ரற்றே"

(புள்ளிமயங்கியல், ௬ ப)

என்று நூற்பாச் செய்திருத்தலின், அது திராவிடம் என்னும் சொல்லின் திரிபு என்று கூறுதல் பொருந்தா தாகும்.

இத் தவறுடைக் கொள்கையை முன்னரே காலஞ் சென்ற திருவாளர் தாமோதரம் பிள்ளை, சபாபதி நாவலர் முதலியோர் நன்ருக மறுத்திருக்கின்ருர்கள். இம்மொழிக்கு இம்மொழியிலேயே பெயரமையாது, சேய்த்தாய்ப் பிறி தொரு மொழியிற்முன் பெயரமைந்திருத்தல் கூடுமென்பது அறிவிற்குப் பொருத்தமில்லாததன்ருே?

தொல்காப்பியத்திலே முதனூல் இறைவனுடைய தென்று கூறப்பட்டது. வடமொழி வேதத்துள் அவ் வேதம் இறைவனுல் இயற்றப்பட்டது என்று கேட்கப் படவில்லை. அதன் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு முனிவராற் செய்யப்பட்டதென்று குறித்திருக்கின்றது. ஓர் உபநிடதத்திற் பொதுவாகச் 'சுருதி, மிருதி, புராணம், இதிகாசம் முதலிய எல்லாம் பரம்பொருளின் சுவாசம்' என்று கூறப்பட்டது. தமிழிலே முதனூல் நேரே இறைவ னுற் செய்யப்பட்டதென்று கொள்வதுமுண்டு. அங்ஙன மின்றி அரசன் கோயிலைக் கட்டினனென்ற இடத்திற் போலக் கடவுள் சிற்சில மொழிகளால் கருத்துக்களைப்

பெரியோர்க் கறிவிப்ப, அன்னோர் செய்ததே கடவுள் நூலா மென்று கோடலுமுண்டு.

தமிழிலே பொருளதிகாரத்தின்கண் பொருள் என்பது அறம் பொருள் இன்பம் வீடென ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறினார்.

"அறம் பொருள் இன்பம் வீடு மொழிந்த வாயான்."
(சம்பந்தர், க. ருக-சு)

என்னுந் தேவாரமுங் காண்க.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினையும் பற்றிக் கருத்துணர்த்தும் பண்டை நூல்களே தமிழ் நான் மறையாமென்பது கொள்ளப்படும். அறம், பொருள், இன்பம், வீடு என்று சொல்லும் வாய்பாடும் தமிழர்க்கே பண்டைக் காலத்தில் உரியது. அதனை வடநூலார் 'தர்மார்த்த காம மோக்ஷம்' என்று தமது மொழியிலுங் கொண்டனர். சிலர் இன்பம் என்பது அகப்பொருளென்றும் ஏனைய புறப்பொருளென்றும் கருதுவர். அது பொருத்தம் இல்லாததென்பது,

இன்பமும் பொருளும் அறனு மென்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற்
காமக் கூட்டங் காணுங் காலை." (தொல். களவியல்: க)

என்னுந் தொல்காப்பிய நூற்பாப் பகுதியில் இனிது விளங்கும்.

முதலிற் றமிழ்நூல்கள் மக்கள் பலரால் அவரது அறிவிற்கேற்ப இயற்றப்பட்டிருப்பினும் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கன் சார்பாகத் திருவருள் பெற்ற முனிவராவார் நால்வர் இயற்றிய நூலே தமிழ் முதனூலெனக் கொள்ளப்பெறும். உள்ளத்தை உள்ளவாறுணர்த்தும் பெருநூல் அவையாதலின் என்க. " இலக்கணத்துள் எழுத்தினுற் சொல்லுளதாகச் சொல்லினுற் பொருளுணர்த்தப்

படுதலின் பொருட்பகுதியே சிறப்புடைத்தாம்.'' அப் பொருள் அற முதலிய நான்காதலின் அவற்றை முதலில் நன்குணர்த்திய நான்மறைகளே இலக்கணத்திற்குச் சிறந்த இலக்கியமாகும். ஆதலால் தொல்காப்பியப் பாயிரத்தில் அந்நூல் நான்மறை முற்றக்கற்ற அதங்கோட்டாசாற்கு அரில்தபத் தெரிக்கப்பட்டது என்று குறித்தமை காண்க. வடமொழி 'நான்மறை கற்ருர் நான்கு பொருள்களைப் பற்றிச் செவ்விதாக அறிதல் கூடாமையானும் அவ்வட நூற்கும் தமிழிலக்கணத்திற்கும் பொருத்தமின்மையா னும் தொல்காப்பியப்பாயிரத்திற் குறித்த நான்மறை தமிழ் மறையே யென்பது தேற்றம். ஆதலால் நான்மறையென் பதே தமிழ்முதனூலாகக் கொள்ளப்படல் வேண்டும். அவையும் அகத்தியம் பன்னிருபடலம் மறைந்தமைபோலப் பண்டைக் காலத்திலேயே மறைந்தொழிந்தன.

இன்னுமொருவகை பருனூல்களும் தமிழில் பண் டைக் காலத்திலே எழுந்தனவென்று கருத இடமுண்டு. அவை பொதியமலைக்குத் தென்பாலிருந்த மகேந்திரத்தில் முனிவர்கள் ஐவருக்குச் சிவபெருமான் தம்முடைய ஐந்து திருமுகங்கள் வாயிலாக அருளிச் செய்யப்பட்டன வென்று **திருவாசகத்துட்** கூறப்படுகின்றது.

"மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியும்.''
(திருவாசகம், கீர்த்தி. கூ, ௧0)

என்றது காண்க.

அந்நூல் கேட்ட ஐம்முனிவர்கள் தமிழரே. அவர்க ளுடைய வரலாறு வடநூல் வாயிலாகவே பிற்காலத்தில் எழுதப்பட்ட பொழுது அவர்களுக்குரிய இயற்றமிழ்ப் பெயரும் மறைந்து வடமொழிப் பெயராயிற்று. 'காசிபர்' என்னுமிடத்து ஆகமங்கேட்ட காசிபர் வேறு என்று

கொள்ளல்வேண்டும். ஆகமங் கேட்ட ஐம்முனிவருள் அகத்தியரும் ஒருவர். மகேந்திரமலையின் பகுதிகள் கடலுள் அகத்தியரால் அமிழ்த்தி வைக்கப்பட்டன வென்று வால்மீகி இராமாயணங் கூறுகின்றது. ஆதலால் இராமாயண காலத்திற்குமுன்னரே தலைச்சங்கம் ஏற்பட்டதற்கு முன்னே பின்னே தமிழ் நாட்டின் பெரும் பாகத்தைக் கடல்கொள்வதற்கு முன்னேயே இத்தமிழருணூல்கள் வெளிப்பட்டிருத்தல் வேண்டும். இப்போது அவைகளும் மறைந்து போயின. இப்பொழுது அவற்றின் கருத்துக்களே ஒருவாறு பிற்றை ஞான்று வடமொழித் தந்திரங்களிலும் தமிழ்ச்சித்தர் நூல்களிலுங் காணப்படுகின்றன.

நூல் என்ற சொல்லே வடமொழியிற் றந்திரங்களென மொழிபெயர்க்கப் பட்டதுபோலும்.

"அரன் நாரணன் நாமம் ஆன்விடை புள்ளூர்தி
கருமம் அழிப்பு அளிப்பு கையதுவேல் நேமி
உரை நூல் மறை." (முதற்றிருவந்தாதி: ௫)

என்னுந் திருமொழியில் நூல் என்னுஞ் சொல் சிவாகமத்தை உணர்த்துதல் காண்க.

நூல் என்பது சிறப்பாக ஐம்முனிவர் கேட்ட அருள் நூலிற்கு முதலில் வழங்கியது. ஆகமம் என்பதை மணிமேகலையார் "அறிவனூல்' என்னுஞ் சொற்றொடராற் குறிப்பித்தார். முக்காலமு மறிய வல்ல முனிவர்கள் திருவருளின் உதவியால் ஏனையுயிர்கள் காணாதவற்றைக் கண்டு பயன்பெறுமாறு இயற்றிய நூல்களே ஆகமமெனப்படும்.

"ஆகம வளவை யறிவ னூலாற்
போக புவன முண்டெனப் புலங்கொளல்."
(மணிமேகலை: உஎ: ௩௩, ௪௪)

எனக் கூறியவாற்றாற் பெறப்படும்.

இவ்வரிய நூலும் முதற்கட் குறித்த நான்மறையுமே தமிழ் முதல்நூல்களா யிருந்தனவென்று கருதப்படும். இவை மறைந்தகாலே இவற்ளுேடு ஒருபுடையொத்த வடநூலாகிய வேதாகமங்களைத் தமிழர் முதனூலாகக் கருதுவ ராயினர். அதனுலுளதாகிய தவறுடைக் கொள்கைகள் பல ஈண்டு விரிக்கிற் பெருகும்.

இப்பொழுதுள்ள தமிழ்நூல்களில் முதலாகிய முழு நூல் தொல்காப்பிய மென்னும் இலக்கண நூலேயாம். இந்நூல் நிலந்தருதிருவிற்பாண்டியன் என்னும் அரசன் அவைக்களத்தே அரங்கேற்றப்பட்டதாக அதன் பாயிரங் கூறுகின்றது. சேர சோழ மன்னரிடமிருந்து வேண்டிய நிலப்பகுதிகளைத் தனது திறமையாற் கைக்கொண்டு தன் குடிகளுக்குக் கொடுத்தமையால் அவ்வரசற்கு அப் பெயர் அமைந்தது.

"மலிதிரை."  (கலி, முல்லை : ௪)

என்ற கலித்தொகைச் செய்யுளைக் காண்க.

கலித்தொகை யாசிரியர் இப்பாண்டியனைத் தென்னவ னென்று கூறியுள்ளார். அவ்வாறே இளங்கோவடிகளும்,

"தென்றிசை யாண்ட தென்னவன் வாழி."

(சிலப், ௧௧, ௨௨)

என்று இவனையே குறித்தார்.

மதுரைக்காஞ்சியில் இவனை 'நெடியோ' னென்றுங் குறித்தமை காண்க.

"பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல்."

(மதுரைக்காஞ்சி : ௬௧)

என்றதும் அது.

இவ்வரசன் காலத்திலே பெரிய கடல்கோள் நடந்த தாகத் தெரிகின்றோம். கடல்கோளுக்குப் பின்னேயே

இந்நூல் இயற்றப் பெற்றிருத்தல் வேண்டும். கடல்கோள் முடிந்து பிறநாடுகள் கைக்கொள்ளப்பட்டுப் பாண்டியன் அரசு நிலைத்த பிறகே நிலந்தருதிருவிற்பாண்டியன் என்ற பெயர் ஏற்பட்டிருத்தல் வேண்டும். நூலின் பாயிரத்தே தமிழ்நாட்டின் தென்னெல்லை குமரியாறு என்று கூறப்பட்டது. நிலந்தருதிருவிற்பாண்டியன் காலத்தே இடைச் சங்கம் இருந்ததென்று கொள்வோமாயின் இடைச் சங்கம் தொடங்கிய பின்புதான் தொல்காப்பியம் எழுதப்பட்டிருக்கவேண்டும். இடைச்சங்கமிருந்த கபாடபுரம் வான்மீகி இராமாயணத்தில் பொருநையாற்றுக்கப்பால் இருந்ததாக இயம்பப்படுதலானும் கடல்கோள் நிகழ்ந்த அரசன் காலத்திலேயே இந்நூல் இயற்றப்பட்டிருத்தலானும் அது இராமாயணக் கதை நடந்த காலத்திற்கு முன்னேயே எழுதப்பட்டது என்று கொள்ளலாம். (தலைச்சங்கத்தார்க்கு நூல் தொல்காப்பியமாகக் கூறப்படவில்லை. இடைச்சங்கத்தார்க்கு அகத்தியமும் தொல்காப்பியமும் நூலெனக் குறித்திருத்தலின், முதலில் அகத்தியமும் பின் தொல்காப்பியமும் பெருவழக்கிற்றாய்த் திகழ்ந்த வென்பது கருதப்படும்.) இந் நூலிலேயே இதற்குமுன் பல தமிழ்நூல்கள் இருந்தனவாகப் பல விடங்களிற் சுட்டப்பட்டன

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்."

(தொல், அகத்திணையியல்; ௫௩)

என்பதனாலும்,

"வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்."

என்பதனாலும்,

"இசையொடு சிவணிய நரம்பின் மறைய
என்மனார் புலவர்." (தொல், நூன்மரபு, ௩௩)

என்பதனாலும் தமிழிலிருந்த எழுவகை யிலக்கியங்கட்கும் செய்யுளியலிலே இலக்கணங் கூறினமையாலும் இயல் இசை

நாடக நூல்கள் பலவும் அகத்தியத்திற்குந் தொல்காப்பியத்திற்கும் முன்னேயே தமிழகத்தில் வழங்கிவந்தன வென்பது தெளியப்படும்.)

ஆசிரியர் தொல்காப்பியர் அகத்தியர் மாணவராதலினால் அகத்தியத்தின் வழிநூலே தொல்காப்பிய மெனக் கொள்ளப்படும். 'முந்து நூல்' என்று அகத்தியத்தையே தொல்காப்பியப் பாயிரத்துட் பனம்பாரனர் குறித்தனர். அது,

"ஆனுப் பெருமை அகத்தியன்."

என்றமையாற் புலப்படும்.

('ஐந்திரம் நிறைந்த தொல்காப்பிய னெனத் தன் பெயர் தோற்றி') என்றதற்குத் தக்கபொருள் ஆசிரியர் நச்சினர்க்கினியரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அஃதாவது, 'ஐந்திரவியாகரணத்தை நிறைய அறிந்த பழைய காப்பியக் குடியிலுள்ளோன் எனத் தன் பெயரை மாயாமல் நிறுத்த' என்பதே. நூலாசிரியர் ஐந்திர வியாகரணத்தை நன்குணர்ந்திருந்தாரென்று கூறலாமே யொழிய, தொல்காப்பியத்திற்கு ஐந்திரம் முதனூலென்றல் தவறு. (தமிழுக்கும் வடமொழிக்கும் இலக்கணம் வேறு வேறு என்பதை ஆசிரியர் சிவஞான முனிவர் எடுத்துக் காட்டி இத் தப்புக் கொள்கையை மறுத்துள்ளார். தொல்காப்பிய நூலுள் யாண்டும் ஐந்திரத்தைப் பற்றி யாதுங் கூறப்படவில்லை.) தொல்காப்பியரைத் தமிழரென்ப. அவரை ஆரியரென்போர் யமதக்கினியின் புதல்வர் அவரென்பர். யமதக்கினியின் புதல்வரே பரசுராமருமாவார். அங்ஙனமாயின் அவர் பரசுராமருக்கு உடன்பிறந்தாராவார். அங்ஙனம் அச்செய்தி தெளிவாக எந்நூலுட் கூறப்பட்டதென்பது தெரியவில்லை. (உரையாசிரியர்கள் யாவரும் அவரைப்

பழைய காப்பியக் குடியில் வந்தோர் என்றனர்.) குறுக்கையர்குடி, சேக்கிழார் மரபு என்பது போலக் காப்பியக் குடியும் ஒரு மரபாக இருந்தது. (இன்னுஞ் சிலர் தொல் காப்பிய மென்பது தொல், காப்பு, இயம் என்னும் மூன்று சொற்களா லாயதெனக் கொண்டு பழமையாகிய மொழிப் பாதுகாப்பு நூலென்றும் அதற்குப் பொருள் கூறுகின்றார்கள். அங்ஙனமாயின் நூலைவைத்தே ஆசிரியருக்குப் பெயர் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

ஆங்கிலம் கற்ற சிலர் வான்மீகி இராமாயணம் கி. மு. ஏழாவது நூற்றாண்டில் ஏற்பட்டதாகக் கூறுகின்றார்கள். அங்ஙனமாயின் தொல்காப்பியத்தையும் அவர்கள் அவ்வாறே கொள்வார்கள். எங்ஙனமாயினும் கி. மு. நாலாவது நூற்றாண்டிற்குப்பின் தோன்றிய வடமொழி இலக்கணமாகிய "பாணினீயத்திற்கு" இந்நூல் முற்பட்ட தென்பது தெளிவு. இந்நூலின் காலத்திலிருந்த வடமொழி இலக்கண நூல் "ஐந்திர மென்றே" பலருங் கருதுகின்றார்கள். இப்பொழுது வடமொழியிலும் ஐந்திர இலக்கணம் இருக்கிறதாகத் தெரியவில்லை. வடமொழியில் நூற்பா யாப்பால் நூலியற்றுதல் ஏற்பட்டகாலை இந்நூலும் இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென்று சிலர் கருதுகின்றார்கள். இக்கொள்கை நூற்பா என்பது தமிழின் கண்ணேயே தோன்று தொட்டுளதென்று கொள்ளுமிடத்து, நன்கு நிலைபெறாது. இந்நூலின் சில பகுதிகள் பிற்காலத்துச் சேர்க்கப்பட்டன என்று கூறுவாருமுளர் இந்நூலாசிரியர் காலத்தே வடமொழிக் கலப்புக் காணப்படுகின்றது. வடசொல் தமிழில் வருவதற்கு இதன்கண் இலக்கணங் கூறப்படுகின்றது. அறிஞர் சிலர், தொல்காப்பியத்துட் குறித்த வடசொல் தமிழின் ஒருவகைச் சொல்லென்றும் அது துறவியர்க்குரியதென்றும் அதன்கண் உள்ள சிறப்பொலியை நீக்கிப்

பொது ஒலியளவே ஏனையோரால் வழங்கப்படுவது என்றும் கருதுகின்றார்கள். அதனையே தொல்காப்பியர்,

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"
(தொல்: எச்சவியல், ௫)

என்று குறித்தார் என்பர்.

ஐந்திரமென்ற வியாகரணத்தைத் தொல்காப்பியர் அறிந்திருந்த காரணம் ஒன்றினாலே அவர் ஆரிய மரபினர் என்று துணிதற்கு இடமில்லை, தமிழாசிரியர் தமிழொடு பிற மொழியுங் கற்றிருத்தல் புதுமையன்றாதலின் என்க.

ஆசிரியர் காலம் வான்மீகி இராமாயணம் எழுந்த கி. மு. ஏழாவது நூற்றாண்டிற்கு முற்பட்டதாகலானும், சமணம், புத்தம் முதலியன அக்காலத்திற்குப்பின் தோன்றினமையாலும் ஆசிரியர் அம்மதங்களுள் எதனையாவது சேர்ந்தவர் என்று கோடல் தவறாகும். அகத்தியரது சமயம் தமிழரது சமயமாகிய சிவநெறியாதலின் தொல்காப்பியனார் சமயமும் தமிழரது நெறியே என்று கொள்ளுதல் பொருத்த முடையதே. ஆசிரியரின் மரபு அறிவரது மரபாகவே கொள்ளவேண்டும். அவர் தவவொழுக்க முடையவரென்பது,

"பல்புகழ் நிறுத்த படிமை யோனே,"
"தவவொழுக்க முடையவன்." (தொல். பாயிரம்)

என்பதால் விளங்கும்.

ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்தே வியாசர் வகுத்த நான்மறைகள் இருந்திலவென்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுகின்றார்.

தொல்காப்பிய நூலானது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று பகுதிகளை

யுடையது. ஒவ்வோர் அதிகாரமும் ஒன்பது பிரிவினை யுடையது. எழுத்ததிகாரத்தின் முதற்பகுதியாகிய நூன் மரபினுள் முதலெழுத்து, சார்பெழுத்து, முதலெழுத்தின் வகைகளாகிய உயிர், மெய், சுட்டெழுத்து, வினவெழுத்து சார்பெழுத்துக்களாகிய குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்பவற்றின் இலக்கணமும் அளவும் விளக்கப் பட்டன. இவை இலக்கண நூலுக்குரிய எழுத்துக்களின் சிறப்புப் பெயராமாதலின் இப் பகுதியுள் ஓதப்பட்டன. சொற்களில் இன்ன எழுத்து இன்ன இடத்தில் நிற்றல் இலக்கண வழக்கு என்பதைத் தெரிவிக்கும் பாகம் மொழி மரபெனப் பின்வைக்கப்பட்டது. அதன்பின் எழுத்துக் களின் பிறப்பியல் கூறுமிடத்து அவைகள் உள்ளொலிக்கு முறை அந்தணர் மறைக்கண்ணது என்றனர் ஆசிரியர்.

"அகத்தெழு வளியிசை யரிறப நாடி
யளபிற் கோட லந்தணர் மறைத்தே."
(தொல். பிறப்பியல், உ0)

(அவ் வந்தணர்மறையை வடமொழிவேதமென்று கோடல் தவறு.)

மொழிகள் தொடரு முறையை ஆசிரியர் புணரியலுட் கூறிப் போந்தனர்; வேற்றுமையிலும் அல்வழியிலும் வரும் சொற்றொடர்கள் தொக்குநிற்கு முறையைச் சிறப்பாகத் தொகைமரபினுட் காட்டினர்; உருபுகளும், உயிரெழுத்துக் களும், மெய்யெழுத்துக்களும், குற்றியலுகரமும் புணரு முறையைத் தனித்தனி வெவ்வேறு இயலுள் விதந் தோதினர். குற்றியலுகரப் புணரியலோடு எழுத்ததிகாரம் முடிந்தது.

இவ் வெழுத்ததிகாரத்தின்கண்ணே எம்மொழிக்கும் மூலமாகிய முதலொலிகள் முப்பதனையும், அவற்றோடு

கலந்து பிறவொலிகள் எழுதற்குக் காரணமாகிய சார்பொலிகளையும் இன்னவெனத் துணித்தறிந்த திரு. பா. வே. மாணிக்க நாயக்கரவர்கள் பேச்சொலிகளையுடைய எல்லா மொழிகளின் எல்லாச் சொற்களையும் தமிழ் எழுத்துக்களின் உதவியால் எழுதுதல் கூடுமென்று நன்கு விளக்கியிருக்கின்றார்கள். அதனால் எழுத்தொலி மூல நூலுணர்ச்சி தொல்காப்பியர் காலத்திற் றமிழ்நாட்டிற் சிறப்புற்றோங்கியிருந்ததென்பது தெரியவருகிறது. எழுத்துக்களின் வரிவடிவம் ஓகாரத்தின் பகுதிகளினின்று அமைக்கப்பட்டனவென்று அவ் வோகாரமும் இயற்கைப் பொருளின் மூலமாகிய கருவின் வடிவமே யென்றும் திரு. நாயக்கர் கண்டு எழுதியுள்ளார். அதனால் தொல்காப்பியர் காலத்தில் உள்ள வரிவடிவு தமிழ்மொழிக்கே சிறப்பாக அமைந்துள்ளதென்பதும், அது பிறநாட்டினரிடமிருந்து கடன் வாங்கப்பட்டதன் றென்பதும் கருதப்படும். எழுத்தொலி நூலாராய்ச்சிக்குத் திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் நூல் பெரிதும் துணைபுரிவதாகும்.

தொல்காப்பியம் எழுத்திற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், கல்லாடனார் முதலியோர் உரைவகுத்ததாகக் காணப்படுகின்றது. எழுத்து என்ற சொல்லே எழுதப்படுவதை யுணர்த்துதலால் அச்சொல் எழுந்த காலத்தே வரிவடிவு அமைந்திருத்தல் வேண்டுமென்பது கருதப்படும். எழுத்ததிகாரத்தில் 'முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன' 'உட்பெறு புள்ளி யுருவாகும்மே' 'மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்' 'எகர ஒகரத் தியற்கையும் அற்றே' 'நீட்டம் வேண்டி னவ்வளபுடைய, கூட்டி யெழூஉத லென்மனார் புலவர்' என்று வரும் நூற்பாப் பகுதிகளானே வரிவடிவு தமிழர்க்குத் தொன்றுதொட்டு இருந்ததென்பது தெள்ளிதிற் றுணியப்

படும். 'என்மனார் புலவர்' என்னுஞ் சொற்றொடரானது பல நூற்பாக்களில் அமைந்துள்ளமையால் தொல்காப்பியத்திற்கு மேற்கோள் நூல்கள் பல இருந்தன என்பது போதரும். 'எழுத்ததிகாரம்' என்ற சொற்றொடர் நூலுள் யாண்டும் பயிலக் கண்டிலம். எழுத்து என்பதே இப் பகுதிக்குத் தலைப்பெயராக ஆதியில் அமைந்திருக்கலாம்.

இனி, சொல்லதிகாரத்தின் அமைப்பு ஆராயற்பாலது. இதற்குச் சிறந்த உரை சேனவரையரது. முதற்கட் கிளவியாக்கம் என்பது சொற்றொடருள் திணை, பால், மரபு முதலியவை வழுவாது சொற்கள் அமைக்கப்படு முறைமையை விளக்குவதாகும். இரண்டாவது எண்வகை வேற்றுமைகளின் உருபும், பொருளும், சொல்லின்கண் அவை பயிலு முறைமையும் தெரிக்கப்பட்டன. பொருளினும் உருபினும் உள்ள வழுவமைதி வேற்றுமை மயங்கியல் என்பதனுள் விரிக்கப்பட்டது. விளிவேற்றுமையைப் பற்றித் தனியியலொன்று ஐந்தாவதாக அமைந்துள்ளது. அது வேற்றுமையுள் வைத்தும் வைக்கப்படாமலுங் கருதுவதற்குரித்தாகலின் என்க. பின்னர்ப் பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் அமைந்திருக்கின்றன. அவ்வப்பெயர்களே இலக்கணமும் பொருளும் விளக்கி நிற்பன. எச்சவியல் என்னும் இறுதிப் பகுதியுள் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நால்வகைச் சொற்களின் இலக்கணமும், சொல்லின்கண்ணும் சொற்றொடரின்கண்ணும் பொருள்கோண் முறைமையும் ஓதப்பட்டன.

இயற்சொல்லுக்கு இலக்கணங் கூறும் நூற்பாவினாலே, தமிழ் வழங்கும் நாட்டின்கண் செந்தமிழ்நிலமென்பது சிறப்பாக உள்ள ஒருபகுதி யென்பது கருதப்படும். தொல்காப்பியப் பாயிரத்துள்ளும்,

"தமிழ் கூறு நல்லுல கத்து."

என்றும்,

"செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்து நூல் கண்டு."

என்றும் வருவன காண்க.

செந்தமிழ்நிலமல்லாத பகுதியைப் பிற்கால உரையாசிரியர்கள் கொடுந்தமிழ் நிலமென்பர். செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்து பன்னிரு நாடுகள் இருந்தனவென்பதும், அவற்றினின்று சொற்கள் செந்தமிழ் நிலத்து வந்து வழங்கின வென்பதும், அவை திசைச்சொல்லாமென்பதும்,

"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி."

(தொல். எச்சவியல், ௪)

என்ற நூற்பாவால் விளங்கும்.

இப் பன்னிரு நிலம் யாவையென்று விளங்கவில்லை. செந்தமிழ் நிலத்தின் எல்லைகள் நூலுட் கூறப்படவில்லை. தமிழ்நிலத்தின் எல்லை ஒருவாறு குறிப்பாகச் செய்யுளியலுள் ஒரு நூற்பாவில் ஆசிரியர் விளக்கிப் போந்தனர்.

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பி
னாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்."

(தொல். செய்யுளியல், எ௬)

என்றது காண்க.

மூவேந்தரது நிலப்பரப்பும் செந்தமிழ் நாடெனக் கருதுவாருமுளர். அங்ஙனமாயின் இம்மூவரது வரைப்பிற்கும் அப்பால் தமிழ் வழங்கிய இடம் பன்னிரு நிலமென்ற சொற்றொடராற் குறிக்கப்பட்டதென்னலாம்.

செந்தமிழ்நாட்டின் எல்லையை ~~உரையாசிரியர்கள்~~ ஒருவாறு குறிக்கின்றார்கள். அவர்கள், "செந்தமிழ் நிலமாவன: வைகையாற்றின் வடக்கும் மருதயாற்றின் தெற்கும் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்குமாம்" என்றனர். இந் நிலப்பகுதி தமிழ்ச் சங்கங்கள் இருந்த இடத்திற்கு அப்பாற்பட்டதாய்ச் சோழநாட்டின் ஒரு பகுதியையும் பாண்டி நாட்டின் ஒரு பகுதியையுமே அடக்கிக் கொண்டிருக்கின்றது. சேரநாட்டினை யுட்படுத்தவில்லை. இதனைச் சிறப்பாகச் செந்தமிழ்நிலமென்று சொல்லுவதற்குக் காரணம் விளங்கவில்லை. தமிழ்ச் சங்கங்கள் நிலவிய நிலப்பகுதியினைச் செந்தமிழ்நாடென்று சொல்லுதலே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. ஆசிரியர் நூல் செய்கின்ற காலத்திலே கபாடபுரமென்பது பொருநையாற்றிற் கப்பால் இருந்த ஓர் அரசநகராம். அதற்குமுன் தென்மதுரை யென்னுமிடம் தலைச்சங்கத்திற்கு நிலைக்களமாக இருந்தது.

வியாசர் காலம் பாரத காலமாதலின் அதற்கு முன்னேயே தொல்காப்பியம் தோன்றி யிருக்கவேண்டுமென்பது கருதத்தக்கது.

பாரத காலம் ௫000 ஆண்டுகளுக்கு முன்னும் என்றும், ௩௨00 ஆண்டுகளுக்கு முன்னென்றும் கருதுகின்ற இருதிறப்பட்ட கொள்கைகள் உள்ளன. எவ்வாறெனினும், கி. மு. ௧௨00 க்கு முற்பட்டது தொல்காப்பியம் என்பது பெறப்படுகின்றது.

பாணினிக்கு முன் ௬௪ வடமொழி இலக்கண நூல்கள் திகழ்ந்தன வென்றும் அவற்றுள் ஐந்திரம் முதலாவதென்றுங் கூறுப. அங்ஙனமாயின் ஐந்திரம் பாணினீயத்திற்கு நெடுநாள் முன்னரே வழக்கிலிருந்திருக்கவேண்டும்.

பாணினீயம் தோன்றியது கி. மு. ஏழாம் நூற்றாண்டினில் என்றால் அதற்கு ஏறக்குறைய ஆயிரமாண்டுகளுக்கு முன்னேயே ஐந்திரத்தின் காலத்தில் தொல்காப்பியம் தோன்றியதென்று கருதுக.

தொல்காப்பியர் முல்லைத்திணையை முதற்கூறி அதற்குரிய கார்காலத்தை முதலிற் சுட்டிப் போந்தனர். கார்காலம் ஆவணியிற் றொடங்குவதால் தொல்காப்பியர் காலத்தில் ஆண்டு ஆவணியிற் றொடங்கியதென்ப. நிலவுருண்டையின் அச்சு முனையானது சிங்கராசிக்கு நேராக இருந்த காலம் அஃதாகும். முனை சுழல்வதில் சிங்கராசியின் முந்திய ராசிக்குச் செல்லச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுக்குக் குறையாது என்பர் வானநூலோர். அவ்வாறு கருதுமிடத்து, அது மேடராசியைச் சுட்டுவதற்குச் சில ஆயிரம் ஆண்டுகள் கழிந்திருக்கவேண்டும். இப்பொழுது மேடத்தினின்று பின்னுக மீனராசியை நிலத்தில் அச்சு முனை சுட்டுகின்றதென வானநூலோர் கருதுகின்றனர். தொல்காப்பியர் காலத்துக்கு முன்னேயே ஆண்டு ஆவணியிற் றொடங்கியிருத்தல் கூடும். பன்னாள் கழிந்து மக்கள் இவ் வானநூற் செய்தியை உணர்ந்து ஆண்டினைச் சித்திரையிற் றொடங்கியிருக்கலாம். நிலவுலகின் அச்சுமுனை மேடராசியிலிருந்து பின்னால் விலகியும் இன்னும் ஆண்டினைச் சித்திரையிலிருந்தே தொடங்குவதாகக் கணக்கிட்டு வருகின்றோம். ஆதலாற் பின்னும் முன்னும் ஏற்படக்கூடிய காலப் பகுதியைக் கழித்தபின் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்குமுன் தொல்காப்பியம் தோன்றியிருக்கலாம் என்றல் பொருத்தமுடையதாகும்.

தொல்காப்பியர் தமது நூலுள் பாலைநிலத்திணையும் அதன்கண் பயின்ற ஒட்டகம் முதலியவற்றையும் குறித்

திருப்பதால் பெருமணல் வெளிகள் இருந்த கடல்கொண்ட நாட்டைப்பற்றி அவர் கூறினர் என்று கருதி, அந்நாட்டைக் கடல் கொள்ளுமுன் தொல்காப்பியம் எழுந்ததென்று சொல்வாருமுளர். நிலந்தருதிருவிற் பாண்டியன் என்பவன் காலத்துக் கடல்கோள் முதற்சங்கமிருந்த நாட்டை யழித்த கடல்கோளா யிருப்பின் அக் கடல்கோட்குமுன் தொல்காப்பிய ரியற்றிய தம்முடைய நூலை அக் கடல் கோட்குப்பின் அப் பாண்டியன் அவையில் அரங்கேற்றி யிருத்தல் கூடும். இக் கருத்துப்பற்றி நச்சினார்க்கினியர் தொல்காப்பிய வுரையுள் "ஆதி யூழியின் அந்தத்தே இந்நூல் செய்தாரென்க" என்று கூறினர். நிலந்தருதிருவிற் பாண்டியன் காலத்துக் கடல் வெள்ளம் இடைச்சங்க காலத்தினிடையே நிகழ்ந்திருக்குமாயின் தொல்காப்பியம் இடைச்சங்க நூலாகவே கருதப்படவேண்டும். கி. மு. உ000 க்கு முன் ஏற்பட்ட கடல்வெள்ளம் முதற்சங்க காலத்திற் குரிய தென்றும் இடைச்சங்க காலத்திற்குரிய தென்றும் இருவேறு கருத்துக்களுள்ளன. எவ்வாறுயினும் கி. மு. இரண்டாயிரத்துக்கு முற்பட்ட காலத்தில் தொல்காப்பியம் தோன்றியிருக்க வேண்டுமென்பது இருவேறு கருத்தினர்க்கும் ஒப்பமுடிந்ததாகும்.

பாணினி காலம் கி. மு. ௭00 ஆமெனின் அதற்குமுன் பெருவழக்கிலிருந்த ஐந்திரம் வழங்கிய காலம் அதற்குச் சில நூற்றாண்டு முன்னதாக இருக்கவேண்டும். ஆதலால் கி. மு. க000 க்கு முற்பட்டவை ஐந்திரமும் தொல்காப்பியமும் என்பது தெளியப்படும். தொல்காப்பியம் தோன்றிய காலத்திற்குப்பின் சிற்சில பகுதிகள் அதனுள் சேர்க்கப்பட்டிருத்தல் கூடும். வைசியரென்பாரைப்பற்றி நூலுள் வாகைத்திணைப் பகுதியில் யாதும் கூறப்படாவிடினும் மரபியலில் "வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை" என்ற

சூத்திரம் காணப்படுகின்றது. அஃது ஆரியக்கலப்பின் பின் ஏற்பட்டதாகும். சூத்திரம் என்ற சொல்லும் மரபியலிலே காணப்படுகின்றது.

தொல்காப்பியருக்கு முன்னர் அவிநயம் என்ற ஒரு நூல் இருந்ததென்றும் அதற்குப் பல்லவதரைய ரென்பார் இயற்றிய உரை யொன்று இருந்ததென்றும் நன்னூல் மயிலைநாதருரையால் அறிகின்றோம். அவிநயம் இப்பொழுது கிடைத்திலது.

சங்கமிருந்த நகரத்தைச் சுற்றியே பன்னிரு நாடுகள் இருந்தனவென்றால், அவை உரையாசிரியர்கள் சுட்டுகின்ற பன்னிரண்டு நாடுகள் தாமோவென்றும் ஐயம் நிகழற்பாலது.

"பன்னிரு நிலமாவன பொங்கர்நாடு, ஒளிநாடு, தென் பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவா வடதலை நாடு எனச் செந்தமிழ் நாட்டுத் தென்கீழ்பான் முதலாக வட கீழ்பாலிறுதியாக எண்ணிக்கொள்க" என்றனர் சேனா வரையர். சிலர் சோழநாட்டைச் செந்தமிழ் நாடெனப் பற்றுள்ளத்தாற் பிற்காலத்துக் கூறினர்.

"செந்தமிழ் நாடே,
மன்ற வாணன் மலர்திரு வருளால்
தென்றமிழ் மகிமை சிவணிய செய்த
அடியவர் கூட்டமு மாதிச் சங்கமும்
படியின்மாப் பெருமை பரவுறு சோழனும்
சைவமா தவருந் தழைத்தினி திருக்கும்
மையறு சோழ வளநா டென்ப."

இதைச் சைவமடத்துத் தம்பிரான்களுள் ஒருவர் இயற்றியிருத்தல் கூடும்.

ஆசிரியர் சேனாவரையர் கூறிய பொங்கர் நாடும், ஒளி நாடும் பிற்காலத்து உரைகளுட் காணப்படவில்லை.

வேணாடு, புனனாடு என்பவை அவற்றிற் கீடாகக் காணப் படுகின்றன. ஆசிரியர் பவணந்தியார் திசைச் சொல்லிலக் கணங் கூறுமிடத்து,

"செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினிற் றமிழொழி நிலத்தினுந்
தங்குறிப் பினவே திசைச்சொ லென்ப."

(நன்னூல்: உஎகூ)

என்று தமிழ் வழங்கும் பன்னிரு நிலத்தோடு அது வழங் காத பதினேழ் நிலங்களும் கூட்டியுரைத்தார்.

திரிசொல்லென்பது பலபொருள் குறிக்கும் ஒரு சொல்லும் ஒருபொருள் குறிக்கும் பல சொல்லுமாம். இனி, வடசொல்லென்பது வடமொழியாகிய ஆரியச் சொல்லென்பர். அது திசைச்சொல்லுள் அடங்குமென்று கொண்டு, வடசொல்லென்பது துறவியராகிய அறிவர் தமிழுள் வழங்கும் மொழியெனக் கொள்வாருமுளர். துறவறம் மேற்கொண்டானை 'வடக்கிருந்தா' னென்று சொல்லும் வழக்கம் பண்டைத்தமிழ் நூலுட் காணப்படு கின்றது. துறவியாகிய நிறைமொழி மாந்தர் என்பார் தமிழ் மொழியையும், பொது வழக்காக வழங்காத மறையொலி களையும் தம்முள் வழங்குவாராதலின், அம்மறையொலிகளை நூலுட் பொதுச் சொல்லால் விளக்குதலும் இயல்பாமென் பதையே வடசொற் கூறிய நூற்பா தழுவிக்கொள்வதாகக் கூறுப. சொற்களுள் எழுத்துக்கள் செய்யுட்கண்ணே திரி பெய்து முறைமையை ஆசிரியர் இவ்வியலுட் கூறிப் போந் தனர். விகாரத்தை ஒரு செய்யுளுறுப்பாகக் கருதாமையின் செய்யுளியலில் அதனை விதந்தோதிற்றில ரென்ப.

பொருளதிகாரம் என்பது அகத்திணையியல், புறத் திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப் பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் என்னும்

ஒன்பது பகுதிகளையுடையது. பொருள் என்பது அறம் பொருளின்பம் வீடென்பன வென்று ஆசிரியர் நச்சினார்க் கினியர் கூறினர். 'பொருளெனப் பொதுப்படக் கூறவே இவற்றின் பகுதியாகிய முதல் கரு உரியும் காட்சிப் பொரு ளுங் கருத்துப் பொருளும் அவற்றின் பகுதியாகிய ஐம் பெரும் பூதமும் அவற்றின் பகுதியாகிய இயங்குதிணையும் நிலைத்திணையும் பிறவும் பொருளாம்' என்றனர். இங்ஙனங் கூறிப் போந்தவர் நால்வகை யுறுதிப்பொருட்கும் பிறவற் றிற்கும் உள்ள தொடர்பை விளக்கா தொழிந்தனர். பொருள் என்ற சொல் பொதுவாக எல்லாவகைப் பொருள் களையும் சிறப்பாகக் காட்சிப்பொருளையும் உணர்த்துவ தாகும்.

"பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்."
(குறள்: ௩௫௧)

"பொருளிலார்க் கிவ்வுலக மில்." (குறள்: ௨௪௭)

என்றவிடத்து முறையே பொதுக்கருத்தும் சிறப்புக் கருத்தும் வந்தமை காண்க.

அறம் என்பது மனத்துக்கண் மாசிலனாகிய தன்மை யுடைமை. அத்தன்மை பற்றிய ஒழுக்கத்தினையும் அது குறிக்கும். ஆண்டுப் பொருளென்ற சொல் பண்பினையும் வினையையுங் குறித்தது. இன்பம் என்பது உணர்ச்சியைக் குறிப்பதால் ஆண்டும் பண்பே பொருளெனப்படுதல் காண்க. அவ்வாறே வீடுமாம். அறமும், இன்பமும் நிகழ் தற்கு ஏதுவாகிய காலமும், இடமும் இலக்கண நூலுள் முதற்பொரு ளெனப்படும். காலத்தினும் இடத்தினும் நுகர்தற்குரிய பொருள்கள் கருப்பொருள் எனப்படும். இன்பநுகர்ச்சியின் சார்பாக இடத்தினுங் காலத்தினும் நிகழும் ஒழுக்கம் உரிப்பொருள் எனப்படும். நுகர்ச்சிப்

பொருளானது காட்சிப்பொருள் கருத்துப்பொருள் என இருபகுதியாகப் பகுக்கப்படும். ஐம்புலன்களால் அறியப் படுவன காட்சிப் பொருளாம். உள்ளத்தினால் உணரப் படுவனவும் கருதப்படுவனவும் கருத்துப்பொருளாம். இவற் றில் ஐம்பெரும் பூதமும் அடங்குதல் காண்க. ஐம்பெரும் பூதங் கூறவே அவற்றானாகிய உடம்புகொண் டசையும் பொருளும் அசையாப் பொருளுங் கூறியவாறாயிற்று. இது காறுங் கூறியவற்றாற் 'பொருள்' என்னுஞ் சொல் ஞாலத்தி லுள்ள யாவற்றையும் அவற்றின் வினையையும் பண்பினையும் பொதுவாக உணர்த்தி நிற்கும் என்றும், நால்வகை உறுதிப் பொருளையும் சிறப்பாகச் சுட்டும் என்றும், அவற்றுட் சிறப்பாக முதல் கரு உரிப்பொருளைக் குறிக்கும் என்றும், அவற்றுள்ளுஞ் சிறப்பாகக் கருப்பொருளின் ஒரு பகுதி யாகிய செல்வத்தைக் குறிக்குமென்றும் உய்த்துணரப் படும்.

"செம்பொருள்." (குறள்: ௩௫௮)

என்றவிடத்துக் கடவுளையும் அச்சொல் உணர்த்தி நின்றது.

"பொருளல் லவரை." (குறள்: ௭௫௧)

என்றவிடத்து அஃது உயிரையும் உணர்த்தியது காண்க.

இனித் தொல்காப்பியப் பொருளதிகாரத்துள் அகப் பொருள், புறப்பொருள் என்னும் இரண்டு பகுதியாகப் பொருள் பகுக்கப்பட்டது. அகத்திணையையும் புறத்திணை யையுமே ஆசிரியர் முதற்கட் கூறிப்போந்தனர். திணை யென்பது சிறப்பாக ஒழுக்கத்தையே குறிக்கும். அகமும் புறமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன ஆகலின், உறுதிப்பொருள்கள் நான்கும் இருவகை ஒழுக்கத்துக்கும் துணைநிற்பனவாகக் கருதப்படும். தலைவனுந் தலைவியு

மாகிய இருவர் கருத்தும் ஒருமைப்பட்ட வாழ்க்கை இல்லறம் எனப்படும். இல்லறத்திற்குக் கருவி, பொருள். அறம் என்பது ஒழுக்கம். அதன் பயன் இன்பம். அதற்குக் கருவி பொருள். இல்லாளைத் துணையாகக் கொண்டு வீட்டு நெறி நிற்றலும் கொள்ளப்படுமாதலின் இல்லறமும் வீட்டோடு தொடர்புறுதல் காண்க. அவ்வாறாயினும் அகத்திணைக்கு இன்பம் சிறப்பாகத் திகழ்தலின் அதனையே அகம் என்றும் ஏனைய புறம் என்றும் உரையாசிரியர்கள் கூறுவாராயினர்.

ஆசிரியர் தொல்காப்பியனார் முதலாவது அகத்திணையியலுட் கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என மூன்றாகத் தலைவன் தலைவியர்பால் நிகழும் ஒழுக்கத்தை வகுத்துரைத்தனர். கைக்கிளை யென்பது ஒருதலைக்காமம். பெருந்திணையென்பது பொருந்தாக்காமம். ஐந்திணை யென்பது ஒத்த அன்புடையார்மாட்டுக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை யென்னும் ஐவகை நிலத்தின்கண் நிகழ்வதாகிய ஒழுக்கம். பாலைநிலம் என்பது முல்லை குறிஞ்சி என்னும் நிலங்களின் திரிபாதலின், சிறப்பாக எண்ணப்படுவதல்லவாதலின் நிலம் நான்கேயாம். ஆதலால் ஞாலத்திற்கு நானிலம் என்றும் பெயருண்டு.

"நரகொடு சுவர்க்க நானிலம் புகாமல்."
(திருவாசகம், போற்றித் திருவகவல், ௨௧௩)

என்றவிடத்து நானிலம் உலகத்தைக் குறித்தது காண்க.

நானிலத்திற்கே ஆசிரியர் தொல்காப்பியனார் தெய்வங் கூறிப் போந்தனர்.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.''
(தொல்: அகத்திணையியல், ௫)

முல்லை நிலத்திற்குத் திருமாலும், குறிஞ்சி நிலத்திற்கு முருகக் கடவுளும், மருதத்திற்கு வேந்தன் எனப்படும் இந்திரனும், நெய்தலுக்கு வருணனும் கூறப்பட்டனர். தெய்வம் முதலியன கருப்பொருளுள் அடங்கும்.

''தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவுங் கருவென மொழிப.''
(தொல்: அகத்திணையியல், ௧௮)

சிறப்புப்பற்றி நிலங்கூறிய விடத்தே தெய்வத்தையும் உடன் கூறினர். மருதத்திற்குரிய கடவுளின் பெயர் வேந்தன் என்றே நூற்பாவுட் காணப்படுகின்றது. அக் கடவுட்கு இந்திரன் என்ற பெயர் ஆரியக்கலப்பின் பின் ஏற்பட்டதாகும். வருணன் என்ற சொல் வடமொழியிலே மேற்றிசைக் கடவுளைச் சிறப்பாகக் குறிக்கும். நெய்தல் நிலக்கடவுளின் பெயராக அதனைக் கருதுங்கால் அதனைத் தமிழ்ச் சொல்லெனக் கொள்ளுவாருமுளர். அவர் 'வண்ணன்' என்ற சொல் அங்ஙன மருவியதென்ப. அது வடமொழியாயின், அதற்கு நேராய தமிழ்ச்சொல் ஆசிரியர் தொல்காப்பியர் காலத்திலேயே வழக்கின் வீழ்ந்திருக்க வேண்டும். அன்றெனின் தமிழ்நாட்டு நெய்தனில மாக்கள் ஆரியரிடமிருந்து வருண வழிபாட்டைக் கைக்கொண் டிருத்தல் வேண்டும். அவ்வாறு கொள்ளுதல் பொருந் தாது. என்னை? ஆரியத்துள் நெய்தல்நிலக்கடவுளாகவே வருணன் முதலிற் கருதப்படாமையானும், ஏனைத்திணை நில மாக்களைப்போல நெய்தல் நிலத்தாரும் ஒரு கடவுளைச் சிறப்பாக வழிபட்டனர் என்று கோடலே பொருத்த

முடைமையானு மெண்க. 'வண்ணன்மேய தண்மணலுலக' மென்ற பாடபேதம் ஓர் ஏட்டிலுள்ளதாக இப்போது கேள்வி.

முதற்பொருள் நிலமும் பொழுது மாகும். நிலங் கூறிய பின்பு பொழுதினைப் பெரும்பொழுது எனவும், சிறு பொழுது எனவும் பிரித்து ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும் இன்னவென்று ஆசிரியர் விதந்தோதினர். (முல்லைக்குக் காரும் மாலையும், குறிஞ்சிக்குக் கூதிர், முன் பனிப்பருவம் என்பவற்றொடு யாமமும் உரியன. எல்லாத் திணைக்கும் நடுநிலத்ததாய் உள்ள பாலைக்கு நண்பகலும் வேனிலும் பின்பனிக்காலமுங் கூறப்பட்டன. வேனிலை இளவேனில், முதுவேனில் என இரண்டாகக் கொள்ளின் பெரும்பொழுது ஆறுதல் காண்க. மருதத்திற்கு விடியலும் நெய்தலுக்குக் காலையுமே ஓதப் பட்டன. இவ்விரு நிலத்திற்கும் பெரும்பொழுது கூறப்பட வில்லை. ஆதலிற் பெரும்பொழுது யாவும் அவற்றிற்குரிய என்பது கருதப்படும்.) வைகறையும் விடியலும் வெவ்வேறு பொழுதாகவும் எற்பாடு என்பது பிற்பகலாகவும் கருது வாருக்குச் சிறுபொழுதும் ஆறுதல் காண்க. அங்ஙன மாயின் மருதத்திற்கு வைகறையும் விடியலுங் கொள்ளப் படும். அஃதாவது கதிரவன் உதிப்பதற்கு முற்பட்ட பொழுது வைகறை யெனவும் அதற்குப் பிற்பட்ட காலைப் பொழுது விடியலெனவும் உரையாசிரியர் கூறினர். இவ் வாறு கொள்ளாது வைகறை என்பது விடியற்காலமாகவும், எற்பாடு என்பது காலைப்பொழுதாகவும் **ஆசிரியர் சிவஞான முனிவர்** பொருள் கண்டனர். 'வைகுறு விடியல்' என்ற நூற்பாப் பகுதியை வினைத்தொகையாகக் கொண்டு அவர் சிறுபொழுது ஐந்தே எனக் கொண்டனர். (முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து நிலத்திற்

கும் மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல் என்னுஞ் சிறுபொழுது முறையே யுரியன என்ற முனிவரர் கருத்தே மிகவும் பொருத்தமாதலின், சிறுபொழுது ஐந்தெனக் கோடலே சிறப்பாகும். வேனிலை இரண்டாகப் பிரித்தோதா விடத்துப் பெரும்பொழுதும் ஐந்தாதல் காண்க. நிலம் ஐந்தென்பது தெளிவு. ஆதலின் நிலமும் இருவகைப் பொழுதும் ஐந்து என்ற எண்ணில் முடிந்து நின்றமை காண்க.

ஒரு நிலத்தில் அதற்குரிய ஒழுக்கமின்றிப் பிறிதொரு நிலத்திற்குரிய ஒழுக்கம் நிகழ்தலும், வேறுநிலக் கருப்பொருள் தோன்றலும் திணைமயக்கம் எனப்படும். அகத்திணையியலுட் போந்த பிறகருத்துக்கள் ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இனிப் புறத்திணையியல் என்பது அகப்பகுதியாகிய எழுதிணைக்கும் நேராகிய புறத்திணை ஏழின் இலக்கணத்தையும் வகுத்து விளக்குவது. (அவை வெட்சி, வஞ்சி உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்டிணை என்பன. இவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, கைக்கிளை யென்னும் அகத்திணைகளோடு ஒருபுடை ஒப்புடைய புறத்திணைகளாம்.) அகம் என்ற சொல் இல்வாழ்க்கையை உணர்த்துவதாகக் கொண்டு அவ், வாழ்க்கைக்குத் தலைவன் தலைவி நேர்படுதல் சிறப்பது போலப் புறவாழ்க்கைக்கு அரசியல் நன்கு நிலைபெறும் வண்ணம் பகைவரைப் பொருது வெல்லுதல் இன்றியமையாமையின் போர்க்குரிய திணைகளாகவே புறத்திணைகளுள் முதல் நான்கும் அமைந்துள்ளன. (பகைவரது நிரைகோடல் (வெட்சி) போர் தொடங்குதற்குக் காரணமாய்க் களவொழுக்கம் போல்வது. வஞ்சி யென்பது நிரையிழந்த அரசன் எதிரியை அடுதற்பொருட்டுச் செல்லும் ஒழுக்க

மாம். அங்ஙனம் செல்லாதவிடத்து எதிரி தனது கோட்டையை வளைத்ததும் தான் அதனுள்ளிருந்து காத்தல் உழிஞையாகும். போரில் எதிரியை வென்றழித்தல் தும்பையாகும்.

போரிற் பல துறைகளைக் குறித்தற்கு வெவ்வேறு பூக்களாலாகிய மாலையைப் போர்வீரர் அணிந்தமையால் அப்பூக்களின் பெயர் அத்துறைகளுக்காயின. பிரிவை புணர்த்தும் பாலைக்கு நேராய புறத்திணை வாகையாகும். அஃது ஒவ்வொருவருக்கும் இயல்பாய ஒழுக்கத்தை மிகுத்துக் கூறுவது. பெருந்திணைக்குப் புறத்திணை காஞ்சியாகும். காஞ்சி யென்பது நிலையாமை கண்டு வீட்டின்பங் கருதிச் செல்லும் ஒழுக்கமாகும். கைக்கிளைக்குப் புறமாவது பாடாண்பகுதி. அது தேவரையும் மக்களையும் வாழ்த்தி விழைவதை வேண்டுதலாகும். புறத்திணையுள் ஒவ்வொன்றும் பலப்பல துறைகளை உடையன. அவை விரிப்பிற் பெருகும்.)

களவியலென்பது ஒத்த அன்புடைய தலைவனுந் தலைவியும் தாமே எதிர்ப்பட்டு உள்ளப் புணர்ச்சியாதல், மெய்யுறு புணர்ச்சியாதல் நிகழ மறைந்து ஒழுகும் ஒழுக்கம். இருவரும் மணம்புரிந்து இல்லறம் நிகழ்த்துவதற்குமுன் இவ்வொழுக்கம் நிகழுதற் குரியது. இவ்வொழுக்கம் பல துறைகளை யுடையது. தலைவற்கும் தலைவிக்கும் பத்து வகையில் ஒப்பமைதல் சிறந்தது. அவற்றை ஆசிரியர் மெய்ப்பாட்டியலுள் ஒரு நூற்பாவுட் குறித்துள்ளார்.

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோ
டுருவு நிறுத்த காம வாயி
னிறையே யருளே யுணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த வொப்பினது வகையே."

(மெய்ப்பாட்டியல், உஎ)

அவையாவன: பிறப்பு, ஒழுக்கம், ஆண்மை, ஆண்டு (வயது), வடிவம், அன்பு, நிறை, அருள், அறிவு, செல்வம் என்பன.

களவியல் துறைகளின் விளக்கம் இறையனார் அகப்பொருள் ஆராய்ச்சியிற் காணப்படும். அவை ஈண்டு விரிப்பிற் பெருகும்.

கற்பு என்பது தலைமகனையுந் தலைமகளையும் அன்னோர்தம் பெற்றோர் முதலியோர் நெறிச் செயல்கள் (மணச் சடங்குகள்) நடத்திக் கொடுப்பக் கொள்வதாகும். களவொழுக்கத்திலே தலைவனுடன் தலைவி உடன்போகிய காலத்திலே கொடுப்போர் இல்லாமலும் மணச்செய்கை நிகழ்தற்குரியது.

"கொடுப்போ ரின்றியுங் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிய கால யான."

(தொல். கற்பியல், உ)

என்பது நூற்பா.

கரணமில்லாமலும் கற்பு நிகழ்ந்த காலம் உண்டென்பது கீழ்க்கண்ட சூத்திரத்தா லினிது விளங்கும்.

"பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப."

(தொல். கற்பியல், ச)

பரத்தையிற் பிரிவு, வேந்தற்கு உற்றுழிப் பிரிவு, பொருள்வயிற் பிரிவு, கல்வியிற் பிரிவு முதலியன கற்பியற் றுறைகளுள் வருவன.

கல்வியிற் பிரிவு மூன்றாண்டு அளவு கூறப்பட்டது. ஏனைக் காரணம் பற்றிய பிரிவு ஓர் ஆண்டிற்குள் முடிவு பெறல் வேண்டுமென்பது ஆசிரியர் கருத்து. களவியலுள்ளுங் கற்பியலுள்ளும் இன்னின்னார் இன்னின்ன

பொருளை அமைத்துக் கூறுதல் தழுவத் தக்கதென்று ஆசிரியர் விதந்தோதினர். பொருளியல் அகவொழுக்கத்தின் ஒழிபியலாக அமைந்துள்ளது. மெய்ப்பாட்டியலுள் பெருமிதம் (வீரம்), அச்சம், வியப்பு, இழிவு, உவகை, அவலம், நகை, வெகுளி என்னும் எண்வகைச் சுவைகளின் இலக்கணங் கூறப்பட்டது. நடுவுநிலை தனியே கூறப்படவில்லை. அது வீரத்துள் அடங்கும் என்ப. சுவைப்பொருள், சுவையுணர்வு, அதனால் உள்ளத்தில் நிகழுங் குறிப்பு, அக் குறிப்பினை வெளிப்படுத்தும் வேறுபாடு என்னும் நான்கும் ஒவ்வொரு சுவைக்குங் கூறப்படும். இவ் வேறுபாட்டினை விறலென்றும் சத்துவமென்றுங் கூறுவார்கள். அவற்றுள் சுவைப்பொருளும் சுவைக்கும் பொறியுங் கூடியவழியே சுவை பிறத்தலான் அவையிரண்டும் ஒன்றாகக் கருதப்படும். ஆகவே மெய்ப்பாட்டியலுட் கூறப்படும் ௩௨ பொருளும் ௨௪ ஆகவுங் கருதப்படும். சுவைப்பொருளை மட்டுங் கருதுவோர் ஆண்டுக் கூறப்படும் பொருள் எட்டென்பர். நகைச்சுவைக்குக் காட்டாவன 'ஆரியர் கூறுந்தமிழும், குருடரும் முடவருஞ் செல்லுஞ் செலவும், குழவி கூறும் மழலையும்' போல்வன. ஒவ்வொரு சுவையும் பிறத்தற்குக் காரணங்களும் இவ் வியலிலே கூறப்பட்டன. களவொழுக்கத்தே தலைவன் தலைவியர் மாட்டு நிகழ்தற்குரிய மெய்ப்பாடுகள் விரித்தோதப்பட்டன. நடுநிலையென்பது வைதாலும் அடித்தாலும் வாழ்த்தினும் ஒருவகை மாற்றமுமின்றி யிருக்கும் உயர்தன்மையாகும். அதற்கு மெய்ப்பாடு என்னும் விறல் இன்மையின் அதனை ஆசிரியர் இவ் வியலுள் விதந்தோதிற்றிலர்.

இனி, உவமவியலுள் வினை, பயன், மெய், உரு என்ற நான்கும்பற்றி உவமைகள் வருமென்பதும்; உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டு மென்பதும்; உவமைப்போலி

இவையென்பதும் விரித்துக் கூறப்பட்டன. உவமையணியே மற்றெல்லா அணிகட்குந் தலைமையா மாதலின் அதனை விரித்தோதிய ஆசிரியர் பிற்காலத்தார்போல அணியிய லென்று ஒன்று வேறு வகுத்துரைத்திலர்.

"உவமை யென்னுந் தவலருங் கூத்தி
பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து
காப்பிய வரங்கிற் கவினுறத் தோன்றி
யாப்பறி புலவ ரிதயம்
நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்குமே."

என்று பிற்காலத்தார் செப்பியது காண்க.

செய்யுளியலுள் செய்யுளுறுப்புக்கள் விரித்து விளக்கப் பட்டன. அவையாவன: எழுத்தினளபு, அசை, சீர், அடி, மரபு, தூக்கு, எதுகை, நோக்கு, பாவின் அளவு, திணை, ஒழுக்கம், கூறுவோர், கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, குறிப்பு, கருத்து, பொருள், துறை, முடிபு, ஓசை என்பனவாம். 'பாவென்பது சேட்புலத் திருந்த காலத்தும் ஒருவன் கருத்தும் சொல்லுந்தெரியாமற் பாடுங்கால், அவன் சொல்லுகின்ற செய்யுளின் வேறுபாடு கண்டு, அஃது இன்ன செய்யுளென் றுணர்வதற்கேதுவாகிப் பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை' என்றனர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். பாக்களுக்குச் சிறப்பு அவற்றின் ஓசையை வைத்தென்பது இதனாற் கருதப்படும். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பன நால்வகைப் பாக்களாகும். செப்பலோசை வெண்பாவிற்கும், அகவ லோசை ஆசிரியத்திற்கும், துள்ளலோசை கலிப்பாவிற்கும், தூங்கலோசை வஞ்சிக்கும் உரியனவாகும். துள்ளலோசை யும் தூங்கலோசையும் கலந்து வருவது மருட்பா. அது தனிப்பாவன்மையின் அதற்குத் தனியோசை யில்லை.

பரிபாடல் என்பது வெண்பா யாப்பினால் வருவதே யாயினும், சில இடங்களில் வெண்டளையும் ஆசிரியத் தளையும் விரவத் துள்ளலோசையோடு வருதலுங் கூடும் தனிப்பாவகை நான்கே. மருட்பாவும் பரிபாடலும் கலப் பியல்புள்ளன. இவ் வறுவகைப் பாக்களே முதன் முதலில் மிகுதியும் பயின்று வந்தன. பாவினங்கள் அக் காலத்தில் மிகுதியாகப் பயிலவில்லை. தளையென்பது சீரின் இயல்பே யாதலின் ஆசிரியர் சீரின் வேறாக அதனை உறுப்பெனக் கூறிற்றிலர்.

செய்யுளென்ற சொல் அக்காலத்திலே எவ்வகை யிலக்கியத்தையும் குறிக்க வழங்கி வந்தது. நூல், உரை, பாட்டு, முதுமொழி, மறைமொழி, பிசி, அங்கதம் என்னும் ஏழு வகையாக இலக்கியம் விளங்கிற்று. நூலென்பது ஒரு பொருளைப் பற்றிய உண்மைகளைக் கோவைப்படுத்தி முன்பின் முரணுமற் கூறுவது.

> "நூலெனப் படுவது நுவலுங் காலை
> முதலு முடிவு மாறுகோ ளின்றித்
> தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
> உண்ணின் றகன்ற வுரையொடு பொருந்தி
> நுண்ணிதின் விளக்க லதுவதன் பண்பே."
>
> (தொல். செய்யுளியல், கசுசு)

நூற்பா யாப்பு, பாட்டு என்பதனுள் அடங்காது. இக்காலத்து, சயன்சு[1] என்ற ஆங்கில நூலின் பொருளே நூலென்பதன் பொருளோடு ஒத்திருக்கின்றது. உரை யானது பாட்டுக்களுக்கிடையில் விரவி அவற்றின் தொடர் பினை விளக்குதற்கும், பாட்டுக்களுக்குப் பொருள் எழுது வதற்கும், நகைச்சுவைமிக்க கதைகள் எழுதுவதற்கும், அகப்பொருள் புறப்பொருள்களின் தொடர்புடைய கட்டுரைவரைதற்கும் பயன்பட்டு வந்தது.

---

1. Science.

"பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்
றுரைவகை நடையே நான்கென மொழிப."

(தொல். செய்யுளியல், கஎக)

முதுமொழி யென்பது நுட்பமாயுஞ், சுருக்கமாயும், விழுமிய பொருள் பயப்பதாயும், எளிதாய்ப் பொருள் விளக்குவதாயும், சொல்லும் பொருட்டுக் காரணங் குறிப்பதாயுமுள்ளது. பிசி யென்பது உருவகத்தாற் பொருள் விளக்குவது. பிறைகவ்வி மலை நடக்குமென்ற விடத்து உருவகமாக யானை கூறப்பட்டது காண்க. அங்கதமென்பது வசையைக் கரந்துரைப்பது. "ஆநந்தஞ் சேர்க" என்ற விடத்து மகிழ்ச்சியை யடைக என்று புகழ்வதுபோற் றோற்றி, மரணமடைகவென்று வசை கூறியதாயிற்று.

அக்காலத்திற் செய்யுளென்ற சொல் வழங்கிய பொருளில், இக்காலத்து நூலென்னும் சொல் வழங்குகின்றது.

தமிழில் மறைமொழி யென்பது அருளாளர்களாற் றிருவருளாற்றலின் உதவிகொண்டு கூறிய மந்திரம். "நிறைமொழி மாந்தர்...." என்னும் செய்யுளுரையில் 'ஈண்டுக் கூறியது தமிழ் மந்திரங்களை, அவற்றை வல்லார் வாய்க் கேட்டுணர்க' என்று ஆசிரியர் பேராசிரியர் உரைத்தது காண்க.

தொடர்நிலைச் செய்யுளின் வனப்பானது அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்னும் எட்டு வகைப்படும். அம்மை என்பது மிகுதியாகிய அடிகள் வராமல் அறம் பொருள் இன்பங்

களைப் பற்றிக் கூறுவதாகும். அழகென்பது செய்யுளில் வழங்கும் நன்மொழிகளாற் செய்யு ளியற்றுவது தொன்மை யென்பது பழங்கதையை யெடுத்து நயம்படக் கூறுவது. தோலென்பது நால்வகைப் பொருள்களும் மெல்லிய சொற்களால் அமைக்கப்பட்ட அடிவரையில்லாத செய்யுட்களின் தொடர்பாகும். விருந்தென்பது புதுவதாகக் கூறுவது. இயை பென்பது ஞகரம்முதல் னகரம் வரை உள்ள எழுத்துக்கள் இறுதியாக வரும்படி செய்யுட் செய்தல். புலனென்பது உலக வழக்கிலுள்ள ஒவ்வொரு குழுவினர்க்குரிய வழக்கச் சொற்களை யமைத்துக் கூறுவது. மெல்லெழுத்தும் லகார ளகாரங்களும் அமைந்த சேரி மொழிகொண்டு பொருள் விளக்குவது இழைபு என்று சொல்லப்படும்.

இனி, மரபிய லென்பதனுள் பல்லுயிர்களின் ஆண் பெண் குழவியென்பவற்றின் மரபுப் பெயரும், அறிவு காரணமாக ஆறுவகையாகப் பகுக்கப்படும் உயிர்கட்கு இலக்கணமும், எடுத்துக்காட்டும், அந்தணர், அரசர், வைசிகர், வேளாளர் என்பவர்களின் உரிமைத் தொழில்களும், முதனூல், வழிநூல் என்னு மிருவகை நூலினிலக்கணமும், உரைக்குற்றமும், முப்பத்திருவகை யுத்தியும் கூறப்பட்டிருக்கின்றன. விலங்குகளோடு மக்களுள் மன அறிவு சாலாதவர்கள், ஐயறிவுயி ரென்னும் வகையுள் வைத்து எண்ணப் படுகிறார்கள்.

"மாவு மாக்களு மையறி வினவே."

(தொல். மரபியல், ௩௨)

"மக்கள் தாமே ஆறறி வுயிரே." (தொல். மரபியல், ௩௩)

என்பனவற்று லறிக.

அந்தணர்க்கு நூலும், கமண்டலமும், முக்கோலும், மணையும் உரியனவென் றாசிரியர் மொழிந்தமையால்

அந்தணரென்பார் ஒருவகைத் துறவிய ராவரென்பது கருதப்படும். நூலென்பது கற்கும் எட்டினை யுணர்த்திற்று.

" நூலே கரக முக்கோல் மணையே
யாயுங் காலை யந்தணர்க் குரிய." (தொல். மரபியல், சுசு)

என்பதனு லறிக.

திருவள்ளுவர் நூலுள் அந்தணரைப் பற்றி,

" அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்." (குறள் - ௩0)

என்ற திருக்குறள் நீத்தார் பெருமை என்னும் அதிகாரத்திலமைந்துள்ளதும் அறியத்தக்கது.

"வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி."
(தொல்-மரபியல், எசு)

என்ற நூற்பாவால் தொழுதுண்பதுங் குற்றேவல் செய்வதுமாகிய சூத்திரர்க்குரிய இலக்கணம் வேளாளர்க்குக் கூறப்படாமை காண்க.

'இல்லென மொழிப' என்றது ஒருவகையார் கருத்தைத் தெரிவிப்பதாகும். வேளாளர்க்கு வணிகமு முண்டென்பது பட்டினப்பாலையுட் கூறப்பட்டது. தமிழ் நாட்டு அரசர் மூவேந்தரும் பெண் கோடல்கொடுத்தல் செய்வதற்குரிய மரபினர் வேளாள ரென்பது ஆசிரியர் நச்சினார்க்கினியருரையால் இனிது விளங்கும். மன்னர்க்கு முடிசூட்டினோர் வேளாளரென்பது ஆராய்ச்சியால் விளங்குதலின், அரசரும் வேளாளரேயாவர். தமிழ்நாட்டிலே மருதநிலத்தின்கண் நாகரிகஞ் சிறந்திலங்கிய வகையினர் வேளாள ராதலின், கடவுள்வழிபாட்டிற்குரிய தமிழ்ப் பார்ப்பாரும் முதன் முதலில் வேளாள ரென்பதே கருதப்

படும். பிற்காலத்தில் ஆரியர் கலப்பினால் நாற்குலத்தாராகப் பிரிக்கப்பட்டபோது கடவுள் வழிபாடும், அரசியலும், வாணிகமும், வெவ்வேறு பிரிவினர்க் கமைத்த பின் எஞ்சி நின்ற வேளாண் மாந்தர்க்கு உழுதுண்பதே தொழிலென்று வரையறுக்கப்பட்டது. இப்பிரிவு நடந்த பின்னர் வைசியர்க்கும் வேளாளர்க்கு முரிய நூற்பாக்கள் மரபியலுட் போந்தன வென்பது ஒரு சாரார் கொள்கை. மரபியல் நூற்பாவினுள், சூத்திரம் என்ற சொல் பயிலுங் கட்டளைகள் பலவும், பிற்காலத் தெழுந்தனவென்பது ஒரு சாரார் கொள்கை.

களவிய லுரையுட் சுட்டிய இடைச்சங்க நூல்களாகிய எத்துணையோ பரிபாடல், களரியாவிரை என்னும் செய்யுள் நூல்கள் இத்தன்மையன வென்று அறிதற்கிடமில்லை.

இடைச்சங்க காலத்தில் இருந்தையூர்க் கருங்கோழி மோசி, வெள்ளூர்க்காப்பியன், சிறுபாண்டரங்கன், திரையன் மாறன், துவரைக்கோமான், கீரந்தை என்பாரும், அகத்தியர் தொல்காப்பியரும் சிறந்த புலவர்களாக இருந்தன ரென்பது கூறப்பட்டது. அவர்களுள் இன்னார் இன்ன நூல் செய்தாரென்று விளங்கவில்லை. கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலையகவல் என்பன அவராற் செய்யப்பட்டன வெனினும் அவை யாவை யென்பதும், எத்தன்மையன வென்பதும் விளங்கவில்லை. இடைச்சங்க காலத்தில் எழுந்த இசை யிலக்கண நூல்கள் சிலவற்றின் பெயர் கூறப்பட்டுள்ளன. இசை நுணுக்கமென்பது தெள்ளிய தமிழ்ச்சொல்லாக விளங்குகின்றது. மாபுராணம், பூதபுராணமென்பன வடசொற் றொடரோ, தென்றமிழ்த் தொடரோ என்ற ஐயத்திற்கு ஏதுவாயிருக்கின்றன. தொல்காப்பியம் ஒன்றே இடைச்சங்க நூலென்பது தெளிவாக விளங்குகின்றது.

இடைச்சங்க காலத்தின் முடிவில் ஆண்ட முடத் திருமாறன் காலத்தே ஒரு கடல்கோள் நிகழ, அவ்வரசனே இப்பொழுதுள்ள மதுரையிலோ மணலூரிலோ கடைச்சங்கத்தைத் தொடங்கியதாகத் தெரிகின்றது. இடைச்சங்கத்தார் காலத்திலே கொற்கை என்பது ஒரு துறைமுகமாக இருந்திருத்தல் கூடும். கொற்கையிலே பாண்டியர் அரசாண்டதாகத் தெரிகின்றது. மதுரை தலைநகரானபொழுது கொற்கை இளவரசருக்கு இடமாகவிருந்தது. திருவிளையாடற் புராணத்திற் கடைச்சங்கம் நிறுவிய பாண்டியன் வங்கிய சேகரனென்று கூறப்பட்டது. முடத் திருமாறனுக்கு அப்பெயரமைந்ததற்குக் காரணம் விளங்கவில்லை.

இறையனாரகப்பொரு ளென்பது பாண்டிய நாட்டிற் பன்னிரண்டியாண்டு நிலைத்திருந்த கருப்பொன்று கழிந்த பின், பாண்டிய மன்னன் தமிழ்ச்சங்கத்தை மீட்டும் நிறுவிய காலத்தே கூடற்பெருமான் பீடத்தின் கீழ்க் கண்டெடுத்ததோர் அகப்பொருணூலாகும். இது வெளிப்பட்டஞான்று தொல்காப்பியப் பொருளதிகாரம் மறைவுற்றிருந்தது போலும்! மேற்குறித்த கருப்பானது, கி. மு. நாலாவது நூற்றாண்டிலே நிகழ்ந்ததாக வரலாற்றாசிரியர் கருதுவதால் அந்நூற்றாண்டின் இறுதியிலே இந்நூல் வெளிப்பட்டிருத்தல் கூடும். இதற்கு நெடுங் காலத்திற்குப் பின்னேயே இந்நூலுக்கு உரைகாணத் தொடங்கினர். (இறையனாரகப்பொருளிற் குறிக்கப்பட்ட வற்கடம் வடநாட்டுக் கிரேக்க தூதுவர் குறிப்புக்களிற் பேசப்பட்ட கி. மு. நான்காம் நூற்றாண்டின் இறுதியில் (கி. மு. ௩௦௬) இந்தியாவில் ஏற்பட்ட வற்கடமாமெனின் கி. மு. நான்காம் நூற்றாண்டின் இறுதியாதல் கி. மு. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கமாதல் இறையனாரகப்

பொருளின் காலமா யிருத்தல் கூடும். திருவிளையாடற் புராணத்திலே உக்கிரகுமாரபாண்டியன் காலத்தில் வற்கடம் நீடித்திருந்ததென்று கேட்கப்படுகின்றது. அதுவும் மேற் குறித்த வற்கடமேயாம்.

சந்திரகுப்தர் காலத்திலிருந்த பத்திரபாகு என்னும் சைன முனிவர் காலத்தில் பஞ்சமொன்று பன்னிரண்டாண்டு நீடித்ததென்று நூல்களால் விளங்குகின்றது. மேலும் இப்பஞ்சத்தை மணிமேகலையும் குறிப்பிடுதலை உற்று நோக்குக. "பன்னீராண்டு பாண்டி நன்னாடு மன்னுயிர் மடிய மழைவளம் இழந்தது," (கச-௫௫-௫சு)

"காய்சின வெய்யோன் சேயோன் முன்செலக்
கதிர்கால் வெள்ளித்
தேசிகன் பின்பு சென்று நடக்குமிச்
செயலான் முந்நீர்த்
தூசின வுலகிற் பன்னீ ராண்டுவான்
சுருங்கு மென்று
பேசின நூல்கண் மாரி பெய்விப்போற்
சென்று கேண்மின்."

(திருவிளை. மதுரைக்-இந்திரன் முடிமேல் : ௨)

எனத் திருவிளையாடற் புராணத்திலுள்ள பாட்டினாலும் அறிக.

இறையனார் அகப்பொருளுரை நக்கீரனரால் இயற்றப் பட்டுப் பத்துத் தலைமுறையாகப் பாடல் கூறப்பட்டும் வந்ததென்று தெரிய வருகிறது. ஆதலின் நக்கீரனார் வாழ்ந்த கி. பி. முதல் நூற்றாண்டிற் றொன்றி நான்காவது நூற்றாண்டில் எழுதப்பட்டபடியே வழங்கலாயிற்றென்று கருத இடமுண்டு. இந்நூலுக்கு நக்கீரனாரும் பிறரும் செய்த உரையுள் நக்கீரனார் உரையே சிறந்ததென்பது உக்கிரப்பெருவழுதி காலத்தில் முடிவு செய்யப் பெற்

திருக்கலாம். இந்நூலின் இடையிடையே சில பகுதிகள் வெவ்வேறு காலங்களிற் சேர்க்கப்பட்டிருத்தல் கூடும். கூ ஆவது நூற்றாண்டில் ஆட்சி செய்த அவனி சூளாமணி மாறன் என்னும் பாண்டியன்மீது இயற்றிய கோவையின் செய்யுள்கள் பலவும் களவியலுரையில் ஒரு புலவரால் சேர்க்கப்பட்டிருத்தல் மறைமலையடிகள் ஆராய்ச்சியால் புலனாகும்.

உக்கிரப்பெருவழுதி காலத்தில் நெருங்கிய பிற்காலத்திலேயே மணிவாசகனார் கோவையியற்று முன்னேயே களவியலுரை முடிவு பெற்றிருக்கலாம். உக்கிரப்பெருவழுதி காலத்திற்குப் பின்னிருந்த ஒரு புலவரால் முச்சங்க வரலாறு இணைக்கப்பட்டுள்ளது போலும். கூ ஆவது நூற்றாண்டிற்குப் பின் இப்பொழுதுள்ள நிலையில் களவியலுரை அமைந்தது என்னலாம்.

'முத்தமிழ்' என்ற பகுப்புண்மை தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே இருந்ததென்பதற்கு 'இசையொடு சிவணிய நரம்பின் மறைய' என்னும் தொல்காப்பியச் சொற்றொடர் இசைத்தமிழ் உண்டென்ற குறிப்பையும் "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்" என்று அந்நூற் சொற்றொடர் நாடகத்தமிழ் உண்டென்ற குறிப்பையும் உணர்த்துவதால் விளங்கும்.

சிலப்பதிகார நூற்சிறப்புப் பாயிரத்து "குடக்கோ முனிசேரன், தண்டா வுரைமுத் தமிழ்" என்றதும், தேவாரத்தில் முத்தமிழ் பற்றிய குறிப்புக்கள் பல வருதலும், சம்பந்தர் தம்மை, "முத்தமிழ் விரகர்" என்றதும் நோக்குக. "ஏழிசைச்சூழல் புக்கோ" என்ற மணிவாசக அடி இசைத் தமிழ்ச்சங்க மிருந்தமையைக் குறிப்பானுணர்த்தும்.

"தமிழின் நீர்மைபேசித் தாளம்வீணை பண்ணிநல்ல
முழவமொந்தை மல்கு பாடல் செய்கை இடமோவார்."
(சம்பந்தர், க. எக - அ)

என்ற சம்பந்தர் தேவார அடிகளில் 'தமிழினீர்மை' என்றதனால் இயற்றமிழும், 'மல்கு பாடல்' என்றதனால் இசைத்தமிழும், 'செய்கை' என்றதனால் நாடகத்தமிழும் குறிப்பாலுணர்த்தப்பட்டமை காண்க.

தலைச்சங்கத்திலுள்ள இசைப்பாடல்கள் பரிபாடல் என வழங்கின. அக்காலத்து இசை நூல்கள் முதுநாரை, முதுகுருகு என்பன. இடைச்சங்கத்து இசைநூல் சிகண்டியின் இசை நுணுக்கமாகும். கடைச்சங்க காலத்தில் வரி என்பது இசைப்பாடல்களையும், சிற்றிசை, பேரிசை என்பது இசை நூல்களையும் குறிக்கும். தலைச்சங்க நாடகத் தமிழ் நூல்களாகிய பரதம், அகத்தியம் என்பவும், பிற்காலத்துத் தோன்றிய முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் என்பனவும் அடியார்க்கு நல்லார் காலத்திலேயே மிகுதியும் இறந்தொழிந்தன. அடியார்க்கு நல்லார்க்குப் பயன்பட்ட யாமளேந்திரர் செய்த இந்திரகாளியமும் அறிவனார் செய்த பஞ்சமரபும், ஆதிவாயிலார் செய்த பரத சேனாபதியமும் மதிவாணனார் நாடகத்தமிழ்நூலும் இக்காலத்திற் கிடைத்தற் கரியன.

இயற்றமிழ் நூல்களாகிய பன்னிருபாடலும், காக்கைபாடினியம், பனம்பாரனார் சூத்திரம் என்பனவும் இப்பொழுது கிடைத்தில.

தமிழரது முதற்கழகம் கடல் கொண்ட நாட்டிலே நிலைத்திருந்தகாலை இந்தியநாடு முழுதும் தமிழ் மக்களே பரவியிருந்தனர். அவர்கள் பெருந்தலைவராகிய சிவனார ஆட்சிக்குள் பனிமலையும் அடங்கியிருந்த காலத்தே அவர் திருமணம் ஆண்டு நிகழ நேர்ந்தது. சிவனாரது முதல்

அடியவராகிய அகத்திய முனிவர் பனிமலையினின்று பிற்காலத்தே தென்புலம் சென்றாரென்றால் அவர் தமிழ்ப் பெருநாட்டின் வடகோடியிலிருந்து தென்பகுதிக்குச் சென்றாரென்றே கருத்தாதல் தெளிக. அவர் ஆரிய நாட்டிலிருந்து தென்தமிழ் நாட்டிற்கு வந்தாரென்று சொல்லுதல் வரலாற்றுத் தவறாகும். ஏனெனில் வடநாடு முழுவதும் தமிழ்மக்கள் ஆரியர் வருவதற்குமுன் பரவிப் பெருகி யிருந்தமையால் தமிழ்முனிவராகிய அகத்தியர் வடபுலம் நின்று தென்புலஞ் சென்றகாலை வடநாடு ஆரிய நாடாக மாறவில்லை. (பனிமலை அடிவார முதல் பெலுசித் தானம்வரை தமிழ்மக்கள் பரவி யிருந்தமையாற்றான் ஆரிய மக்கள் வடமேற்கிலிருந்து இந்திய நாட்டினுட் புகுந்த காலத்தில் அவருடைய இருக்கு வேதத்துள் தமிழ்க் கருத்துக்களும் சொற்றொடர்களும் புகுவனவாயின. ஆரியர் வடநாட்டிற் புகுவதற்கு முன்னேயே தென்தமிழ்நாட்டிலே மக்கள் உயர் நாகரிகமுற்றுத் தமிழ் நான்மறையும் சிவனருள் நூல்களும் உடையராய்த் திகழ்ந்தனரென்றும், சிவனார் திருமணமும், மூவெயிலழிவும், சூரன் போரும் முடிவுற்றன வென்றும், அக்காலத்தை அடுத்தே சிவனார் பாலும் அவர் தம் புதல்வர்பாலும் அறநூல் கேட்டுப் புலமை சான்ற அகத்தியர் முதலாயினோர் முதற்கழகமாகிய தலைச் சங்கத்தை நிறுவினரென்றுங் கருதுக.) முதலூழிச் செய்தி இவ்வாறாக இரண்டாவது ஊழியில் நிலைநாட்டப் பட்ட இடைச்சங்க காலத்தேதான் ஆரியர் தொடர்பு தமிழர்க்கு ஏற்பட்டது. அக்காலத்திருந்த அகத்தியர் தலைச்சங்க நிறுவிய அகத்தியரேயாமாயின் அவர் பன் னெடுங்காலம் இருந்திருக்கவேண்டும். அவரல்லரெனின், அவர் குடும்பத்தின் வழிவந்த பிறிதோ ரகத்தியரே இராமா யண காலத்தில் சிறப்பொடு திகழ்ந்திருக்கலாம். இவரைப்

பற்றியே கும்பத்திற் பிறந்தமை முதலான பல்வகை ஆரியக் கதைகள் ஏற்பட்டன.

இடைச்சங்க காலத்திலே ஆரியத்தினுடைய கருத்துக் களும் சொற்களும் சிறுபான்மை தமிழ்நாட்டிற் பரவின. தமிழர் மணத்தைக் கந்தருவ மணத்தோடு ஒப்பிட்டுக் கூறும் வழக்கமும் வெவ்வேறு வகைத்தாய மணச்சடங்கு கள் நிகழ்த்தும் வழக்கமும் ஆரியக்கலப்பின் பயன்களா மென்க. அகநானூற்றுள் அகூ ஆம் பாட்டிற் கூறிய மண நிகழ்ச்சி முறையும் உடன்போக்கிற்குமுன் தலைவற்குத் தோழி கூறும் அறவுரையும் தமிழர்க்கே உரியன. அவை போல்வன ஆரியக் கலப்பால் வந்தனவல்ல. எண்வகை மணம் ஆரியர்க்குரியன. ஐந்திணை, கைக்கிளை, பெருந்திணை என்னும் மூவகையுமே தமிழர்க்குள் வழங்கின. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைப் பகுப்பு ஆரிய வருண முறையைப் பின்பற்றித் தமிழகத்தில் அமைத் துக் கொள்ளப்பட்டதோ என்பது ஓர் ஐயப்பாடு. ஆனல் ஆரிய வகுப்பு முறையில் நான்காவதாய் நின்றவர்களும் தமிழ்நாட்டு வேளாளர்களும் ஒத்த தொழிலுடைய ரல்லர் என்பது யாவர்க்கும் இனிது விளங்கும். வேளாண் மாந்தர் உழுதுண்பாரே யன்றிச் 'சூத்திரர்' போலத் தொழுதுண்பா ரல்லர் என்று ஆசிரியர் தொல்காப்பியனாரே அறுதியிட் டுரைத்தனர். இக்கருத்துப் பற்றியே பிற்காலத்தில் வேளாளரை வைசியருள் அடக்கிப் பேசும் வழக்கம் ஏற் பட்டது. இதுவும் ஒருவாறு தவறுடைத்தே. என்னை? ஆரிய வகுப்பு முறையைத் தமிழ்நாட்டிற்கு உரியதொன் றென்று இது தோற்றுவித்தலின் என்க. தமிழ்நாட்டிலே மருதநிலத் தலைவராகிய வேளாளப் பெருமரபினரின் உட்பகுதியராகவே அந்தணர், அரசர், வணிகர் என்னும் மூன்று பிரிவினரும் அடங்குவர். தொழில்பற்றி வகுப்

புற்றகாலே, எஞ்சிய அம்மரபினரே வேளாளரென வாளா கூறப்பட்டன ரென்றறிக.

இப்பொழுதுள்ள வடமொழி நான்மறைகளை வியாசர் வகுத்தமைப்பதற்கு முன்னேயே தொல்காப்பியம் முழு முதல் நூலாக இலங்கிற்றென்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பாயிர உரையில் கூறிப் போந்தனர். முதனூல் இறைவன் கண்ட தென்ற கருத்தும், நிலையிலா மெய்க்கும் அதனுள் நிலவும் உயிர்க்கும் வேறாக அவ்வவற் றிற்குச் சார்பாய்த் தோன்றாத் துணையாய் எஞ்ஞான்றும் இன்பம் ஈயவல்ல தனிமுதற் கடவுள் ஒருவன் உளன் என்ற உயரிய கொள்கையும், அவனது திருவருளைத் 'தாய்' என வழிபடும் முறையும், ஓங்கார முதுமொழியும், வித்தெழுத்து மறைமொழியும் பிறவும் பண்டைத் தமிழ்ப் பனுவல்களி னின்று ஆரிய மறைகளுட் புகுந்த அரும் பொருள்களா மென்றுணர்க. இவைகளே சுவேதாசுவதரம் முதலிய சைவ உபநிடதங்களிலும் சைவ சித்தாந்த ஆகமங்களிலும் தமிழ் நூல்கள் மறைபட்ட பிற்காலத்தே பெருமரபிற்றாய்ப் பயின்று வந்தமையான் அவற்றைத் தமிழ்ச் சைவ நன்மக்கள் தம்மநூல்களென்று போற்றிப் பாராட்டிச் சீராட்டினரென்று தெளிக.

# ௬. கடைச்சங்க காலம்

இடைச்சங்கத் திறுதியிலிருந்து பின் கடைச் சங்கத்தை நிறுவிய முதல்திருமாறன் என்பவன் நற்றிணையில் தான் பாடிய பாட்டொன்றில் குட்டுவன் ('குட்டுவன் குடவரைச் சுனைய') என்னும் சேர மன்னன் ஒருவனைக் குறித்துள்ளான். பாரதகாலம் ௫000 ஆண்டுகட்கு முன்னதாயின் முடத்திருமாறன் அதற்குப் பின்காலத்தவனாக இருக்கவேண்டும். (ஏனெனில் கடைச்சங்ககாலம் இறையனாரகப் பொருளில் குறிப்பிட்டபடி கி. மு. ௧௬00 முதல் கி. பி. ௨௫0 வரை உள்ள கால எல்லைக்குட்பட்டதாகலின் என்க.) பாரதப்போர் சுமார் கி. மு. ௧௨ ஆம் நூற்றாண்டுக்குச் சற்று முன்தான் நடந்ததென்பது நிலைபெறுமாயின், அவன் காலம் அதற்கு முன்னுதல் வேண்டும். பாரதப்போர் நிகழ்ந்த காலத்தில் பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் என்னும் சேரமன்னன் போர்புரிந்த இருதிறத்தாருக்கும் சோறு வழங்கியதாக முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவர் பாடியுள்ளார். வடமொழிப் பாரதத்தில், மணவூரிலிருந்த சித்திராங்கதன் என்னும் பாண்டியன் மகளை அருச்சுனன் மணந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அங்ஙனமாயின் அப்பாண்டியனும் உதியன் சேரலாதனும் ஒரு காலத்தவரெனல் கூடும். உதியன் காலத்திற்குப் பின் நெடுநாளாகப் புலவர்களைப்பற்றிய விவரம் யாதும் தெரியவில்லை. இரண்டாவது பதிற்றுப்பத்துக்குரியவனான இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பவன் யவனரைப் பிணித்துத் திறை வாங்கியதாக அதனுள் கூறப்படுகின்றது. யவனர் இந்தியாவுக்கு முதன்முதல் வந்தகாலம் கி. மு. ௩௨௬ க்குப் பின்தான். நெடுஞ்சேரலாதன் கி. மு. ௩௨௬ இல் ஆட்சி தொடங்கியிருக்கக்கூடும்.) அவனுக்கு

முன் அவன் தந்தை உதியஞ்சேரலின் ஆட்சி கி. மு. கூ௫௦ இல் தொடங்கினதாகக் கருதலாம். (சுமார் கி. மு. கூ௫௦ முதல் கி. மு. கூ௨அ வரையில் உதியஞ்சேரலும். அதற்குப்பின் இமயவரம்பன்நெடுஞ்சேரலாதனும் ஆட்சி செய்ததாகக் கருதலாம்.) முன்னவன் பதிற்றுப்பத்தில் முதற்பத்திற்குத் தலைவனாய் இருந்திருத்தல் கூடும். இரண்டாம் பத்தில் பின்னவன் ௫அ ஆண்டுகள் அரசாண்டதாகக் குறித்திருப்பதால் சுமார் கி. மு. கூ௨அ முதல் ௨எ௦ வரை அவன் காலமாய் இருத்தல் கூடும். யவனர் படையெடுப்பின் சுமார் கி. மு. கூ௨௨இல் மகத நாட்டில் கிரேக்க தூதராய் இருந்த மெகஸ்தனிஸ் என்பவர்பாண்டியநாட்டில் ஒரு பெண்மணி அரசு செய்ததாகத் தன் குறிப்புக்களில் குறித்துள்ளார்[1]. திருவிளையாடற்புராணத்தில் தடாதகைப் பிராட்டியா ரென்னும் பெண்மணி அரசாண்டதாகக் குறித்திருப்பதால் மெகஸ்தனிஸ் குறிப்பிட்ட பெண்ணரசி அவராயிருத்தல் கூடும். அவர் தந்தை முதுகுடுமிப் பெருவழுதி யென்பது ஆராய்ச்சியால் தெரிய வருகிறது. (ஆகவே முதுகுடுமிப் பெருவழுதியின் காலமும், உதியஞ்சேரல் காலமும் ஒன்றுயிருத்தல் கூடும்.) முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிகிழார், நெடும்பல்லியத்தனார் நெட்டிமையார் என்னும் புலவர்கள் பாடியுள்ளார்கள். உதியஞ்சேரலைப்பற்றிய விவரம் அவன் காலத்திற்குப் பின்னே யிருந்த மாமூலர் முதலிய புலவர் பாடல்களில் காணப்படுகின்றது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க்கண்ணனார் என்னும் புலவர் இரண்டாம்பதிற்றுப் பத்தில் பாடியுள்ளனர். அவர் பாடியவற்றுள் இமயவரம்பன் வடநாட்டில் ஆரியரையும், யவனரையும் வென்றதாகப்

---

1. Magasthenes said that Heracles (the God civa) put the south under the rule of his daughter Pandaia.

பேசப்பட்டுள்ளது. தமிழ்வேந்தர் ஆரியரை வென்ற செய்தி இம்மென்கீரனார், பாவைக் கொட்டிலார் என்னும் புலவர்கள் பாடல்களில் காணப்படுகின்றது. இப் புலவர்கள் காலம் தெளிவாகத் தெரியவில்லை.

பதிற்றுப் பத்தில் மூன்றாம் பத்திற்குரிய பல்யானைச் செல்கெழுகுட்டுவன் கி. மு. உஎ0 முதல் உசரு வரை ஆட்சி செய்திருக்கலாம். ஏனெனில் அவன் உரு ஆண்டுகள் அரசாண்டதாகப் பதிற்றுப்பத்துள் கூறப்பட்டுள்ளது. அவன் காலத்திலல்லது அவனுக்கு முந்திய காலத்தில் குடவாயிற் கீரத்தனார் என்னும் புலவர் திகழ்ந்தனர். அவர் வடுகர் தென்னாட்டிற்கு வந்தமையைக் கூறியுள்ளார். ஆனால் மோரியர் வந்தமையைக் கூறவில்லை. (மோரிய மன்னருள் அசோகன் என்பவனே தென்னாடு வரை படையெடுத்தவன். அவன் காலம் கி. மு. உஎஉ முதல் உகஉ வரையாகும்.) அவன் ஆட்சியின் பிற்பகுதியில் தென்னாட்டுக்கு மோரியர் வந்திருக்கலாம். அவர் வருகைக்கு முற்பட்ட காலத்தில் குடவாயிற் கீரத்தனார் பெரும்பூட் சென்னி என்னும் சோழ மன்னனைப் பற்றியும், அவன் படைத்தலைவன் பழையனைப் பற்றியும், அப் பழையனைக் கொன்ற நன்னன், ஏற்றை, கங்கன், கட்டி, அத்தி முதலிய குறுநில மன்னரைப்பற்றியும், ஈழலில் ஆட்சி செய்த எவ்வியைப்பற்றியும் பாடியுள்ளார். தொண்டியில் ஆண்ட பொறையனையும் அவர் தம் பாட்டிற் குறித்துள்ளார். ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் என்பானையும் புறத்திற் (உசஉ) பாடியுள்ளார். முள்ளியூர்ப் பூதியார் நன்னன் மலையைப்பற்றிப் பாடியுள்ளார். ஆவூர்க் காவிதிகள் சாதேவனார் ஒரு சேரனது யானைப்படையை எதிர்த்து ஆமூரைக் காத்த கொடுமுடி என்பவனைப் பற்றி அகநானூற்றில் பாடியுள்ளார். அச்சேரன் பல்யானைச்

செல்கெழு குட்டுவனுகை இருப்பின் அப் புலவர் அவன் காலத்தவராவர். தொடித்தலைவிழுத்தண்டினர் என்பவர் ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தனைப் பாடியதாகக் கூறுவதுண்டு.

நான்காம் பத்திற்குரிய களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் கி. மு. உ௫௫ முதல் உஉ0 வரை ஆட்சி செய்தனன். அவன் காலத்திலாதல் அதற்கு முன்னுதல் மோரியர் படையெடுத்திருத்தல் கூடும். மோரியர் படையெடுப்பைப் பற்றிக் கள்ளிலாத்திரையனுர், மாமூலனுர் என்னும் புலவர்கள் பாடியுள்ளார்கள். 'வம்பமோரியர்' என்று அவர்களை மாமூலனுர் குறிப்பதால் அவர் முதன்முதல் அவர் வரவைப் பற்றிப் பாடியிருக்கக்கூடும். அவர் பெருஞ்சேரலாதன் காலம் முடிய வாழ்ந்திருந்ததாகத் தெரிகின்றது. அவர் பலரைப் பற்றிப் பாடியுள்ளார். பொதியில்திதியன், நெடுவேளாவி, எவ்வி, சோழன்படைத்தலைவன்மத்தி, மோகூர் எருமை, எழினி, பாணன், வேங்கடத்தை ஆண்ட புல்லி என்பவர்களைப் பற்றியும்; வடுகர், மோரியர், மழவர், கோசர் என்னுங் கூட்டத்தினரைப்பற்றியும் தம் பாடல்களிற் குறித்துள்ளார். புல்லிக்கு முன் ஆதனுங்கன் வேங்கடத்தை ஆட்சி செய்தனுயின், அவனைப்பாடிய கள்ளிலாத்திரையனுர் மாமூலருக்கு முந்தியோராவர். களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலைப் பதிற்றுப்பத்துள் பாடியவர் காப்பியாற்றுக்காப்பியனுர். அவன் பூழி நாட்டைப் படையெடுத்துக் கைக்கொண்டு நன்னனைச் செருவில் வென்றதாக அவர் பாடியுள்ளார். இந் நன்னன் பெரும்பூட் சென்னி காலத்து நன்னனே பிறனே என்பது விளங்கவில்லை. மாமூலனுர் பாடிய திதியனை ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் பாடியிருப்பதாகக் கருத இடமுண்டு. ஆதலின் அவன் அவர் காலத்தவன் ஆவன். பெரும்பூட்

சென்னிக்குப்பின் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி என்னுஞ் சோழன் நார்முடிச் சேரலுக்கொத்த காலத்தில் அரசாண்டிருக்கவேண்டும். அவனே பாழி என்னுமிடத்தைப் பற்றினவன். அவனை ஊன்பொதிபசுங்குடையார் என்னும் புலவரும், இடையன் சேந்தன் என்னும் புலவரும் பாடியுள்ளார்கள். அவனுக்குப்பின் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி என்னுஞ்சோழன் ஆட்சி செய்தனன். அவன் மகன் கரிகால்வளவன் ஆவன். உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியைத் தொல்பரணர், தொல்பெருங் குன்றார்க்கிழார் என்பவர் பாடியுள்ளனர். கரிகால்வளவன் மாமனாகிய இரும்பிடர்த்தலையார் கருங்கையொள்வாட் பெரும்பெயர்வழுதி என்பவனைப் பாடியுள்ளார். ஆதலால் அப் பாண்டியன் கரிகால்வளவன் தந்தை காலத்தவனாக இருத்தல் கூடும். மத்தி என்பவன் கரிகால் வளவனின் படைத்தலைவனாயின் மத்தியைப் பாடிய ஓரம்போகியார் அவன் காலத்தவராக இருக்கலாம். (கரிகால் வளவனோடு ஒத்த காலத்துச் சேரமன்னன் பெருஞ்சேரலாதன் என்பவன். அவன் காலம் சுமார் கி. மு. உ௨0 முதல் ௨00 வரை இருக்கலாம்.) பெருஞ்சேரலாதனுங் கரிகால் வளவனும் பொருததைப்பற்றி மாமூலனாரும் வெண்ணிக் குயத்தியாரும் பாடியுள்ளார். பத்துப்பாட்டில் முடத் தாமக் கண்ணியாருங் கடியலூர் உருத்திரங் கண்ணனாரும் கரிகால்வளவனைப் பாடியுள்ளனர். பின்னையவர் தொண்டை மானிளந்திரையனைப் பெரும்பாணாற்றுப்படையிற் பாடியுள்ளார். கருங்குழலாதனார் கரிகால்வளவன் இறந்த பின்னர் அவனைப் பாடினார். மாமூலனார் பெருஞ்சேரலாதனுக்குப்பின் வந்த குடக்கோ நெடுஞ்சேரலாதனைப் பற்றிப் பாடவில்லை. கழாத்தலையார் அவனைப் பாடியுள்ளார். கழாத்தலையார் பரணர் பாடிய கடல்பிறக்கோட்டிய குட்டு

வனைப்பற்றிப் பாடவில்லை.) ஆதலால் மாமூலனார் காலத்துக்கும் பரணர் காலத்துக்குமிடையே கழாத்தலையார் திகழ்ந்தனர் போலும். குடக்கோ நெடுஞ்சேரலாதன் காலம் கி. மு. ௨௦௦ முதல் க௲௦ வரை இருக்கலாம். அவன் காலத்துச் சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி. அவ்விருவரும் பொருததைப்பற்றிக் கழாத்தலையாரும் பரணரும் பாடியுள்ளார்கள்.

ஏலேலசிங்கன் என்னும் இலங்கை மன்னன் காலம் கி. மு. ௨௦௦ முதல் கசுக வரையில் என்று மகாவம்சம் என்னும் சரித்திர நூல் கூறுகின்றது. (ஏலேலசிங்கன் மக்களுக்கு ஆசிரியராய்த் திருவள்ளுவர் திகழ்ந்தனரென்று கேட்கப்படுதலின், அவர் அக்காலத்தவராய் இருத்தல் கூடும்.) திருவள்ளுவமாலையில் மாமூலனார் பாடியிருப்ப தன்மையானால் மாமூலனாரது கடைசிக் காலத்தில் திருவள்ளுவர் திகழ்ந்திருக்கலாம். மாமூலனார் காலம் பெருஞ்சேரலாதன் காலத்தோடு முடிவடைவதாகத் தெரிகிறது. ஆதலால், திருவள்ளுவர் கி. மு. ௨௦௦ இல் நில்வுலகில் திகழ்ந்தனர் என்று தெரிகின்றது.

குடக்கோ நெடுஞ்சேரலாதன் காலத்திற்குப்பின் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் கி. மு. க௲௦ முதல் க௨௫ வரை ஆட்சிசெய்தனன். அவனை ஐந்தாம் பத்திற் பாடியவர் பரணர். பரணர் தம்காலத்திற்கு முன்னேயுள்ளவர்களையுங் குறித்துள்ளார்; உறையூரி லாண்ட தித்தனென்னுஞ் சோழனையும், பாண்டியருட் பசம்பூட் பாண்டியன் என்பானையுங் குறித்துள்ளார்.

பெண்கொலை புரிந்த நன்னன் என்பவனைப்பற்றி அவர் பேசியுள்ளார். அவன் படைத்தலைவனாகிய அன்னி மிஞிலி, அவன் கொண்ட ஆய்எயினன், அழுந்தூர்த் திதியன்,

அவனால் உதவி செய்யப்பெற்ற அன்னி என்னும் பெண், சோழர் மகளாகிய அகுதை, மதுரையிலிருந்த வள்ளலாகிய அஃதை, கரிகால்வளவன் மகளாகிய ஆதிமந்தி, அவள் கணவனாகிய ஆட்டனத்தி, நெடுவேளாவியின் மரபில் வந்த பேகன், சேரன் வென்ற மோகூர்ப் பழையன், ஓரி, நள்ளி, எவ்வி, மலையன் (காரி), பாணன், கட்டி என்பவர்களைப் பற்றிப் பாடியுள்ளார். அகுதை என்னும் சோழன் மகளைப் பற்றி மருதம்பாடிய இளங்கடுங்கோ குறித்திருத்தலால் அவரும் அவர் தமையனாகிய் பாலை பாடிய பெருங்கடுங் கோவும் பரணர் காலத்தவரே. பாலை பாடிய பெருங்கடுங்கோ நன்னனைப்பற்றிப் பேசியுள்ளார். அவர் தொண்டியிலாண்ட பொறையன் குடும்பத்தவராய் இருத்தல் கூடும். பாலை பாடிய பெருங்கடுங்கோவைப் பேய்மகள் இளவெயினி என்னும் பெண்புலவர் பாடியுள்ளார். அவரும் அக்காலத் தவரே. வெள்ளிவீதியார் என்னும் புலவர் ஆதிமந்தியைத் தமது பாட்டிற் குறித்துள்ளார். அவரும் பரணரோ டொத்த காலத்தவர். கயமனார் என்னும் புலவர் அழுந் தூர்த் திதியன் என்பவனைப்பற்றிப் பேசியிருப்பதால் அவரும் பரணர் காலத்தவரே. உமட்டூர்கிழார் மகன் பரங் கொற்றனார் பாடிய ஆய், எயினன் எனின் அவர் காலமும் பரணர் காலமாய் இருத்தல் கூடும்.

ஈழத்துப் பூதந்தேவனாரும் மதுரைக் கணக்காயனார் என்பவரும் பசும்பூட் பாண்டியனைப் பாடியிருப்பதால் அவரும் பரணர் காலத்தவரென்று எண்ண இடமுண்டு. வெள்ளெருக்கிலையார் அகுதை, எவ்வி என்னும் இருவரைப் பற்றிப் பாடியிருப்பதால் அவரும் பரணர் காலத்தவர்.

தித்தன் மகன் போர்வைக்கோப்பெருநற்கிள்ளியைப் பரணர் பாடவில்லை. அவனைச் சாத்தந்தையார், நக்கண்ணை

யார், காவற்பெண்டு என்னும் புலவர்கள் பாடியுள்ளார்கள். ஆதலின் இவர்கள் பரணர் காலத்துக்குப் பிற்பட்டவர் களாயிருக்கலாம். நன்னன்சேய்நன்னனைப்பற்றி மலைபடு கடாத்தில் இரணியமுட்டத்துப் பெருங் . கௌசிகனார் பாடியுள்ளார். அவர் காலம் பரணர் காலத்திற்குப் பின் னிருக்கலாம்.

பதிற்றுப்பத்தில் ஆறும்பத்திற் குரியவன் ஆடுகோட் பாட்டுச் சேரலாதன். அவன் காலம் கி. மு. கஉ௫ முதல் அஎ வரையாகும். அவனைப் பாடிய புலவர் காக்கை பாடினியார் நச்செள்ளையார். அக்காலத்தில் தொண்டியில் அந்துவஞ்சேரலிரும்பொறை ஆட்சி செய்திருத்தல் கூடும். அவன் தங்கை மகனே ஆடுகோட்பாட்டுச் சேரலாதற்குப் பின் ஆட்சி செய்தவனாகும் (எ ஆம் பத்து; பதிகம்). அந்துவஞ்சேரலிரும்பொறையோடு போர்புரிந்தவன் முடித் தலைக்கோப்பெருநற்கிள்ளி என்ற சோழன் ஆகும். அப் போரினைப்பற்றிப் பாடியவர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், அவர் ஆய்அண்டிரன் என்னும் வள்ளலைப் பாடியுள்ளார். அவனைப் பரணர் பாடவில்லை. துறையூர் ஓடை கிழார், குட்டுவன் கீரனார் என்னும் புலவர்கள் வள்ளல் ஆயைப் பாடியுள்ளார்கள். ஆய் அண்டிரனே வள்ளல் ஆய் எனப் படுவோனவன். அவன் பொதியிலில் வாழ்ந்தவ னவன். ஆதலால் அப் புலவர்கள் முடமோசியார் காலத் தவரேயாவர். அவ் ஆய்வள்ளலை உமட்டூர்கிழார் மகன் பரங்கொற்றனார் பாடினர் எனின் அவரும் இக்காலத்தவரே.

பதிற்றுப்பத்தில் எ ஆம் பத்திற்குரிய செல்வக்கடுங் கோவாழியாதனை (கி. மு. அஎ சுஉ)ப் பாடியவர் கபிலர். குண்டுகட்பாலியாதனார் என்னும் புலவர் அவன்காலத்தில் தொண்டியில் மாந்தரஞ்சேரலிரும்பொறை ஆட்சி செய்

திருக்கலாம். பாரி, காரி, ஓரி, நள்ளி, எவ்வி, இருங்கோ வேள், விச்சிக்கோ என்னும் குறுநில மன்னர்களைக் கபிலர் பாடியுள்ளார். மிளைக்கந்தனார் என்பார் பாரியைப் பாடியுள்ளார். அம்மூவனாரும், நப்பசலையாரும் காரியைப் பாடியுள்ளார்கள். கழைதின்யானையாரும், நப்பாலத்தனாரும் ஓரியைப் பாடியுள்ளார்கள். வன்பரணர் நள்ளியைப் பாடியுள்ளார். ஆதலின் இப் புலவர்களெல்லாம் கபிலர் காலத்தவர் என்று கூறலாம்.

கபிலர் காலத்துக்கு அடுத்திருந்த பொருந்திலிளங்கீரனார் மாந்தரஞ்சேரலிரும்பொறையைப் புறத்திற் பாடியுள்ளார் (புறம் ருங). அவனையும், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியையும் கிள்ளிக்குத் துணையாயிருந்த தேர் வண்மலையன் என்பவனையும் பேரிசாத்தனார் என்னும் புலவர் பாடியுள்ளார்.

மாந்தரஞ் சேரலிரும்பொறைக்குப் பின் ஆண்டவன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை. அவன் காலம் கி. மு. கூ௨ முதல் ச௨ வரையாகும். இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி அவன் காலத்திலுமிருந்தான். யானைக்கட்சேயின் இளமைக்காலத்தில் அவனைப் பிணித்தவன் தலையாலங்கானத்து நெடுஞ்செழியன். யானைக்கட்சேயின் காலத்துக்கு முன்னேயே அவன் ஆட்சி யிருந்தமையால் அவன் செல்வக்கடுங்கோவாழியாதன் காலத்திலேயே இருந்திருத்தல் கூடும். அவனுக்கு முன்னே நம்பி நெடுஞ்செழியன் ஆண்டிருத்தல் கூடும். நம்பி நெடுஞ்செழியனைப் பாடிய பேரெயின் முறுவலார் என்னும் புலவர் கபிலர் காலத்துக்கு முற்பட்டவர் ஆகலாம்.

பாண்டியன் தலையாலங்கானத்து நெடுஞ்செழியனைப் பாடிய புலவர் மாங்குடி மருதனார், கல்லாடனார், குடபுல

வியனார், இடைக்குன்றூர்கிழார். கல்லாடனார் அம்பர் கிழான் அருவந்தை என்னும் வள்ளலையும் பாடியுள்ளார். யானைக்கட்சேயைப் பாடிய புலவர் குறுங்கோழியூர்கிழார்; கூடலூர்கிழார் என்பவர்களாவர். அவன் காலத்திலும், அவனுக்குப்பின் தொண்டியிலரசியற்றிய சேரமான் மாரி வெண்கோ என்பவன் காலத்திலும் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆட்சி செய்தனன். இக்கிள்ளியைப் பாடிய புலவர் உலோச்சனார், பாண்டரங்கண்ணனார் என்பவராவர். நெடுஞ்செழியனுக்குப் பின்வந்த கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியைப் பாடிய புலவர் ஐயூர்மூலங்கிழார்.

இவ்வுக்கிரப் பெருவழுதியும், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும், சேரமான் மாரிவெண்கோவும் ஒருங்கிருந்தகாலை அவர்களைப் பாடியவர் ஔவையார். ஔவையார் நாஞ்சில் வள்ளுவன் என்னுங் குறுநில மன்னனையும் பாடியுள்ளார். இவனைப் பாடிய பிற புலவர்கள் ஒருசிறைப் பெரியனார், கருவூர்க் கந்தப்பிள்ளை, மருதனிளநாகனார் என்பவர்கள். ஔவையாரை ஆதரித்த வள்ளல் அதிகமான் நெடுமானஞ்சி. இவனை வென்றவன் பெருஞ்சேரலிரும் பொறை. அஞ்சியின் குதிரைமலை சேரன் படைத்தலைவனை பிட்டங் கொற்றனுக்குக் கொடுக்கப்பட்டது. பெருஞ்சேரலிரும்பொறை காலம் கி. மு. சஉ முதல் உ௫ வரையாகும். இவனைப் பாடியவர்கள் அரிசில்கிழார், பொன்முடியார், மோசிகீரனார் என்னும் புலவராவர். மோசிகீரனார் கொண்கானங்கிழான் நன்னன் என்பவனையும் பாடியுள்ளார். பிட்டங்கொற்றனைக் கருவூர்க் கந்தப்பிள்ளைச் சாத்தனார் என்னும் புலவர் பாடியுள்ளார். பாரியைப் பாடிய புறத்திணை நன்னாகனார், ஒய்மா நாட்டு நல்லியக்கோடனையும் பாடியுள்ளார். ஒய்மா நாட்டு நல்லியக்கோடனை நல்லூர் நத்தத்தனார் சிறுபாணாற்றுப்படையிற் பாடியுள்ளார். இவர்

எழுபெரு வள்ளல்களையும் பற்றிப் பேசியுள்ளார். புறத்திணை நன்னுகனார் ஒய்மான் வில்லியாதனையும், கரும்பனூர் கிழானையும் பாடியுள்ளார். இப்புலவர்களெல்லோரும் ஔவையார் காலத்தவர்.

பெருஞ்சேரலிரும்பொறைமீது அ ஆம் பத்துப் பாடியவர் அரிசில் கிழார். அவனுக்குப்பின் ஆண்ட இளஞ்சேரலிரும்பொறை காலம் கி. மு. உ௫ முதல் ௯ வரை. இவன் கோப்பெருஞ் சோழனையும், பழையன் மாறன் என்ற பாண்டியனையும் வென்றதாக ௯ ஆம் பதிற்றுப் பத்துப் பதிகங் கூறுகின்றது. பழையன்மாறனுக்குமுன் பாண்டியன் அறிவுடைநம்பி ஆண்டிருக்க வேண்டும். கோப்பெருஞ் சோழனைப்பாடிய புலவர்கள் பிசிராந்தையார், பொத்தியார், புல்லாற்றூர் எயிற்றியனார், கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார், கண்ணகனார் என்பவர்கள் இளஞ்சேரலிரும்பொறையை ௯ ஆம் பதிற்றுப் பத்துப் பாடிய புலவர் பெருங்குன்றூர்கிழார் ஆவர்.

இளம்சேரலிரும்பொறைக்குப் பின் கருவூரேறிய ஒள்வாட்கோப்பெருஞ்சேரலிரும்பொறை ஆண்டிருத்தல் கூடும். அவனைப் பாடிய புலவர் நரிவெரூஉத் தலையார். அவன் பத்தாம் பத்திற்குத் தலைவனாக இருந்திருக்கலாம். நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என்னுஞ் சோழரைப் பாடிய பெரும்புலவர் கோவூர்கிழார். நலங்கிள்ளியைப் பாடிய மற்றொரு புலவர் உறையூர் முதுகண்ணன் சாத்தனார். இவரது காலம் கி. பி. முதலாவதாண்டு முடிவதாக வைத்துக் கொள்ளலாம். நலங்கிள்ளி தம்பி, மாவளத்தானைத் தாமப்பல் கண்ணனார் என்னும் புலவர் பாடியுள்ளார். இவர்களுக்குப்பின் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் ஆட்சி செய்தனன். அவன் காலம் கி. பி. க முதல் உ0 வரை இருந்ததெனக் கருதலாம். குளமுற்றத்துத் துஞ்சிய

கிள்ளிவளவனைக் கோவூர்கிழார் பாடியுள்ளார். அவனைப் பாடிய பிற புலவர்கள், ஐயூர் முடவனார், ஆவூர் மூலங் கிழார், ஆலத்தூர் கிழார், மாறோக்கத்து நப்பசலையார், இடைக்காடனார், ஆடுதுறை மாசாத்தனார், வெள்ளைக்குடி நாகனார், நல்லிறையனார், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் முதலியோராவர். தாயங்கண்ணியார் என்பவர் இவருடைய தங்கை போலும். (ஆவூர் மூலங்கிழார் பாண்டியன் கீரஞ் சாத்தனாரைப் பாடியுள்ளார். ஆதலால் அவர் கிள்ளிவளவன் காலத்தவரே.) கிள்ளிவளவனைப் பாடிய நப்பசலையார் மலையமான் திருமுடிக்காரியைப் பாடிய நப்பசலையாரினும் வேறவர். இக் கிள்ளிவளவன் சிறுகுடிகிழான் பண்ணன் என்னும் வள்ளலைப் பாடியுள்ளான். அவனைக் கோவூர் கிழார், மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார், கொற்றங் கொற்றனார் முதலிய புலவர்களும் பாடியுள் ளார்கள்.

(குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுக்குப் பின் குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவன் ஆட்சி புரிந் தனன். அவன் கி. பி. உக முதல் சஉ வரை ஆட்சி செய்திருக்கலாம்.) அவனையுங் குட்டுவன்கோதையை யும், கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமர னார் பாடியுள்ளார். பெருந்திருமாவளவனையும், வெள்ளி யம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியையும் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் என்னும் புலவர் பாடி யுள்ளார். இவ்வரசர் காலத்தில் குமணன் இருந்திருக்க லாம். அவனை ஆவூர் மூலங்கிழார் புதல்வராகிய பெருந் தலைச் சாத்தனார் என்பவரும், பெருஞ்சித்திரனார் என்பவ ரும் பாடியுள்ளார்கள். அவர்கள் காலத்தில் இளங் கண்டீரக்கோ, இளவிச்சிக்கோ, வெளிமான் என்னுங் குறுநில மன்னர்கள் வாழ்ந்திருந்தனர்.

பெருந்திருமா வளவனுக்குப் பின் சோழன் செங்கணன் ஆட்சி செய்து வந்தான். அவன் சேரன் கணைக்காலிரும் பொறையை வென்று சிறையிலிட்டனன். அவனைச் சிறையினின்றும் விடுவிக்க 'களவழி' பாடிய புலவர் பொய்கையார் என்பவராவர்.) செங்கணன் காலத்தில் இலவந்திகைத் துஞ்சிய நன்மாறன் என்பவன் சிறப்பொடு திகழ்ந்தான். அவன் காலத்துச் சேரமன்னன் கோக்கோதை மார்பன்; அவனையும் பொய்கையார் பாடியுள்ளார். இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைக் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார், மதுரை மருதனிளநாகனார் முதலிய பல புலவர்கள் பாடியுள்ளார்கள். இங்கே குறிப்பிட்ட இளநாகனார் முன் குறிப்பிட்ட மருதனிள நாகனாரினும் வேறுவர். இவர் நல்லந்துவனாரைப் பாடியுள்ளார். சோழன் நல்லுருத்திரன் என்பவனும் இக்காலத்தவனே. இளநாகனார், நல்லுருத்திரனார், நல்லந்துவனார் என்னும் மூவரும் மருதக்கலி, முல்லைக்கலி, நெய்தற்கலி என்பவற்றைப் பாடியவர்கள். கோக்கோதை மார்பனுடைய வீரனாகிய பிட்டனை ஆலம்பேரி சாத்தனார், உறையூர் மருத்துவன் தாமோதரனார், வடமவண்ணக்கன் தாமோதரனார் என்னும் புலவர்கள் பாடியுள்ளார்கள். நக்கீரர் தமக்கு முந்திய பலரைப்பற்றிப் பாடியிருப்பதுடன் வாணன் என்னும் குறுநில மன்னனையும் பாடியுள்ளார். இலவந்திகை நன்மாறன் காலமும், அவனுக்குப் பின்வந்த கீரஞ்சாத்தனார் காலமும் கி. பி. ௧00 ஆவதாண்டுடன் முடிவதாக வைத்துக்கொள்ளலாம். அதற்குப் பின் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் கி. பி. ௧0௧ முதல் ௧உ0 வரை ஆட்சி செய்திருக்கின்றான். அவனைச் சீத்தலைச் சாத்தனார் பாடியுள்ளார். அவனுக்குப் பின் ஆரியப்படை கடந்த

நெடுஞ்செழியன் கி. பி. கஉ௦ முதல் கசச வரை ஆட்சி செய்தனன். அவனுக்குப் பின் வெற்றிவேற் செழியன் ஆட்சி செய்தனன். இவன் காலத்தில் மாவண்கிள்ளி என்னும் சோழனும் சேரன்செங்குட்டுவனும் ஆண்டனர். செங்குட்டுவன் காலமே இளங்கோவடிகள் காலம். இவ் வரசர்கள் காலம் கி. பி. கஎ௫ உடன் முடியலாம். இவன் காலத்தில் இலங்கையிலாண்ட மன்னன் கயவாகு என்ப வன். இவர்கள் காலத்திற்குப் பின் கி. பி. உஉ௫ வரை பன்னாடு தந்த மாறன் வழுதி, உக்கிரப் பெருவழுதி முதலிய அரசர்கள் ஆட்சி செய்தனர். இம்மாறன் வழுதி நற்றிணை தொகுப்பித்தனன். இவன் காலத்திலாதல் இவனுக்குப் பின்னுதல் பூரிக்கோ என்பான் குறுந்தொகையைத் தொகுப்பித்தனன். பிற தொகை நூல்கள் உக்கிரப் பெரு வழுதி காலத்தில் தொகுக்கப்பட்டன. உக்கிரப்பெருவழுதி காலத்துடன் கடைச்சங்கம் முடிகிறது. ஐங்குறு நூறு யானைக்கட்சேய் காலத்திலும், கலித்தொகை இலவந்திகை நன்மாறன் காலத்திலும் தொகுக்கப்பட்டிருக்கலாம். உக்கிரப்பெருவழுதி காலத்துக்குப் பின் திருக்கோவையா ரிற் குறிக்கப்பட்ட வரகுணபாண்டியனும், மாணிக்கவாசகர் காலத்துப் பாண்டியனும் ஆட்சி செய்தனர். கி. பி. ந௦௦ க்கு மேல் காஞ்சிபுரத்தில் பல்லவர் ஆட்சி தொடங்கிற்று.

---

# ரு. தமிழர் நெஞ்சப்பாங்கும் இலக்கியப் போக்கும்

இலக்கியம் என்பது மக்களுடைய விழுமிய கருத்துக்களைச் செவ்விய சொற்களால் விளக்குங் கருவியாம். இலங்கு இயம் என அச் சொற்றொடரைப் பிரித்துச் சொல்லாலும், பொருளாலும் செம்மைபெற்றொளிரும் நூலெனப் பொருள் கொள்ளின் மேற்செப்பிய கருத்து வலியுறுதல் காண்க.

தலைச்சங்க காலத்திலேயே இயல், இசை, நாடகமெனத் தமிழிலக்கியம் மூவகைப்பட்டதென்பது தொல்காப்பியத்துள் மூன்றையும் பற்றிய குறிப்புக்கள் காணப்படுதலால் தெளியப்படும். உள்ளக் கருத்தை அழகுபெறத் தெரிப்பது இயற்றமிழிலக்கியம். இயற்றமிழிலக்கியத்தைப் பற்றிய ஆராய்ச்சி ஈண்டுச் சிறப்பாக எடுத்துக்கொள்ளப் பட்டது.

தொல்காப்பியர் காலத்தே பல நல்லிசைப் புலவர்கள் திகழ்ந்தனர்.

தலைச்சங்க காலத்து நூல்களுள் யாதும் முழுவதுங் கிடையாமையின் அக்காலத்து மக்கள் நினைவின் போக்கையும் இலக்கிய முறைகளையும் ஆய்வதற்குப் போதிய கருவிகளில்லை. இடைச்சங்க நூலாகிய தொல்காப்பியத்திலே விளங்குவது யாதெனில் உடலின் வேறாக உயிர் உண்டென்றும், உயிர் தலைவன் ஒருவனை உடையதென்றும், அத் தலைவன் உயிர், உலகம் என்னும் அவ்விரண்டிற்கும் அடிப்படையான பெருஞ்சார்பாய்ப் பிறப்பிறப்பற்றவனாய் உலகநிலையாமை உணர்ந்து தன்னைப் பற்றி நின்றொழுகும் உயிர்கட்கு என்ஞான்றும் நிலைத்ததோர் இன்பம் ஈயவல்ல

னென்றும், இருவினைப் பயனை ஊழ் உண்டென்றும், தமிழர் அறிந்திருந்தார்கள் என்பதே. இறைவன் தனது அருள்பெற்ற பெரியோர்கள் வாயிலாக உலகினர்க்கு முதனூல்களை நல்கினன் என்பதும் பழந் தமிழரின் கொள்கையே. அவர் ஞாயிற்றையும் திங்களையும் இறைவன் இறைவியரின் திருவடிவங்களாகக் கருதி வழிபட்டனர். நெருப்பினையும் அவ்வாறே வழிபட்டன ரென்ப. அந்தணர், வானவர், ஆனினம், மழை, வேந்தன், உலகம் என்னும் அறுவகையையும் வாழ்த்தும் மரபு அக்காலத்திருந்தது. அது, "அமரர்கண் முடியும் அறுவகையானும்" என்பத னால் விளங்கும்.

வீடுபேறு கருதுவார்க்கு மெய்ந்நூற் பொருளையுந் தவநெறியையும் இனிதுணர்த்தும் திறமைசான்ற அருளா ளர் பலர் திகழ்ந்தனர். அவர்கள் பெரும்பான்மையும் மலையினுங் காட்டினும் அகத்துறவாதல் புறத்துறவாதல் பூண்டு வாழ்ந்தவர்கள். அவர்கள் முக்காலமும் உணரவல்ல அறிஞர் எனப்பட்டார்கள். அவர்கள் கருதிய பயனைப் பயக்கவல்ல மறைமொழிகள் பல வகுத்தோதினர். அவை களே தமிழ்மந்திரங்கள். அவர் சொல்வழி நின்றவர் எண்வகைத் தவத்தராவர். அவருள் நாட்டின்கண்ணே நூல்களைக் கற்பிக்குந் துறவிகள் அந்தணர் எனப்பட்டார். பொதுவழிபாடு இயற்றும் இடங்களில் கடவுளுக்குத் திருமுழுக்கு முதலியன செய்வோர் பார்ப்பார் எனப்பட்ட னர். மூவேந்தரும் மூவேந்தரைச் சார்ந்த வேளிரும் ஒரு மரபினராகவும், வணிகம், உழவு முதலியன கைக்கொண் டோர் பிறிதொரு மரபினராகவும் இருந்தனர். இது தொழில் பற்றிய பிரிவே யன்றிப் பிறப்புப் பற்றிய பிரிவன்று. இப்பிரிவுகள் மருத நிலத்தில் அத்திணைக்குரிய வேளாண் பெருங்குழுவினின்றும் எழுந்தனவாகும். ஏனை

நான்கு திணைநில மக்களும் தத்தமக்குரிய தொழிலை ஆற்றி வாழ்ந்தனர். அவருள் எழுந்த பிரிவுகள் தெளிவுபட விளங்கவில்லை. பிற தொழில்களை மேற்கொண்டோரும் இவருள் அடங்குவர். தொல்காப்பிய மரபியலுட் சேர்க்கப் பட்ட நாற்குலமுறை ஆரியரது வகுப்புமுறையைத் தழுவிப் பிற்காலத்தில் எழுந்ததாகும். நாற்குல முறையைப் பற்றித் திருவள்ளுவர் நூலில் யாதுங் காணப்படாமை தெளிக.

அறம்பொருள் இன்பம் வீடென்னும் நான்கினையும் எய்துதற்குரிய நெறிநிற்றலே அறவாழ்க்கை எனப்பட்டது. கருத்தொருமை உடைய தலைவனுந் தலைவியும் கூடி வாழ்ந்து இவ்வுலக இன்பந் துய்த்தபின் இருவரும் தூய உள்ளத் தோடு தவநெறி நிற்றலும் தொல்காப்பியத்துட் கூறப் பட்டது. நால்வகை நெறி (ஆச்சிரமம்) தமிழர்க்குள் இருந்த தில்லை. இல்லறம் துறவறம் என்பனவே அறநூலாரால் கூறப்பட்டன. இதனால் இளமையிற் கல்வியும் தனித் துறவும் விலக்கப்படவில்லை. இல்லறத்திற்குரிய தகுதியை அடைதற்கான கல்வியும் ஒழுக்கமும் இருபாலார்க்குங் கூறப் பட்டன. பரத்தையிற் பிரிவும் அக்காலத்திருந்தது. கள், ஊன் உண்ணல் சிறுபான்மை கேட்கப்படுகின்றது. இரு மனப்பெண்டிருங் கள்ளுங் கவறும் புலாலும் அறநூலா ரால் கண்டித் தொதுக்கப்பட்டன. ஆடவர்க்குங் கற்புக் கூறப்பட்டது. கல்வி நலஞ்சான்ற பெண்டிர் பலர் அரசர்க் கும் உண்மை அறிவுறுத்தும் உறுதியுடையவராய்த் திகழ்ந் தனர். அரசர்க்குள் அறப்போர் நிகழ்ந்தது. திரைகடலோடி யும் பொருள் தேடுதல் அக்காலத்திய வழக்கு. மகளிரை மரக்கலத்தில் உடன்கொண்டு செல்லுதல் அக்காலத்தில் இல்லை. தமிழ்மக்கள் பிறநாட்டு மக்களையும் அன்புடன் வரவேற்கும் பெருந்தகையினராய் இருந்தனர்; இசையி

லுங் கூத்திலும் மிகவும் ஈடுபட்டவர்கள். மருத்துவம் இவர்களுக்குள் தழைத்தோங்கியதுபோலப் பிற எந்நாட்டினரிடையிலும் அக்காலத்தில் இல்லை. நிமித்தம் பார்ப்பதுந் தமிழருக்குள் இருந்ததாகத் தெரிகிறது. எழுத்துக்களின் வடிவு தொல்காப்பியக் காலத்திலேயே பழமையாய்ப் பாராட்டப்பட்டது. ஒலிநூல் முதலிய நுண்நூல்கள் பலவுந் தமிழர் அறிந்திருந்தனர்.

தொல்காப்பிய நூற்பாவின் செய்யுள்நடை மிக்க பெருமிதமும் நுண்மையும் வனப்பும் வாய்ந்து பிற ஆசிரியர்களால் தழுவப்படுவதற்கரியதாம் உயர்நடையாகும். பயனில்லாத ஒரு சொல்லும் அவைகளில் இல்லை. அவைகளின் ஓசைநயம் பிற தமிழிலக்கண நூல்களுள் யாதொன்றினுங் காணப்படுமாறில்லை. இதனாலே இடைச் சங்க காலத்தில் தோன்றிய இலக்கணப் பெருநூல்களின் உயர்ந்த சொன்னடை பிற்காலத்திற் றளர்ச்சியுற்ற தென்பது தெளிவு. தமிழ்ப்பெற்றி தொல்காப்பியர் காலம் வரை பெரியதோர் உயர்நிலை யடைந்து பிற்காலத்தே வரவரத் தாழ்ந்ததென்பது போதரும்.

கடைச்சங்க காலத்திலே தமிழ்மக்கள் வடநாட்டிலிருந்து ஆரியராற் கொண்டுவரப்பட்ட பிறதெய்வங்களின் வழிபாட்டையும் கைக்கொண்டனர்; பௌத்தம் முதலிய பிற சமயங்களுக்கும் தங்கள் நாட்டில் இடங்கொடுத்துச் சமயப் பொறுமையை மேற்கொண்டனர். இராமாயண பாரதக் கதைகள் தென்னாட்டிற் பரவின. மூவேந்தருங் குறுநில மன்னருந் தம்முட் போர்புரிந்து முரணுற்றன ரெனினும் புலவர்கள் அவர்களுக்குள் ஒற்றுமை வேண்டுமென்பதையே அறிவுறுத்தி வந்தனர். யவனர் முதலிய மேலை நாட்டினரோடு கடல் வாணிகம் நிகழ்ந்தது. பன்

னாட்டு வணிகமக்களுந் தென்னாட்டுத் துறைமுகங்களிற் குழுமினர். அக்காலத்துக் கைத்தொழிற் சிறப்பு மிகவும் பாராட்டத் தக்கது. கடற்போருங் கலங்கரை விளக்கம் முதலியனவும் அக்காலத்தில் இருந்தன. பல்வகை மக்களும் உண்டுடுத்துக் கவலையின்றிக் களிப்புடன் வாழ்ந்தனர். கற்பு நிலை சிறந்தோங்கிற்று. வடநாட்டினர் கூட்டுறவால் நாற் குலப்பிரிவு தலைகாட்டிற்று. தென்னாட்டு மன்னர் பயன் கருதிய வேள்விமுறைகளைக் கடைப்பிடித்தனர். சமய உணர்ச்சி குன்றி அறவுணர்ச்சி யொன்றே யாண்டும் நிலவிற்று. இதனால் பிறசமயத்தார் தத்தங் கொள்கையைத் தமக்குத் தோன்றியவாறே பரவச் செய்ய இடம் பெற்றனர். ஆரியக் குருமார்கள் தங்கள் மறைகளைத் தமிழ்மக்கள் நம்பும்படி செய்து பார்ப்பனர் என்னும் பெயரையும் மேற்கொண்டனர். ஆரியரும் புத்தரும் தென்னாட்டிற் றிகழ்ந்த சிவநெறிக்குரிய சொற்றொடர்களால் தங்கள் கடவுளர்களையும் கொள்கைகளையும் வெளிப்படுத்தத் தொடங்கினர். சமயச் சார்பாய வடசொற்கள் தென்னாட்டில் மிகுதியும் வழங்கலாயின. துன்புற்ற அரசரும் பிறரும் உணவின்றி நோன்பிருந்து உயிர்விடும் வழக்கத்தைக் கைக்கொண்டனர். இறந்த வீரரை வணங்கும் வழக்கமும் சிறந்திருந்தது. இசைப் பாடல்களும் கூத்துக்களும் அரசராலும் செல்வராலும் போற்றப்பட்டிருந்தன. அரசரும் வேளிரும் செந்தமிழ்ப் புலவர்களை மிக்க ஆர்வத்தோடு பாதுகாத்து வந்தனர்.

புலவரைப் பாடிய தனிப்பாடல்களே பெரும்பான்மையுங் கிடைத்துள்ளன. ஒருவரையும் குறியாது கல்வி ஊழ் முதலியவற்றைக் கூறுந் தனிப்பாடல்கள் மிகச் சிலவே. தமிழிலக்கியம் தனிப்பெருஞ் சிறப்புடையதாய் வடநாட்டினராலும் மதித்துப் போற்றப்பெற்றது. தக்க புலவர்கள் ஒற்றுமைப்பட்டு வாழ்ந்தனர். பரிசு பெற்றோர்

பெருதாரை ஆற்றுப் படுத்தினர். பொருள்களின் இயற்கை நயங்களை உள்ளவாறுணர்த்தும் திறமை சான்ற புலவர் களின் தனிப்பாடல்களே மிகுதியுங் கிடைத்துள்ளன. விழுமிய கருத்துக்கள் பொருந்திய நற்றமிழ் மொழிகளால் அமைந்த அவர்கள் பாடல்களில் பிற்காலத்துச் சொல்லணி களும் உயர்வுநவிற்சியும் இயற்கைக்கு மாறுன செயற்கைப் பொலிவும் அரியனவாதல் காண்க. ஆறறிவுயிர்களின் தன்மை யையும் வனப்பினையும் நேரிற் கண்டு நுண்ணிதின் ஆய்ந்து அவற்றைத் தகை சான்ற செவ்விய மொழிகளால் கற்போர் உள்ளம் நினைதொறும் நினைதொறும் மகிழ்ந்தின்புறும் வண்ணம் செய்யுளியற்றும் வன்மை அக்காலத்துப் புலவர் களின் நூலுட் காணப்படுமாறுப்பப் பிற்காலத்துக் காப் பியங்களுட் காண்டலரிது. மக்கள் யாவரையும் ஒரு குடும்ப மெனக் கருதும் விரிந்த நோக்கமும், அறவொழுக்கம் ஒன்றுமேபற்றிக் கணிக்கப்படும் உயர்வு தாழ்வும், நம்பத் தக்க உண்மைகளை எல்லாருள்ளமுங் கொள்ளத்தக்க பொதுமுறையிற் கூறும் நடுவுநிலையும் அக்காலத்துச் சிறப் பியல்புகளாகும். அக்காலத் திறுதியிலேற்பட்ட புத்தப் பெருங்காப்பியங்களே முதன்முதல் சமயச் சார்பாய கதை களைத் தழுவி எடுத்துரைக்கலாயின. அக் காலத்துச் சமய நூல்கள் இக்காலத்தில் கிடைக்கப் பெறவில்லை. கிடைத் துள்ளன பலவும் உலகியலைக் கவினுறத் தெரிவிக்கும் பொதுத்தன்மை வாய்ந்தனவே. திருமுருகாற்றுப் படையும் பரிபாடலும் சமயச் சார்பானவை யெனினும், பிற்கால நூல்களைப்போல அவற்றுள் சமயக் கொள்கைகள் விளக்கம் பெறவில்லை. உலகியல் கூறும் இலக்கியத்துள் சமயக் கொள் கைகளை விதந்தோதும் வழக்கம் புத்தராலும் சமணராலும் ஏற்பட்டதென்பாருமுளர். விருத்தப்பாப்போன்ற பாவகை சிலப்பதிகாரம் போன்றவற்றுட் காணப்படினும், அது காப்

பியப் பெருவழக்காக அக்காலத்திற் கைக்கொள்ளப்படவில்லை. நாட்டுப்படலம், நகரப்படலம் என்னும் பிரிவுகள் அக்காலத்துக் காப்பியங்களுட் பயின்றில.

மூன்றும் நூற்றாண்டின் பிற்பகுதியாகிய மாணிக்கவாசகர் காலத்திலே ஆரியக் குருக்களுட் பலர் சிவநெறியைக் கைக்கொண்டு சிவபெருமானையே வழிபட்டனர். ஆரிய வகுப்புமுறை தென்னாட்டில் நிலைபெற்றதெனினும் அறிஞர் அதனைப் பாராட்டவில்லை. புராணக்கதைகள் மிகுதிப்பட்டன. புத்தமதஞ் சீர்கெட்டொழிந்தது. பலதேவன் வழிபாடு குன்றியது. தில்லையின் சிறப்பும் பிற திருக்கோயில்களின் பெருமையும் போற்றப் பெற்றன. சைவசித்தாந்தக் கொள்கைகள் எங்கும் பரவின. இப்பொழுது கிடைத்துள்ள அருட்பா மாலைகளுள் முதன்மையானது திருவாசகமே. சமயச் சார்பாய அகப்பொருளிலக்கியங்களுள் முதன்மையானது திருச்சிற்றம்பலக்கோவையாரே. கட்டளைக்கலித்துறை புலவராற் கைக்கொள்ளப்பட்டது. மூவேந்தரும் சைவ நன்னெறியை வளர்த்தனர்.

"தென்னவன் சேரலன் சோழன் சீர்ப்புயங்கன்
வரக் கூவாய்." (திருவாசகம்-குயிற்பத்து, எ)

என்றதுங் காண்க.

கிளி முதலியவைகளை விளித்துரைப்பதும், மகளிர் விளையாட்டு வகைகளைப் புகழ்மாலைக் கருவியாகக் கொள்வதும் ஆகிய பண்டைத்தமிழ் முறைகள் திருவாசகத்துட் காணப்படுமளவு பிற்காலத்துத் துதிநூல்களுட் கண்டிலம். மக்களின் பொதுக் கருத்துக்கள், சமயக் கருத்துக்களோடு நூல்களிற் கலப்புற்றன. மக்களைப் பாடும் மரபு குறைவுற்றது. பெருங்காப்பியக்காலம் மாறிக் கடவுட் புகழ்மாலை பாடும் வழக்கம் பரவலாயிற்று.

நான்காவது ஐந்தாவது நூற்றுண்டுகளிலே அறம் பொரு ளின்பங் கூறுங் கீழ்க்கணக்குநூல்கள் பல தோன்றின. இக் காலத்தே சில ஆரியக் கருத்துக்கள் தமிழரின் நெஞ்சத்துட் புகுந்தனவெனினும், பொதுவாய் உண்மைகளைக் கூறுஞ் சிறு நூல்களே ~~அவற்றின் சார்பாகத்~~ தோன்றின. வள்ளல்களை நெஞ்சுருகிப் பாடிய புலவர் பாடல்களும், பெருங்காப்பியங்களும், சிறப்புச் சமயநூல்களும் இக்காலத் திற் றோன்றினவோ வென்பதைத் துணிதற்குரிய நூல்கள் கிடைத்தில. அகவற் பாவினுலாய சமணப் பெருங்காப்பிய மாக இப்போது கிடைத்திருப்பது பெருங்கதை யொன்றே. இதுதான் மொழிபெயர்த்து யாத்த காப்பியங்களுள் முதலாயது. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தமிழ் நாட்டுக் கதைகளைக் கூறுவனவே. வடநூற் கதைகளைத் தழுவித் தமிழிற் காப்பியஞ் செய்யும் வழக்கம் இக்காலத் திற்றுன் ஏற்பட்டதுபோலும்.

ஆரும் நூற்றுண்டிலே சைவப் புகழ்மாலைகள் பலவகைச் சிறுகாப்பியங்களாகத் தோன்றின. (சைவசித்தாந்தக் கொள்கைகளை ஒழுங்குபடுத்தி நூன்முறையாகக் கூறும் பெருநூல்கள் இக்காலத்திலேதான் முதன்முத லெழுந்தன வாகும்.) திருவாசகம் புகழ்மாலைகளில் ஒன்றே. திரு மந்திரமும் ஞானமிர்தமும் கலைநூல்களாயின. புறச்சமய கண்டனம் தொடங்கிற்று. புனையுமாற்றல் சிறந்திலங்குங் கல்லாடம், சமயநூல்களிலே இலக்கிய நயங்களை விரிவாக எடுத்தாளு முறையை எடுத்துக் காட்டிய முதனூலாகும். புரவலரைப் பாடும் வழக்கங் குறைவுற்றது, பாவலரைப் போற்றுவாரின்மையாலும் சமயக் கிளர்ச்சியின் மிகுதியி னுலுமென்க.

ஏழாம் நூற்றுண்டு: இந் நூற்றுண்டில் புறச்சமய கண்டனம் சிறப்புற்றது. அதற்கு ஏது புறச்சமயத்தார்

கிளர்ச்சியும் அவரது சமயப் பற்றுக்கோடுமேயாம். சமணர் தஞ்சமயத்தின் உயிரான கொள்கையைக் கைவிட்டு வெளி வேடத்தைப் போற்றி இடர் விளைத்தனர். சைவத்திலே திருக்கோயில் வழிபாடும் நெருப்பு வழிபாடும் ஒருங் கிணைந்தன. ஆரிய அந்தணர் சிறப்பாகச் சிவநெறி கடைப் பிடித்தனர். சைவமானது மக்களுள்ளத்திற் றமிழோடு தொடர்புற்றது. சாதியினுஞ் சமயமே சிறப்புற் றோங்கிற்று. திருவைந்தெழுத்தே வடமொழி மறையின் மெய்ப்பொரு ளென்பது நிலைநாட்டப்பட்டது. சைவத்துடன் வைதிகஞ் செறிவுற்றது. வைதிகமும் சைவமாயிற்று. மக்களுள்ளத்தே சமயப்பற்றின் மிகுதியால், சமயப் பொறுமை குறை வுற்றது. தமிழின் பெருமை தலைநின்றது. விருத்தப் பாவிலே புகழ்மாலைகள் பாடும் வழக்கம் பெருவரவிற்றுயது. சொல்லணிகள் மல்கின. அன்பின் பாடல்களே மிகுந்து காப்பியங்களுங் கலைநூல்களுங் குறைந்துபோயின.

**எட்டாவது நூற்றுண்டு:** இந் நூற்றுண்டின் முற்பகுதி யோடு சைவசமய ஆர்வக் கிளர்ச்சி குறைவுபட்டது. புறச் சமய கண்டனங் குறைவுற்றது. மிக்கதொன்று பின் குறைவடைதல் இயல்பே. காப்பியங்கள் குறுகியொழிய, இலக்கண நூல்களும் உரை நூல்களும் எழுந்தன. இக் காலத் திலக்கணத்தே ஆரியச் சாதிக்கொள்கை உறுதி யுற்றது. வேளாளர் நான்காம் வகுப்பினர் என்ற கருத்துத் தலைகாட்டிற்று. வைணவக்கிளர்ச்சி தொடங்கிற்று. இந் நூற்றுண்டின் பிற்பகுதியிலே வெண்பா யாப்புப் புலவராற் போற்றப்பட்டது. கோவை முதலிய பல்வகைச் சிறு காப்பியங்கள் ஏற்பட்டன.

**ஒன்பதாம் நூற்றுண்டு:** இந் நூற்றுண்டில் வைணவக் கிளர்ச்சி மிக்கது. ஆரியக் கருத்துக்களுஞ் சொற்களும்

பெருக்கெடுத்தன. வைணவப் புகழ்மாலைகள் மிகுந்தன. விருத்தயாப்பே பெரிதும் வழங்கலாயிற்று.

பத்து முதல் பன்னிரண்டாவது நூற்றுண்டு வரை சைவ சித்தர் கிளர்ச்சியும், சமண இலக்கியக் கிளர்ச்சியும் தோன்றின. சமணர் தமது சமயபோதனையை நேரே மேற் கொள்ளாது, செவ்விய உலகிய லிலக்கியங்களால் சமயக் கொள்கைகளைக் குறிப்பிடப் புகுந்தனர். விருத்தப்பா எவ்வகை யிலக்கியத்திற்கும் சிறந்த கருவியாயிற்று. அப் பாவினுல் இயற்றப்பட்ட முதற் பெருங்காப்பியம் இக் காலத்ததே. உயர்வு நவிற்சியும் புனைவுரையும் குலப் பெருமைக் கூற்றும் தமிழ்க் காப்பியத்துட் புகத் தொடங்கின. சமணர் உலக நூனயத்தாற் சைவ சமயத்தை வெல்லத் தொடங்கினர். சோழமன்னர் வீறெய்தி அரசாட்சியை அகலப்படுத்திய காலத்தே மக்களுள் உலக வாழ்க்கை நயவுணர்ச்சி மிகுதிப்படவே, பொதுக் காப்பியங் கள் தலையெடுத்தன. (பத்து முதல் பன்னிரண்டாவது நூற்றுண்டு முடிய எழுந்த விருத்தப் பெருங்காப்பியங் களைப் போலப் பீடுடையன பிற்காலத்துத் தோன்றவில்லை.) மக்களியற்கைத் திட்ப நுட்ப ஒட்பங்களுக்கும் நிலவுலக அளப்பருங் காட்சிக்கும் இக் காப்பியங்களே சிறந்த கண்ணுடியாய்த் திகழ்கின்றன. நடுக்காலத் தமிழ்மக்கள் நாகரிகமனைத்தும் இவைகளிலே சீரிடம்பெற்றுத் திகழ் கின்றன. தமிழ்க் காப்பியங்களுக்கும் புராணம் என்ற பெயர் உண்டாயிற்று. பெரியபுராண மொழிந்த பிற காப்பியங்களுள் வடநூற் கதைகள் தழுவப்பட்டன. தமிழ்ப் புலவர் வடநூன் முனிவரைப் பெரிது மதிக்கலாயினர். எனினும் தமிழ்ச் சொன்னயங்கள் தழைத்தோங்கிப் பொலிந்தன. வேளாள வள்ளல்கள் தமிழ்ப் புலவரைக் கண்ணுங் கருத்துமாகக் காத்துவந்தனர். செல்வச்

செழிப்பில் வண்மை மிகவே ஆரியப் பார்ப்பனரும் நல்முற வாழ்ந்தனர். ஆரியக் கொள்கைகள் மிகுதிப் பட்டன. ஏகான்மவாதம் தமிழ்ப்புலவர்களாற் பாராட்டப் பட்டது. பண்டைத் தமிழர் நாகரிகத்தின் தனிநிலை மறைந்தும் மறையாதுமிருந்தது இவ் விடைக்காலமாகும். மன்னர் புலவரைத் தம் பெரியாரென்று கருதும் மரபு குன்றிற்று. தமிழ்ப் புலவர்களுள் ஒற்றுமைக்கேடு ஏற்பட்டது. கற்றாரைக் கற்றார் காமுறுவர் என்பது சிறிது பிழைபட்டது. கற்பனையாற்றல் போற்றப்பட்டது. காப்பியங் களுள் இயற்கைநலங் குறைவுபட்டது.

**பதின்மூன்று பதினான்காம் நூற்றாண்டு**களில் காப்பியக் கிளர்ச்சி குன்றிக் கவியுணர்ச்சி மட்டுப்பட்ட கருவி நூற்காலம் வந்தது. இலக்கண நூலுள்ளும் கற்பனைப் பொருத்தங்கள் நுழைந்தன. மந்திர நூலுஞ் சோதிடமும் பாட்டுப் பொருத்தங்களோடு கலந்தன. எழுத்துக் களுக்குஞ் செய்யுட்களுக்கும் சாதி (வருண) வேற்றுமை யமைக்கப்பட்டன. அதிதேவதைகளும் ஏற்பட்டன. இவற் றால் ஆனந்தக்குற்ற முதலிய கற்பனைக்குற்றங்கள் நூலுட் சுட்டப்பட்டன. பாட்டியற்றுவது மனையமைப்பதுபோ லாயிற்று. கற்பனைச் சொன்னய உணர்ச்சியினாலே மக்கள் நெஞ்சங் கட்டுப்பட்டு விரிந்த நுண்ணிய பொருளாராய்ச்சி யிற் செல்லாது தியங்கிற்று. வைணவ உரையாசிரியர்கள் காலமுதல், ஆரியத்தாக்குச் சொல்லிலும் பொருளிலும் விஞ்சியது. சிறுகாப்பியங்களும் சிற்றிலக்கண நூல்களும் எழுந்தன. இக்காலத்திலே நன்னூலொன்றே சிறந்த முறையில் அமைந்துள்ளது.

√ **பதினைந்தாவது நூற்றாண்டிலே** இரட்டையர் காலம் முதல் சைவக்கிளர்ச்சி ஏற்பட்டுச் சமணர் வலிகுன்றியது.

உலா, கலம்பக முதலிய சிறுகாப்பியங்க ளியற்றப்பட்டன. வண்ணப்பாட்டு வகைகள் மிகுந்தன. இறையன்பின் பெரும்பயனைகத் திருப்புகழ்ப் பெருநூல் எழுந்தது. புராண கதைகளையும் ஆரியச் சொற்களையும் பெரிதுந் தழுவிச் சென்றாலும், இந்நூல் கடவுட் பேரன்பினை விளைப்பதுடன் இன்பச் சுவையையுந் தன்னகத்தே கொண்டிருத்தலால், என்றும் நின்று நிலவுதற்குரியது. இதன் சொல்வளமும் பெருமிதமும் ஒப்பற்றன. கம்பராமாயணம் வடநூற் கதையைமட்டுந் தழுவிற்று. வில்லிபாரதம் வடசொற் களையு முடன்கொண்டது. வில்லிபுத்தூரார் காலமுதல் தமிழ்ப் பெருங்காப்பிய உயர்வு குன்றத்தொடங்கிற்று. சொன்னய முணர்த்துங் கற்பனைகள் மிகுந்தன. பாரதமும் நைடதமும் அரிச்சந்திரபுராணமும் வடநாட்டுக் கதைகளைத் தழுவினவே. ஒரு கதையைக் காப்பிய முழுவதிலுங் கூறுமுறை இவைகளோடு அருகியொழிந்தது. நைடதத் திலே பண்டைத் தமிழரது புனைந்துரை மாறிச் சிறிது தாழ்மைப்பட்ட வடநூற்புனைமுறை மிகுதிப்பட்டது. பெண்டிரின் ஒவ்வொரு பகுதியையும் புனைந்துரைக்குமுறை அத்தன்மையது.

**பதினாறும் நூற்றாண்டு:** இந்நூற்றாண்டில் தலபுராணங் கள் பெருங்காப்பியங்களாகத் தொடங்கின. சேதுபுராணத் தோற்றத்துடன் இலக்கண விதிகளும் கற்பனைக் கருவியாகப் பயன்படலாயின. (அரசர், வள்ளல்கள் என்போரது உதவி குறைவுபட்டமையால் இறைவனையே போற்றுஞ் சிறுகாப் பியங்களும் தனிப்பாடல்களுமே சிறந்திலங்கின.) மடங் களிலே நூல்கள் பல தோன்றின. சைவ வைணவ சமயவாத நூல்கள் வெவ்வேறு மல்கின. வடநூல்களுக்கு மிகுந்த பெருமை ஏற்பட்டுத் தமிழ்ச் சமயக்காப்பியங்களுக்கும் கலைநூல்களுக்கும் வடமொழியில் மூலநூல் இருத்தல்

சிறப்பென்ற தப்புக் கொள்கை தலையெடுக்கலாயிற்று. மக்கள் அறிவு ஆரியக் கட்டுக்குள் அடங்கிச் செல்ல வேண்டியதாயிற்று.

பதினேழாம் நூற்றாண்டு: இதில் மன்னர், குறுநில மன்னர் முதலியோர் உதவியினாற் பிள்ளைத்தமிழ், கோவை முதலிய சிறுகாப்பியங்கள் கற்பனை நயங்களோடு மக்கண் மீதும் பாடப்பெற்றன. சமயச்சண்டைகள் மிகுதிப் பட்டன. செந்தமிழ் நயங்கள் மகமதியப் புலவர் நெஞ்சத்தையுங் கவர்ந்தன. முகமதுநபியைப்பற்றிய பெருங் காப்பியமே பண்டைமுறையில் இனிதமைந்தது. மகமதிய வள்ளல்கள் தமிழைப் பேணத்தொடங்கினர். சைவக் கிளர்ச்சி இமயம் வரை எட்டிற்று. (இந்நூற்றாண்டிறுதியில் வடமொழிச்சுவை மிகுதிப்பட்டுத் தமிழுக்கும் வடமொழிக்கும் இலக்கணம் ஒன்றே என்ற தப்புக்கொள்கை தலையெடுத்தது. வடமொழி தமிழை முற்றிலும் அடக்கி யாண்ட காலமிஃதே.)

பதினெட்டாம் நூற்றாண்டு: இந்நூற்றாண்டு முற்பகுதியில் கிறித்துவைப்பற்றிய பெருங்காப்பியம் செந்தமிழிலே ஐரோப்பியப் புலவரொருவரால் பாடப்பெற்றது. கிறித்துவக் கருத்துக்கள் தமிழ்க் காப்பியங்களி லிடம்பெற்றன. வீரசைவ சமயக் கருத்துக்களும் தமிழ்நாட்டிற் பரவத் தொடங்கின. சைவத்தின் பொதுக் கருத்துக்கள் தாயுமானரால் விளக்கமடைந்தன. பல பிற்காலச் சித்தர் நூல்களும் இக்காலத்தெழுந்தன போலும். பல கோட்பாட்டினர் ஒருங்கு கலந்தனர். சமயஆராய்ச்சியுந் தமிழாராய்ச்சியும் மக்களுள் விரிவாக ஏற்பட்டன. பொதுமக்கட்குப் பயன்படும் உரைநடை நூலும், அகரவரிசை (அகராதி) முதலியனவும் எழுந்தன. அச்சின் முதற்றோற்றமும் இக்

காலத்தே நிகழ்ந்தது போலும். (குறுநில மன்னர்களும் செல்வர் பலரும் தமிழை வளர்க்கக் கருதிய காலமுமிதுவே. பண்டை மன்னராட்சி அறவே ஒழிந்தது. பதினேழாம் நூற்றாண் டிறுதியில் நிலைபெற்ற கொள்கை பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிற் குன்றி, வடமொழியும் தமிழும் வெவ்வேறேயென்ற கொள்கை இருமொழியும் நிலை கண்ட ஆசிரியர் சிவஞானமுனிவரால் நாட்டப்பட்டது. பிற சமயக் கிளர்ச்சி குன்றிச் சைவசித்தாந்தம் சிறந்தோங் கிற்று. பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளிலே சிறு காப்பியங்கள் இருவகைப்பட்டன. இறைவனைப்பற்றியன ஒருவகை. மற்றொருவகை, மக்களுள் அதிகாரத்தாற் பெரி யாரைப் பற்றியன. அவை காமச்சுவை மிக்கனவாய்த் திகழ்ந்தன. இருவகையிலும் சிலவற்றிற்றான் ஆழ்ந்த கருத்துக்கள் காணப்பட்டன. சிவஞானபோதப் பேருரை தோன்றிய காலந்தொட்டு மக்கள் நெஞ்சம் விரிவுறத் தொடங்கிப் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் அதன் பின்னும் ஆங்கிலத் தொடர்பால் ஆரியக் கட்டவிழ்க்கப் பட்டு ஆராய்ச்சி முறையிற் செல்வதாயிற்று.

**பத்தொன்பதாம் நூற்றாண்டு:** பொதுமக்களுக்கு இலக்கியத்தைப் பயன்படுத்த வேண்டுமென்ற கொள்கை நிலைபெற்ற காலம் இந்நூற்றாண்டிலேதானென்று தோன்று கிறது.

**இருபதாம் நூற்றாண்டு:** செயற்கைச் சொன்னயத்தைப் பொருட்படுத்தாது பொருணயங் கருதிப் பண்டைச் சங்க நூல்களுக்குச் செல்லும் ஆர்வமும், பொய்புனைந்த கதை களைத் தொலைத்து மெய்யுணரக்கருதி வரலாற்றாராய்ச்சியினை மேற்கொள்ளும் ஊக்கமும், விழுமிய விரிந்த பண்டைத் தமிழ் நாகரிக முறைக்கேற்பத் தமிழர் குடிவாழ்க்கையைச்

சீர்திருத்திச் செம்மை செய்யும் நோக்கமும், எம்மொழிப் பொருளையும் தனித்தமிழிலே வெளிப்படுத்திப் பயன் றுய்க்க வேண்டுமென்ற உறுதியும் இற்றைஞான்றின் சிறப் பியல்புகளாம்.

---

## கூ. கடைச்சங்ககாலப் புலவர் வரலாறு

**முடத்திருமாறன்** பாடிய பாடல் நற்றிணையில் இரண்டு உள்ளன : பாலைத்திணைக் கொன்றும் குறிஞ்சித்திணைக் கொன்றும் அவர் பாடியுள்ளார். பாலைத்திணையின் பாட்டில் (நற்: க0ரு) 'குட்டுவன் குடவரைச் சுனைய மாயிதழ்க்குவளை' என்றமையால் குடவரை குட்டுவனுக்குரியதென்று புலனு கின்றது.

**முரஞ்சியூர்முடிநாகராயர்:** இவர் பாடிய பாடல் புறநா னூற்றில் இரண்டாவதாக உள்ளது. அதனுள் ஐம்பெரும் பூதத்தின் இயற்கையை உதியஞ்சேரலாதனுடைய தன்மை களுக்கு உவமையாகக் கூறியுள்ளார். அவனுடைய கடல் வரைப்பினுள்ளே ஞாயிறு தோன்றி மறைவதாகக் கூறி யுள்ளார். இமயத்திலும் பொதியிலுமுள்ள அந்தணர் வளர்க்கும் முத்தீயின் ஒளிவிளக்கில் மான்கள் துாங்கும் என்ற நயம் காண்க. பாரதப் போரில் உதியஞ்சேரலாதன் பெருஞ்சோறு வழங்கியது இதன்கண் கூறப்படுகின்றது. பால் புளித்தல், பகலிருளுதல், நால்வேதம் நெறிதிரிதல் நிகழாத் தன்மைகளுக்குக் காட்டாகக் கூறப்பட்டுள்ளன. நிலன் தாங்குதல், விசும்பு அகலுதல், வளி வலியுடைமை, தீ தெறல், நீர் அளிக்கு உவமையாதல் இதனுட் பெறப் படும்.

முதலாவது பதிற்றுப் பத்துக்கு உரியவனாகிய உதியஞ் சேரல் என்பவன் கி. மு. நாலாவது நூற்றாண்டில் சிறப் புற்று விளங்கியதாகத் தெரிகிறது. இவனுடைய சிறப்பை இவனுக்குப் பிற்காலத்தில் திகழ்ந்த பல புலவர்களும் விதந்தோதுகின்றார்கள். வெள்ளிவீதியார் (அகம். சுரு) கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை, நக்கீரர் முதலிய புலவர்கள் தங்கள் பாடல்களில் (அகம். கரு அ, நஅக) விதந்து கூறியுள்ளார்கள். வெள்ளிவீதியார் பாடலினால் இவன் வேலினாற் கடலோட்டினானென்றும், மாக்கோதை பாடலினால் இவன் கொழூஉர் என்னுமிடத்தில் அட்டி லமைத்துச் சோறு வழங்கினானென்றும் அறிகின்றோம். இவனது வண்மையையும் இவனது முன்னோரது வண்மை யையும் வியந்து பாடிய பெரும்புலவர் மாமூலனாரென்பார்.

சேரன் உதியஞ்சேரல் காலத்துப் பாண்டியன் முது குடுமிப் பெருவழுதி யாவன். அவனைக் காரிகிழார் என்னும் புலவர் புறம் சு இல் பாடியுள்ளார். காரி என்பது தொண்டை நாட்டிலிருந்த ஊரென்றும், அஃது இப்போது இராமகிரி என்று வழங்கப்படுகிறதென்றும் புறநானூற்றுப் பதிப்பாசிரியர் கூறுகின்றார். கிழார் என்றதால் அவர் வேளாளரென்று அறிகின்றோம். முதுகுடுமியின் நாட் டெல்லையை இவர் குறிக்குமிடத்து, வடக்கே பனிமலையும், மேற்குங் கிழக்குங் கடலும், தெற்கே, குமரியும் சுட்டப் பட்டன. ‘உருகெழு குமரி’ என்றதால் கடலென்பர். கிழக்குக் கடலைத் தொடுகடலென்றும், மேலைக் கடலைத் தொன்றுமுதிர் பௌவமென்றும் கூறினார். அவன் புக ழுக்கு வானெல்லையைப் புலவர் ‘ஆனிலையுலகம்’ என்றனர். அஃது அண்டத்தின் முடிவிலுள்ளதென்று சிவதநமோத்தர ஆகமத்தில் கூறப்பட்டது. அதன் கோபுர இயலில்,

"வீற்றிருக்கும் விமலனது சன்னிதியில்
வெள்விடையும் விளங்குமந்த
ஏற்றினயல் நந்தைமுதல் இசைந்துறையும்."
(கோபுரவியல், கஉக)

என்றது காண்க.

மேற்கூறிய புறப்பாட்டில் முக்கட் செல்வராகிய சிவபெருமான் கோயிலையன்றி வேறொன்றையும் முதுகுடுமி வலஞ்செய்யானென்றும், பகைவர்பாற் கொண்ட பல பொருளையும் பரிசிலர்க்கு வழங்கிவந்தானென்றும், நான்மறை முனிவரால் வாழ்த்தப்பட்டான் என்றும் புலவர் இயம்பியுள்ளார். முதுகுடுமி சைவனாதலின் இங்கே குறித்த நான்மறை முனிவர் சிவநெறியொழுகும் தமிழ்நாட்டு அந்தணராயிருத்தல் வேண்டும். கோயில் என்பதற்கு நகர் என்ற சொல் வந்தமை காண்க. அச்சொல் 'நகு' என்பதனடியாகப் பிறந்து 'விளக்கமுடைய இடம்' என்று பொருள்படும். அரசரை ஈகைபற்றித் திங்களுக்கும் பகைவரை வெல்லும் திறமைபற்றி ஞாயிற்றிற்கும் ஒப்பிடும் பாட்டு மரபு இப்புலவர் செய்யுளுள் காணப்படுகின்றது.

முதுகுடுமியை **நெட்டிமையார்** என்ற புலவர் புறம் கூ, கஉ, கரு ஆம் பாடல்களில் பாடியுள்ளார். நீண்ட இமையுடைமையால் இவர்க்கு இப்பெயர் வந்ததென்ப. முதுகுடுமி அறப்போர் செய்யுந் தன்மையுடையான் என்பதும், பாணர்க்குப் பொற்றாமரையும, யானையும் தேரும் வழங்குபவன் என்பதும், பகைவர் அரண்மனை அழித்து அவை இருந்த இடத்தைக் கழுதையைக் கொண்டு பாழ்படுத்தும் வழக்கம் அக்காலத்திருந்ததென்பதும், முதுகுடுமி வேள்விகள் பல வேட்டனன் என்பதும் இப்புலவர் எடுத்து விதந்தவர். "நெய்ம்மலி ஆவுதி பொங்க" என்றதினால் ஊன் பயிலா வேள்விகளே அவன் செய்தான் என்று கொள்ள இடமுண்டு. வேள்வி முடிந்த இடத்தில் நினைவுக்குறியாகத்

தூண் நடுதல் அக்காலத்து வழக்கமென்பது "வேள்வி முற்றி, யூபம் நட்ட வியன்களம் பலகொல்" என்றதால் தெளியப்படும். "நற்பனுவல் நால்வேதம்" என்றதால் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள் கூறும் நான்மறை என்பது குறிக்கப்பட்டது காண்க. புறம் ௯ இல் முதுகுடுமியை வாழ்த்துமிடத்து, "முந்நீர் விழவின் நெடியோன், நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே" என்றது காண்க.

**நெடும்பல்லியத்தனூர்** என்னும் புலவர் முதுகுடுமியைப் பாடிய பாட்டினால், அவர் பாண மரபினரென்பதும், பெருவழுதியின் வண்மையால் வறுமை தீர்ந்தனர் என்பதும் தெரிகின்றன. இவர் பாடிய பாட்டு ஒரு பாணன் ஒரு விறலியை அரசன்பால் அழைத்துச் செல்வதாக அமைந்துள்ளது.

**குமட்டூர்க் கண்ணனூர்** இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப்பற்றிப் பாடிய இரண்டாம் பத்தினுள் உதியஞ்சேரலாதனைக் குறித்துள்ளார். அவர் அதன்கண் சூரனை முருகன் வென்ற செய்தியும், முருகன் களிறு ஊர்ந்ததும் இமயவரம்பன் முந்நீர்த் துருத்தியுள் கடம்பெறிந்ததும், ஆரியர் இமயமலையை அடுத்திருந்ததும், நிலம், நீர், வளி, விசும்பு என்ற நான்கும் அளப்பரியன என்பதும், நாளும், கோளும், திங்களும், ஞாயிறும், தீயும் ஆகியவற்றின் விளக்கம் அரசன் விளக்கத்திற்கு உவமை ஆதலும், பாரதப் போரில் அக்குரன் என்பவன் வண்மையில் சிறந்திருந்தான் என்பதும், இமயவரம்பன் சான்றோர் மெய்ம்மறை என்பதும், அவன் வயவர்வேந்தன் என்பதும், யானைப்படையைச் சிறப்பாக உடையவனென்பதும், அவன் மனைவி அரிய கற்பும், அடங்கிய சாயலும், ஊடினும் இனிய கூறும்

இன்னகையும் உடையள் என்பதும், மாரி பொய்த்தாலும் சேரலாதன் பொய்யலன் என்பதும் இயம்பியுள்ளார்."

இம்மென்கீரனுர் என்னும் புலவர் அகம் ௩௯௮ இல் ஆரியரைப்பற்றிக் குறித்துள்ளார். அவர்கள் பொன்படு நெடுவரையின் பாங்கர், அஃதாவது இமயச்சாரலில் தங்கினர் எனக் கூறியுள்ளார். இப்புலவர் குறிஞ்சி பாடுவதில் வல்லவர். இவர் ஒரு பாட்டில் தலைவி இம்மென்று அலமரா நிற்பதாகச் செப்பினமையால், 'இம்மென்' என்ற அடைமொழி இவர் பெயருக்கு ஏற்பட்டது.

பரவைக்கோட்டிலார் என்னும் புலவர் அகம் ௩௩௬ இல் சோழர் வல்லத்துப் புறங்காட்டில் ஆரியப் படையினை வென்றதாகப் பாடியுள்ளார்." இவர் பாடிய பாட்டில் சேரிப் பரத்தை இற்பரத்தையை இகழ்ந்து கூறிய பகுதி மிகவும் நகைச்சுவை விளக்கவல்லது. யானையின் இரக்கத்தினலே பாகன் பிழைத்திருப்பதுபோல, தான் விழவின்கண் வாராமையால் இற்பரத்தை பிழைத்திருப்பதாகச் சேரிப்பரத்தை பேசுகின்ருள்.

பாலைக் கௌதமனுர் இமயவரம்பன் தம்பியாகிய பல் யானைச் செல்கெழுகுட்டுவன் என்பவனை மூன்றும் பதிற்றுப் பத்தில் பாடியுள்ளார். அப்பத்தினுள், சேரமன்னன் வேள்விகளை ஆதரிப்பனென்றும், பூழியர்கோன் என்றும், மழவர் மெய்ம்மறை என்றும், அவன் ஆயிரம் வெள்ளம் வாழ்க என்றும், கொங்கர் நாட்டினை வென்றவன் என்றும், வயிரியர்க்குப் பசியை நீக்கிப் பொன்னிழையை அளிப்பவன் என்றும், ஓதல், வேட்டல், அவைபிறர்ச் செய்தல், ஈதல், ஏற்றல் என்று ஆறு புரிந்தொழுகும் அறம்புரி அந்தணர் வழிமொழிந் தொழுகுபவன் என்றும், ஐம்பூதங்கள்கூட அளத்தற்கரியவன் என்றும், மழை மாறினும் வளங்

குன்றுத நாட்டையுடையவன் என்றும், பேரியாற்று வளமுடையவன் என்றும், நெய்தல் நிலத்திலுள்ள பெருந் துறையை உடையவன் என்றும் கூறப்பட்டன. அயிரை மலையிற் கொற்றவை வணக்கமும் ஆண்டுக் கூறப்பட்டது. இவர் புறம் ௩௯௯ இல் தருமபுத்திரர் என்பவரைப் பாடியுள்ளார்.

✓**குடவாயிற் கீரத்தனர்** அகம் ௪௪ இல் நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை என்போர் பெரும்பூட் சென்னியின் படைத்தலைவனாகிய பழையனைத் தாக்கிக் கொன்றதற்காக அவர்களைப் பெரும்பூட் சென்னி வென்று, கணையன் என்பவனைச் சிறைபிணித்துக் கழுமலத்தைக் கைப்பற்றிக்கொண்டான் என்று கூறியுள்ளார். கழுமலம், அழும்பில், குடவாயில் என்னும் ஊர்கள் பெரும்பூட் சென்னிக்கு உரியன. குடந்தையில் சோழர் தங்கள் நிதியினைப் பாதுகாத்து வைத்தனர். குடவாயிலில் பெரும்பூட் சென்னியின் அட்டிற்சாலை இருந்தது. அகம் ௧௧௯ இல் மழவர் சிறந்த வில்லுடையவர் எனக் கூறப்பட்டனர். அகம் ௨௮௭ இல் பொதியிலைப் பற்றிய குறிப்புள்ளது. அகம் ௩௦௫ இல் வழுதி கூடல் சிறந்த காப்புடையதாகப் பேசப்பட்டது. அகம் ௩௬௫ இல் யானைச் சேனையுடைய சோழர் காவிரிக்கரையிலுள்ள உறந்தையில் ஆட்சி செய்தமை கூறப்பட்டது. புறம் ௨௪௨ இல் இப்புலவர் ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தனைப் பாடியுள்ளார். (நற்றிணை ௨௧௨ இல் கதநாய் வடுகர் நெடும்பெருங் குன்றத்தைக் கடந்து வந்ததாகக் குறிப்பிக்கப்பட்டனர். இவர்கள் மோரியருக்கு முன் வந்தனர் போலும்.) அகம் ௬௦ ஆம் பாட்டில் தொண்டியில் இருந்த பொறையனென்னும் அரசனைச் சுட்டியுரைத்தார். இச்செய்யுளால் நெய்தல் நிலமாக்கள் சோற்றையும், புளிக்கறியையும், கொழுமீன்

இறைச்சியையும் உண்பது அறியக் கிடக்கின்றது. இவர் பாலைத் திணையை மிகுதியாகப் பாடியுள்ளார். "இவர் அகம் ௩௨௬ இல் நன்னனது ஏழிற் குன்றத்தில் மழை பொழிந்து அருவி பாய்வதையும், கானமர் செல்வி அக்குன்றத்திற்குக் காப்புத் தெய்வமாய் இருப்பதையும் கூறியுள்ளார்." அகம் ௩௬௬ இல் எவ்வி என்னும் குறுநில மன்னனது நீழல் என்னும் பதிக்கண் நெய்தலும் மருதமும் விரவிக்கிடப்பதை விதந்தோதினர்."

முள்ளியூர்ப்பூதியார் பாடிய அகம் ௯௩ இல் தோழி தலைமகளைத் தலைமகன் பிரிவின்கண் ஆற்றுவித்தல் காணப் படும். அதனுள் நன்னனது விண்பொருநெடுவரை குறிக்கப்பட்டது.

ஆவூர்க்காவிதிகள் சாதேவனார் பாடிய அகம் ௧௫௬ இல் யானையின் கொம்பு ஒடியும்படியாக அதனைத் தாக்கி ஆழுரைக் கொடுமுடி என்பவன் காத்தது கூறப்பட்டது.

தொடித்தலை விழுத்தண்டினார் என்னும் புலவர் ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தனைப் பாடியதாகப் புறநானூற் றுரையில் குறிக்கப்பட்டது. அவர் பாடிய பாட்டில் அவனைப்பற்றிய விவரம் யாதுமில்லை. அப்புலவர் இளமை நிலையாமையைப் பற்றிக் கூறுமிடத்து,

> "தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
> றிருமிடை மிடைந்த சிலசொற்
>
> பெருமூ தாளரே மாகிய வெமக்கே." (புறம்: உ௪௩)

என்றமையால் அப்பெயர் எய்தினர் போலும்!

காப்பியாற்றுக் காப்பியனார் "களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரலை ச ஆம் பத்திற் பாடி, நாற்பது நூறுயிரம் பொன்னும், அரசன் ஆண்டதில் ஒரு பாகமும் பெற்றார் என்று தெரிகின்றது." இதனுட் டிருமால் வணக்கம் முதற்

கண் கூறப்பட்டது காண்க. பூழி நாட்டைப் படையெடுத்த நன்னனைச் செருவில் வென்றது இதன் பதிகத்துட் சுட்டப் பட்டது. அரசனது வண்மையும் வீரமும் மிகவும் நயமாகப் புனைந்துரைக்கப்பட்டன.

கள்ளில் ஆத்திரையனார் என்னும் புலவர் புறம் களரு இல் மோரியரை விதந்து கூறினர். அப்புலவர் அவனைப் புறம் ௩அ௪ இலும் குறித்துள்ளார். "கள்ளில் என்பது தொண்டை நாட்டிலுள்ள இவரது ஊர். இவர் பாட லொன்று குறுந்தொகையிலுங் காணப்படுகின்றது. களங் காய்க்கண்ணி நார்முடிச்சேரல் காலத்தில் மோரியர் படை யெடுப்பு நிகழ்ந்திருத்தல் கூடும்." அவர்களைப்பற்றிப் பாடிய பல புலவர்களுள் கள்ளிலாத்திரையனார் முற்பட்டவர் என்று தெரிகிறது. அவர் வேங்கடத் தலைவனாகிய ஆதனுங்கனென்பவனைப் பாடியுள்ளார்.

மாமூலனார் என்னும் பெரும்புலவர் உதியஞ் சேரலனது வண்மையையும் *அவனது முன்னோரது வண்மையையும் புகழ்ந்து பாடியுள்ளார்; (அகம்: ௬௫, உ௩௩, ௩௯௪.) இப்புலவர் முக்காலமு முணர்ந்தவரென்று நச்சினார்க்கினிய ரால் போற்றப்படுகின்றார். இவர் அகநானூற்றில் உஎ பாடல்கள் பாடியுள்ளார். இவருடைய பாடல்கள் நற்றிணை, குறுந்தொகையிலுமுள. இவர் உதியஞ்சேரலை நேராக விளித்த பாடல்கள் காணப்படாமையானும், அவனுக்குப் பிற்காலத்து நடந்த வரலாறுகளைக் கூறுதலானும் இவர் உதியஞ்சேரல் காலத்துக்குப் பிந்தியவர். நன்னன்பாழி சேரமன்னரால் எடுக்கப்படாத காலத்தில் மாமூலனார் வாழ்ந்திருப்பின் பல்யானைச்செல்கெழுகுட்டுவன் காலத்தி லேயே இவர் வாழ்ந்திருக்கவேண்டும். மாமூலனார் பாடல் களிலே பல குறுநில மன்னர்களுடைய வரலாற்றுப் பகுதி

கள் அறியக் கிடக்கின்றன. இவர் நன்னனுடைய பாழியை யும் (அகம் கரு), ஏழிற் குன்றத்தையும் (அகம் ாசசஉ), அவனது வியலூரையும் (அகம் கூள) பாடியுள்ளார். பேகன் முன்னோனாகிய நெடுவேளாவி என்னுங் கொடையாளியும் இவரால் அகத்துள் பாடப்பெற்றவன். அவன் பொதினியில் ஆட்சிசெய்தவன். ஆவியர் என்னும் ஒரு கூட்டத்தாருக் குத் தலைவன். (அவன் குதிரை ஏற்றத்திற் சிறந்த மழவரை ஓட்டியதாக அகம் க இல் கூறினர்.) முருகனைப்பற்றிய குறிப்பும் அதன்கண் காண்க. பொதினி என்பதே பிற்காலத்தில் பழனியென மருவியதென்ப.

மழவர் என்பார் அதிகன் என்னுங் குறுநில மன்ன னைத் தமக்குத் தலைவனாக உடையவர். அவர்கள் செம்மறி யாட்டுக் கொம்புபோலச் சுருண்டு முதுகினை மறைத்த தலைமயிரையும் செங்கண்ணையு முடையவர்கள். அவர்கள் இருமலை நீக்கும் மண்போன்ற ஒருவகை மருந்தினை வாயிற் கொண்டு, வில்லும் தீப்பற்றிய சிறுகோலும் உடையராய் நிரைகவரும் சூழ்ச்சியை அகம் கoக இல் மாமூலனார் இனிது பாடியுள்ளார். அவர்களது பூந்தொடை விழாவை யும் அவர் அகம் க௮ள இல் குறித்துள்ளார். இன்னும் இவர் பாடல்களால் எவ்வி, கண்ணன், எழினி, புல்லி, பாணன், திதியன் என்னும் பல சிற்றரசர்கள் செய்திகளும் அறியக் கிடக்கின்றன. கள்வர்கோமானாய் வேங்கடத்தை ஆண்ட புல்லி இவராற் குறிக்கப் பெற்றுள்ளான். பாணன் என்பானது நாடும் வடநாட்டில் உள்ளதாகவே அகம் ாஉரு இல் விளங்குகின்றது. அகம் ககரு இல் எருமையின் குடநாடு குறிக்கப்படுகின்றது. அது மைசூர் அரசா யிருக்கலாம்.

மோரியர் என்பார் வடக்கேயிருந்து தெற்கே வந்த தும், தங்கள் தேர் செல்லும்படியாக மலைப்பகுதிகளில்

வழி அமைத்ததும், மோகூர் என்பான் பணியாமையினால் அவர்கள் படையெடுத்து வந்ததும், அவர்கள் வடுகரை முன்னாகக் கொண்டு போந்ததும் அகம் உருக, உஅக ஆம் பாடல்களால் விளங்கும். நந்தர் என்பார் வடநாட்டில் பாடலிபுரத்தில் கங்கைநீருள் தமது நிதியை மறைத்து வைத்ததை அகம் உசுரு இல் புலவர் விளக்கியுள்ளார். கோசர் பொதியிலில் இருந்ததையும் இவர் கூறியுள்ளார். சோழனது வீரனை மத்தி என்பவனுக்கும், எழினி என்பவனுக்கும் நிகழ்ந்த போரினை அகம் உகக இல் கூறினர். பாண்டியரது கொற்கையில் முத்தும், வலம்புரிச் சங்கும் எடுப்பதைப்பற்றி அகம் உ0க இல் எடுத்துரைக்கின்றார். (அகம் நுக இல் தமிழ்வேந்தர் மூவரைப்பற்றி இவர் குறித்தனர். )

மாமூலர் பாடிய திதியன் ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியனுக்கு நண்பன். அகம் உரு இல் பாண்டியன் அவனைப் பாடியுள்ளான். இவன் புறம் கஎ இல் பகை மன்னர் பலர் ஒன்று சேர்ந்து எதிர்த்த இடத்து அவர்களைப் புறங்காணாவிடில் தன்னுடைய மனைவியையும், நண்பர்களையும் தான் பிரிந்து விடுவதாகவும், முறைபிறழ்ந்து நடப்பவனைக் கொண்டு நீதி செலுத்தியோன் ஆவேனெனவும், சிறந்த பாண்டியநாட்டினைக் கடந்து பிறநாட்டிற் பிறப்பதாகவும் வஞ்சினம் கூறியதால், இவன் மனைவி கற்பிலும் அன்பிலும் சிறந்தவள் என்றும், இவன் தன்னாட்டில் அளவற்ற பற்றுடையவன் என்றும், இவன் நண்பர்களும் மிக மெய்ம்மையான அன்புடையவர்கள் என்றும் தெரிகின்றது. இவன் இறந்தகாலை இவன் மனைவி தீப்பாய்ந்தனள். தீப்பாயுமுன் தடுத்த சான்றோர்களை நோக்கிக் கைம்மை நோன்பு தனக்காகாதென்றும், கணவன் இறந்த போது தாமரைப் பொய்கையும், தீயும் ஒரு தன்மையன

வாய்த் தனக்கிருப்பனவென்றும் புறம் உசசு இல் கூறினள். இவள் பாடிய பாட்டினுள் அக்காலத்தே நெய் கலவாத சோற்றினை வெள்ளெள்ளுத் துவையலொடும் புளி சேர்த்து வேகவைத்த வேளைக்கீரையொடும் உண்டு பாயில்லாத பருக்கைக் கற்கள் மேலே படுத்தல் கைம்மை நோன்பு கைக்கொண்டவர்களது வழக்கமென்று தெரிகிறது.) இவள் தலைவிரி கோலமாய்ப் புறங்காட்டிற் சென்று தீப்பாய்வதைக் கண்டு இரங்கி மதுரைப் பேராலவாயர் பாடிய பாட்டு புறம் உசஎ.

ஒல்லையூர், இருங்கோவேளுக்குரிய ஊர்போலும். அவ்வூரில் ஆயன்செங்கண னென்னும் புலவரொருவர் திகழ்ந்தனர். அவரது பாடல் அகத்துட் காணப்படுகின்றது.

பெரும்பூட்சென்னிக்குப் பின்னரசாண்ட நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி என்பவன் சேரமானது ஊராகிய பாமுளூர் என்னும் ஊரை முற்றுகை செய்து வென்றவனாவான். இவன் மிக்க வன்மையுடையவனாவான். **ஊன்பொதி பசுங்குடையார்** இவனைப் புறநானூற்றுட் பாடியுள்ளார். இவர் பாடிய புறம் க௦ இல் இம்மன்னன் மக்களை அளந்தறிவதில் திறமை யுடையவன் என்பதையும், ஒழுக்கம், இரக்கம், ஆய்ந்துசெயல், வீரம் என்னும் தன்மைகளை உடையவனாய் நறுமணங்கமழும் தாளிப்புடைய உணவை விருந்தினர்க்கு அளிப்பவன் என்பதையும் குறிப்பித்தனர். இவர் பரிசில் கடாநிலையாகப் பாடியது புறம் உ௦ரு. புறம் ருஎஅ இல் இளஞ்சேட்சென்னி தென்பால் பரதவர் என்னும் கூட்டத்தாரையும், வடபால் வடுகரென்பாரையும் வென்று ஓட்டியதனைக் கூறியுள்ளார். அவர்பாற் கொண்ட மிகுந்த அணிகலன்களைப் புலவர் தம்முடைய உறவினருக்குக் கொடுத்தகாலை அவர்கள் நெடுநாளிருந்த வறுமை தீர்ந்து பெருமகிழ்ச்சியால் (சீதையை இராவணன்

கவர்ந்துசென்றபோது அவள் கீழே எறிந்த அணிகளைக் கண்டெடுத்துத் தவறாக அணிந்த குரங்கின் கூட்டம்போல விரலில் அணிவதைச் செவியில்அணிந்தும், செவியிலணி வதை விரலிலணிந்தும், அரையிலணிவதைக் கழுத்திலணிந் தும், கழுத்திலணிவதை அரையிலணிந்தும் இடர்ப்பட்டா ரென்று இயம்பினர்.) இதனால் இவர் நகைச்சுவை பயக்கும் பாடல் பாடுவதில் வல்லவர் என்று தோன்றுகிறது. இராமன் கதை இப்பாட்டினுள் வந்தது உற்றுநோக்கத் தக்கது.

இளஞ்சேட் சென்னியை அகம் கூஎடுஇல் **இடையன் சேந்தன் கொற்றனார்** என்னும் புலவர் பாடினர்.

**தொல்பரணர்** உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி யின் ஆயுதச் சிறப்பையும் படைச் சிறப்பையும் உவமை நயந் தோன்றப் புறம் ச இல் பாடியுள்ளார்.

**தொல்பெருங்குன்றூர்கிழார்** என்பார் கரிகால் வளவ னின் தந்தையாகிய உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி யைப் புறம் உகூகூ இல் பாடினர்; புறம் கசள இல் கண்ணகி• காரணமாகப் பேகனைப் பாடியுள்ளார்.

கரிகால்வளவனது அம்மானாகிய **இரும்பிடர்த்தலையார்** என்பவர் கருங்கை ஒள்வாட் பெரும்பெயர்வழுதி என் னும் பாண்டியனது வீரத்தையும், இரவலர்க்குக் குறிப் பறிந்து கொடுக்கும் அவன் வண்மையையும், புறம் க இல் பாடியுள்ளார். அப்பாட்டினுள் இவர் 'பெருங்கையானை இரும்பிடர்த் தலையிருந்து' என்றமையால் இவருக்கு இப் பெயர் வந்ததுபோலும்.

கரிகால்வளவனோடு பொருது புறப்புண் நாணி வடக் கிருந்த பெருஞ் சேரலாதனைப் போர் நடந்த இடமாகிய வெண்ணியிலிருந்த புலமை மிக்க குயத்தியா ரொருவர்

புகழ்ந்து பாடிய பாட்டு புறம் சுசு. இதனுள் கரிகாலன் கடற்போர் செய்வதில் வல்லவனென்றும், வெற்றியடைந்த அவனைப் பார்க்கிலும் வடக்கிருந்த சேரலாதனே சிறந்தவன் என்றும் புலவர் பாடினது காண்க.

**ஓரம்போகியார்** என்னும் புலவர் மத்தியின் காலத்திலிருந்ததாகத் தெரிகிறது. இவர் **ஐங்குறுநூற்**றில் மருதத்திற்குரிய நூறு பாட்டுப் பாடியவர். அகத்தினும் மருதத்தையே இவர் பாடியுள்ளார். இவர் பாடல்கள் நற்றிணையிலும் குறுந்தொகையிலும் வந்துள்ளன.

✓ **முடத்தாமக்கண்ணியார்** என்னும் புலவர் **பொருநராற்றுப் படை**யில் கரிகால்வளவனைப் பாடியுள்ளார். அவர் இதில் கரிகால்வளவன் வண்மையையும், அவன் வெண்ணியென்னுமிடத்துச் ‧சேரனை வென்றதையும், அவனது நாட்டின் இயற்கை வளத்தையும் கூறிக் காவிரியானது ஆயிரமடங்கு விளையும்படி நெல்வயல்களுக்குச் செழிப்பினைத் தருகின்றதென்று குறிப்பித்தார். பாணர் காட்டுத் தெய்வத்தைப் பாடி வழிபாட்டுக் கடன்முடிக்கு முறையும் இதனுட் குறிக்கப்பட்டது. பயன் குறித்துத் தவம் செய்வோர் தமது உடம்பை இழவாது இம்மையிலேயே தவப்பயன் பெறுதல் சிறப்பென்பதையும் ஆசிரியர் சுட்டியுள்ளார். வீடுபேறு குறியாது செல்வத்தைக் குறிப்பவர்களை மக்களென்னாது மாக்களென்றது உற்றுநோக்கத் தக்கது.

> " தவஞ்செய் மாக்கள் தம்முடம் பிடா அது
> அதன்பய னெய்திய அளவை மான." (கக-கஉ)

என்றது காண்க.

இன்னும் அக்காலத்து இசைக் கருவிகளும் உணவு வகைகளும் இவற்றுட் காணப்படும். அக்காலத்துப் பொருநர் முதலியோர் சோறு புளிக்குழம்பு முதலிய

வற்றோடு ஊனுணவுங் கொண்டாரென்று தெரிகின்றது. புலவர், நன்றாக வெந்த சோற்றின் அவிழுக்கு முல்லை முகையை உவமித்தார்,

"...... . ......... ..முகிழ்த்தகை
முரவை போகிய முரியா வரிசி
விரலென நிமிர்ந்த நிரலமை புழுக்கல்." (கசஉ-கசச)

பலவகை மரங்களின் பெயர்களும் இதனுட் காணப் படுகின்றன.

கரிகாலனைப் பட்டினப்பாலையிற் பாடினவர் **கடியலூர் உருத்திரங்கண்ணனார்**. இவர் அவனிடம் பதினாறு நூறாயிரம் பொன் பரிசாகப் பெற்றார். இவர் பாடல் அகத்திலும், குறுந்தொகையிலும் வந்துள்ளன.

தொண்டைமானிளந்திரையனைப் பெரும்பாணாற்றுப் படையில் பாடியவரும் இப் புலவரே. வென்வேற்கிள்ளி என்பவனுக்குப் பீலிவளை என்னும் நாககன்னிகையிடம் பிறந்தவன் இளந்திரையன்.

✓ **உருத்திரன்** என்றொரு புலவர் குறுந்தொகையில் செய்யுள் செய்துள்ளார். இவர் கரிகால்வளவன் காலத்தில் **பட்டினப்பாலை** பாடி அதற்குப்பின் பெரும்பாணாற்றுப்படை பாடினார் என்று கருத இடமுண்டு. இளந்திரையன் வீரத்தைக் கூறுமிடத்து அவனைக் 'கடம்பமர் நெடுவே ளன்ன மீளி' என்றது காண்க. காஞ்சிநகர் மருங்குள்ள வெவ்வேறு மரபினர் இருக்கைகள் இதனுள் நன்கு விளக்கப் பட்டன. இடைக்குல மகளிர் புலியினது முழக்கம்போல் ஒலியுண்டாகும்படி தயிர் கடைதலும், காலையில் நெல்லுக்கு மோர் விற்றலும், குறிஞ்சி நிலத்திலே சென்று நெய்யை விற்று எருமை முதலியவைகளை வாங்கிக்கொள்ளுதலுங் கூறி, இடையர் குடியிருப்பிலே தினையரிசிச் சோற்றினைப்

பாலொடு பெறக்கூடுமென்று புலவர் குறிப்பித்தார். பின்னர் அவர் முல்லை நிலத்திலே வரகு முதலியவற்றை விதைத்து உழுதுண்பார் இருக்கையைக் கூறுமிடத்து, வரகரிசியோடு அவரைவிதைப்பருப்பை ஒன்றாய்ப் பொங்கி யுண்ணும் வழக்கத்தைக் குறித்தார். பின்னர் மருதநிலங் கூறுமிடத்து, செந்நெல் முதலிய பலவகை உணவுப் பொருள்களின் வளங்களைக் கூறினார். 'முகடுதுமித் தடுக்கிய பழம் பல்லுணவின்' என்றது காண்க. அவர் தச்சர்கள் வீடுகளில் சிறுபிள்ளைகள் சிறுதேருருட்டி விளையாடுவதும், செவிலித்தாயின் முலைப்பாலுண்டு துயில்கொள்ளு மியல்பும் கூறினார். இதில் தொழில் செய்வார் வெள்ளிய நெற்சோற்றோடு கோழியூனையும் கலந்துண்டல் குறிக்கப்பட்டது. அவர் வலைஞர்கள் கொழியலரிசியிலிருந்து செய்த கள்ளினை இறைச்சியோடு உண்பர் என்றனர். மேலும் அவர் தமிழ்ப் பார்ப்பார் வீடுகளிலே கற்புடைப் பெண்டிர் உயர்ந்த நெல்லுணவும், மாதுளங்காய், மிளகுப்பொடி, கருவேப்பிலை, வெண்ணெய் இவைகளைக் கலந்து செய்யப்பட்ட கறியோடு மாவடு ஊறுகாயும் இடுவர் என்றுங் குறிப்பித்தார். மகளிர் பந்தாடுதல், கழங்காடுதல் முதலிய வழக்கங்களும் இதனுட் குறிக்கப்பட்டன. பெரிய மாடங்களின் மீதேற்றிய விளக்கு மரக்கலங்களுக்கு ஊரின் கரையைக் காட்டிக் கூவுந்தன்மை யுடையன என்றார்.

> " விண்பொர நிவந்த வேயா மாடத்
> திரவின் மாட்டிய விலங்குசுடர் ஞெகிழி
> உரவுநீ ரழுவத் தோடுகலங் கரையும்."
>
> (பெரும்பாண். நுசஅ - கூ௫0)

என்றது காண்க.

யவனரது ஓதிம விளக்கு இதனுள் குறிக்கப்பட்டது. திருமால் கொப்பூழில் நான்முகன் பிறந்ததும் பாரதப்

போரும் இதனுட் குறிக்கப்பட்டன. முக்கனி முதலிய இயற்கைப் பொருள்களின் வளமும் இதனுள் திகழ்கின்றது.

**பட்டினப்பாலை** பாடி இப் புலவர் கரிகால்வளவன்பால் பதினாறு நூறாயிரம் பொன் பரிசு பெற்றாரென்பது கலிங்கத்துப்பரணியுட் குறிக்கப்பட்டது. இதனுட் போந்த அக் கருத்து பிரிதற்கரிய தலைவியது பிரிவின் கடுமையைத் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறியது. இதனுட் காவிரி எக்காலத்தும் வற்றாது ஓடுவதும், அது பொன் கொழிப்பதும், இடையறா விளைவைத் தருவதும், மகரக்குழையால் நெல்லைத் தின்னும் கோழியை எறிவதும், மூன்றுருட் சிறு தேரைக் குழந்தைகள் வீட்டுமுற்றங்களில் ஓட்டுவதும், சோலை, குளம் முதலியவற்றின் வனப்பும் பலவகைக் குடிகளின் இருக்கை இயல்பும், காவிரிப்பூம் பட்டினத்தே கடலாடி விளையாடி ஐம்பொறிகளுக்குரியவற்றை நுகர்ந்து ஆடவரும் பெண்டிரும் பலவகை இன்பங்களைத் துய்ப்பதும், ஏற்றுமதி இறக்குமதி செய்யுமிடங்களில் அளவில்லாத பண்டங்களைப் புலி அடையாளமிட்டுச் சுங்கங்கொள்ளு முறைமையும், முருகவேளுக்கும் ஏனைத் தெய்வங்களுக்கும் மகளிர் முதலியோர் விழாக்கொண்டாடுவதும், பல்குழுவினர் தந்தந் தொழிலைக் குறிப்பானெடுத்த கொடிகளினியல்பும், வணிகத்தால் வந்து மிகுந்த பொருட்செறிவால் சிறப்புற்றோங்கிய தெருக்களின் வளமும் இனிது கூறப்பட்டன.

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த வாரமு மகிலும்
தென்கடல் முத்துங் குணகடற் றுகிரும்
கங்கை வாரியுங் காவிரிப் பயனும்

ஈழத் துணவுங் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவு நெளிய வீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகில்
நீர்நாப் பண்ணு நிலத்தின் மேலும்
ஏமாப்ப வினிது துஞ்சி.'' (பட்டினப். கஅ௫-கக௫)

இதில் பல நாடுகளிலிருந்தும் போந்த பல மொழி பேசும் மக்களின் செறிவும் சுட்டப்பட்டது. மேலு மிதன்கண் வேளாளர் கொலை கடிந்து களவுநீக்கி வாழ்ந்தன ரெனவும், பசுக்களைப் பாதுகாத்தும், வேள்வி செய்தும், விண்ணவரை வழிபட்டும், அந்தணர் புகழ் பரப்பியும், நல்லுணவு பலர்க்கும் கொடுத்தும், அறத்தொழில்கள் முட்டுப்படாது அருளுடன் இல்வாழ்க்கை நடத்தியும், நடுநிலைமை பொருந்தி வணிகம் செய்தும், ஊதியத்தை வெளியாகச் சொல்லிப் பொருள் தேடியுமிருந்தனர் எனவும் கூறப்பட்டன.

"கொலை கடிந்தும் களவு நீக்கியும்
அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும்
நல்லா னொடு பக டோம்பியும்
நான்மறையோர் புகழ் பரப்பியும்
பண்ணிய மட்டியும் பசும்பதங் கொடுத்தும்
புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்
கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங்
பல்பண்டம் பகர்ந்துவீசும் [குறைகொடாது
தொல் கொண்டித் துவன் றிருக்கை.''
(பட்டினப் கக௯ - உக௨)

என்றது காண்க.

பின்னர்க் கரிகால்வளவன் வெற்றியும் வீரமும் விரிவாகக் கூறப்பட்டன. இதன் அகக் கருத்து உகஅ—உஉ0 இல் சுட்டப்பட்டது.

" முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே."

என்றது காண்க.

மேலும் இப்பாட்டிற் கரிகால் வளவன் ஒளி நாட்டாரையும், அருவாளரையும், வட அரசரையும், குடநாட்டிலுள்ளாரையும், பொதுவ ரென்பாரையும், இருங்கோவேள் என்ற வேளிரையும், வென்றானெனவும், காடு கெடுத்து நாடாக்கிக் குளந்தொட்டு வளம் பெருக்கினனெனவும் கூறப்பட்டன. புலவர் அவன் வீரத்தை இரண்டு மூன்று அடிகளில் மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.

" பெரும்பாழ் செய்து மமையான் மருங்கற
மலையகழ்க் குவனே கடறூர்க் குவனே
வான்வீழ்க் குவனே வளிமாற் றுவனென.''
(பட்டினப், உஎக-உஎங)

என்றது காண்க.

கரிகாற் பெருவளத்தானைப் பாடிய மற்றொரு புலவர் **கருங்குழலாதனூர்** என்பவர். அவர் புறம் எ ஆவது பாட்டில் அவனது வண்மையையும், எழிலையும், வீரத்தையும், நாட்டு வளத்தையும் இனிதெடுத்தியம்பினார். புறம் உஉச இல் அவன் பாணரைப் பாதுகாத்தமையும், வேத வேள்வி முடித்தமையுங் கூறி, அவன் இறந்தமையால் உரிமை மகளிரெல்லாம் அணி களைந்தனர் என்றும், உலகமே இரங்கத்தக்க தென்றும் உரைத்தார்.

**கழாத்தலையார்** என்னும் புலவர் குடக்கோ நெடுஞ் சேரலாதன் பொருது வீழ்ந்திறந்ததைக் கண்டு நெஞ்சம்

வருந்திப் பாடிய பாடல் புறம் சுஉ. போர்க்களத்தில் பருந்தும் பேயும் பொருந்துவதைப் பற்றியும், பல்வேறு மொழிகள் பேசும் படைகள் துணை புரிவதைப் பற்றியும் இப்பாட்டினுள் இயம்பினர். இறந்த வீரரின் பெண்டிர், 'பச்சிலை தின்னாது குளிர் நீரில் முழுகாது கிடந்தனர்' என்றமையால், அங்ஙனம் செய்தல் அக்காலத்துக் கைம்மை வழக்கம் என்று தெரிகிறது. மேலும் அப் பெண்டிர் போர்க்களத்திற் சென்று தங்கணவருடன் உயிர்விடுங் கற்புடையராய்த் திகழ்ந்தா ரென்றும் விளங்குகின்றது. இவர் புறம் சுரு இல் பெருஞ்சேரலாதன் கரிகாலனோடு பொருது வடக்கிருந்தானைக் கையறு நிலையாகப் பாடினார். கூசுஅ இலும் இவர் உயிர் போகாது போர்க்களத்திற் கிடந்து வருந்துபவனைப் பற்றி இரங்கிப் பாடினது காண்க. இவர் பாடிய பாடல்கள் மிகுதியுங் கையறுநிலையே. இருங் கோவேள் என்பவன் இவரை இகழ்ந்ததாகப் புறம் உ0உ இல் கபிலர் கூறுவதால் இப் புலவர் கபிலர்க்கு முற்பட்டவர் என்பது தெளிவு.

கடைச்சங்கத்தார் காலத்துச் சிறந்து விளங்கிய பெரும்புலவர்களாகிய கபிலருக்கும் நக்கீரருக்கும் முற்பட்டவர் பரணர். இவர் அகநானூற்றில் ஏறக்குறைய கூச பாடல்களும், புறத்துள் கரு பாடல்களும் பாடியுள்ளார். நற்றிணையிலும் குறுந்தொகையிலும் இவர் பாட்டுக்களுள் ளன. பதிற்றுப்பத்துள் ரு ஆம் பத்து இவரால் பாடப் பட்டது. இவர் இன்ன ஊரார் இன்ன குலத்தாரென்று தெளிவாய் விளங்கவில்லை. பதினோராம் திருமுறையில் சிவபெருமான் திருவந்தாதி ஒன்று இவர் பாடிய தென்ப. நெடுங்கழுத்துப்பரணர், வன்பரணர் என்பவர் இவரின் வேறுவர். இவர் பரணி நாளிற் பிறந்தமையால் இப் பெயர் பெற்றனர் எனக் கூறுவாருமுளர். 'கடல்பிறக்கோட்டிய

செங்குட்டுவனை இவர் பாடியிருப்பதால், அவன்காலத் தவர் என்பது தெளிவு.

குடக்கோ நெடுஞ்சேரலாதனும், வேற்பல் தடக்கைப் பெருநற்கிள்ளியும் போர் செய்து வீழ்ந்திறந்த விடத்துப் பரணர் பாடிய பாட்டு புறம் கங ஆவது. அதனுள் நால்வகைச் சேனையும் செயலற்றிருந்த இரக்கமான நிலையை எடுத்துரைத்தார். குட்டுவனது போர்க்களத்தை ஏர்க்களத்துக் குவமித்து இவர் பாடிய பாட்டு புறம் ருசுகூ. தழும்பன் என்பவனைப் பற்றிப் புறம் ருசஅ இலும், தித்தன் என்னும் சோழனைப்பற்றி ருருஉ இலும் இவர் குறித்துள்ள மையால் அவர்கள் இவர்காலத்துக்கு முற்பட்டவர்களென்று கருத இடமுண்டு.

வையாவிக்கோப்பெரும்பேகனை இவர் பாடிய புறம் கசக ஆவது பாட்டு பாணாற்றுப்படையாகவும், புலவராற்றுப் படையாகவும் இருக்கிறது. அப் பாட்டில் பேகனென்பான் மறுமை நோக்காது வறுமை நோக்கி ஈயும் வண்மையுடையவ னென்பது, புறம் கசஉ இல் அவன் மயிலுக்குக் குளிர் நீங்குதற் பொருட்டுப் போர்வை கொடுத்தவன் என்பதும் விளங்குகின்றன. பேகனல் கைவிடப்பட்ட கண்ணகி என்பவளை அவன் மீண்டும் சேர்த்துக் கொள்ள வேண்டு மென்று அவனைப் புறம் கசச ஆவது, கசரு ஆவது பாட்டு களில் இவர் வேண்டியுள்ளார்.

✓ ( தித்தனைப்பற்றி அகம் கூ, கஉஉ இலும் செழியன் கூடற்போரைப்பற்றி அகம் ககசு இலும், பசும்பூட் பாண் டியனைப்பற்றி அகம் கசுஉ இலும், கரிகால்வளவனைப்பற்றி அகம் கஉரு இலும், அவன் வேளிர் பதினொருவரை வெண்ணிப் பறந்தலையில் வென்றதைப் பற்றி அகம் உசசு இலும், மாந்தரம்பொறையன் கடுங்கோவைப்பற்றி அகம்

கசஉ இலும், குட்டுவனைப்பற்றி உகஉ இலும் பாடியிருப்பதால் இவர் காலத்துப் பெருவேந்தர்களில் இவரால் பாடப்பெறுதாரில்லை. (கரிகால்வளவன் மகளாகிய ஆதிமந்தி தன் கணவனுகிய ஆட்டனத்தி யென்னும் சேர அரசனைக் காவிரிப் புதுப்புனல் விழாக் கொண்டாடும் கழார்ப் பெருந்துறையில் தப்பவிட்டு வருந்திக் கடற்கரைக்குச் சென்று மருதி என்பவளது உதவியால் அவனைக் கண்டு மீட்டுவந்த கதையினை அகம் எசு, உஉஉ, உஙசு ஆம் செய்யுட்களில் இவர் குறித்துள்ளார்.)

இவர் குறுநில மன்னருள் சோழன் வீரனுகிய மத்தி என்பவனை அகம் சு ஆவது பாட்டிலும், பரிசிலர்க்கு யானையும் நன்கலனும் அளிக்கும் அஃதை என்பவனை அகம் எசு ஆவது பாட்டிலும், கழுவுள் என்பவனை கஙரு ஆவது பாட்டிலும், நன்னனை கருஉ, உoஅ ஆம் பாட்டுக்களிலும் நன்னன் உதியனை உருஅ ஆம் பாட்டிலும், பொதியில் தலைவனுகிய திதியனை ஙஉஉ ஆவது பாட்டிலும், சோழன் படைத்தலைவனுகிய பழையன் என்பவனை ஙஉசு இலும், கோசரால் கண் களையப்பட்ட அன்னி என்பவன் கதையை உசுஉ இலும், ஆய் எயினன், மிஞிலி என்பவருக்குள் நடந்த போரினை கசஅ இலும், எவ்வி நீடூர் கிழவோன் என்பவனை உசுசு இலும், வல்லன்கிழான் என்பவனை ஙருசு இலும், பாணன், ஆரியப்பொருநன் என்பவர்களை ஙஅசு இலும் நள்ளியை கருஉ இலும் குறித்துரைத்தனர். அகம் உஉசு இல் கட்டியென்பான் குறிக்கப்படுகிறுன்.

பரணர் ஆரியரைப்பற்றி உஎசு, ஙகூசு என்றவைகளிற் பேசியுள்ளார். கொல்லிமலையிலுள்ள கடவுள் எழுதிய பாவையைப்பற்றி அகம் சுஉ இலும், கவிர மலையிலுள்ள சூர் மகளைப்பற்றி கககூஅ இலும் இவர் பாடியிருக்கின்றுர். இவர்

ஆலமுற்றம் என்னுமிடம் சிவனூர்க்குரியது என்று கூறிய அகம் கஅக இல் அவரை,

" நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்
ஆலமுற்றங் கவின்பெறத் தைஇப்
பொய்கை சூழ்ந்த பொழின்மனை மகளிர்
கைசெய் பாவை துறைக்க ணிறுக்கும்."

என்றது காண்க.

பரணர் யானைகளை மிகுதியாகவுடைய ஆயைப்பற்றி அகம் கஙஉ இலும் பிறவிடங்களிலும் குறித்துள்ளார். இவர் மருதம், குறிஞ்சி, பாலை என்னும் முத்திணையையுமே மிகுதியாகப் பாடியுள்ளார். அக்காலத்தில் இரவலர்க்கு ஆம்பல் இலையில் சுடுசோற்றினை இனிய புளிப்புடைய பிரம்பின் பழங்களோடு கலந்து விடியற்காலத்தில் இடுவதை இவர் ககூசு இல் குறித்தமை காண்க. இவர் குட்டுவனைப் பாடி உம்பற்காட்டு வருபடியையும், அவன் மகன் குட்டுவன் சேரலையும் பரிசிலாகப் பெற்றனர்.

மாமூலனூர் முன்னும் கழாத்தலையார் அவருக்குப் பின்னும், பரணர் அவருக்குப் பின்னும் வாழ்ந்திருந்தனர். மாமூலனூர் குடக்கோ நெடுஞ்சேரலாதனைப் பாடவில்லை. கழாத்தலையார் பரணர் பாடிய வேல்கெழுகுட்டுவனைப் பாடவில்லை.

பரணர் பாடிய ஆய் எயினனையே என்று தோன்றுகின்றது. ஆய் அண்டிரன் என்பவன் பிற்காலத்தில் திகழ்ந்தவன். இவனே மோசி பாடிய ஆய் ஆவான். ஆய் எயினன் யானை ஈயும் வண்மையுடன் வெளியன் வேண்மானாய்த் திகழ்ந்தானென்பதும் பாழிப்பறந்தலையில் மிஞிலியோடு பொருது வீழ்ந்தகாலை அவன் உடம்பினை நன்னன் மறைத்து வைத்ததும் அஃதைப்பற்றிய குறிப்பும் அகம் உ0அ

இல் காணப்படும். குறுந்தொகை ௩௨௮ இல் விச்சியர் தலைவன் குறும்பூரில் வேந்தரொடு பொருத செய்தி பேசப் பட்டது. நற்றிணை ௬ இல் வல்விலோரியைப்பற்றிய குறிப் பும், நற்றிணை ௪௦௦ இல் தேர்வண்மலையனைப்பற்றிய குறிப் பும் காண்க.

**பதிற்றுப்பத்து ஐந்தின்** இரண்டாவது பாட்டில் வட திசை யெல்லை இமயமாகத் தென்னங்குமரியொடாயிடை எனவும், கடவுள் நிலைய கல்லோங்கு நெடுவரை இமயமாக வும் பரணர் கூறியது காண்க. மூன்றாம் பாட்டில் சேர மன்னன் மோகூர்மன்னனை வென்று முரசங்கொண்டு அவன் வேம்பினைத் தடிந்தமை கூறப்பட்டது. நான்காம் பாட்டில் கடலோட்டினமை கூறப்பட்டது. ஐந்தாம் பாட்டில் காஞ்சியம் பெருந்துறை குறித்தமை காண்க. அப் பத்தின் பதிகத்துள் குட்டுவன் வயவர்களின் வியலூரை அழித்ததும், பழையன் வேம்பினை வெட்டினதும் சோழர் குடிக்குரியோர் ஒன்பதின்மரை வென்றதுங் கூறப்பட்டன.

வையாவிக்கோப்பெரும் பேகனைக் கபிலர், அரிசில் கிழார், பெருங்குன்றூர்கிழார் முதலியோர் பாடினதாகப் புறநானூற்றில் தெரிய வருகின்றது. எனினும் பரண ரோடு ஒத்த காலத்தவராக அவர்கள் தோன்றுமையால் அப்பெயருடைய முன்னோர் பரணர் காலத்தில் அவனைப் பாடியிருக்கலாம். அல்லது அப்புலவர்கள் மிக நீண்ட ஆயுளுடையவர்களாய் இருக்கவேண்டும்.

தொண்டியிலாண்ட பொறையன் குடும்பத்தைச் சார்ந்த **பாலைபாடிய பெருங்கடுங்கோ** என்பவர் அகநானூற் றிலும் சில பாடல்கள் பாடியுள்ளார். இவர் பாடல்கள் நற்றிணையிலும் உள்ளன. கலித்தொகையில முதலாவது **பாலைக்கலி** இவர் பாடியது. இவர் யாண்டும் பாலையைப்

பாடியுள்ளார். இவரைப் பேய்மகள் இளவெயினி யென்னும் புலவர் புறம் கக இல் பாடினர். பேய்மகள் என்றது பேய்த்தெய்வத்தை வழிபட்டு வருவதால் அதன் வெறியுற்றவள் என்று கருத்து. எயினி என்றதால் எயினர் மரபினள் இவள் என்பது தெளிவு. இவள் பாடிய பாட்டினுள் மங்கையர்கள் மணற்பாவை செய்து அதற்குப் பூக்கொய்து சாத்துதலும், ஆற்று நீரிற் பாய்ந்து விளையாடுதலும், அரசர்கள் பாணருக்கும் விறலியருக்கும் முறையே பொன்னணிகலமும், வெள்ளிநாராற் றொடுத்த பொற்றாமரைப் பூவும் பரிசாகக் கொடுப்பதுங் கூறப்பட்டன.

பெருங்கடுங்கோவின் தம்பி **மருதம் பாடிய இளங்கடுங்கோ** மருதம் பாடுவதிற் சிறந்தவர். இவர் அகத்துட் பாடிய கசு ஆம் பாட்டில் அஃதை என்னும் பெண்ணின் தந்தை சேர பாண்டியரைப் பருவூரென்னுமிடத்திற் பொருது வென்றானென்றுங் கூறியுள்ளார். அகம் களசு இல் இவர் மருதநிலக் கருப்பொருளாகிய தாமரை முதலியவற்றை மிகவும் அழகாகப் புனைந்துரைத்தார். ஆண்டு,

> "கழைகண் டன்ன தூம்புடைத் திரள்காற்
> களிற்றுச் செவியன்ன பாசடை மருங்கிற்
> கழுநிவந் தன்ன கொழுமுகை இடையிடை
> முறுவன் முகத்தில் பன்மலர் தயங்கப்
> பூத்த தாமரைப் புள்ளிமிழ் பழனத்து."

என்றது காண்க. இப் பாட்டினுள் 'புல்லுளைக் குடுமிப் புதல்வர்' என்றதால் அக்காலத்தில் குழந்தைகளுக்கு அழகிய சிறு குடுமி வைப்பது வழக்கமென்று தெரிகிறது.

**வெள்ளி வீதியார்** அகநானூற்றிலும், குறுந்தொகையிலும், நற்றிணையிலும் பாடியுள்ளார். இவர் வானவரம்பன் கடலோட்டிய செய்தியைப் பற்றியும் திதியன் அன்னி

போரைப்பற்றியும் அகம் சஈ இல் பாடியுள்ளார்." இச் செய்யுளில், 'ஆதிமந்தி போலப் பேதுற்று' என வருதலுங் காண்க. கழற்றெதிர் மறை என்னும் துறையிலமைந்த இவரது குறுந்தொகைப் பாட்டு மிக்க சுவையுள்ளது. அது வருமாறு:

"இடிக்குங் கேளிர் நுங்குறை யாக
நிறுக்க லாற்றினோ நன்றுமற் றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கின்
கையில் ஊமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற் கரிதே."

(குறுந்: ருஅ)

பரணர் பாடிய திதியன், அன்னி என்பவர்களைப்பற்றிக் கயமனார் என்னும் புலவர் அகம் கசஈ இல் பாடியுள்ளார். இவர் பாடிய அகப் பாடல்கள் பாலைத்திணைக்குரியனவே. இவர் புறம் உருச இல் ஓர் இளைய வீரன் காட்டிடை இறந்த தற்காக வருந்தும் முதுபாலைத்துறையை அமைத்துள்ளார். இவருடைய பாடல்கள் குறுந்தொகையிலும் நற்றிணையிலும் வந்துள்ளன. "கயத்தில் முழுகும் பெண்களுடைய கண்களை உப்பங்கழியில் நீர்மிகுந்த இடத்து மலருங் கருநெய்தற் பூவிற் குவமித்தமையால் (குறுந். கூ) இவர் இப்பெயர் பெற்றனர் என்பர்."

உமட்டூர் கிழார் மகன் பரங்கொற்றனார் தாம் பாடிய அகம் சுகூ இல் மோரியரையும் வயவர்பெருமானாகிய ஆயையும் பற்றிக் கூறியுள்ளார். இவர் கூறிய ஆய் பரணர் குறித்த ஆய் எயினனாய் இருத்தல் கூடும்.

ஈழத்துப் பூதன்தேவனார், பரணர் பாடிய பசும்பூட் பாண்டியனைப் பாடியிருத்தலால், பரணர் காலத்தவர் ஆவர். இவர் பாடல்கள் அகநானூற்றிலும், குறுந்தொகையிலும்,

நற்றிணையிலும் உள்ளன. இவர் விலங்கின் குறும்புகளை அறிவதில் மிக வல்லவர் போலும். அகம் அஅ இல் தினைக் கதிரைத் தின்னவரும் பன்றி பல்லிக்குறி பார்த்துவரும் என்றதும், அசுணமா வண்டின் ஒலியை யாழோசையோ என்று கருதினதும் காண்க. அகம் ௩௦௭ இல் "கடவுள் போகிய கருந்தாட் கந்தத்து" என்றதால் தூணில் கடவுள் வழிபாடு செய்யும் வழக்கம் அக்காலத்திலிருந்த தென்பது புலனாகும். அது சிவலிங்கமாயிருத்தல் கூடும். 'கருந்தாள்' என்பது பீடத்தையும், 'தூண்' லிங்கமாகிய பிழம்பையும் குறிக்கும். இவர் ஈழநாட்டுப் புலவர் போலும்.

பரணர் பாடிய அஃதையின் சிறப்பை **வெள்ளெருக் கிலையார்** என்பவர் புறம் ௨௩௩ஆம் பாட்டினுள் குறித் துள்ளார். அவர் எவ்வியைப் பாடிய இரண்டு பாடல்களும் அவன் இறந்தபின் பாடப்பட்டவைகளே. புறம் ௨௩௪ இல் எவ்வியின் மனைவி யானையடி அளவு மெழுகிய சிறிய இடத்தின்கண்ணே புல்மேல் அவனுக்குப் பிண்டம் வைத் ததைக் குறித்திருப்பது மிகவும் இரக்கத்தை உண்டாக்கக் கூடியது.

**மதுரைக் கணக்காயனார்**, பரணர் பாடிய பசும்பூட் பாண்டியனை அகம் ௩௩௮ இல் குறித்துள்ளார். நற்றிணையி லும் புறத்திலும் அவர் பாடல்கள் வந்துள்ளன. அவர் நக்கீரர் தந்தையின் வேறுவர்

தித்தன் மகன் போர்வைக் கோப்பெரு நற்கிள்ளி முக்காவனாட்டு ஆமூர்மல்லனைப் பொருது கொன்றடைந்த வெற்றியைச் **சாத்தந்தையா**ரென்னும் புலவர் புறம் அ௦, அக, அ௨ இற் புகழ்ந்து பாடினர்.

பெருங்கோழி என்னுமூரிற் சிறப்புற்றிருந்த நாய்கன் ஒருவன் மகள் **நக்கண்ணையா**ரென்னும் புலவர், போர்வைக்

கோப்பெரு நற்கிள்ளியின் மீதுள்ள காதலால் கைக்கிளை யாகப் பாடிய பாடல்கள் புறம் அரு, அச, அரு. அக்கிள்ளி யின் செவிலித் தாயாகிய காவற்பெண்டு என்பவள் அவனைக் காணுமிடம் செருக்களமென்று அவன் வீரத்தைப் பாடிய பாட்டு அசா. அது ஏறாண்முல்லை என்னும் துறையிலமைந் துள்ளது.

**பேரெயின் முறுவலார்** என்னும் புலவர் புறம் உருகூ இல் நம்பி நெடுஞ்செழியனது சிறப்பை நயமிகப் பாடியுள்ளார். இவர் அப்பாட்டினால் உலகத்திலுள்ள எல்லாவகை இன்பங் களையும் அவன் நுகர்ந்தனன் எனவும், பல்வகை மக்க ளிடத்து அவரவர் தகுதிக்கேற்ப நடக்குந் தன்மையும் வண்மையும் உடையவனாய் இருந்தனன் எனவும், இனி அவனுக்கு யாது நேரினும் அதுபற்றிக் கவலையில்லை என வும் கூறினார். இவர்,

> "வலியரென வழிமொழியலன்
> மெலியரென மீக்கூறலன்
> பிறரைத்தா னிரப்பறியலன்
> இரந்தோர்க்கு மறுப்பறியலன்." (சு-க)

என்ற அடிகளால் அவனது தகுதியை விளக்கினது காண்க. இப்புலவர் பெயரால் இவர் சோழ நாட்டிலுள்ள பேரெயிலென்னுமிடத்தில் வாழ்ந்தவ ரென்ப. முப்புர மெரித்த சிவபெருமானது திருப்பெயரை உடையவரென் றுங் கூறுப.

**இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப்பெருங் கௌசிகனார்** என்பவர் பல்குன்றக்கோட்டத்துச் செங்கண்மாத்து வேள் நன்னன்சேய்நன்னனைப் பாடியது **மலைபடுகடாம்**. இது கூத்தரென்பாரை அவன்பால் ஆற்றுப்படுத்தியதைக் கூறுவ தால் **கூத்தராற்றுப் படை** யெனவும் பெயர்பெறும். புலவர்

யலைக்கு யானையை உவமை கூறி மலையிலுள்ள ஓசையைக் கடாம் என்றனர். ஆதலின், மலைபடுகடா மெனப்பட்டது. நன்னனது வீரமும், வண்மையும், நவிரமென்னும் மலையில் நீலகண்டர் வீற்றிருப்பதும், நன்னனது குறிஞ்சி நிலத்தின் இயற்கை வளமும் கூறிப் பாணர் நன்னன்பால் மிகுந்த உணவைப் பெறுவா ரென்றுங் கூறினர். அவர் பல்வகை ஊனுணவும், மலைப்பண்டங்களும், போவதற்குரிய வழியின் கடுமையுங்கூறி, மலையிலுள்ள பல ஓசைகளும் ஒருங் கொலிக்கு மிடத்து யானையின் ஒலி திசைகளெல்லாம் ஒலிப்பது போலுமென்பார், "மலைபடுகடாம் மாதிரத் தியம்ப" (நசஅ) என்றது காண்க. மலையில் வீழுகின்ற அருவிகள் வெற்றிக் கொடிகள் போலத் தோற்றுமென்று புலவர் குறிப்பித்தார். மலையின் இயல்பு இதனுட் கூறப் பட்டதுபோல் வேறெங்கும் கூறப்படவில்லை.

குடக்கோ நெடுஞ்சேரலாதன் புதல்வனுய்த் தொண்டியில் வீற்றிருந்த வானவரம்பன் என்னும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் **காக்கைபாடினியார் நச்செள்ளையார்** பாடியது **பதிற்றுப்பத்துள் ஆறும் பத்து.** இவர் பெண்புலவர். குறுந்தொகை உகO இல் 'விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே' என்று காக்கையைச் சிறப்பித்துப் பாடினமையால் காக்கைபாடினியார் என்ற பெயர் பெற்றனர். இப் பாட்டிற் குறித்த நள்ளி பரணர் பாடிய நள்ளியாய் இருத்தல்கூடும். வன்பரணர் பாடிய நள்ளி பிற்காலத்தவன். நள்ளியின் குடும்பம் நெடுநாளாய்த் திகழ்ந்தது. (வீரத் தாயொருத்தி தன் மகன் போர்க்குப் பின்வாங்கினு னென்று கேள்விப்பட்டு அங்ஙனம் அவன் செய்தால் தன் மார்பினைத் துணிப்பதாக வஞ்சினங்கூறிக் கையிற் கொண்ட வாளோடு போர்க்களத்திற் சென்று, தன் மகன் போரிற் பட்டு விழுந்து கிடந்ததைக் கண்டு பெற்ற போழ்தினும்

மிக உவந்ததாகப் புறம் உஎஅ இல் இவர் பாடியுள்ளார். அவ்விடம் வருமாறு:

"செங்களந் துழவுவோள் சிதைந்து வேறுகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே."

பதிற்றுப்பத்துப்பாடி, அணிகட்காக ஒன்பது துலாம்பொன்னும் நூறுயிரம் பொற்காசும் பெற்றதோடு, அரசன் பக்கத்தில் வைக்கும் சிறப்பும் அடைந்தார். இதனுள் அரசனது போர் வீரமும், அவன் மழவரை வென்றடைந்த கொற்றமும், படைச்சிறப்பும், அரண்களைக் கைப்பற்றுமாற்றலும், பிறவும் விரித்துரைக்கப்பட்டன. இமயமலையில் அரவின் மணிகள் நிறைந்திருப்பதும், அது வடக்கெல்லையென்பதும் விளக்கப் பெற்றன.

ஆய் அண்டிரனை ஏணிச்சேரி முடமோசியார் மிகவும் வியந்து பாடினமையால், 'மோசி பாடிய ஆய்' என்னும் மொழி எழுந்தது. புறம் கஉஎ இல் ஆய் தனது யானையைப் பாணர் முதலிய பரிசிலர்க்குக் கொடுத்துவிட்டமையால் அவை கட்டப்படும் தறியின்கண்ணே காட்டு மயில்கள் விளையாடின என்றனர் புலவர். புறம் கஉகூ, கஙக, முதலியவைகளில் அவனை அவர் அண்டிரன் என்றது காண்க. புறம் கஙo இல் கொங்கரை மேலைக்கடற்கண் நடந்த போரில் இவன் வென்றனனென்று குறித்தார். புறம் கஙக இல் ஆய் புன்னைப்பூ மாலையுடையவ னென்றார். புறம் கஙஉ இல் அவனையன்றிப் பிறரைத் தன் நா புகழ்ந்தால் அது பிளக்கப்பட வேண்டுமென்றார். பிறர் புகழைக் கேட்குஞ் செவி பாழுங் கிணறுபோலத் தூர்ந்து போகக் கடவதென்றார். தென்றிசைக்கண் ஆய்குடியும் வட திசைக்கண் இமயமும் இல்லாவிடில் உலகம் நிலைபிறழ்ந்து

விடுமென்றார். புறம் ௧௩௩ அவர் பாடிய விறலியாற்றுப் படை. புறம் ௧௩௪ இல் ஆய் பயன்கருதாது கொடுப்பவன் என்பார்,

> "இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
> அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்."

என்றார். ௧௩௫ ஆம் பாட்டும் அவனை அவர் பாடியதே. புறம் ௨௪௧ இல் அவனை வானோர் சிறப்பாக எதிர் கொள்வரென்றார். ௩௭௪ உம் ௩௭௫ உம் அவர் அவனைப் பாடியனவே. முடமோசியார் என்றமையால் இவர் முடவர் போலும் என்ப. புறம் ௧௩ இல் இவர் முடித்தலைக் கோப் பெரு நற்கிள்ளியைச் சேரமான் அந்துவஞ்சேரல் இரும் பொறைக்கு இன்னனென்று விளக்கினர். அவனுடைய யானையைக் கடலின்கண்ணே செல்லும் மரக்கலத்திற்கும், உடுக்களின் நடுவே செல்லும் மதிக்கு மிவர் உவமித்தார்.

ஆயைப் பாடிய பிறிதொரு புலவர் துறையூர் ஓடைகிழார். அவர் பாடிய ௧௩௬ ஆவது பாட்டு தமது வறுமை கூறிப் பரிசில் கேட்டதாகும். ஆயைப் பாடிய மற்றொருவர் குட்டுவன் கீரனாரென்பவர். இவர் அவன் இறந்ததற்காகப் புறம் ௨௪௦ இல் கையறுநிலை பாடியவர். இப் புலவர் குடநாட்டரசைச் சேர்ந்தவரென்று தெரிகின்றது.

(கபிலர் பிறந்த ஊர் பாண்டியநாட்டிலுள்ள திருவாதவூ ரென்று வேம்பத்தூரார் திருவிளையாடலால் தெரிகின்றது. அதனுள், "காதல்கூர் பனுவல் பாடும் கபிலனார் பிறந்த மூதூர்" என்றது காண்க. ஆனால் இவர் பாண்டியனைப் பற்றி மிகுதியாகப் பாடினதாகத் தெரியவில்லை. புறம் ௩௩௭ இல் சோழ அரசன் ஒருவனைப் பாடியவிடத்துக் கபில நகரென்னும் ஓர் ஊரைப்பற்றிக் கபிலரே பேசுகின்றார். அது சோழநாட்டில் உள்ளதாய இப் புலவருடைய ஊராக

யிருந்தாலும் இருக்கலாம்: 'யானே பரிசிலன் மன்னு மந்தணன்' என்று இவரும், "புலன் அழுக்கற்ற அந்தணாளன்' என்று நப்பசலையாரும் கூறினமையால், இவர் அந்தணரென்பது தெரிகின்றது.

வையாவிக் கோப்பெரும்பேகனைக் கண்ணகியை ஏற்றுக்கொள்ளும்படி பரணர் பாடியதுபோலக் கபிலரும் புறம் கசஅ இல் அவனை வேண்டிப் பாடியிருக்கின்றார். அதனுள் மழையை வேண்டியும், மழையின்மையை வேண்டியும் குறவர் பலிதூவிக் கடவுளை வழிபடுதல் குறிக்கப் பட்டது. இவர், 'மழைபோலக் கண்ணீர் பொழிந்து மார்பினை நனைத்துக்கொண்டு,குழல்போல இரங்கிக் கண்ணகி அழுதலையுங் குறிப்பித்தார்.' (கபிலரும் பரணரும் வெவ்வேறு காலத்தவராய்த் தெரிதலால் இப் பாட்டினைப் பாடிய வர் கபிலருக்கு முன்னோராய தொல்கபிலரா யிருக்கலாம். அல்லது இவனைப் பாடுகையில் பரணர் முதியவராயும், கபிலர் இளைஞராயும் இருந்திருக்கவேண்டும்.)

(கபிலர் செல்வக் கடுங்கோவாழியாதனைப் பதிற்றுப் பத்துள் ஏழாம்பத்திற் பாடி நூறாயிரம் பொற்காசும் 'நன்றா' வென்னுங் குன்றேறி நின்று கண்ணிற்கண்ட நாடனைத்தும் பெற்றனர்.) இதில் கடவுளுக்கும், பெரியோர்க்கும் அறவோர்க்கும் செய்யவேண்டிய கடமையை அரசன் நன்கியற்றினன் என்பது கூறப்பட்டது. 'அரசனது எயிலெடுக்குமாற்றலையும், அவனது கற்புடைய மனைவியின் மாண்பினையும், பாணர்க்கு வரையாது கொடுக்கும் வண்மையையும், யானைப்படையின் சிறப்பையும் புலவர் இனிது மொழிந்தனர். இவர் குறிஞ்சியின் வளமுணர்த்து வான் தேன்நிறைந்த பலாப்பழத்தின் வளத்தையும், இழுமென இழிதரும் பறைக்குரலருவியின் சிறப்பையும், பிற

வற்றையும் எடுத்துரைத்தனர். அரசன் தன்னுடைய வேள்வித் தலைவனிலும் நன்றாக அறநெறி அறிந்தவனென்று கூறப்பட்டது.

இவர் பத்துப்பாட்டிற் குறிஞ்சிப் பாட்டுப் பாடியவர். ஐங்குறு நூற்றில் குறிஞ்சித் திணையைக் குறித்து நூறு பாட்டு இவராற் பாடப்பட்டன. கலித்தொகையில் குறிஞ்சியைப் பாடினவரும் இவரே. நற்றிணையுள்ளும் குறுந்தொகையுள்ளும் இவர் பாடிய பாடல்கள் உள்ளன. பதினெண்கீழ்க் கணக்கில் இன்னா நாற்பது இவராற் பாடப்பட்டது. சங்க நூல்களில் இவர் பாடல்கள் ஏறக்குறைய இருநூற்றறுபதுக்கு மேலிருக்கின்றன. (பதினோராந் திருமுறையில் மூன்று நூல்கள் இவராற் பாடப்பட்டன என்ப. அவற்றைப் பாடிய புலவர் வேறென்பது தெளிவு. தொல்காப்பியத் திற்கோர் உரை இவராற் செய்யப்பட்டதென்று சொல்கின்றார்கள். அது இப்போது வெளிவரவில்லை.) அஃதையென்னும் மதுரை வள்ளலை இவரும் புறம் கசஎ இல் பாடியுள்ளார்.

சேரமான் கடுங்கோவாழியாதனைப் புறம் அ இல் கபிலர் பாடிய பாட்டு இயன்மொழி யென்னுந் துறையின்பாற்படும். திங்களும் ஞாயிறும் அவனுக்கொப்பாகாவென்று இவர் அவனைப் புகழ்ந்தார். (புறம் கச இல் செல்வக் கடுங்கோ வாழியாதன் கபிலர் கையைப்பிடித்து உம்முடைய கைகள் மெல்லியவாய் இருக்கின்றனவே யென்று கூற, அரசன் கை வலிதாயிருப்பதற்கும் தன்கை மெலிதாயிருப்பதற்கும் ஏதுக்கூறுவார், யானையையுங் குதிரையையும் வன்மையொடு பிடித்து நடத்தவும் வில்லின் நாணை இறுகப் பிடித்து அம்பை விடவும், பரிசிலர்க்கு அணிகலன்களை அமைக்கவும் பயன்படுவதால் அரசன் கைகள் வன்மையுடையனவாயின

என்றும், 'அவனளிக்கும் சோற்றையும், கறியையும் ஊனை யும் துவையையும் உண்டு வருந்துஞ் செயலல்லது வேறு செயலினைப் பரிசிலர் கைகள் அறியாவாகலின் அவருள் ஒருவராகிய தமது கை மென்மையுடையதா யிருந்த தென்றுங் குறிப்பித்தார்.) இவர் போர்வன்மையில் முருக னுக்கு இவ் வரசனை உவமித்தது காண்க. காரி, ஓரி என்பவர்களைப்பற்றிக் குறுந்தொகையிலும், நற்றிணையிலும் இவர் கூறியுள்ளார். அகத்துள் இவர் பாடிய பாடல் யாவுங் குறிஞ்சிக்குரியனவே. அகம் உ0ங இல் பாலையைப் பாடி யுள்ளார். அதனுள்ளும் தலைவன் தலைவர்க்குப் பிரிவு கூறாது உடன்போக்கே கூறினர்.

புறத்துள் பாரியைப்பற்றி இவர் பாடிய பாடல் புறம் க0ரு. இவர் பாரியைப் பாடியதும் விறலியாற்றுப்படை. புறம் க0சு இல் பாரி தன்பால் வந்த யாவர்க்கும் வரையாது கொடுப்பவன் என்பதை விளக்கினர். புறம் க0எ இல் அவன் வண்மையால் மாரிக்கு ஒப்பாவான் என்பதை மிகவும் நயமாகக் கூறியுள்ளார். இவர்,

> "பாரி யொருவனு மல்லன்
> மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே."

என்றது காண்க.

கபிலர் புறம் க0அ இல் பாரியின் பறம்புமலை அவனைப் பாடினவர்களுக்குச் சொந்தமென்று கூறிப் புகழ்ந்தனர். புறம் க0கூ இல் பறம்புமலையில் நெல்லும், பலாப்பழமும், வள்ளிக்கிழங்கும், தேனும் செழித்திருக்கும் வளத்தைப் பாடி, மூவேந்தரும் தமது படைவலியால் அதனைக் கைப் பற்றுதல் முடியாது, ஆடல் பாடல் வல்லராய்ப் பாரிபாற் சென்றால் பரிசிலாக அதனைப் பெறலாம் என்றனர்.

புறம் ககo, கக்க இலும் இக் கருத்துக்களையே வலியுறுத்திப் பாடினர். புறம் ககo ஆம் பாட்டினால் பாரி என்பவன் பரிசிலர்க்கு முந்நூறு ஊர் கொடுத்ததாகத் தெரிகிறது. மூவேந்தரும் பறம்புமலையை முற்றுகைசெய்து கைப்பற்றிப் பாரியையும் வஞ்சித்துக் கொன்றனர். ஆயகாலை கையறு நிலையாகப் பாரி மகளிர் பாடிய பாட்டு புறம் ககஉ. அது மிகவும் இரக்கத்தை விளைவிப்பது.

பாரியின் மகளிர்க்குக் கணவரைத் தேடிச்சென்ற காலை கபிலர் பறம்புமலையை நோக்கிப் பாடிய பாட்டு புறம் ககரு முதல் கஉo முடிய உள்ளனவாகும். (புறம் உOO இல் விச்சுக்கோன்பாற் கபிலர் சென்று முல்லைக்கொடிக்குத் தேர்வழங்கிய பாரியின் புதல்வியரை அவன் மணந்து கொள்ள வேண்டுமென்று விரும்பினர். அவன் மறுத்தபின் இருங்கோவேள் என்பவனிடம் சென்று அவனைப் பாரி மகளிரை மணக்கும்படி இவர் வேண்டிப் பாடிய பாட்டு புறம் உoக.) அதனுள் இவர் இருங்கோவேளின் முன்னோர் வரலாற்றைக் கூறினர். அப் பாட்டினுள் போந்த துவரை என்பது இருங்கோவேளின் நாட்டிற்கு வடக்கண் இருந்த தாகும். துவார சமுத்திரமென்னும் இடமென்றும் அதனைக் கூறுவர். இவ் வேளுக்குப் புலிகடிமால் என்ற பெயர் உண்டு. ஒரு முனிவனது தவத்திற்கு இடையூறியற்றிய புலி ஒன்றினைக் கொன்றமையால், இவனுக்கு இப் பெயர் வந்ததென்ப. (இருங்கோவேள் பாரி மகளிரைக் கொள்ள மறுத்தமை கேட்டுப் புலவர் வெகுண்டு பாடின பாட்டு புறம் உoஉ.) இதனுள் இவ் வேளினுடைய முன்னோனொருவன் கழாத்தலையா ரென்னும் புலவரை இகழ்ந்தமைக்காகச் சிற்றரையம், பேரரையம் என்னும் இரண்டு பகுதியுள்ள ஒரு பழைய ஊரினை இழந்தனனென்று இவர் கூறினர்.

3. (பின்னர், புலவர் எவ்விபாற் சென்றனர். எவ்வியும் மறுத்தவழிப் பார்ப்பாருக்குப் பாரி மகளிரை மணஞ் செய்வித்துத் தான் பின் வடக்கிருந்தபோது பாடிய பாட்டு புறம் உ௩௬.) இதனுட் பாரியைப் புகழ்ந்துபாடி, அவனோடு உடன் இறவாததைப்பற்றித் தன்னைக் குறைகூறி, அவனை விளித்து, 'இப் பிறப்பின் நீயும் யானுங்கூடி இன்புற்றிருந்தமைபோல மறுபிறப்பிலும் இடைவிடாத காட்சியினையுடைய நின்னோடு கூடிவாழ்தலை உயர்ந்த விதி கூட்டுவதாக' என்றுரைத்தனர்.

இவர் மலையமான் திருமுடிக்காரியைப் பாடிய பாட்டுக்கள் புறம் க௨௧, க௨௨, க௨௩, க௨௪. அவை மிகவும் நயமானவை. புலவர்க்கு அவரவர் தகுதியறிந்து கொடுக்க வேண்டுமென்பதைப் புறம் க௨௧ இல் குறித்தனர். இவர்,

"........பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ வரிதே பெரிது
மீத லெளிதே."

என்றது காண்க.

இவர் புறம் க௨௨ இல் காரி தன் மனைவியைத் தவிரத் தனக்கென வொன்றையும் வைத்துக்கொள்ளாது இரவலர்க்கீபவன் என்பார்,

"வடமீன் புரையுங் கற்பின் மடமொழி
அரிவை தோளள வல்லதை
நினதென விலைநீ பெருமிதத் தையே."

என்றார். புறம் க௨௪ இல் அவன் வண்மையை இன்னொரு விதமாகக் குறித்தனர். 'இரவலர் நல்ல நாட் பாராது, புள் நிமித்தம் தீயதாயிருப்பவும், அவன்பாற் போகக்கூடாத காலத்திலே போய் நயமில்லாத சொல்லைச் சொன்னாலும் அவர்கள் ஒன்றும் பெறாது சும்மா திரும்பமாட்டார்' என்றனர்.

"நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குந ரல்லர்..........."

என்றது காண்க. கபிலர் பாரி யிறந்தபின் செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பாடிப் பரிசில் பெற்றுச் சுற்றத் தார்க் கதனைக் கொடுத்துத் தாம் வடக்கிருந்தார் என்று கூறுப.

செல்வக்கடுங்கோ வாழியாதனைப் புறம் ௩அஎ இல் பாடியவர் **குண்டுகட் பாலியாதனார்** என்னும் புலவர். இவருடைய பாடல் ஒன்று நற்றிணையிலும் வந்துள்ளது. குண்டுகண் என்பது 'ஆழமான கண்' என்றும், பாலி யென்பது 'இவருடைய ஊர்' என்றும் புறநானூற்றுப் பதிப்பாசிரியர் கூறுகின்றார்.

**மிளைக்கந்தனார்** என்பார் பாரியை நேரிற் பாடாது அவனுடைய சுனையின் இனிய நீரைப்பற்றிக் குறுந்தொகை ககூசு இல் கூறியுள்ளார்.

மலையமான் திருமுடிக்காரி என்பவன் ஏழுவள்ளல் களில் ஒருவன். கோவலூரில் அரசு புரிந்தவன். முள்ளூர்க் கானகம் என்னுமொரு மலைக்காட்டையுடையவன். "இவன் முள்ளூர் என்னுமிடத்தில் ஆரியரை வென்று ஓட்டினதாகக் கூறப்பட்டது." காரியை **அம்மூவனார்** என்னும் புலவர் பாடியுள்ளார். அகம் ௩௫ இல் அவன் கோவற் கோமா னென்றும், பெண்ணை யாற்றையுடையவனென்றுங் குறிப் பித்தார். அகம் ௩௫ இல் இவர் பாலையைப் பாடியிருந் தாலும் பிற நான்கு பாட்டில் இவர் நெய்தலையே சிறப்பித் துள்ளார். அகம் ௧0 இல் தொண்டியென்னும் மேலைக் கடற்கரைப் பட்டினத்தைச் சிறப்பித்துள்ளமையால் இவர் சேரநாட்டுப் புலவரென்று கருதப்படுகிறார். அகம் ௩௭0

இல் திருமகளைக் "கடல்கெழுசெல்வி" என்றனர், ஐங்குறு நூற்றிலும் குறுந்தொகையிலும் நற்றிணையிலும் இவர் பாடல்கள் வந்துள்ளன.

இவனைப் பாடிய மற்றொரு புலவர் **நப்பசலையார்**. இவர் நற்றிணை ௩௦௪ இல் தலைவனைப் பிரிந்த தலைவி மேனியின் மேல் பசலை பரவிற்றென்று பாடினர். அப் பாடல் காரண மாக அவருக்கு அப் பெயர் வந்தது போலும். காரியை இவர் புறம் கஉசு இல் பாடினார். அதனுட் பாணருக்குப் பொற்றாமரை சூடுங் காரியின் வண்மையையும், அவனது யானைப்போர்த் திறமையையும் வியந்து, கபிலர் அவனைப் பாடினமையும் குறிப்பித்தார். இவர் சோழிய ஏனாதி திருக்கண்ணனைப் புறம் கஎச இல் பாடியுள்ளார். புறம் ௩அ௩ இல் அவியனென்பவனைப் பாடியுள்ளார். நப்பசலை யார் தாம் பாடிய புறம் உஅ௦ இல் கைம்மை நோன்பைப் பற்றிக் கூறியுள்ளார். அப் பாட்டு யாரைப் பற்றியதென்று விளங்கவில்லை.

**கழைதின்யானையார்** ஓரியைப் பாடிய பாட்டு புறம் க௦ச. இப் பாட்டினுள், ஓரி தனக்கீயவில்லையாயினும் தானவனை வெறுப்பதில்லையென்று கூறினார். இரப்பதையும் ஏற்பதையும்பற்றிச் சில நீதிகள் கூறியுள்ளார். பரிசில் பெறுதவிடத்து இரவலர் புறப்படும்போது நேர்ந்த நேரத் தையுங் குறியையும் குறைகூறுவதன்றித் தமக்கீயாத அவனைப் பழிக்கமாட்டா ரென்றனர்.

**நப்பாலத்தனார்** நற்றிணை ருஉ இல் மழவர் பெருமகன் மாவள்ளோரியைப் பற்றிக் குறித்திருக்கின்றார். நேரிற் பாடியதாகத் தெரியவில்லை.

**வன்பரணர்** பரணருக்குப் பிற்பட்டவர். கொல்லி மலைக்குத் தலைவனான ஓரியை இவர் பாடியுள்ளார். இவர்

பாடிய புறம் கருஉ இல் பரிசில் விடை என்னுந்துறை அமைந்துள்ளது. அது புகழ்செப்பியவனுக்கு அரசன் பரிசிலளிப்பதைக் கூறுவது. வேட்டையிற் சிறந்தவனென்று ஓரியைப் பாடிய புலவர் விறலியர்க்கு விரைவில் அவன் பரிசளிப்பதை இப் பாட்டினிற் கூறினார். (இதனுட் பரணர் இசைமுறை இருபத்தொரு துறையுடையதென்று குறிப்பித்தார். வலிவு, மெலிவு, நடு என்னும் மூன்றிடங்களிலும் ஏழிசை அமைத்துப் பாடற்றுறை இருபத்தொன்றுதல் காண்க.) அடுத்த பாட்டினும் இவர் ஓரியின் வண்மையை மிக அழகாகப் புனைந்துரைத்தார். ஓரிபாற் சென்ற தம் சுற்றத்தார் வெள்ளிநாராற் றொடுத்த பொன்னரி மாலைகளையும், யானைகளையும் பெற்றமையால் பசி நீங்கிச் செல்வச் செருக்குற்று ஆடுதலையும், பாடுதலையும் மறந்தனர் என்றனர். இவர் புறம் உருருஇல் காட்டிற் கணவனையிழந்து வருந்தும் பெண்ணின் துயரத்தைக் கூறும் முதுபாலைப் பாட்டு மிகவும் இரக்கத்தை விளைப்பது.

நள்ளியைத் தவிரப் பிறரைப் பகர்தற்குத் தன்னால் இசையாதென்பார்,

"எய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே."

என்றார். புறம் கசஅ இல் நள்ளியின் வண்மையால் தன் சுற்றத்தார் இசைமுறை மறந்து காலைப் பண்ணை மாலையிலும், மாலைப் பண்ணைக் காலையிலும் பாடினர் எனக் கூறினர்.

பொருந்திலிளங் கீரனர் மாந்தரஞ் சேரலிரும் பொறையைப் பாடிய புறம் ருஉ இல் கபிலர் தமக்கு முற்பட்டு வாழ்ந்ததைக் குறிப்பித்தார். 'கபிலன் இன்றுளனாயின் நன்றுமன்' என்றது காண்க.

மடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனர் புறம் கஉரு இல் மாந்தரஞ் சேரலிரும்பொறையும், சோழன் இராசசூயம்வேட்ட

பெருநற்கிள்ளியும் பொருதவழிச் சோழர்க்கு நட்பாகிய தேர்வண்மலையனைப் பற்றிப் பாடியுள்ளார்.

தலையாலங்கானத்து நெடுஞ்செழியனால் சிறப்பித்துக் கூறப்பட்ட புலவர் **மாங்குடி மருதனார்** என்பவர். மருதனார் பாடிய **மதுரைக்காஞ்சிக்குத்** தலைவன் நெடுஞ்செழியனே. இவர் மாங்குடி கிழார் எனவும் அழைக்கப்படுவர். இவருடைய பாடல்கள் புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை முதலியவைகளில் வந்துள்ளன. புறம் உச இல் நெடுஞ்செழியன் வேள் எவ்வியின் மிழலை நாட்டையும், முத்தூர்க் கூற்றத்தையும் கைப்பற்றியதாகக் கூறி, அவனது பெருமித வாழ்வை விதந்தனர். அவன் வேள்வி பல செய்ததைப் புறம் உசு இற் குறித்தார். புறம் ருருடு இல் அடிமையாக வேலை செய்யும் பழங்குடிகள் இன்னவென்றுரைத்தார்.

> " துடியன் பாணன் பறையன் கடம்பனென்
> றிந்நான் கல்லது குடியு மில்லை.''

என்றது காண்க. இவர் வாட்டாற் றெழினியாதன் என்பவனைப் புறம் ரு சுசு இல் வாழ்த்தியுள்ளார். நெடுஞ்செழியனது புலவரவையில் அவர் தலைமை வகித்திருந்தனர்.

நெடுஞ்செழியனைப் பாடிய மற்றொரு புலவர் **கல்லாடனார்** என்பவர். கல்லாடம் என்பது அவருடைய ஊர் போலும். இவர் தொல்காப்பியத்துக்கு ஓர் உரை இயற்றினர் என்ப. இவருடைய பாடல்கள் அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை என்பவைகளிலும் வந்துள்ளன. இவர் புறம் உரு இல் நெடுஞ்செழியனது கொற்றத்தைச் சிறப்பித்துப் பாடியவிடத்து முருகப்பிரானை விதந்தோதினமையால் இவர் அக்கடவுளிடத்து அன்புள்ளவர் என்று தோன்றுகிறது. அவனைப் பாடிய புறம் உரு இல் கைம்பெண்டிர் கூந்தல் களைதலைக் கூறியுள்ளார். அம்பர்கிழான் அருவந்தை

என்னும் வேளினைப் பறம் நடஅரு இல் இவர் பாடியுள்ளார். அம்பர் என்பது சோழ நாட்டிலுள்ளது. அது,

" காவிரி யணையுந் தாழ்நீர்ப் படப்பை
நெல்விளை கழனி யம்பர் கிழவோன்."

என்றதால் இனிது விளங்கும்.

இவர் பொறையாற்றுக் கிழான் என்னும் வள்ளலை யும் புறம் நடகூக இற் பாடியுள்ளார். புல்லியின் வேங்கடத் தைப்பற்றி அகம் அந இல் விதந்தனர். அகம் ககந இல் அஃதை என்னும் வள்ளலைப் போற்றிக் கோசரையும் புகழ்ந் துள்ளார். பிற பாடல்களில் நன்னனை நார்முடிச்சேரல் வென்றதனையும், நெடுஞ்செழியனது ஆலங்கானப் போரை யும், காரி ஓரியைக் கொன்று கொல்லிமலையைச் சேரர்க்கு ஆக்கியதனையும், பிறவற்றையுங் கூறினர். (பிற்காலத்திலே எழுந்த கல்லாடம் எனப்பட்ட நூல் இவராற் செய்யப் பட்டதன்று. கக ஆம் திருமுறையிலுள்ள கண்ணப்பர் திருமறமும் இவர் பெயருடைய வேறொருவராற் செய்யப் பட்டது போலும்.)

நெடுஞ்செழியனைப் பாடிய மற்றொரு புலவர் **குடபுலவியனார்** என்பவர். இவர் நெடுஞ்செழியனைப் பாடிய புறம் கஅ இல் உலகத்தில் உண்டி முதலிய செல்வத்தைப் பெருகச் செய்வது அரசர்க்குப் புகழ் தருவது என்று கூறு மிடத்து 'உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே' என்றனர். கோடி என்ற எண்ணைக் கடையெண்ணாகக் கொண்ட பேரெண்கள் அக்காலத்தில் வழங்கின வென்பது,

' ஒன்றுபத் தடுக்கிய கோடிகடை யிரீஇய
பெருமைத் தாகநின் னாயு டானே.''

என்று வாழ்த்தினமையாற் றெளியப்படும். அவரது போர்க்களத்தின் சிறப்பையும் புறம் கக இல் பாடியுள்ளார்.

இடைக்குன்றூர்கிழார் என்பவரும் நெடுஞ்செழியனைப் பாடியுள்ளார். நெடுஞ்செழியனை இவர் பசும்பூட்செழியன் என்று விதந்தனர். அவர் மிக்க இளமைப் பருவத்தில் எழு மன்னர்களை வென்றதின் பெருவியப்பை எடுத்துரைத்த பாட்டுகள் புறம் எசு, எஎ, எஅ, எகூ. குழந்தைகளுக்கு ஐம்படைத்தாலி அணிவது அக்காலத்து வழக்கமென்று புறம் எஎ ஆல் விளங்கும்.

இந் நெடுஞ்செழியனைப் பாடிய குறுங்கோழியூர் கிழார் என்பவர் இவன் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை என்பானைப் போரிற் பிணித்ததும், அவன் அப் பிணிப்பு நீக்கி அரசிருக்கை எய்தியதும், எடுத்துக்கூறி அவனை வியந்து பாடியது புறம் கஎ ஆவது பாட்டாகும். அதன்கண் தமிழ்நாட்டெல்லையாகத் தெற்கே குமரியை யும், வடக்கே இமயத்தையும், கிழக்கிலும் மேற்கிலும் கடலையும் உரைத்தனர். குறுங்கோழியைக் கருங்குழி என்று கூறுவாருமுளர். அவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையின் அறிவையும் செங்கோன்மையை யும் வியந்து, புறம் உO இற் பாடினர். அப்புலவர் அவன் பாதுகாத்த நாடு விண்ணவருலகத்துக் கொப்பாகுமென்று புறம் உஉ இற் குறித்தனர். இவ்வரசன் யானைக்கண் போன்ற கண்ணையுடையவனும் சேய் என்னு மியற்பெயரை யுடை யவனுயு மிருந்தனன்.

கூடலூர்கிழார் என்னும் புலவர் புறம் உஉகூ இல் யானைக்கட்சேய், தாம் குறித்த நாளில் இறந்துவிட்டதற் காக வருந்தினர். அப்பாட்டினுல் இவர் வானநூல் வல்லவ ரென்பது தெளிவு. இவர் முதுமொழிக்காஞ்சி என்ற கீழ்க் கணக்கு நூலையும் பாடினர்.

இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியைப் பாண்டரங் கண்ணனாரென்னும் புலவர் புறம் கசு இற் பாடியுள்ளார்.

அவன் பகைவரது வளமிக்க நாட்டை வென்று எதிர்த்ததையும் அவனுடைய யானைகள் அவனுக்கு வெற்றி தரும்படி போர்புரிந்ததையும், இச்செய்யுளின்கண் எடுத்துரைத்தார். இக்கிள்ளியை உலோச்சனூர் என்னும் புலவர் புறம் ருஎஎ இல் வாழ்த்தியுள்ளார். இவருடைய பாடல்கள் நற்றிணையிலும் வந்துள்ளன.

உக்கிரப்பெருவழுதி கானப்பேரிலிருந்த வேங்கை மார்பனென்னும் சிற்றரசனை வென்று அவனது கோட்டையைக் கைப்பற்றியதாக ஐயூர் மூலங்கிழார் புறம் உக இல் பாடியுள்ளார். கானப்பேரென்பது காளையார்கோவிலென்றிப்பொழுது வழங்குகின்றது.

மாந்தரஞ் சேரலிரும்பொறைக்குப்பின் சேரமான் மாரிவெண்கோ வென்பவன் அரசாண்டனன். அவன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளிக்கு நண்பன். அக்காலத்தில் அரசாண்ட பாண்டிய மன்னன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதியாவான். இம் மூவேந்தரும் ஒருங்கிருந்தவிடத்து அவர்கள் முத்தீப்போல் விளங்கினரென்றும், அவர்கள் மூவரும் இரவலர்க்கும் பிறர்க்கும் வண்மையுடையராய் ஒற்றுமைப்பட்டு நெடுநாள் வாழ வேண்டுமென்றும் ஔவையார் பாடிய பாட்டு, புறம் ருசுஎ.

அதியமானஞ்சியை மிகுதியும் பாடியிருப்பது ஔவையார். இவர், இவன் மகன் பொகுட்டெழினியையும், நாஞ்சில் வள்ளுவனையும், தொண்டைமானையும் பாடியுள்ளார். நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு இவைகளிலும் இவர் பாட்டுகள் காணப்படுகின்றன. இவர் தம்மை விறலியாகத் தோன்றும்படி பாடல்கள் பாடியுள்ளார். அதுபற்றிப் பாணர் மரபினரென்பாருமுளர். அங்ஙனம் பாடுதல் ஒருவகை நூல் மரபு என்று கொள்பவர் அக்

கருத்தினைக் கொள்ளார். (ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி முதலிய நூல்கள் செய்தது இவர்தாமோ என்பதோர் ஐயப்பாடு. அவை பாடிய ஔவையார் கம்பர் காலத்திருந்ததாகக் கேட்கின்றோம். கம்பர் காலத்திற்கும் சங்க காலத்திற்கும் இடையீடு ஆயிரம் ஆண்டுகட்கும் மேலாக இருக்கும். அன்றியும் பின்னுள்ள நூல்கட்கும் தொகைநூலிற் காணும் ஔவையார் செய்யுட்களுக்கும் சொல்நடை வேறுபாடு பெரிதும் உண்மை காண்க. இனி, ஔவையார், சுந்தரமூர்த்தி காலத்தில் வாழ்ந்திருந்து அவர் கயிலாயஞ் சென்றகாலை அவர்க்கு முன்னைப் பிள்ளையாரால் கயிலைக்கு ஏற்றப்பெற்றதாகக் கூறும் வழக்கமும் உண்டு. இதற்குத் தக்க ஆதாரம் இல்லை. அங்ஙனமாயின் கம்பர் காலத்தில் அவர் நிலவுலகத்தில் வாழ்ந்திருத்தல் கூடாது. ஆகவே, கம்பர் காலத்திருந்த ஔவையார் மற்றொருவர் என்பது தெளிவு.)

ஈண்டு, கடைச்சங்க காலத்திலிருந்த ஔவையார் செய்யுட்களே ஆராயற்பாலன. புறம் உ௦சு இல் அதியமான் பரிசில் நீட்டித்ததற்காக வாயிலோனைச் சினந்து பாடிய விடத்து மரந்துணிக்கும் மழுவுடைய தச்சனுக்குக் காட்டகத்து யாண்டுச் சென்றாலும் அக்காடு பயன்படுமாறு போலத் தாம் எத்திசைக்கண் போனாலும் அத்திசையில் தமக்கு உணவு கிடைக்குமென்றனர். இவர்,

"எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே:"

என்றது காண்க.

இவர் அதியமானது வீரத்தையும் வண்மையையும் பல பாடல்களிற் புகழ்ந்தனர். புறம் கூ௦ இல் புலியை எதிர்க்கும் மான் இல்லையாதல்போலவும், வானில் எழுகின்ற ஞாயிற்றிற்குமுன் இருளில்லையாதல்போலவும், மணல்

ப்றக்கவும், கல் பிளக்கவும் நடக்கவல்ல பகட்டிற்குப் போதற்கரிதாய வழியில்லையாதல் போலவும் அதியமானை எதிர்க்கும் வீரர் இல்லையென்று குறிப்பித்தார். இவர் புறம் கூக இல் அதியமான் தமக்குப் பெரிய மலையின் விடரில் அரிய கருநெல்லியின் உச்சியிற் பழுத்த கனியை அதன் அருமையையும், பெருமையையும் நோக்காது சாவு நீங்கும் படியாகத் தமக்குக் கொடுத்ததினால் நீலகண்டப் பெருமான் போல அவன் நீடுவாழவேண்டுமென்று வாழ்த்தினார்.

'பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக.''

என்றது காண்க. இதனால் இவரது சிவனடிப் பேரன்பு நன்கு விளங்கும். தம்மாட்டு அதியமான் வைத்த கருணை மழலைச் சொல்லுடைய குழந்தைபால் தந்தையருக்குள்ள அருள் போல்வதென்று இவர் வியந்து பாராட்டுமிடத்துத் தம்முடைய சொல்லானது யாழிசைபோல் இனிமையானது மன்று, அளவு நயமுடையதுமன்று, மழலைபோல்வது என்றமையால் இவரது நன்றியறிவுந் தாழ்மனமும் இனிது விளங்கும். அவன் பொருது புண்பட்டு நின்றகாலைப் பாடிய பாட்டு புறம் கூரு. இதனுள், வாளிற்படாத மன்னரைத் தருப்பைப் புல்லிற் கிடத்தி வாளோச்சி அடக்கம் செய்யும் நெறிச்செய்கை குறிக்கப்பட்டது. புறம் கூச இல் பெரிய யானையானது தன்பால் நெருங்கி விளையாடுஞ் சிறு பிள்ளைகளைத் துன்புறுத்தாது நிற்றல்போலத் தம்மைப் போல்வார்க்கு அதியன் இனியனென்றும், பகைவர்க்கு அக்களிறுபோல இன்னாதவனென்றும் குறிப்பித்தார். இவன் ஒளவையாரைக் காஞ்சி நகரிலிருந்த தொண்டைமான்பால் தூது விடுத்தனன். தொண்டைமான் ஒளவையாருக்குத் தன் படைக்கலக் கொட்டிலைக் காட்ட, இவர் பாடிய

யாட்டில் (கூ௫) தொண்டைமானுடைய படைக்கலங்களைப் புகழ்வது போலவும், அதியமானுடைய படைக்கலங்களை இகழ்வதுபோலவும் கூறுகின்றார். உண்மையாகப் பின்னவற்றைப் புகழ்ந்தார். அதியமானது படைக்கலங்கள் கொல்லனது கொட்டிலில் நுனி முறிந்து கிடப்பனவென்று கூறியது காண்க.) புறம் கூகூ இல் அதியமான் கோவலூரைப் பிடித்து வெற்றியடைந்ததைக் கூறுமுகத்தான் அவன் முன்னோர் சிறப்பையும் எடுத்துக் கூறி, அவன் நாட்டு வளத்தையும், கரும்பினை முதன்முதல் அவன் முன்னோர் அவ்விடத்தே கொண்டு வந்தமையையும், அவன் ஏழரசரை வென்று பெற்ற அடையாளத்தையும், விதந்தோதிப் பாடுவார்க்குப் பாட அரியவனென்றும் பரணர் அவனைப் பாடியதாகவுங் கூறினர். புறம் க0க ஆம் பாட்டினுள் அவனுடைய ஈகையையும், அவன் இரவலர்க்கு என்றும் இன்முகங் காட்டித் தப்பாது பரிசிலளிக்கும் சீரினையும் இவர் மிகவும் அழகாகப் புகழ்ந்துள்ளார். அது வருமாறு:

> "ஒருநாட் செல்லலம், இருநாட் செல்லலம்
> பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
> தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ."

அதியமான் புதல்வன் பொகுட்டெழினியைப் புறம் கூசு ஆம் பாட்டினுள்ளும், க0உ ஆம் பாட்டினுள்ளும் பாடியுள்ளார். இவற்றுள் அவனது வண்மையைப் புகழ்ந்ததனோடு அவன் மகளிர் மனங்கவர் கண்ணினனென்றும், தன் கீழ் வாழ்வார்க்கு நிறைமதி போறலின் துன்பமாகிய இருள் அவற்கு எக்காலத்தும் இல்லை என்றும் செப்பினர். இவர் புறம் உ௩௫ ஆம் பாட்டினுள் அதியன் இறந்த நாளைக் குறித்துத் துயருறுமிடத்து அவனது அன்பின் செயல்களைப் பலபடப் பாராட்டியுள்ளார். அதில் இவர் அவனது

அரிய மார்பின்கண் தைத்த வேல் நுண்ணிய ஆராய்ச்சியுடைய அறிவாளிகளின் நாவில் விழுந்ததென்றார்.

"இனிப் பாடுநரு மில்லைப், பாடுநர்க்கொன் றீகுநரு மில்லைப்
பனித்துறைப் பகன்றை நறைக்கொள் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்கொன்று
ஈயாது வீயும் உயிர் தவப் பலவே."

என்றனர்.

ஔவையார் வீரரது உண்டாட்டைப்பற்றி உகூகூ இல் கூறியுள்ளார். புறம் உஅகூ ஒரு சிறுவன் இறந்ததற்காக வருந்துகின்ற பாட்டாகத் தோன்றுகின்றது. இறந்த உடம்பைப் பாடையில் கிடத்தலும், அதன்மேல் தூய வெள்ளாடை கொண்டு போர்த்தலும் இதனுட் கூறப்பட்டன. புறம் உகூரு இல் போரிற் சிறப்பெய்தி மாண்டதைக்கேட்ட ஒருவனின் தாய்க்கு முலை சுரந்ததை இவர் வியந்தனர். அஞ்சியின் மகன் பொகுட்டெழினியைப் பாடிய புறம் ௩கூஉ இல் பகைவரது நிலத்தைக் கழுதை பூட்டிய கலப்பையால் உழுதலும், வரகுங்கொள்ளும் விதைத்தலுங் கூறப்பட்டன. அவன் இரவலரது கந்தைத் துணியை நீக்கி உயர்ந்த கலிங்கங் கொடுத்து அவர்க்கு உயர்ந்த உணவு கொடுப்பதனையும் இவர் விதந்தனர்.

ஔவையார் நாஞ்சில் வள்ளுவனைப் பாடிய புறம் கசா0 இல் ஏற்பார் தகுதியறிந்து பரிசிலளியாது தம் தகுதியை நோக்கிப் பெரிய யானையைக் கொடுத்தான் என்றனர். அகம் ௩0௩-இல் மூவேந்தராலும் பாரியின் நகர் முற்றுகை யிடப்பட்டகாலை கபிலர் கிளிகளாற் செந்நெற் கதிர்களைக் கொணர்வித்துப் பாரி குடிகட் குணவளித்தார் என்று ஔவையார் கூறியுள்ளார்.

நாஞ்சிற் பொருநனை ஒருசிறைப்பெரியனா' ரென்பவரும் பாடியுள்ளார். இவர் பாடல்கள் குறுந்தொகையிலும்

நற்றிணையிலும் வந்துள்ளன. புறம் கருஎ இல் நாஞ்சில் மலையின் செழிப்பை இவர் இனிது பாடினர். அவனைப் பாடிய மற்றொரு புலவர் கருவூர்க் கந்தப்பிள்ளை என்பார். இவர் பாடல்கள் குறுந்தொகையிலும் வந்துள்ளன. இவர் புறம் ௩௮0 இல் நாஞ்சிற் பொருநனது வீரத்தையும் வண்மையையும் பாடியுள்ளார்.

மருதன் இளநாகனர் என்பாரும் நாஞ்சில் வள்ளுவனைப் பாடியுள்ளார். கூடகாரத்துத்துஞ்சிய மாறன் வழுதியைப் புறம் உகு இல் பாடியுள்ளார். இவர் பாடிய புறம் கரு௮ பாணாற்றுப் படையாகும். புறம் கருகூ ம் இவர் பாடியதே.

தகடூரில் அதியமானைப் பொருது வென்ற பெருஞ் சேரலிரும் பொறையைப் பதிற்றுப்பத்திற் பாடியவர் அரிசில் கிழாரென்னும் புலவர். இவர் ஒன்பது நூறாயிரங் காணம் சேரமானிடம் பரிசாகப் பெற்றனர். இவர்க்குச் சேரமான் தனதரசிருக்கையையும் அரண்மனையையுமே கொடுக்க விரும்பினு னென்பது தெரியவருகின்றது. இதனுள் இவனது வீரம் பலவகையாய்ப் பாராட்டப்பட்டது. அயிரை மலைக் கொற்றவை வழிபாடுங் கூறப்பட்டது. தகடூ ரெறிந்த சிறப்பு இதன் பதிகத்துள் விளக்கப்பட்டது.

புறம் உ௩0 இல் அதியமான் எழினி இறந்ததற்காக வருந்திக் கூற்றத்தை நோக்கி, "உழவன் வித்தினை உண்டதுபோல உனக்குப் பல்லுயிர் கொடுக்கும் ஒருவன் உயிரை உண்டமையால், உலகத்து வறியரைப் பார்க்கிலும் நீ வறுமையடைந்தாய்" என்றனர்.

✓ **பொன் முடியார்** என்ற பெண்புலவரும் அரிசில் கிழாரும் 'தகடூர் யாத்திரை' என்ற உரையிடையிட்ட பாட்டுடைக் காப்பியத்தை இயற்றினார்கள். இது, பெருஞ் சேரலிரும்பொறை தகடூரை முற்றி அதியமானைக் கொன்ற

தைக் கூறுவதாகும். இந் நூலில் சிற்சில பகுதிகளே கிடைத்துள்ளன. புறநானூற்றில் மூன்று பாட்டுக்கள் இவருடையன. புறம் ருகஉ இல் இவர் கடமைகளைத் தொகுத்துரைத்த அடிகள் வருமாறு:

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

அதியமானை வென்ற பெருஞ்சேரலிரும்பொறையை **மோசிகீரனார்** என்னும் புலவர் நன்கு பாடினர். புறம் ருo இல் சேரமானது அரச முரசு வைத்திருந்த கட்டிலில் அப்புலவர் அறியாது துயின்றதைக் கண்டு சேரமான் அவருக்கு ஊறு செய்யாது அவர் தூங்கி எழுந்திருக்கும் வரை கவரி கொண்டு வீசினதாகவும், அதற்காக இவர் அவனைப் புகழ்ந்து பாடியதாகவும் அறிகின்றோம். மோசிகீரனார் பாடிய புறம் கஅசு இல்,

"நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்."

என்று மன்னர் சிறப்பினை உணர்த்தினர். இவர் கொண் கானங்கிழா னென்பானைப் புறம் கருச, கருரு, கருசு ஆம் பாடல்களிற் சிறப்பித்துள்ளார். கொண்கானம் என்னும் மலையானது வண்மையையும், வெற்றியையும் உடைய தென்று இவர் பாடியுள்ளார்.

**கந்தப்பிள்ளை சாத்தனார்** என்பவர் கருவூர்க் கந்தப்பிள்ளை யின் புதல்வராயிருக்கலாம். அவர் பாடிய புறம் கசுஅ இல் பிட்டங்கொற்றனுக்குக் குதிரைமலை உரியதென்று கூறி

யிருத்தல் காண்க. அதியமானுக்குரிய குதிரைமலை மறவனாகிய பிட்டங்கொற்றனுக் களிக்கப்பட்டதென்ப.

(**நல்லூர் நத்தத்தனார்** என்னும் புலவர் சிறுபாணாற்றுப் படையில் ஏழுவள்ளல்களையும் பாடியதால் அதியமானுக்குப் பின்னிருந்தவரென்று கருதல் வேண்டும்.) இப்பாட்டு ஒய்மாநாட்டு நல்லியக்கோடன் என்னும் குறுநில மன்னனைச் சிறப்பித்துப் பாடப்பட்டது.

இப்பாட்டுடைத் தலைவன் நாடு சோழ நாட்டிற்கு வடக்கேயுள்ள அருவாவடதலை நாடென்றும், அருவா நாடென்றுங் கூறுப. இதனுட் குட்டுவனது வஞ்சியும், செழியனது கொற்கையும், சோழனது உறந்தையுங் கூறப்பட்டன. (மயிலுக்கு ஆடை நல்கிய பேகன் சிறப்பும் முல்லைக்குத் தேர் நல்கிய பாரியின் வண்மையும், இரவலர் பால் அன்புமிக்க காரியினியல்பும், ஔவைக்கு நெல்லிக் கனி ஈந்த அதியன் சிறப்பும், சிவபெருமானுக்கு நீல நாகங் கொடுத்த உடையினை ஈந்த ஆயின் பெருமையும், வரையாது கொடுக்கும் நள்ளியின் வண்மையும், ஓரியின் கொடையும், நல்லியக்கோடன்பா லமைந்ததாகப் புலவர் கூறினர்.) ஓவியர் கூட்டத்திற்கு அவன் தலைவன் என்பதையுங் குறித்தார். நெய்தல் நிலத்திலுள்ள எயிற்பட்டினமும், முல்லைநிலத்திலுள்ள வேலூரும், மருதநிலத்திலுள்ள ஆமூரும் அவனுக்குரியனவென்று அவர் சிறப்பித்துக் கூறியுள்ளார். அவனுடைய பலவகை நற்குணங்களையும் நன்கு பாராட்டியுள்ளார். மேலும் அவன் பொருநர்க்கும், புலவர்க்கும், அந்தணர்க்கும் அடையா வாயிலை யுடையவனென்றும், செய்ந்நன்றி யறிதலும், சிற்றின மின்மையும், இன்முக முடைமையும், அஞ்சினர்க் களித்தலும், கருதியது முடித்தலும் உடையோனெனவுங் கூறினர்.

**புறத்திணை நன்னாகனார்** என்பவர் பாரியைப் பிற்காலத்தே பாடினார். இவர் புறத்திணை பாடுவதில் திறமை வாய்ந்தவர் போலும். இவர் ஓய்மான் நல்லியக்கோடனையும் (புறம்-௩௭௬) பாடினர். இவனே சிறுபாணாற்றுப்படைத் தலைவனு மாவான். சிறுபாணாற்றுப் படையில் ௧௨௨ ஆவது வரியில் ஓவியர் பெருமகன் என்றிவனைக் கூறியிருப்பதால் இவன் ஓவியர் என்னுங் குழுவுக்குத் தலைவன் என்று தெரிகிறது. அவன் ஊர் மாவிலங்கை என்று இப் பாட்டினுட் கூறப் பட்டது. "பெருமாவிலங்கைத் தலைவன்" என்றது காண்க. பாரி இறந்ததற்காகப் புலவர் வருந்துமிடத்துப் பாரியை இவர் கண்டவரென்பதும், அவனுக்குப் பின் நல்லியக்கோடனால் இவர் ஆதரிக்கப்பட்டவரென்பதும் விளங்குகின்றன. இவன் மரபிலிருந்த ஓய்மான்வில்லியாதன் என்பவனைப் புறம் ௩௭௯ இல் இவர் பாடியுள்ளார். இப் புலவருடைய பெயர் நாகனார் என்று முடிதலால் இவர் நாகர் மரபைச் சார்ந்தவரென்ப.

**பாண்டியன் அறிவுடைநம்பி** கோப்பெருஞ்சோழன் காலத்தவன். இவன் பாடல்கள் அகத்திலும், குறுந் தொகையிலும், நற்றிணையிலும் வந்துள்ளன. இவன் பாடிய புறம் ௧௮௮ இல் புதல்வரின் சிறப்பு மிக அழகாக எடுத்துக் கூறப்பட்டது.

"படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே."

என்றது காண்க.

இப் பாண்டியனைப் பாடிய பிசிராந்தையார் புறம் கஅச இல் அரசன் இறைகொள்ளும் நெறியை அறிந்து கொள்ளின் நாடு தழைக்கும் என்றும், அன்பிலாது இறை கொள்ளின் நாடும் மன்னரும் கெடுமென்றுங் கூறினர்.

இவர் கோப்பெருஞ்சோழனுக் குயிர்த்தோழர். இச் சோழன் இளஞ்சேரலிரும்பொறையால் வெல்லப்பட்டா னென்பது பதிற்றுப்பத்துள் கூ ஆம் பத்தில் "பொத்தி யாண்ட பெருஞ்சோழனையும்" என்ற அடியினாற் கருதற் பாலது. இவனைப் பாடிய பிற புலவர்கள் பொத்தியார், புல்லாற்றூர் எயிற்றியனார், கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதனார், கண்ணகனார் என்போராவர்.

பிசிராந்தையார் என்பவர் குமரி முனைக்குப் பக்கத்தி லுள்ள பிசிரென்னு மூரிலிருந்த பெரும்புலவர். பிசிர் என்னுமூர் பாண்டிநாட்டிலுள்ளதென்பது "தென்னம் பொருப்பன் நன்னாட்டுள்ளும் பிசிரோன் என்ப" என்று கோப்பெருஞ்சோழன் பாடிய பாட்டடியால் விளங்கும் (புறம்-உகரு). கோப்பெருஞ்சோழனும், பிசிராந்தையாரும் நெருங்கிப்பழகாது போயினும் உணர்ச்சி ஒருமைப் பாட்டால் அளவுகடந்த நட்பொடு திகழ்ந்தனர். அஃது அச் சோழமன்னன் வடக்கிருந்து உயிர்துறப்ப முயன்ற காலைப் பிசிராந்தையாருக்கும் தன்பக்கம் வடக்கிருப்பதற்கு இடமமைக்கும்படி அவன் சொல்லிய பாடல்களால் விளங்கும். அவை புறம் உகரு, உகசு. பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழனுக்கு அன்னத்தைத் தூது விடுத்த தாகப் பாடிய புறம் சுஎ ஆம் பாட்டு அவருடைய ஒப்பற்ற அன்பினைக் காட்டவல்லது. அன்னத்தை நண்பர் ஒருவருக் கொருவர் தூதுவிடுதற் கிஃதொரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

பிசிராந்தையார் சோழன் வடக்கிருந்த இடத்திற்குச் சென்றகாலை அவரது இளந்தோற்றத்தைக் கண்ட சான்றோர்கள் அவரை நோக்கி, "கேட்கும் காலம் பலவாலோ; நரை நுமக்கில்லையாலோ" என்றதற்கு அவர் சொல்லிய விடை யாவருக்கும் இன்பந் தருவதாகும். அது புறம் ௧௯௧. பிசிராந்தையார் பொய்மையை விரும்பாதவரென்பதும், சோழன்பாலுள்ள பெரு நட்பினால் தம் பெயர் பேதைச் சோழனென்று கூறுமியல்பினரென்பதும், நண்பருக்குத் துன்பம் வந்தகாலை தாமுமதனை உடனுகரும் தன்மையினரென்பதும் கோப்பெருஞ்சோழன் அவரைப் பாடிய புறம் ௨௧௫, ௨௧௬ ஆவது பாட்டுக்களினால் இனிது விளங்கும். அவன் அவரை,

"புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே
தன்பெயர் கிளக்குங் காலை யென்பெயர்
பேதைச் சோழ னென்னுஞ் சிறந்த
காதற் கிழமையு முடையன்."

"செல்வக்காலை நிற்பினு
மல்லற் காலை நில்லலன் மன்னே."

என்றது காண்க.

புறம் ௨௧௫ இன் ஏனைய அடிகளால் பாண்டியநாட்டில் அக்காலத்திலே முல்லைநிலத்தில் விளைந்த அவரைக்காயைக் கொய்து விற்கும் இடையர்கள் வரகரிசிச் சோற்றினையும், வேளைப்பூக் கலந்த இனிய தயிர்க் கூழையும் அருந்தினார்களென்பது தெரிகின்றது.

கோப்பெருஞ்சோழன் **பொத்தியார்** என்னும் புலவரோடு உண்மையான நட்புடையவனாய் நெடுங்காலம் அளவளாவி மகிழ்ந்தானென்பது புறம் ௨௧௨ இல் தெரிய வரும்.

"கோழி யோனே கோப்பெருஞ் சோழன்
பொத்தி னண்பிற் பொத்தியொடு கெழீஇ
வாயார் பெருநகை வைகலு நக்கே."

என்றது காண்க. கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த போது அவன் கருதியபடியே அவனோ டுயிர்நீப்பதற்கு வந்த பிசிராந்தையாரைக் கண்டு பொத்தியார் புகழ்ந்து பாடிய பாட்டு புறம் உகஎ.

"இசைமர பாக நட்புக் கந்தாக
இனையதோர் காலை ஈங்கு வருதல்
வருவ னென்ற கோனது பெருமையும்
அதுபழு தின்றி வந்தவ னறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே."

என்றது காண்க.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தகாலைப் பொத்தியாரும் அவ்வாறே செய்யக்கருதினர். அப்போதவரை 'நும் மகன் பிறந்தபின் வருக' என்று பணித்தனன் என்பது புறம் உஉஉ இல்,

"அழலவிர் வயங்கிழைப் பொலிந்த மேனி
நிழலினும் போகாநின் வெய்யோள் பயந்த
புகழ்சால் புதல்வன் பிறந்தபின் வாவென."

என்றதால் விளங்கும். அவ்வாறே பொத்தியாரும் மீண்டு வந்து அரசன் இல்லாத உறையூரைக் கண்டு அழுது பாடிய பாட்டு மிகவும் உருக்கத்தைத் தருகின்றது. அது புறம் உஉ0: அரசன் இறந்த விடத்திட்ட நடுகற் கண்டு அவன் புகழைப் பாடிய பாட்டும் அனையதே. அது புறம் உஉக. மகன் பிறந்தபின் சென்று இடந்தாவென்று பொத்தியார் கேட்டதும், கல்லாகியும் இடங் கொடுத்த சோழனை வடக்கிருந்த பொத்தியார் பாடியதும் (புறம் உஉஉ, உஉங) யாவர்க்கும் அளவற்ற வியப்பைத் தருவனவே. (வடக்

இருத்தல் என்பது துறக்கமெய்தல் கருதி உலக நுகர்ச்சியை நீத்து நோன்பினால் உடலை மெலிவித்துத் தவப்பயிற்சியால் உயிரை விடுதலாம்.

"தீதில் யாக்கையொடு மாய்தல் தவத்தலையே."
(புறம், உகச)

என்றது காண்க )

கோப்பெருஞ்சோழன் புலவர்கள்மீது மிக்க பற்றுடையவன் என்பது புல்லாற்றூர் எயிற்றியனார் அவன்றன் மக்கள் மேற் போர் தொடுத்தல் தகாதென்று கழறியபோது, அவன் அவர்கள்மேற் செல்லாமையின் வைத் துணரப்படும். எயிற்றியனாரது பாடல் புறம் உகங ஆல் அக்காலத்துந் தந்தையரசு மக்கட்கேயுரிய தென்பதும், புகழையும் உயர் நெறி வாழ்க்கையையும் நன்கு மன்னர் கருதவேண்டு மென்பதும் பெறப்படும். இப் புலவர் அரசர்க்குறுதியான நன்மதி கூறுவதில் மிக்க வீரமுடையவர்.

கோப்பெருஞ்சோழனோடு அவனது பல நண்பர் வடக்கிருந்து உயிர் துறந்தாரென்பது,

"பலரா லத்தைநின் குறியிருந் தோரே."

என்று கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார் புறம் உகக இல் கூறியதாற் பெறப்படும். இப் புலவர் தாம் அரசனோடு வடக்கிருப்பதற்குப் பிற்பட்டமையால் அரசன் வெறுத்துத் தம்மோ டுரையாடவில்லை போலும் என்று தாம் சொல்லிய பாட்டினுள் குறித்துள்ளார். இவர் கருவூரிலே நான்கு தெருக்கள் ஒன்று கூடுமிடத்தில் கோயில் கொண்டிருந்த சதுக்கப்பூதத்தின் பெயரினை யுடையவராகத் தெரிகிறது.

சேய்மைத்தாகிய பலபல இடங்களிலிருந்து பிசிராந்தையார் போன்ற நண்பர் ஒருங்கு வடக்கிருந்தமையைக்

கண்ட கண்ணகனர் என்னும் புலவர் தாம் கூறிய புறம் உகஅ இல்,

"என்றுஞ் சான்றோர்,
சான்றோர் பால ராப
சாலார் சாலார் பாலரா குபவே."

என்று மொழிந்தது உற்று நோக்கத் தக்கது.

பெருஞ்சேரலிரும்பொறைக்குப் பின் குடக்கோச் சேரலிரும்பொறை அல்லது இளஞ்சேரலிரும்பொறை யென்பவன் பதிற்றுப்பத்தில் கூ ஆம் பத்திற்குத் தலைவனாய் விளங்கினன். (கூ ஆம் பத்துப்பாடியவர் பெருங்குன்றூர்கிழார். இதனைப்பாடி இவர் ௩௨ ஆயிரம் பொற்காசும், மலைவளமும், ஊர்வளமும், நிலவளமும், அணிகலச் சிறப்பும் அரசனால் அமைத்துக்கொடுக்கப்பட்டார்.) இவ்வரசன் கோப்பெருஞ் சோழனையும், பழையன் மாறனையும், விச்சிக்கோ வென்பானை யும் வென்றனனென்றும், வேள்வி வேட்டனனென்றும் அறிகின்றோம். இதனுள் அரசனது வீரமும், வண்மையும், செங்கோன்மையும் பாராட்டப்பட்டன. விந்தாடவி யென்னுமிடம் கொற்றவைக் குரியதாகலின் அதனைக் கடவுட்பெரியகானம் என்றார். கொங்கு நாட்டையும் பூழி நாட்டையும் இவ் வரசன் ஆண்டதாகத் தெரிகின்றது. இவர் பாடல்கள் அகநானூற்றிலும், குறுந்தொகையிலும், நற்றிணையிலும் வந்துள்ளன. குடக்கோச் சேரலிரும் பொறை பரிசில் நீட்டித்ததற்காகப் புறம் உகo இலும், உகக இலும் அவனைச் சினந்து தாம் விரைவில் அவனை விட்டுப் போய்விடுவதாக இவர் பாடியுள்ளார். அப் பாடல் களுள் இவரைக் கவலையோடு எதிர்பார்த்திருக்கும் இவரின் மனைவி மக்களது நிலைமையை மிகவும் உருக்கமாக இவர் எடுத்துக்காட்டியுள்ளார்.

"வல்சியின் மையின் வயின்வயின் மாறி
இல்லெலி மடிந்த தொல்சுவர் வரைப்பிற்
பாஅ லின்மையிற் பல்பாடு சுவைத்து
முலைக்கோண் மறந்த புதல்வனொடு
மனைத்தொலைந் திருந்தவென் வாணுதற் படர்ந்தே."

என்றது காண்க.

சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ் சேரலிரும்பொறை இளஞ்சேரலிரும்பொறைக்குப் பின் அரசாண்டிருக்கவேண்டும். இவனைப் பாடிய புலவர் **நரிவெரூஉத்தலையார்** என்பவர். இவர் சேரமானைக் கண்ட நாளில் தம் உடம்பு வேறுபட்டு நல்லதாகப் பெற்றாரென்று தெரிகிறது. இவர் புறம் ரு இல் அரசன் நாட்டினைத் தனது பிள்ளைபோற் காக்கவேண்டுமென்று அறிவுறுத்தினர். புறம் கரு இல் முதியோரை நோக்கி நன்னெறி யொழுகவேண்டு மென்று இவர் அறிவுமொழி கூறியுள்ளார்.

"நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்."

என்றது காண்க. இப் புலவரின் பாடல்கள் குறுந்தொகை யிலும் வந்துள்ளன.

நலங்கிள்ளியையும் நெடுங்கிள்ளியையும் இவர்களுக்குப் பின் வந்த குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனையுங் **கோவூர்கிழார்** என்னும் புலவர் பாடியுள்ளார். இவர் பெயரினால் இவர் வேளாள ரென்பது தெளிவு. சோழன் நலங்கிள்ளியை இவர் புறநானூற்றினுள் ருக, ருஉ, ருரு, சரு, கூஅ, ருஅஉ, ச00 என்னும் பாடல்களிற் பாடியுள்ளார். ருக ஆம் பாட்டில் அவனது படைச் சிறப்பையும், இடை விடாப் போர்த் தொழிலையும் புகழ்ந்து வடநாட்டுள்ள அரசர்கள் அஞ்சித் தூங்காதிருக்கும்படியாக அவனது படைச் செலவு சிறப்புற்றிருந்த தென்றமையால் வடபுலத்

தரசர்களை இவன் வென்றவன் என்பது தெளிவு. சேர பாண்டியர் இவனுக்குப் பின் வைக்கப்படுவர் என்பதற்கு அறத்தின்பின் பொருளும் இன்பமும் வைக்கப்படுதலை இவர் உவமையாகக் கூறினர். ௩௨ ஆவது பாட்டினுள் பகைவரின் நகரங்களை வென்று பரிசிலர்க்கு அவற்றைத் தருபவன் என்பது குறிக்கப்பட்டது. ௩௩ ஆம் பாட்டில் பாண்டிய நாட்டிலுள்ள ஏழு அரண்களை அவன் பற்றினன் என்பது வெளியாகின்றது. அக்காலத்தில் சோற்றைத் தயிரோடு கலந்து உருட்டி அதனை வருவோர் ஒவ்வொருவருக்குங் கொடுத்து மகிழ்தல் அரசன் வெற்றியடைந்த காலத்தில் நிகழ்ந்ததொரு செயலாகத் தோன்றுகின்றது. ௪௪ ஆவது பாட்டில் ஆவூரிலே உள்ள கோட்டையை நலங்கிள்ளி முற்றியிருந்தபோது அவனை எதிர்த்துப் போர் புரியாதும் குடிகளைப்பற்றிக் கவனியாதும், தானிருந்த வீட்டை அடைத்துக்கொண்டு சும்மாவிருந்த நெடுங்கிள்ளியைப் பார்த்து, "நீ போர்புரிய வேண்டும். அல்லது கோட்டையை நலங்கிள்ளியின தென்று உடன்படல் வேண்டும். இரண்டில் யாதாவதொன்று செயாதிருத்தல் நீ நாணம் அடைதற்குரிய நிலையாகும்" என்று புலவர் வற்புறுத் தினமை காண்க.

"அறவை யாயி னினதெனத் திறத்தல்
மறவை யாயிற் போரொடு திறத்தல்
அறவையு மறவையு மல்லை யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்
நீண்மதி லொருசிறை ஒடுங்குதல்
நாணுத்தக வுடைத்திது காணுங் காலே."

என்றது அது. புறம் ௪௫ ஆம் பாட்டில் நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் உடன் பிறந்தாராதலாலும், ஒரு குடிக் குரியாராதலாலும், இருவரும் ஆத்திமாலை சூடியவராத

லாலும், அவர்கள் தம்முள் பொருதல் தவறு; அங்ஙனம் பொருதல் ஏனைய வரசர்க்கு உவகை விளைத்து இருவர்க்கும் இழிவைத் தருமாதலால் சந்து செய்தலே அவர்கள் கடனென்று இவர் வற்புறுத்தினர். உறையூரில் நெடுங்கிள்ளி யிருந்த காலத்து நலங்கிள்ளியிடமிருந்தவன்பாற் சென்ற இளந்தத்தனென்பவனை ஒற்று வந்ததாகத் துணிந்து அவன் கொல்லப்புகுந்த காலத்து 'அவன் ஒற்றனல்லன், பாடவல்ல பரிசிலன்' என்று எடுத்துக்கூறி அவனை உய்யக் கொள்ளப் பாடிய பாட்டு புறம் ௪௭. இனி ௬௮ ஆம் பாட்டுள் இவர் நலங்கிள்ளியின் வண்மையை எடுத்துக் கூறிப் பசியால் வருந்தும் பாணனை அவனிடை ஆற்றுப்படுத்தினர். ௩௮௨, ௪00 ஆம் பாட்டிலும் நலங்கிள்ளியின் வண்மையும் வீரமும் பாடப்பெற்றிருக்கின்றன.

நலங்கிள்ளிக்குப் பின் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனென்னும் சோழ மன்னன் அரசியற்றிய காலை அவனைப் பல புலவர்கள் பாடினர். கோவூர்கிழார் அவனைப் புறம் ௪௧ இல் பாடினர். அவன் பகைவரை வென்று அவர் நாட்டிற்குச் செய்யுங் கெடுதிகளைப்பற்றிப் புலவர் இதனுட் கூறினர். கிள்ளிவளவன் தன் பகைவனாகிய மலையமான் மக்களை யானைக்கிட்டுக் கொல்ல முயன்றபோது இவர் அவ்வரசனுக்கு இரக்கம் உண்டாகும்படி பாடி அவர்களை உய்யக் கொண்டது புறம் ௪௬ ஆவது பாட்டிற் காணப் படும். அப்பாட்டு மிகவும் நயமுடையது. (புறவினது துன்பத்தை நீக்கிய சோழன் குடும்பத்திற் கிள்ளிவளவன் வந்தவனென்றும், மலையமான் மக்கள் கற்றவரது வறுமையைத் தொலைக்கும் பகுத்துண் பெருமரபினரென்றும், அவர்கள் அச்சமிகுதியால் அதிர்ச்சி எய்தி யானையைக் கண்டு அழுகையை மறந்தனரென்றும், அதனைக் கண்டவுடன் முன்னில்லாத புதிய திகிலை அடைந்தனரென்றுங்கூறி,

'இவற்றை உணர்ந்த மன்னன் விரும்பியது செய்க' என்று விடுவித்தனர்.) இன்னும் எ0 ஆம் பாட்டினுள் பரணனை விறலியோடு குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனிடமாற்றுப்படுத்து முகத்தால் தைத்திங்களின்கண் குளிர்ந்த பொய்கையைப்போலக் கொள்ளக் குறையாத சோற்றை யுடைய நாட்டிற்குத் தலைவன் கிள்ளிவளவனென்றும், அவன் நாடு, 'அடுநெருப் பல்லது சுடுநெருப் பறியாது' என்றும் புலவர் புகழ்ந்துரைத்தமை காண்க. புறம் ௩எ௩ இல் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடியுள்ளார். அவனே குராப்பள்ளித்துஞ்சிய பெருந் திருமாவளவனை இருத்தல்கூடும்.

**உறையூர் முதுகண்ணன்சாத்தனார்** என்பவர் சோழன் நலங்கிள்ளியைப் பாடிய பாட்டினுள் நெடுங்கிள்ளியோடு அவன் போர்புரியாது அறநெறி நிற்றலே நலமென்று வற்புறுத்தினர். இவர் குறுந்தொகையுள் ஒரு பாட்டும் புறநானூற்றில் ஐந்து பாட்டுகளும் இயற்றியுள்ளார். இவர் உலகநிலையாமையையும், அறம் பொருளின்பங்களின் சிறப்பையும் எடுத்து விளக்குவதிற் றேர்ந்தவர். முதுகண்ணன் என்ற சொல் அரசர்க்கும் பட்டத்துத் தேவியர்க்கும் உசாத்துணையாக இருந்து ஒழுக்க முறைகளைச் செவியறிவுறுத்துவாரைக் குறிக்கும். இதனால் இப்புலவர் அரசர்களுக்கு உண்மைகளை அறிவுறுத்துந் தகுதியுடையவரென்பது கருதப்படும். இவர் புறம் ௨எ ஆம் பாட்டில் திங்களானது வளர்ந்தது குறைதலும், குறைந்தது வளர்தலும், பிறந்தது இறத்தலும், இறந்தது பிறத்தலும் உண்டென்று யார்க்குங் காட்டுவதாகும் எனக் கூறுகின்றார். புறம் ௨அ இல் மக்கட் பிறப்பில் எட்டு வகைப்பட்ட ஊனத்தை எடுத்து விளக்கிச், செல்வமானது அறம், பொருள் இன்பம் என்னும் மூன்றையும் செய்தற்கு உதவாத இடத்து

அது தன்னை யுடையானைப் பாதுகாப்பதில்லை என்று குறிப்பித்தார். புறம் உ௬ இல் நலங்கிள்ளி பாணரைப் போற்றுவதும், மகளிரொடு மகிழ்வதும், செங்கோல் செலுத்துவதும், தம்பால் வருவார் யாவர்க்கும் உதவுதலுஞ் செய்ய வல்லானென்பதை எடுத்துக்கூறி அவனையும் அவனது சுற்றத்தையும் வாழ்த்தினர்.

நலங்கிள்ளி தம்பி மாவளத்தா னென்பானைத் **தாமப்பல்கண்ணனு**ரென்பவர் பாடியுள்ளார். இவர் காஞ்சிபுரத்தின் அருகிலுள்ள தாமல் என்னுமூரில் வாழ்ந்த புலவர் என்று புறநானூற்றுப் பதிப்பாசிரியர் கூறினர். இவர் பாடிய பாட்டு, புறம் ௪௩. (மாவளத்தானும் இப் புலவரும் வட்டு விளையாடிய காலத்திற் புலவர் செய்த சூழ்ச்சியால் அரசன் வெகுண்டு வட்டைக்கொண் டெறிந்தனன். அப்போது புலவர் கூறியதாவது, "அடைக்கலம் புகுந்த புறவினைக் காத்த பெருமன்னனது மரபில் வந்தும் வெறுக்கத் தக்கன செய்தலால் நினது பிறப்பின்கண் ஐயமுடையேன்" என்பதே. அதுகேட்டு அரசகுமரன் நாணப்பட அவனைத் தேற்றும்பொருட்டு இப்பாட்டினுள் 'நீ வெறுக்கத்தக்க சொல்லை யான் சொல்லியது தவறு. அங்ஙனமிருக்க, நீ தவறு செய்தாற்போல நாணினாய். தப்பினைப் பொறுப்பது நின் குலத்திலுள்ளார்க் கெளிதென்பதை அறிவித்தாய். நீ காவிரி கொழித்த மணலினும் பலநாள் வாழ்க' என்று புலவர் செப்பினர். இவர் பார்ப்பார் குலத்தைச் சேர்ந்தவர் என்று தெரிகிறது. "நின் முன்னோரெல்லாம் பார்ப்பார் நோவன செய்யலர்" என்றது காண்க.

குளமுற்றத்துத் துஞ்சிய வளவனைப் பாடிய மற்றொரு புலவர் ஐயூர் முடவனுரென்பவர். இவருக்கு ஐயூர் கிழாரென்று மற்றொரு பெயருமுண்டு. இவரது உறுப்புக்

காரணமாக முடவனார் என்ற பெயர் எழுந்தது போலும் இவர் பாடல்கள் குறுந்தொகையிலும் அகநானூற்றிலும் வந்துள்ளன.

இவர் புறம் ருக ஆவது பாட்டில் கூடகாரத்து மாறன் வழுதியினது அளவற்ற ஆற்றலையும், ஏனைத் தமிழ்நாட்டு மன்னரை வெல்லுந் தகைமையையும் எடுத்தோதினார். நீர், தீ, வளி முதலிய இயற்கைப் பொருள்களின் வன்மையை இவனது திறமைக்' குவமித்தார். இவர் முதலில் கூடகாரத்து மாறன்வழுதியைப் பாடிப் பின் நெடுநாள் இருந்திருத்தல் வேண்டும். 'தண்டமிழ்' என்ற சொற்றொடர் தமிழ்நாடு என்ற பொருளில் வந்தது. கறையான் புற்றிலிருந்து ஈசல் புறப்பட்டுச் சுழல்வதுபோல அரசனது தயவில்லாதவர் சுழல்வாரென்று இவர் குறிப்பித்தார். கிள்ளிவளவன் இறந்தபின் கையறுநிலையாக இவர் பாடிய செய்யுள் புறம் உ௨அ. இதனுள் இறந்த மன்னனை மூடுதற்குத் தக்க தாழி வனைதல் கூடுமோ என்று குயவனை வினவி, "பெரிய நிலவட்டம் உருளியாகவும், பெரிய மலை மண்ணாகவுமன்றோ அவனுக்குத் தாழி வனைதல் வேண்டும். அஃது உன்னால் முடியாதே" என்றுங் கூறி முடித்தார். புறம் ௩௯௯ இல் தோன்றிமலைக்குத் தலைவனாகிய தாமான்தோன்றிக் கோனிடத்துப் பல பசுநிரைகளையுந் தன்னுடைய வண்டிக்கு எருதுகளையுந் தான் பெற்றதை இவர் குறித்துள்ளார். கிள்ளிவளவன் இறந்த பிற்பாடு இம் மன்னனிடம் இவற்றை இவர் பெற்றனர் போலும். கிள்ளிவளவன் காலத்தே இவர் பிறரிடம் சென்றன ரல்லர்.

"கிள்ளி வளவ னுள்ளியவற் படர்தும்
செல்லேன் செல்லேன்."

என்றது காண்க. இவர் அகம் ௨௧௬ இல் செல்லூர்க்கோசர் தலைவனாகிய ஆதன் எழினி என்பவனைப் பாடியுள்ளார்.

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடிய மற்றொரு புலவர் ஆவூர் மூலங்கிழார் என்பவர். மூலம் என்ற சொல் இவர் பிறந்த நாளைக் குறிக்கும்போலும். ஆவூர் என்பது உறையூருக்கு அருகேயுள்ளது. பசுபதீச்சுரம் என்பதும் அதுவே. ஆவூர்கிழார் என்பவர் இவரோ வேறொருவரோ தெரியவில்லை. அவர் புறம் ௩௨௨ இல் மருத நிலத்தின் வளத்தைப்பற்றிக் கூறியுள்ளார். இவர் புறம் ௧௬௬ இல் இவ்வளவனையே பாடியதாகக் கருத இடமுண்டு. இவ்வளவன் காலத்திலிருந்த பாண்டிய மரபினைச் சேர்ந்த கீரஞ்சாத்தனைப் புறம் ௧௭௮ இல் பாடியுள்ளார்.

புறம் ௩௮ ஆம் பாட்டினுள் ஆவூர் மூலங்கிழாரைக் கிள்ளிவளவன் 'நீர் எங்குள்ளீர், எந்நாட்டினீர்?' என்று வினவியதற்கு விடையாக அவர் அவனது புகழை வித்தோதிப் பரிசிலர்க்கீயும் பெருஞ் சிறப்புப்பற்றிப் பகைவர் நாட்டிலுள்ள பரிசிலரும் அவனை மிகவும் நாடுவராதலின், தன்னாட்டிற் பிறந்த புலவரை நினைவில் வைத்தல் அவற்கு எளிதன்றென்பதைக் குறிப்பித்தார். புறம் ௨௬௧ ஆவது பாட்டில் இறந்த ஒரு வீரனது இல்லையும் நடுகல்லையும் பற்றிப் பாடினார். அவ்வீரன் இன்னானென்று தெரியவில்லை. இதனுள் அவர் இறைவனில்லாத வீடு, மழித்த தலையோடு அணிகலன் களைந்த கைம்பெண் போன்றதென்றனர்.

புறம் ௧௭௭ இல் குடநாட்டு வேளாளத் தலைவனாகிய காரியாதியினது சோற்றுக்கொடையை அவர் வியந்துரைத்தார். அக்காலத்தில் பனையோலையில் உணவுகோடல் குறிக்கப்பட்டது. புறம் ௧௬௬ இல் தமக்குப் பொருளீந்த பார்ப்பான் கவுணியன்விண்ணந்தாய னென்பவனைப் புலவர்

புகழ்ந்துள்ளார். அக்கவுணியன் சிவபெருமானது நான்மறையுட் குறித்தவாறு உக துறையும் முற்றிய வேள்வியியற்றின மரபில் வந்தோனென்றும், நீர்நாணும்படியாக நெய்வழங்கித் தம் துணைவியரோடு பல வேள்விகளியற்றித் தமக்குப் பெருவிருந்து செய்தவனென்றும் குறிப்பித்து, அவனை 'இமயம்போல் நீடுழிவாழ்க' என்று வாழ்த்தினர். இதனுள் தம்முடைய ஊர் காவிரிப் பாசனத்திலுள்ள தென் பனையும் குறித்தார். அவர் பாடல்கள் அகத்திலும் வந்துள்ளன.

**இனி, ஆலத்தூர்கிழார்** என்பவர் குளமுற்றத்துக் கிள்ளிவளவனைப் பாடிய புறம் ௩௪ ஆவது செய்யுளில் "எந்நன்றி கொன்றார்க்கும்........" என்ற கருத்தைக்கூறி அஃது அறநூல் கூறிற்றென்று மொழிந்தனர். தனக்குணவளித்த அரசனை வாழ்த்தாமை செய்ந்நன்றி கொல்வதாகு மென்றுரைத்தனர். வடகீழ்த்திசைநின்று வரும் மாரியின் நுண்ணிய பல துளியினும் பலகாலம் வாழ்கவென்று அவர் அரசனை வாழ்த்தினர். ௩௬ ஆவது பாட்டினுள் கிள்ளிவளவன் கருவூரை முற்றுகையிட்ட காலத்து ஆண்டுள்ள அரசன் போர்புரியாது வாளாவிருந்தமையால் அவனொடு பொருதல் தகுதியன் றென்பதைப் புலவர் குறிப்பித்தார். காவல்மரப் பாதுகாப்பும் இச்செய்யுளில் வற்புறுத்தப் பட்டது.

**மாறோக்கத்து நப்பசலையாரும்** இவ் வளவனைப் பாடியுள்ளார். இவன் இறந்தபின் அவர் பாடிய பாடல்களில் இவனதுயிரைக் கூற்றுவன் இவனிடம் இரந்து பெற்றிருக்க வேண்டுமென்றும், பாணர் முதலியோர் ஆதரவிழந்தனர் என்றுங் கூறினர். புறம் ௩௭ இல் ஈகை, போரில் வெற்றி, செங்கோன் முறை என்பன அரசன் கடமைகளாதலால்

அவை சிறப்பாகப் புகழுத்தக்கன அல்ல என்றனர். இப் பாட்டினுள் சோழ மன்னனொருவன் புறவிற் கடைக்கலங் கொடுத்த கதையும், தூங்கெயிலெறிந்த செம்பியன் கதை யுங் குறிக்கப்பட்டன

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடிய மற்றொரு புலவர் இடைக்காடனூர் என்பவர். இவர் இடைக்கா டென்னும் ஊரைச் சேர்ந்தவர். இவரைப்பற்றித் திருவிளை யாடற் புராணத்திற் கூறியிருப்பது ஒருபுறமிருப்ப, இவர் 'ஊசிமுறி' யென்ற நூலொன்று செய்ததாகப் பழைய உரை களிற் காணப்படுகின்றது. சிலர் ஊசிமுறி என்பது இக் காலத்துச் சுருக்கெழுத்து[1] போல்வதென்கின்றார்கள். இவர் புறம் சஉ இல் கிள்ளிவளவனது செங்கோன்மையையும், வீரத்தையும், வண்மையையும் எடுத்துக்கூறி,

"மல்லலி னிழிந்து மாக்கட னோக்கி
நில்லா தியிழிதரும் பல்யாறு போலப்
புலவ ரெல்லாம் நின்னோக் கினரே."

என்று பாராட்டினர்.

இவருடைய பாடல்கள் அகநானூற்றினுள்ளும் வந் துள்ளன. இவர் முல்லைத்திணையையே மிகுதியும் பாடி யுள்ளார். இதனால் இவர் இடையர் மரபினராயுங் காட னென்ற பெயருடையராயுந் திகழ்ந்தனரென்று சிலர் கூறுவர்.

ஆடுதுறை மாசாத்தனார் எனனும் புலவர் குளமுற்றத் துத்துஞ்சிய கிள்ளிவளவன் இறந்தமைக்காகக் கூற்றுவனை இகழ்ந்து ஒரு பாடல் செய்தனர் (புறம் உஉஎ). இப்பாட் டிற் பகைவர் பலரைக் கொன்று கூற்றத்தின் பசியை

1. Short-hand.

எளிதிற் போக்கும் கிள்ளிவளவனாகிய ஒருவனைத் தான் கொண்டது அவனது பேதைமையென்று அவர் குறிப்பித்தார். அங்ஙனம் அவன் செய்தது விதையை விதைத்துப் பயன் காணாது அதனைக் கெடுத்தது போலும் என்றுரைத்தார். தஞ்சாவூர்ச் சில்லாவில் ஆடுதுறை என்பது மூன்றிடங்களுக்குப் பெயராக அமைந்துள்ளது. காவிரிக் கரையிலுள்ள வடகுரங்காடுதுறை, தென்குரங்காடுதுறை இரண்டும் பாடல் பெற்ற திருக்கோயில்கள். மற்றொன்று வடவெள்ளாற்றங் கரையிலுள்ளது. மாசாத்தனென்பது சாத்தான்என்னுந் தெய்வத்தின் பெயராதலால், கடவுட் பெயரை மக்கட்கு இட்டு வழங்கும் வழக்கம் அக்காலத்திருந்தமைக்கு இஃதொரு எடுத்துக் காட்டாதல் காண்க.

குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடிய மற்றொரு புலவர் வெள்ளைக்குடி நாகனார். இவர் நிலத்திற்கு இறையிறுக்க இயலாதபடி அரசனை வேண்டி அவற்றை முற்றாட்டாக (முழுப் பரிசாக)ப் பெற்றனர். இவர் பாடிய செய்யுள் புறம் ௩௫. இதனுள், மழை குறைந்தாலுங் குடிகளிடத்தே குற்றங் காணப்படினும் உலகம் அரசனைப் பழிக்குமாதலின், அரசர் உழவர் குடிகளைப் பாதுகாத்து அக்காவலாலே ஏனைக் குடிகளையும் பாதுகாத்தல் வேண்டுமென்றும் கோட் சொல் வாரது மொழியைப் பொருட்படுத்தக் கூடாதென்றும் புலவர் குறிப்பித்தனர்.

நல்லிறையனா ரென்னும் புலவர் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடிய புலவருள் ஒருவராவர். இறையனா ரென்று திருவள்ளுவ மாலையிற் சொல்லப்பட்ட புலவர் வேறு, இவர் வேறு. புறம் ௩௯௩ ஆம் பாட்டினுள் பரிசில் விரும்பி அரசனை வேண்டுவது குறிக்கப்பட்டது. காவிரியின் சிறப்பையும் விதந்தோதியுள்ளார்.

**எருக்காட்டூர்த் தாயங்கண்ணனா** ரென்னும் புலவர் இவ் வளவனது வீரத்தையும் வண்மையையும் புறம் ௩௯௭ இல் நன்கு பாடியுள்ளார். இவர் அப்பாட்டினுள் வளவன் பாம்பின் உரிபோன்ற அழகிய ஆடையையும் அருங்கலம் முதலியவற்றையும் இரவலர்க்கு வழங்கினனென்றும், அந்தணர் வேள்விகளை ஆதரித்தானென்றும், அவன் நிழலில் வாழும்வரை தமக்கு எப்படிப்பட்ட கவலையும் இல்லையென்றுங் கூறினர். இவர் அகத்துள் ஏழு பாடல்கள் பாடியுள்ளார். அகம் ௧௪௯ இல் சுள்ளியாறு கடலொடு கலக்குமிடத்து யவனர் மரக்கலங்களிற் பொன்கொண்டு வந்து 'முசிறி' என்னுந் துறைமுகப்பட்டினத்தில் மிளகு ஏற்றிப் போயின ரென்றும், முசிறியை வளைத்து வெற்றி யடைந்து அங்குள்ள பொற்பாவை பொன்றினை ஒரு பாண்டியன் கைப்பற்றிச் சென்றதாகவும் கூறியுள்ளார். எருக்காட்டூ ரென்பது திருவரூருக் கருகிலுள்ளது. தாய னென்பது புலவரின் தந்தை பெயர் போலும். **தாயங் கண்ணியா** ரென்னும் பெண்புலவர் பாடிய உ௫௦ இல் தலைவனை இழந்த நகரானது கைம்மை நோன்புடைய பெண்டிர் போல்வதென்ற கருத்து வந்துள்ளது. இவர் தாயங் கண்ணனாரின் தங்கையென்பாரு முளர்.

— x —

**குளமுற்றத்துஞ்சிய கிள்ளிவளவன்** தென்னவன் மரபில் வந்த "சிறுகுடி கிழான் பண்ணன்" என்னுங் கொடையாளியைப் புறம் ௧௭௩ இல் பாடியுள்ளார். அவன் கிள்ளி வளவனின் நண்பனென்று கோவூர்கிழார் புறம் எ௦ இற் குறித்தனர்.

பண்ணனைப் புறம் ௩௮௮ இல் **மதுரை அளக்கர்ஞாழலார் மகனார் மள்ளனா** ரென்னும் புலவர் பாடியுள்ளார். அளக்கர் ஞாழல் என்பது பாண்டிய நாட்டிலுள்ள ஓரூர். இம்

மள்ளனூர் வெள்ளி தென்திசையிலிருந்தால் மழை குறையுமென்று புறம் ௩௮௮ இல் குறிப்பதால் இவர் வான நூல் உணர்ந்தவரென்று தோன்றுகின்றது. இவருடைய பாடல்கள் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணைகளிலும் வந்துள்ளன.

பண்ணனைப் பாடிய மற்றொரு புலவர் **கோற்றங் கோற்றனூர்** என்பவர். அகம் ௫௪ இல் அவனைத் 'தமக்கென வாழாப் பிறர்க்குரி யாள'னென்று புகழ்ந்தது காண்க.

<u>பெருந்திருமா வளவனைப் பாடிய புலவருள் ஒருவர்</u> **கோனாட்டெறிச்சிலூர் மாடலன்மதுரைக்குமரனூர்** என்பவர். இவர் குட்டுவன் கோதையையும் கிள்ளி சேட்சென்னியையும் பாடியிருத்தலால், அம்மன்னர் திருமாவளவன் காலத்தவராய் இருக்கலாம். இவர் குறுநில மன்னர்களாகிய ஏனாதி திருக்கிள்ளியைப் புறம் ௧௬௭ இலும், ஈர்ந்தூர்கிழான் தோயன்மாறனைப் புறம் ௧௮௦ இலும், ஏனாதிதிருக்குட்டுவனைப் புறம் ௩௯௪ இலும் பாடியுள்ளார். பரிசில் நீட்டித்ததற்காகப் பெருந்திருமாவளவனை இவர் கடிந்து பாடிய புறம் ௧௯௭ ஆம் பாட்டில் அழிவில்லாதவருடைய செல்வத்தைப் பார்க்கிலும் நல்லறிவாளரது வறுமையைத் தாம் உவப்பதாகக் கூறியுள்ளார்.

"மிக்கபே ரெவ்வ முறினு மெனைத்து
முணர்ச்சி யில்லோ ருடைமை யுள்ளேம்
நல்லறி வுடையோர் நல்குர
வுள்ளுதும் பெருமயா முவந்துநனி பெரிதே."

என்றது காண்க.

பெருந்திருமாவளவனைப் பாடிய பெரும்புலவர் **காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனூர்.** காரிக்கண்ணனூரென்பது கருங்குருவியின் கண்போன்ற கண்ணை யுடையவரென்று

பொருள்படும். இவர் குலத்தால் வணிகர். அகத்துள்ளும் குறுந்தொகையுள்ளும் இவர் பாடியிருந்தாலும் புறத்தி லேயே இவர் பாடல்கள் மிகுதியுங் காணப்படுகின்றன. அகம் கஐஎ இல் தேக்கிலையில் வடுகர் தயிர்ச்சோறுண்ணும் வழக்கத்தை இவர் குறித்தது காண்க. அவரைக் 'கல்லா நீண்மொழிக் கதநாய் வடுகர்' என்றார். புறம் ருஅ இல் இப்புலவர் பெருந் திருமாவளவனும் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கிருந்தபோது அவர்களை நோக்கி இருவரும் ஒற்றுமையுடையவராயிருக்க வேண்டு மென்றும், புறங்கூறுவார் சொற்கேட்டுத் தம்முட் பகை கொள்ளக்கூடாதென்றும், ஒற்றுமையால் இருவரும் நாடுகள் பலவற்றை வென்று எல்லா மலைச்சிகரங்களிலும் புலிப் பொறியையும் கயற்பொறியையும் பொறிக்க வேண்டுமென் றுங் கூறியது மிகவும் அழகாயிருக்கின்றது. புறம் ருஎ இல் இவர் நன்மாறனை நோக்கிப் பகைவர் நாட்டுக் காவல் மரங்களை வெட்டுதல் கூடாதென்று வற்புறுத்துவதால், அவை அக்காலத்தே மிகப்புனிதமாகக் கருதப்பட்டன வென்பது தெரிகின்றது.

குராப்பள்ளித்துஞ்சிய பெருந் திருமாவளவன் காலத்து வள்ளலாய்த் திகழ்ந்தவன் குமணன். இவனைப் பாடிய புலவருள் ஒருவர் பெருந்தலைச் சாத்தனார் என்பவர். இவர் பாடல்கள் நற்றிணையிலும் வந்துள்ளன. இவர் ஆவூர் மூலங்கிழார் மகன் என்பது அகநானூற்றால் விளங்குகிறது. அகம் கங இல் பாண்டியன் மறவனாகிய "பண்ணி" யென்பவனது வண்மையைப் புகழ்ந்துள்ளார். (புறம் கருச இல் தன் தம்பியின் பகைமையால் நாடிழந்து காட்டில் ஒளித் திருந்த குமணன்பாற் சென்று, தமது மிகுந்த வறுமையை எடுத்துக்கூறிப் பரிசில் கேட்டனர். சமையலில்லாமையால் அடுப்பில் காளான் பூப்ப, பசியால் வருந்திப் பாலில்லாமை

யால் தொளை தூர்ந்துபோன தாயின் முலையைச் சுவைத்து அழுகின்ற பிள்ளையின் முகத்தைப் பார்த்துக் கண்ணீர் விடுகின்ற மனைவியின் வருத்தத்தைத் தீர்ப்பதற்காகக் குமணனிடம் புலவர் தாம் வந்ததாகக் கூறினர். குமணன் யாதுங் கொடுக்க இயலாமையால் புலவரிடம் தன் கைவாளைக் கொடுத்து 'என் தலையை அறிந்து என் தம்பியிடங் கொடுத்தால் அவன் உமக்குத் தகுந்த பரிசிலளிப்பா' னென்று கூறினதாகவும், புலவர் அவ்வாளைக் கொண்டு வந்து இளங்குமணனிடங் காட்டிக் குமணன் மொழிந்ததைத் தெரிவித்ததாகவும் புறம் கசுரு இல் கூறப்படுகின்றது.) புறம் கருக இல் இவர் இளங்கண்டீரக்கோவைத் தழுவியதையும், இளவிச்சிக்கோவைத் தழுவாமலும் இருந்ததற்குக் காரணங் கூறினர். (இளங்கண்டீரக்கோ என்பவன் நள்ளி என்னும் வள்ளலின் தம்பி. இளவிச்சிக்கோ என்பவன் பாரி மகளிரை மணக்க மறுத்த விச்சிக்கோன் என்பானின் தம்பி.) விச்சிக்கோன் பெண்கொலைபுரிந்த நன்னன் மரபில் வந்தவனென்றும் பாடுவார்க்குக் கொடாது கதவடைப்பவனென்றும் இப்பாட்டினிற் புலவர் விளக்கினர். புறம் உ0ரு இல் கடிய நெடுவேட்டுவன் என்பவன் பரிசில் நீட்டித்ததற்காக அவனை வாழ்த்துதல்போல இகழ்ந்து பாடினர். மூவேந்தராயினும் பேணுதலின்றிக் கொடுக்கும் பரிசிலை விரும்பேமென்று இதனுட் குறித்தனர்.

"முற்றிய திருவின் மூவ ராயினும்
பெட்பின் றீதல் யாம்வேண் டலமே."

என்றது காண்க. கடிய நெடுவேட்டுவனென்பான் கோடை யென்னும் மலைக்குத் தலைவனாகிய வேட்டுவனென்று அறிகிறோம். மூவன் என்னுஞ் சிற்றரசன் பரிசில் கொடாததற்காக அவனையும் புறம் உ0கூ இல் வாழ்த்துவதுபோல இகழ்ந்து பாடினர்)

பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் குமணனைப் பெரிதும் வியந்து பாடினவராவர். இப் புலவர் ஓரரசனைக் காணச் சென்றகாலை, அவன் அவரைப் பாராது பரிசில் கொடுப்ப அவர் அதை ஏற்றுக்கொள்ளாது சினந்து பாடிய புறம் ௨௦௮ இல் "நேரிற் கண்டு கல்வியின் தகுதியை அறிந்து தினையளவு கொடுத்தாலும் நல்லதென்று வாங்கிக்கொள்வேன். காணாது எதைக்கொடுத்தாலும் வாங்குவதில்லை" என்றனர். (வெளிமானென்னுஞ் சிற்றரசன் இப் புலவரைச் சிறப்பாகப் பேணினனென்று தெரிகிறது. அவன் தம்பி இளவெளிமானை இவர் பரிசில் கேட்டபோது அவன் முகம் மாறிக்கொடுத்த பரிசிலைத் தாம் ஏற்றுக்கொள்வதில்லை என்று புறம் ௨௦௭ இலும், ௨௩௭ இலும் குறிப்பித்தார்) வெளிமான் என்பவன் இறந்ததற்காகப் புறம் ௨௩௭ இலும் ௨௩௮ இலும் தமது பெரும் வருத்தத்தைத் தெரிவித்துள்ளார். புறம் ௨௩௮ இல் தாழியிட்டுப் பிணத்தைப் புதைக்கும் வழக்கம் புலனாகின்றது. அச் செய்யுளில், மழை மிகுதியான இரவின்கண் மரக்கலம் கவிழ்ந்துவிட, அதன்கணிருந்த கண்ணில்லாத ஊமன் கடலின்கணழுந்தினாற்போலத் தாமும் துன்பக்கடலிற்பட் டுழல்வதாகவும், இறந்துபடுதலே தமக்குத் தக்கதென்றும் புலவர் குறிப்பித்தார்.

அவர் குமணனைப் புறம் ௧௫௮ முதல் ௧௬௩ வரையுள்ள பாடல்களிற் பாடியுள்ளார். (௧௫௮ இல் எழுபெரு வள்ளல்களையும் எடுத்து மொழிந்து அவர்களுக்குப் பின் குமணனே பெருங்கொடையாளியாகச் சிறப்புற்று விளங்கினனென்றும், மூங்கில், சுரபுன்னை, ஆசினி, பலா முதலிய மரங்களின் செறிவால் குமணனது முதிரமலை மிக வளமுடைத்தா யிருந்ததென்றுஞ் செப்பினர்.) புறம் ௧௫௯ இல் வறுமையினால் தம்மனைவி படுந்துன்பத்தை

இரக்கமுண்டாகும்படி எடுத்துக்கூறி, முகம்மாறித் தரும் பரிசில் யானையானாலும் தமக்கு வேண்டாம், மகிழ்ச்சியுடன் முகமலர்ந்தளிப்பது ஒரு குன்றிமணி யளவானாலும் போதுமென்று புலவர் குறிப்பித்தார். (புறம் கசுO இல் குமணன் இரவலர்க்கு நல்லுணவும், பொன்னாற் செய்த அணிகலங்களும் கொடுப்பதைக் கேட்டுத் தமது வறுமை நீங்கத் தாம் அவனிடம் வந்ததாக உரைத்தார். இப் பாட்டினுள் தம் சிறிய புதல்வன், பாலில்லாத தாயின் முலையைச் சுவைத்துப் பால்பெறாது, சோறு இருத்தற்குரிய பாண்டத்தைத் திறந்துபார்த்து, அதனிலும் ஒன்றுங் காணாது அழ, தாய் குழந்தையைப் புலி வரவு சொல்லி அச்சமுறுத்தவும், அம் புலியைக் காட்டி வருத்தந் தணிவிக்கவும் முயன்று வருந்தினள் என்றும் கூறியது காண்க.) புறம் கசுக ஆவது பாட்டுப்பாடி அவர் யானை பெற்றதாகத் தெரிகிறது. அவர் பெற்ற யானையை இளவெளிமானது காவன்மரத்திற் கட்டித் தாம் பரிசில்பெற்றதை அவனுக்குரைத்தனர். அவர் தாம் குமணன்பாற் பெற்ற பெருஞ்செல்வத்தைக் கொணர்ந்து தம் மனைவியிடங் கொடுத்து வறுமைமிக்க தமது சுற்றத்தார்க்கெல்லாம் அத்னை வ்ழங்குமாறு கட்டளையிட்டாரென்று புறம் கசுங ஆற் றெரிகின்றது.

**பொய்கையார்** புறம் சஅ இல் தொண்டியைச் சிறப்பித்து அது தம்மூர் என்று கூறியுள்ளார். புறம் சசு இல் தொண்டி நகரத்தில் மருதமும், நெய்தலும் மயங்கு நயத்தை மிகவும் அழகாகக் கூறியுள்ளார். இவரே தம்மரசனாகிய கணைக்காலிரும்பொறையைச் செங்கணானிடமிருந்து மீட்பதற்குக் களவழி பாடினவராவர், இவரும் பொய்கையாழ்வாரும் வேறுவேறு என்பதை உயர் திரு சுவாமி **வேதாசலமென்னும் மறைமலையடிகள்**, தக்க ஏதுக்களால் நிறுவியுள்ளார். (மூவன் என்பவனை வென்று அவன்

பல்லைப்பிடுங்கிச் சேரன் தன்னுடைய தொண்டிநகரத்துக் கோட்டைவாயிற்கதவில் அழுத்திவைத்த செய்தியை நற்றிணை ௧௮ இல் பொய்கையார் கூறியுள்ளார். இவர் சேர நாட்டுப் புலவராவர். புறம் ௪௮, ௪௯ இல் கணைக்காலிரும்பொறைக்குப் பின்னுண்ட கோமான்கோக்கோதை மார்பனைப் பாடியுள்ளார்.

நக்கீரர் தந்தையாராகிய **மதுரைக் கணக்காயனூர்** என்பவரும் ஒரு சிறந்த புலவராய்த் திகழ்ந்ததாகத் தெரிகிறது. இவர் புறம் ௩௩௦ இல் ஒரு படை முழுவதையும் ஒரு வீரன் எதிர்த்து வென்ற செய்தியைப் பாடியுள்ளார். கணக்காயனூர் என்பவர் பள்ளிக்கூடத்துப் போதகாசிரியர். இவர் அகநானூற்றுள் சில பாடல்கள் இயற்றியுள்ளார். இவர் அகம் ௨௭ இல் கொற்கைப் பெருந்துறையில் முத்தெடுத்தலைக் குறித்தனர்.

இலவந்திகை நன்மாறனைப் பாடிய புலவருள் தலையாயவர் **மதுரைக் கணக்காயனூர் மகனூர் நக்கீரர்.** மதுரை நக்கீரர் என்பவரும் இவரே. இவர் பாடிய புறம் ௫௬ இல் அவனை நீலகண்டர், திருமால், பலதேவர், முருகன் என்னும் நான்கு கடவுளர்க்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார். இவர் மணிமிடற்றோன் என்றது உருத்திரமூர்த்தியையே.

அது,

"கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்" என்ற அடியில் 'கூற்றம்' என்பது உருத்திரனைக் குறிப்பதால் விளங்கும். இச்செய்யுளுள் யவனர் தேறல் கொண்டு வந்து கொடுப்பது கூறப்பட்டது. இவர் புறம் ௧௮௯ இல் நிலையாமையை எடுத்துக் கூறிச் செல்வத்துப் பயனே ஈகையென்றனர். இவர்,

> உண்பது நாழி உடுப்பவை யிரண்டே
> பிறவு மெல்லா மோரொக் கும்மே.

> செல்வத்துப் பயனே ஈதல்
> துய்ப்பே மெனினே தப்புந பலவே.

என்றது காண்க.

புறம் ௩௬௫ இல் சோழநாட்டுப் பிடவூர்கிழார் மகன் பெருஞ்சாத்தனைப் பாடியுள்ளார்.

ஆசிரியர் நக்கீரர் இலவந்திகை நன்மாறனைக் குறித்தே நெடுநல்வாடையைப் பாடியிருத்தல் வேண்டும். பத்துப் பாட்டில் திருமுருகாற்றுப்படை பாடினவரும் இவரே. இவருடைய பாடல்கள் அகநானூற்றில் மிகுதியாக வந்துள்ளன. பதினோராந் திருமுறையில் நக்கீரர் பாடியதாகக் கூறும் நூல்கள் இவர் செய்தனவோ என்பது ஐயப்பாடு. நாலடி நாற்பதென்னும் யாப்பு நூலொன்று இவர் செய்ததாக யாப்பருங்கல விருத்தியால் தெரிகின்றது. தலையாலங் கானத்துச் செருவென்ற செய்தியை இவர் அகம் ௩௬ இற் கூறியுள்ளார். அகம் ௫௭ இல் முசிறி என்னும் மேலைக் கரைப்பட்டினத்தை முற்றிய செழியனை விதந்தோதினர். அகம் ௭௮ இல் கபிலர் பாரி நகரிலுள்ளவர்களுக்கு முற்றுகைக் காலத்தில் உணவளித்துக் காத்ததைக் குறித்தனர். இவர்,

> " உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை
> வாய்மொழிக் கபிலன்."

என்று கபிலரைப் புகழ்ந்தது காண்க.

சேரமன்னருட் கோதை என்பவனது கருவூரையும், ஆன்பொருநையையும் அகம் ௯௩ இல் குறித்துள்ளார். அகம் ௧௨௬ இல் திதியன் என்னுங் குறுநில மன்னனுடைய புன்னைமரம் ஒன்றினை அன்னி யென்பவன் வெட்டி விட்டதற்காக அவ்வன்னியைக் குறுக்கைப் போர்க்களத்தில் திதியன் கொன்றதை இவர் கூறியுள்ளார். அகம்

உ0ரு இல் கோசரை வென்ற பொலம்பூட் கிள்ளியென்னுஞ் சோழன் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்ததாகக் கூறினர். அக் கிள்ளி கரிகால்வளவனோ வேறெவனோ தெரியவில்லை. இவர் அகம் உஉ௭ இல் தழும்பனது ஊணூரைப் பற்றியும், அவனைத் தூங்கல் என்னும் புலவர் பாடியதைப் பற்றியும், இயம்பினர். ஊணூர்க் கருகே சிறந்து விளங்கிய நிதிமிக்க மருங்கூர்ப் பட்டினத்தையும் அப் பாட்டின்கண் விதந்தோதினர்.

இவர் அகம் உசகூ இல் வேம்பி நாட்டை யாண்ட சிற்றரசனாகிய முசுண்டை யென்பவன் புலவர்க்குக் காளைப் பரிசில் கொடுப்பதை விதந்தோதினர். அகம் உருகூ இல் பசும்பூட் பாண்டியன் என்பவன் கொங்கரை வென்றதைக் கூறினர். அதனுள் இவர் வடுகர் பெருமகனாகிய எருமை என்பானது நன்னாட்டைக் குறித்தனர். அகம் உகூ0 இல் குட்டுவனது தொண்டி முன்றுறையைப் பற்றிக் கூறினர். இன்னும் ஆசிரியர் நக்கீரர் குயக்கொண்டான் என்பான் சாவவும் பிழைக்கவும் பாடியதாகத் தெரிதலால், இவர் பெருந் தவத்தினரென்பது போதரும். (இவரைப்பற்றிய திருவிளையாடற் புராணக்கதை இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் காலத்தில் நடைபெற்றிருக்கலாம். சங்க நூல்களில் அக் கதையைப்பற்றிய தெளிவான குறிப்பு யாதுமில்லை.)

**மருதை மருதனிளநாகனூர்** நக்கீரர் காலத்தவர். அவர் இலவந்திகை நன்மாறனைப் பாடிய பாட்டு புறம் ருரு. கலித் தொகையில் மருதக்கலி பாடியவர் இவரே. அகம் ௭௭ இல் வானவன் மறவன் பிட்டனைப் பாடியுள்ளார். அவ்வானவன் கோக்கோதை மார்பனாயிருத்தல் வேண்டும். ஏனெனில், அவன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன் காலத்

தவன் ஆவான். ஈண்டுக் குறித்த பிட்டன், பிட்டன் கொற்றனின் வேறுவன்.

இப் புலவர் அகநானூற்றில் பல பாடல்கள் பாடியுள்ளார். அகம் ௫௯ இல் கண்ணன் தொழுநையாற்றங் கரையில் அண்டர் மகளிருடைய உடைகளைக் கவர்ந்து கொண்டு குருந்தமரமேல் ஏறியிருந்தது குறிக்கப்பட்டது. இவர் திருப்பரங்குன்றத்து முருகப்பெருமானை நல்லந்துவனார் பாடியதைப்பற்றியும் இச் செய்யுளிற் குறித்தனர். பிற பாடல்களில் கழுவுள், வானவன், கொங்கர், கோசர் முதலியவர்களைப் பற்றியும் இவர் பாடியுள்ளார். இவர் இறையனாரகப்பொருளுக்கு ஓர் உரை செய்ததாகக் கூறுவர்.

**சோழன் நல்லுருத்திரனார்** முல்லைக்கலி பாடியவர். சோழ அரச குடும்பத்தைச் சார்ந்தவர். இவர் பாடல்களில் பாண்டியனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். புறம் ௧௯0 இல் வண்மைக் குணமுடைய வீரர்களுடைய நட்பைப் பாராட்டியுள்ளார்.

**ஆசிரியர் நல்லந்துவனார்** பரிபாடலில் முருகக்கடவுளுக்கு ஒரு பாடலும், வையைக்கு மூன்று பாடல்களும் இயற்றினர். இவர் மருதன் இளநாகனாரால் அகம் ௫௯ இல் பாடப்பெற்றிருத்தலின் அவர் காலத்தவரென்பது தெளிவு. நல்லந்துவனார் காலத்திலேயே சோழன் வாழ்ந்தவனென்று தோன்றுகிறது. மருதனிளநாகனார் மூன்றாவது மருதக்கலியைப் பாடியபின் நாலாவது முல்லைக்கலியை நல்லுருத்திரனார் பாடியிருத்தல் கூடும். நல்லந்துவனார் எஞ்சியுள்ள **நெய்தற்கலியைப்** பாடிக் கலித்தொகையைத் தொகுத்தவராவர்.

இலவந்திகை நன்மாறன் காலத்தனாகிய பிட்டன் என்னும் சேரன் படைத்தலைவனைப் பாடிய புலவர்கள்

ஆலம்பேரி சாத்தனார், உறையூர் மருத்துவன் தாமோதரனார், வடம வண்ணக்கன் தாமோதரனார் என்னும் புலவர்களாவர்.

**ஆலம்பேரி சாத்தனார்** என்பவர் அகம் ௧எ௫ இல் செழியனது ஆலங்கானத்துப் போரைக் குறித்துள்ளார். இவர் பாடல் நற்றிணையுள்ளும் வந்துள்ளது. அகம் அ௧ இல் இவர் கடலன் என்னும் கொடையாளியின் வீரத்தையும் வண்மையையும் புகழ்ந்து அவன் ஊர் விளங்கிலென்பதையும் விளக்கினர். அகம் ௧௪௩ இல் சேரமன்னன் மறவனை பிட்டனையும் பாடினர். இவர் பாலையை மிகுதியும் பாடியுள்ளார். புறம் ௧௧அ இல் பாண்டியன் இலவந்திகை நன்மாறனைப் பாடியுள்ளார்.

**உறையூர் மருத்துவன் தாமோதரனார்** என்பவர் பெருந்திருமாவளவனைப் புறம் ௬0 இல் பாடியுள்ளார். வளவனைக் கடற்கரையிலிருந்து உப்புச்சுமை தாங்கி மலைக்கேகும் வலிய பகட்டிற்கு உவமித்தார். தாமோதரனார் என்ற பெயரால் இவரைத் திருமால் சமயத்தவரென்ப. இவர் வானவன் மறவன் பிட்டனைப் புறம் ௧எ0 இல் பாடியுள்ளார்.

**வடமவண்ணக்கன் தாமோதரனார்** என்பவர் கோதை மார்பனது மறவன் பிட்டனது வண்மையைப் புறம் ௧எ௨ இல் பாடியுள்ளார். வண்ணக்கன் என்ற சொல் நாணய பரிசோதனைக்காரர் என்று பொருள்படும். இவர் வட நாட்டினர் போலும். தாமோதரன் என்பது திருமாலின் பெயர். இதுவே ஏதுவாக இவரைத் திருமால் வழிபாட்டின ரென்பாருமுளர். பாண்டிய ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன் செங்குட்டுவன் காலத்தவனே. அவன் புறம் ௧அ௩ இல் கல்வியின் பெருமையை மிகவும் அழகாக விளக்கினன். அது வருமாறு,

"வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்."

ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன் மகன் வெற்றிவேற் செழியன் காலத்திற் **சீத்தலைச் சாத்தனார் மணிமேகலை** இயற்றினார். சீத்தலைச் சாத்தனார் மதுரையிற் கூலவாணிகம் செய்தமையால் இவர் பெயருக்குக் கூலவாணிகன் என்னும் அடைமொழி சேர்க்கப்பட்டது. சீத்தலை என்பது இவர் ஊர் என்று சிலர் சொல்லுவர். சிலர் இப்புலவர் பிறர் நூல்களிலுள்ள குற்றங்களைக் கண்டு பொறாது தலையிற் சீவரும்படி குத்திக்கொள்வதால் இப்பெயர் பெற்றாரென்பர். புறம் ருகூ இல் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனைப் புகழ்ந்து பாடியுள்ளார். இவருடைய பாடல்கள் **அகம்**, குறுந்தொகை, நற்றிணை முதலிய நூல்களிலும் வந்துள்ளன.

இப் புலவரோடு ஒத்த காலத்தவர் சேரன் செங்குட்டுவன் தம்பி துறவுபூண்டிருந்தவராகிய **இளங்கோவடிகளென்பார்**. இவரால் இயற்றப்பட்ட பெருநூல் முத்தமிழ்க் காப்பியமாகிய **சிலப்பதிகாரமாகும்**.

**பாண்டியன் பன்னாடுதந்த மாறன்வழுதி** குறுந்தொகை உளo ஆம் பாட்டினை முல்லைத் திணையிற் பாடியுள்ளான். இவனே நற்றிணையிற் பாடலியற்றிய சீத்தலைச் சாத்தனார் காலத்தவராகிய நெடுஞ்செழியன்; வெற்றிவேற்செழியன் என்பாருக்குப் பின்னிருந்து நற்றிணை தொகுப்பித்தவனாவன்.

பூரிக்கோ குறுந்தொகை தொகுப்பித்தவன். குறுந்தொகையில் பன்னாடுதந்தமாறன்வழுதி பாடியிருத்தலால், பூரிக்கோ வழுதி காலத்திலாதல் அதற்குப் பின்னாதல் இருந்திருக்கவேண்டும்.

பாண்டியன் உக்கிரப்பெருவழுதி கடைச்சங்க காலத்திறுதியி லிருந்தவனென்று இறையனார்களவிய லுரையால் அறிகின்றோம். இவன் அகம் உசு இல் மருதத்தையும், நற்றிணை கூஅ இல் குறிஞ்சியையும் பாடியுள்ளான். இவனே அகநானூறு தொகுப்பித்தவன்.

முடத்திருமாறன் குட்டுவஞ்சேரலை நற்றிணையில் பாடியிருக்கிறான். அவனுக்குப் பின் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியுள்ளார். பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்திற்குத் தலைவரான இமயவரம்பனுடைய தந்தையாகிய 'உதியஞ்சேரலும் முதுகுடுமிப் பெருவழுதியும் கி. மு. ச ஆவது நூற்றாண்டில் அரசாண்டனர். இமயவரம்பன் யவனர்களைப் பிணித்ததாக உ ஆம் பத்தில் கூறப்பட்டுள்ளான். (யவனராகிய கிரேக்கர்கள் இந்தியாவிற்கு கி. மு. உ௩௬ இல் படையெடுத்து வந்தனர். அவர்கள் தூதுவராகிய மகஸ்தனிஸ் என்பவர், தென்னாட்டில் ஒரு பெண்ணின் ஆட்சியிருந்ததாகக் கூறுகின்றார்.) முதுகுடுமிப்பெருவழுதியைக் காரிகிழார், நெட்டிமையார், நெடும்பல்லியத்தனார் என்னும் புலவர்கள் பாடினர். உதியஞ்சேரல் பதிற்றுப்பத்து முதற்பத்துக்குத் தலைவனாக விருந்திருக்கலாம். ('இமயவரம்பனின் ஆட்சி ருஅ யாண்டு. ஆதலினால், சுமார் கி. மு. ௩உஅ இலிருந்து கி. மு. உஎ௦ வரை நீடித்திருக்கலாம். இமயவரம்பனைப் பாடியவர் குமட்டூர்க் கண்ணனார். இமயவரம்பனுக்குப் பின் அவன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன் உரு ஆண்டு

அரசு செய்தான். அஃதாவது கி. மு. உஎ0 முதல் உசரு வரை.) அவனை மூன்றாம்பத்தில் பாடியவர் பாலைக் கௌதமனார். அவனுக்குப் பின் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் அரசாண்டான். அஃதாவது கி. மு. உசரு முதல் உஉ0 வரை. அவனைப் பாடியவர் காப்பியாற்றுக் காப்பியனார். களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலுக்குப்பின் பெருஞ் சேரலாதன் என்னுஞ் சேரமன்னன் கரிகால்வளவனோடு பொருது தோற்று வடக்கிருந்தான் என்று மாமூலனார் கூறுகிறார். கரிகால்வளவன் உருவப்பல்தேர் இளஞ்சேட் சென்னி புதல்வன் என்று பொருநராற்றுப் படையில் குறித்துள்ளது. உருவப்பல்தேர் இளஞ்சேட் சென்னிக்கு முன் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி அரசாண்டிருக்கவேண்டும். அவனைப் பாடியவர் ஊன்பொதி பசுங்குடையார். அவனுக்குமுன் இளம்பூட்சென்னி அரசாண்டிருக்கவேண்டும். அவனைப்பற்றிக் குடவாயிற் கீரத்தனார் பாடியிருக்கிறார். அவர் நன்னன், அத்தி, கங்கன், கட்டி, பழையன், கணையன் முதலியவர்களை வென்று கழுமலத்தைப் பெரும்பூட்சென்னி பிணித்ததாகக் கூறுகின்றார். தொண்டியில் பொறையன் அரசாண்டதாகக் கூறினார். அவர் அகநானூறு சுசுசு ஆம் பாட்டில் எவ்வியின் நீழல் என்னும் ஊரினைக் குறித்திருக்கின்றார். நற்றிணை கசஉ இல் கதனைய் வடுகர் என்பாரைக் குறிக்கின்றார். புறநானூற்றில் ஒல்லையூர் கிழான்மகன் பெருஞ்சாத்தனையும் பாடியிருக்கிறார். மாமூலனார் நன்னனுடைய பாழியையும் எழிற்குன்றத்தையும் வியலூரையும் பாடியிருக்கிறார். மோரியர் படையெடுத்ததைப்பற்றி அவர் கூறினார். பாணன், திதியன், எவ்வி என்னும் சிற்றரசர்களையும், கண்ணன், எழினி, புல்லி என்னும் சிற்றரசர்களையும் சோழனின் படைவீரனாகிய மத்தியென்பவனையும் அவர் பேசினர். மோரியர் தென்

ணுட்டுக்கு அசோகன் காலத்தில் வந்திருக்கலாம். அசோகன் காலம் கி. மு. உஎஉ முதல் உஙஉ வரை. ஆதலால் அதற்குப் பின் மாமூலர் இருந்திருக்கவேண்டும். பரணர் உருவப் பல்தேர் இளஞ்சேட் சென்னியையும் புறநானூற்றில் பாடியுள்ளார். குடக்கோ நெடுஞ்சேரலாதன் இறந்தபின் அவனை அவர் பாடியுள்ளார். தித்தன், அத்தி, கழுவுள், நன்னன், பாணன், சோழன், படைத்தலைவன், பழையன் என்பவர்களைப் பற்றிய குறிப்பும் அவர் நூலிற் காணப்படு கிறது. கழாத்தலையார் என்னும் புலவர் பெருஞ்சேரலாதன் கரிகாலனோடு போர்புரிந்ததைப் பாடியதோடு குடக்கோ நெடுஞ்சேரலாதனையும் பாடியுள்ளார். பரணர் கடல் பிறக் கோட்டிய செங்குட்டுவனைப் பதிற்றுப்பத்தில் பாடியுள் ளார். மாந்தரம்பொறையன்கடுங்கோ என்பவனையும் அவர் அகத்தில் பாடியுள்ளார்.

## ஏ. கடைச்சங்க நூல்கள்

கடைச்சங்கத்தார் காலத்தில் பன்னூற்றுக்கணக்கான புலவர்கள் பாடற்றிறன் வாய்ந்தவர்களாய் விளங்கினரென்பது எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, முத்தொள்ளாயிரம், சிலப்பதிகாரம், மணிமேகலை, பதினெண்கீழ்க்கணக்கு என்பவற்றைப் பாடிய ஆசிரியர் கூட்டத்தின் வைத்துணரப்படும். கடைச்சங்கப் பிற்காலப் பகுதியில் தமிழ்நாட்டு மூவரசரும் சிறப்புற்றிருந்ததாகவும், குறுநில மன்னராகிய வேளிர் பலர் வள்ளல்களாகத் திகழ்ந்தனரெனவும், மூவேந்தரும் ஒருவரோடொருவர் பொருது ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொருவர் வெற்றியடைந்ததாகவுங் குறுநில மன்னரிற் பலர் தமக்குட் போர் விளைத்ததுமன்றி மூவேந்தர்க்குத் துணை நின்றதாகவும் அறிகின்றோம். போரில் வெற்றி கொண்டவர்கள் பகையரசரைத் துன்புறுத்தியதாகவும், அவர்கள் நிலத்தைப் பாழ்செய்ததாகவுங் கேட்கப்படுகின்றது. பாணர், விறலியர், கூத்தர், புலவர், இரவலர் என்போர் அரசனிடத்துப் பரிசில் பெற்று வாழ்ந்தனர்.

பார்ப்பாருள் ஒரு பகுதியார் வேள்வியைத் தமிழ்நாட்டு முறையில் ஊன் பயிலாது சிவபெருமானைக்குறித்து நடத்தியதாகவும், அரசனிடத்திற் றக்கபரிசு பெற்றதாகவும் அறிகின்றோம். சிவபெருமான், முருகன், கொற்றவை யென்னுங் கடவுளர்க்குக் கோயில்கள் இருந்தனவாக அறிகிறோம். சிவ வழிபாடு சிறப்புற்றோங்கியதாகவுந் தெரிகிறது. வடநாட்டிற் பெரிதும் வழிபடப்பெற்ற பார்ப்பாரில் ஒரு பகுதியாரும், தென்னாட்டுப் பார்ப்பனரும், வேளாளருள் ஒரு பகுதியாரும், வணிகருட் சிலரும் ஊனொழித் துணவுகொண்டு வாழ்ந்ததாகவும், பெருந்

துறவியர் உயர்ந்த கொள்கைகளை மக்களுக்கு அறிவுறுத்தின ரெனவும், சோதிடம், மருத்துவம், சிற்பம், மந்திரம் முதலிய பல கலைகளும் வளர்ந்தோங்கின வெனவும், கைத்தொழில், உழவு, வணிகம் முதலியன தழைத்தோங்கின வெனவும், யவனர் முதலிய மேலைத் தேயத்தாரோடு போக்குவரவும், கடற்போர் முதலியனவும் நிகழ்ந்தன வெனவும், வடநாட்டு ஆரியர், மோரியர் முதலியோரும், தமிழ்நாட்டருகே வடக்கேயுள்ள வடுகர் என்போரும், தமிழர்க்குப் பகைவராய் வந்தகாலை அவரைப் பொருது தமிழரசர் வென்றனரெனவும், இமயவரம்பன், கரிகாலன், செங்குட்டுவன் முதலியோர் இமயம்வரை படையெடுத்துச் சென்று தங்கள் மாட்சியை நிலைநிறுத்தினர்களெனவும் அறியக்கிடக்கின்றது.

## 1. எட்டுத்தொகை

### நற்றிணை

அக்காலத்தைப்பற்றிய மற்றைச் செய்திகள் சங்க நூல்களுள் ஒவ்வொன்றினையு மாராயுமிடத்து நன்கறியற் பாலன. எட்டுத்தொகையி லடங்கிய நூல்களைத் தனித்தனி ஆராய்வாம்: **புறநானூற்றுச்** செய்யுள்களையே மிகுதியும் இதுவரை புலவர்வரலாற்றின் பொருட்டு எடுத்து விதந்தாம். எட்டுத்தொகையுண் முதல் நின்றது **நற்றிணை**. இதனுள் கூ அடி முதல் கஉ அடி வரை யுள்ள பாடல்கள் சOO தொகுக்கப்பட்டுள்ளன. இவை பல புலவர்களால் இயற்றப்பட்ட அகப்பொருட்டுறைகளை விளக்குஞ் செய்யுட்களாகும். இவற்றைத் தொகுப்பித்த அரசன் **பன்னாடுதந்த மாறன்வழுதி** யென்ப. உக்கிரப் பெருவழுதியின் பாடலொன்றும் (நற் கூஅ) மாறன்வழுதி யென்பவர் பாடிய பாட்டுக்களிரண்டும் (கூஎ, ௩௦க) இதனுட் காணப்படுகின்றன. நற்றிணைப்பாடல் பாடிய மாறன்வழுதி அதனைத்

தொகுப்பித்த வழுதிதானோ வேறோ வென்பது விளங்க வில்லை. களரு புலவர்கள் பாடிய பாடல்கள் நற்றிணையி லுள்ளன. இவற்றுள் பல புலவரது காலம் மூவேந்தர் காலத்தை யொட்டியுங் குறுநில மன்னர் காலத்தை யொட் டியும் ஆராயப்பட்டன.

நற்றிணையிற் பண்டை வழக்கங்கள் பல புலனாகின்றன. காதலி சுவரிலே கோடிட்டுப் பிரிந்த தலைமகன் வருநாள் எண்ணுவதும் (நற். ௩உச), காலாற் பந்து விளையாடும் வழக்கமும், காதலர் வரவைப் பல்லி கூறுவதாகக் கருதுவ தும் (நற். ௩௩௩), தினைப்புனத்திற் கிளிபோட்டும் வழக்க மும் (நற். உ0௬), இரும்பு காய்ச்சிய உலையிலே கொல்லன் பனைமடலிலுள்ள நீர் தெளித்து நெருப்பை அணைப்பதும் (நற். கஉ௩), எருமை மேய்ப்போன் அதன் முதுகிலேறிச் செல்வதும் (நற். அ0) பிறவுங் கூறப்பட்டமை காண்க.

இயற்கை வளப்பும் பல விடங்களில் மிக நயமாக எடுத் துரைக்கப்பட்டுள்ளது. மலைப்பாம்பு யானையைச் சுற்றி நெருக்குவதும் (நற். உ௬க), இளவேனிற் காலத்தில் ஆற்றினில் தண்ணீர் குறைந்து ஒடுங்கிச்செல்வது பாம்பு ஓடும்போது அதன் முதுகு நெளிவது போன்றிருப்பதும் (நற். கஅஎ), பேயின் கைவிரல் முள்முருக்கின் உலர்ந்த துணரைப் போன்றிருப்பதும், மந்தி கடுவனோடு விளை யாடுவதும் (நற். ௩௩ச), பெண்யானை தன் கன்றைப் புலி யினின்று பாதுகாத்தலும் (நற். அரு) பிறவும் வந்தமை காண்க.

உணர்ச்சிக்கு இன்பந்தரும் எண்வகைச் சுவைகளும் பல பாட்டுகளிற் றதும்பி நிற்கின்றன. நற்றிணை உசா௩ இல் **காமக்கணிப்பசலையா** ரென்னும் **பெண்புலவர்,** தலைவர் **தலைவியரைப்** பொருளேதுவாகப் பிரிந்தேகுதல் கூடா

தென்று குயில் இளவேனிற் காலத்தில் கூவுவதாகப் பாடியதும், நற். சஉ இல் தலைவன் மீண்டகாலை தலைவி முற்றுப் பெறாத கோலத்துடன் எதிர்கொண்டு அழைத்தனள் என்றதும், நற். ௩௫உ இல் தலைமகளது உருவெளித் தோற்றம் தலைமகனுக்குப் புலப்பட்ட தென்றதும், நற். ௩௩உ இல் தலைவனோடு கூடியவழியுந் தலைவிக்கு வளை கழல்வதற்கு ஏது இயம்பியதும், நற். ௬௬ இல் தலைவி தூங்காமைக்கு ஏது நயம்பட உரைத்ததும், நற். ௧௦ இல் செப்பிய கிள்ளை விடு தூதும், நற். உ௩௬ இல் தலைமகனது பசலை தலைமகனது மலைக்காற்று வீசின் மாறுமென்று காதற்சிறப்புக் கூறியதும், நற்றிணை ௩௬ இல் தலைவிக்கு உடம்பு இளைத்து வளை கழலாதபடி அவள் தந்தை சிறுவளை யணிந்தனனென்று தலைவி நகைச்சுவை பயப்ப மொழிந்ததும், நற். உஎஎ இல் மடலேறுவதினும் வேட்கைநோயுழ்ல் இறந்துபோவது நன்றென்று குறிப்பித்ததும், நற். உ௩உ இல் இரவுவரக் கருதிய தலைவனை அவன் வரும்வரை ஆற்றியிருத்தற் பொருட்டு மாலையை நல்கவெனக் கேட்டதும், நற்றிணை ௩௦ இல் தலைமகனை வாயில்மறுத்துத் தோழி பரத்தையர் பலர் கூடி அவனை இழுத்ததைத் தான் பார்த்ததாகக் கூறியதும், நற். அஅ இல் வரைவின்மையால் தலைவிதுயரங் கண்டு, தலைவர் குன்றங்கூட அழுகின்றது, தலைவர்மட்டும் இரங்குவாரிலரெனக் கூறியதும், பிறவும் எண்சுவைகளையும் இனிது விளக்குதல் காண்க.

சில புலவர்களுக்கு அவர்கள் செய்யுளில் கண்ட சிறந்த சொற்றொடர்கள் அவர்கள் பெயராகவாதல் அவர்கள் பெயருக்கு அடைமொழியாகவாதல் அமைந்துள்ளன. நற். உசஉ ஆவது செய்யுளில் மானை, 'விழிக்கட் பேதை,' யென்றமையால் அச்செய்யுளை இயற்றிய புலவர் விழிக்கட் பேதைப் பெருங்கண்ணனா ரென் றழைக்கப்பட்டார்.

நற். உ௮௪ இல் உள்ளமும் அறிவும் இருபுறம் தம்மை இழுப்பதால் இரண்டு யானைகளால் இருபக்கமும் இழுக்கப் பட்ட பழங்கயிறு இற்றாற் போலத் தமது உடம்பு வருந்தி யழியுமென்று பாடிய புலவர்க்குத் தேய்புரிப்பழங்கயிற்றினு ரென்ற பெயர் கொடுக்கப்பட்டது.

புறவினை வண்ணப் புறவு எனச் சிறப்பித்தமையால், வண்ணப்புறக் கந்தரத்தனு ரென்ற பெயர் எழுவதாயிற்று. இவ்வாறே குறுந்தொகை முதலியவற்றினும் வந்தது காண்க.

நற்றிணை எ0 இல் குருகுவிடு தூதும், நற்றிணை க0உ இல் கிள்ளைவிடு தூதும், ருச இல் நாரைவிடு தூதும் வந்தமை காண்க. அஉ இல் முருகவேளும் வள்ளியும் வழுத்தப் பட்டனர்

அகநானூறு

அகநானூறென்பது அகத்திணை யொழுக்கத்தைப் பற்றிக் கூறும் ௪00 பாடல்களின் தொகுதி. இவைகளைப் பாடிய புலவர்கள் 145 க௪ரு பேராவர். அவருட் சில புலவர் கள் பெயர் காணப்படவில்லை. இதிலுள்ள பாட்டுக்கள் பதின் மூன்று அடிக்குக் குறையாமல் ௩௧ அடிவரை யுள் ளனவாய்க் காணப்படுதலின், இவற்றினுங் குறைந்த அடி யுடைய ஐங்குறுநூறு, குறுந்தொகை என்பவற்றின் வேறாக நெடுந்தொகை யென்று இது வழங்கப்படு கின்றது. இப்பாடல்கள் மூன்று பகுதியாகப் பகுக்கப்பட் டுள்ளன. முதல் கஉ0 பாட்டும் 'களிற்றியானை நிரை' யெனப்படும். கஉக முதல் ௩00 வரை யுள்ளவை 'மணி மிடை பவளம்' எனப்படும். எஞ்சிய பகுதி 'நித்திலக் கோவை' யெனப்படும். அவை வெவ்வேறு திணைக்குரிய

பாடல்கள் குறித்த சில எண்களின் முறைப்படி தொகுக்கப் பெற்றுள்ளன.

"ஒன்று மூன்று ஐந்து ஏழொன்பான் பாலை."

யென்றபடி ஒற்றையெண் பெற்ற செய்யுட்கள் பாலைத் திணையைக் குறிப்பன. உ, அ என்னும் எண்களை முடிவாக உடைய இலக்கங்களை யுடையவை குறிஞ்சித் திணையைக் குறிப்பன. முல்லைத்திணையெல்லாம் ச என்ற எண் பெற்ற செய்யுட்கள் மருதத்திணை யெல்லாம் சு என்ற எண் பெற்ற செய்யுட்கள். நெய்தற்றிணையெல்லாம் க0 என்னும் எண் பெற்ற செய்யுட்கள். இக் கருத்தை அகநானூற்று முகவுரை யுடையார் நன்கு விளக்கி, எடுத்துக்காட்டாகக் குறிஞ்சிச் செய்யுட்கள் உ ஆவது, கஉ ஆவது, உஉ ஆவது, ௩உ ஆவது என்னு முறைமைக்கண்ணும், அ, கஅ, உஅ, ௩அ என்னு மித்தொடக்கத்து முறைமைக்கண்ணும் அமைந்துள்ளனவென்று காட்டினர். இவ்வரிசை யமைப்பு மிகவும் வியக்கத்தக்கது. இந்நூலைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடிகிழார் மகன் உருத்திரசன்மன் என்பவர். இவரே களவியல் உரையைக் கணித்தவரு மென்ப. தொகுப்பித்த பாண்டியன் உக்கிரப் பெருவழுதி.

இந்நூலுட் போந்த வரலாற்றுக் குறிப்புக்களும், உவமை நயங்களும், பண்டை வழக்கங்களும், இயற்கை வருணனையும், எண்சுவைப் பொருளும் விரிப்பிற் பெருகு மென்று விடுத்தாம். வரலாற்றுக் குறிப்புக்கள் முன்னேயே சுட்டப்பட்டன. கறையான் புற்றினைத் தோண்டி யெடுக்குங் கரடியை இரும்புசெய் கொல்லனுக்கும், பன்றிமயிரைப் பனையின் செறும்பிற்கும், கோழியின் தூவியை முருக்கின் பூங்கொத்திற்கும், கார்மேகங்களைப் பிடிகட்கும், கள்ளியின் காரத்தைப் பாம்பின் கடுப்பிற்கும், கற்சுரத்தில் விழுந்த நெல்லியின் பசுங்காயைப் பொற்காசிற்கும், கொன்றைப்

பூங்கொத்தினைப் பொன்னணிகட்கும், கோங்கு மலரைப் பொன் தகட்டிற்கும், குரவம்பூவை வெள்ளித் துண்டிற்கும், வானவில்லைக் கிளியின் கழுத்துவரிக்கும், பாம்பின் படவிரிப்பினைக் கோடல் மலருவதற்கும் உவமை கூறப்பட்டன.

அகம் கசo இல், வெண்கல் உப்பிற்கு விலையாக நெல் வாங்குவதும், கசுசு இல் தலைவன் பரத்தையோடு காவிரியில் நீர்விளையாடுவதும், நூஉக இல் வேள்வி செய்வார் குண்டத்தின்கீழ் ஆமை வைத்து மூடுவதும், சுஎ இல் நடுகல் வழிபாடும், ருக இல் கணவர் வரவைக் கருதிச் சுவரில் கோடிட்டு நாள் எண்ணுவதும், மலைத்தெய்வத்திற்குக் குறவர் கள்ளினைப் படைப்பதும், உ0எ இல் உமணர் கழுதை மேல் உப்புக்கொண்டு போவதும், புள்நிமித்தம் பார்ப்பதும், முருகனை வழிபடுவதும், நூருரு இல் தெய்வங்களைத் தலைவி வணங்குவதும் பிறவும் பண்டை வழக்கங்களாகக் காணப்படும். அகம் அசு இல் பண்டை மணவழக்கங்களிற் சில குறிக்கப்பட்டன. அதில் குளிர்ந்த பந்தலிட்டுத் தூய மணல் பரப்பி மனைவிளக்கு வைத்து மாலை நாற்றிக் குற்ற மற்ற நற்பொழுதில் பெண்டிர் குரவையிட, மக்கட் பேறுடைய நற்பெண்டிர் நால்வர் ஈரிதழ் அலரியிட்டுக் குடநீராட்டி, மணப் பெண்ணினைக் 'கற்பினின் றவழாது கணவனுக்கு உகந்தன உதவும் வாழ்க்கைத்துணை ஆகுக' வென்று வாழ்த்துக் கூறுதலும், தலைவியின் உறவினர் தலைவியைப் 'பேரிற் கிழத்தியா'கெனக் கூறித் தலைவருக்குக் கொடுத்தலும் பாயசம் (உழுத்தங்களி) முதலியவற்றோடு கூடிய பெருஞ்சோற்றினை வந்தவர்க்கு வரையாதளித்தலும் கூறப்பட்டன. வளர்பிறைப் பக்கத்தில் மணச்செய்தி அக்காலத்தில் நிகழ்ந்ததாகத் தெரிகின்றது.

அகம் உசக இல் காட்டுநெல்லிக்காயைக் கழற்காயாகக் கொண்டு செம்முகமந்தி விளையாடுவதும், கசுo இல் பெண்

ஆமை யீன்ற முட்டையை ஆண் ஆமை பாதுகாத்தலும், கஎகூ இல் கானலே யானை மழையென வெண்ணி வாய் திறந்து ஏமாறிப் போவதும், உ௩உ இல் மழையின் முழக்கத்தைப் புலியின் குரலென்று யானை அஞ்சுவதும், சஅ இல் வேங்கைப் பூவைப் பறிக்கும்போது புலி புலியென்ற கூக்குரல் தோன்றுவதும், கூஉ இல் வேங்கை மலர் கொய்யும் மகளிர் புலிபுலி யென்ற ஒலியைக் கேட்டுப் புலியை ஓட்டுவதற்கு ஆடவர் வில்லுங்கொம்பும் எடுத்துக்கொண்டு வந்து புலியைக் காணாது வெள்கிப்போவதும், க௦உ இல் மகளிரது குறிஞ்சிப்பாட்டைக் கேட்டுத் தினைமேய வந்த யானை உறங்குவதும், எ௦ இல் சேதுவில் தங்கிய இராமர் இரகசியங் கேட்பதற்கு இடையூறாகவிருந்த பறவைகளின் ஒலியை அடக்கியபோது அவைகளிருந்த ஆலமரத்தின் அரவம் ஒய்ந்ததுபோல அலர் ஒழிந்ததும், உஎ இல் வேடர் வழிச் செல்வோரைக் கொன்றவிடத்துத் தமது அம்பு சிதைந்ததற்கேயன்றி இறந்தவர் பொருட்டு வருந்தாமையும், ௩எஎ இல் எறும்பு தொகுத்து வைத்த உணவை மறவர் உண்பதும், உகூ இல் தான் கொன்ற யானை இடப்பக்கம் வீழ்ந்ததால் புலி மானத்தினால் அதன் ஊனைத் தின்னாமையும் எண்சுவை ததும்பப் புனைந்துரைக்கப்பட்டன.

ஒரு புலவர், அகம் சுஅ, ௩அஅ ஆம் பாட்டுக்களில் 'ஊட்டியன்ன' யென்ற சொற்றொடரை வழங்கினமையால், **ஊட்டியா** ரென்ற பெயர் பெற்றனர். பிரிவுநோயை, அகம் சுஎ இலும், பிறவிடத்தும் இனிது பாடினமையால் **நோய்பாடியா** ரென்ற பெயர் ஒரு புலவர்க் கமைந்தது. பிறவும் அன்ன.

## குறுந்தொகை

குறுந்தொகை யென்பது அகத்திணைப் பாட்டுக்களுள் நாலடி முதல் எட்டடிவரையுள்ள செய்யுட்களடங்கியவை.

205
உ0௫ புலவர்களாற் பாடப்பட்ட பாடல்கள் இதன்கணுள் ளன. இத்தொகை தொகுப்பித்தவர் பூரிக்கோ வென்பவர். ஆய், அஞ்சி, அழிசி ஆதி, அருமன், நன்னன், கோசர் முதலியோரைப்பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் இந் நூலில் வந்துள்ளன. இதில் உழுந்தின்காய் குறும்பூழின் செங்கால் போலவும் (௬அ), கரும்பின் தோகை சூற்பசும்பாம்பை யொப்பவும் (௩௫), கற்குழியில் கொன்றைமலர் வீழ்ந்திருத்தல் பொற்பெட்டி திறந்து வைத்தாற் போலவும் (உ௩௩), காந்தட்பூவிலிருக்கும் வண்டு பாம்பின் மணிபோலவும் (உஅச), கொன்றைக்காய் மகளிர் கூந்தலைப் போலவும்(உக) இருப்பதாக உவமிக்கப்பட்டது காண்க.

ஆவின் கழுத்தில் மணியணிதல், மகளிர் வண்டலாட்டயர்தல், குறக்குடிச்சிறூர் குறிசொல்லுதல், உலக்கைப் பாட்டிற் பிறரைப் பழித்தல், சிறு பிள்ளைகள் சிறுதேருருட்டி விளையாடுதல், புலிப்பற் றாலி சிறூர்க் கணிதல், பெண்கள் துணங்கைக் கூத்தாடுதல், வண்ணாத்தி கஞ்சிப் பசை போடுதல், விளையாட்டு மகளிர் மணல்வீடு கட்டுதல், நுளைச்சியர் நெல்பெற்று உப்புத்தருதல், பரதவர் கட்டு மரத்திலிருந்து மீன் பிடித்தல் முதலிய பல பண்டை வழக்கங்கள் இந் நூலினு லறியக்கிடப்பன. இதில், அல்வன் தனது பெடையை நீராட்டுதல், அன்றில் பனைமடலிற் கூடுகட்டுதல், குயில் மூங்கிலிற் றங்குதல், சூன்மகளிர் புளிப்பை விரும்புதல், வாளைமீனுக்குக் கொம்பிருத்தல், செந்நாய்க்கு ஊன் விருப்பம், கிளி வேப்பம்பழத்தைக் கௌவுதல், யானை தனக்குச் செய்த தீங்கை மறவாமை, யானை வாழைத் தண்டால் மதமழிதல், துயரால் வருங் கண்ணீர் வெப்ப முடைத்தாதல் முதலியன இயற்கை யாராய்ச்சியைப் புலப்படுத்துவன. மகளிர் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டென்று கூறும் பாட்டும் இந் நூலின்கண்ணே உள்ளது.

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே." (உ)

காக்கை விருந்து வருவதைக் கரைந்து காட்டுமென்று குறுந்தொகை உ௬0 ஆவது பாட்டிற் குறிக்கப்பட்டது காண்க:

"திண்டேர் நள்ளி கானத் தண்டர்
பல்லா பயந்த நெய்யிற் றொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு
எழுகலத் தேந்தினுஞ் சிறிதென் றோழி
பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே." (உ௬0)

ஐங்குறுநூறு

**ஐங்குறுநூறு:** இது குறுந்தொகையினுங் குறிய அளவுடைய அகத்திணை நூல். ந முதல் ௬ அடி வரையுள்ள பாக்களையுடையது. ஐந்திணையையும் பற்றி ஐந்து புலவர் தனித்தனி நூறு பாடல்கள் பாடியுள்ளார்கள். **மருதத் திணையைப்** பற்றிப் பாடியவர் **ஓரம்போகியார்.** இவர் சேர அரசன் ஆதன் அவினி சார்பாகவே மருதத்திணையைப் பாடியுள்ளார். இவர் பாடல்கள் அகநானூறு, புறநானூறு, நற்றிணை முதலியவைகளிலுமுள்ளன. இவர் எழினி, மத்தி யென்னும் குறுநில மன்னர் காலத்தவர்.

இரண்டாவது **நெய்தற்றிணையைப்** பாடியவர் **அம்மூவனார்.** இவர் பாடல்கள் அகநானூற்றினும் நற்றிணையினும் குறுந் தொகையினும் வந்துள்ளன. அகநானூற்றுச் செய்யுள் ஒன்றில் தவிர, ஏனைத்தொகையில் வந்த பாடல்கள் நெய்தல் திணையைப்பற்றி வந்தனவே. இவர் சேரநாட்டினர்; காரி யென்னும் வள்ளல் காலத்தவர்.

மூன்றாவது குறிஞ்சியைப் பாடியவர் **கபிலர்.**

நான்காவது **பாலையைப்** பாடியவர் **ஓதலாந்தையார்.** இவர் பெயர் மற்றைத் தொகைநூல்களில் வரவில்லை. (பதிற்றுப்பத்திற் பாலைக்கௌதமனா ரென்பாரும் அகநானூற்றிலும் நற்றிணையிலும் பாலைபாடிய பெருங்கடுங்கோ என்பவரும் பாலைக்குரியவராகக் காணப்படுகின்றனர்.)

ஐந்தாவது **முல்லைத்திணையைப்** பாடியவர் **பேயனா** ரென்பவர். இவர் பாடல்கள் குறுந்தொகையிலும் வந்துள்ளன. அகத்திலும் ஒரு பாட்டு (அகம் உகூச) இவருடையது. அவ்விரு நூலிலும் முல்லைத்திணையையே இவர் பாடியுள்ளார்.

ஐங்குறுநூற்றைத் தொகுத்தவர் **புலத்துறை முற்றிய கூடலூர்கிழா** ரென்பவர். இவர் பாடல்கள் குறுந்தொகையிலும் புறநானூற்றிலும் வந்துள்ளன. இவர் சோதிட நூலிலும் வல்லவரென்பது புறநானூற்றுள் உஉகூ ஆம் பாட்டில் **யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையை** இன்னநாளில் இறப்பானென்று கூற, அவன் அந்நாளிலே இறந்ததைப்பற்றி வருந்தியதால் விளங்கும். அவ் வரசனே இவ் வைங்குறுநூற்றைத் தொகுப்பித்தவன். இவன் தலையாலங்கானத்து நெடுஞ்செழியன் காலத்தவன்.

ஐங்குறுநூற்றில் ஒவ்வொரு திணைக்கும் பப்பத்துப் பாட்டுக்கள் கொண்ட பத்துத் துறைகள் உள்ளன. மருதத்திணை வேட்கைப்பத்து, வேழப்பத்து, கள்வன் பத்து, தோழி கூற்றுப்பத்து, தோழிக் குரைத்தபத்து, புலவிப் பத்து, கிழத்திகூற்றுப்பத்து, புனலாட்டுப்பத்து, புலவி விராயபத்து, எருமைப்பத்து எனப் பத்துப் பகுதிகளையுடையது. முதற்பத்தில் தலைவன் பரத்தையிற் பிரியாது, இல்லறத்தை ஒழுங்காக நடத்தவேண்டு

மென்னும் வேட்கையைத் தோழி அவனுக்குத் தெரிவித் தமை கூறப்பட்டது. இரண்டாம் பத்தில் தலைவனை வேழத்திற் குவமித்துப் பரத்தையிற் பிரியும் இயல்பின னென்று தலைமகள் சொற்றமை இயம்பப்பட்டது. புறத் தொழுக்கம் இல்லையென்று தோழியும், உண்டென்று தலைமகளும் உரையாடிய பகுதி கள்ளப்பகுதி யெனப்படும். இதனுட் டலைவன் கள்வனெனப்படுவான். என்னை? கரந்து பரத்தையிற் பிரிவினைச்செய்தலின் என்க.

தலைவி தன்தோழிக்குச் சொல்லியதும் பரத்தை தன் தோழிக்குச் சொல்லியதும் தோழிக்குரைத்த பத்தெனப் படும். தோழி வாயிலாக ஒழுகுங்கால் அவள் சொற்ற பகுதிகள் பலவும் இதனுள் அடங்கும். தலைவி தனது புலவியை வெளிப்படுத்தும் பகுதி புலவிப்பத்து ஆகும். தலைமகனிடம் தலைமகள் புலந்து கூறிய பகுதி கிழத்தி கூற்றுப்பத்தாகும். பரத்தையரோடு புனலாடவில்லை யென்று தலைமகன் மறுத்துரைத்ததும் அவனுக்கு விடை யாகத் தலைமகள் தோழி முதலானவர்கள் கூறியதும் புனலாட்டுப் பத்துள் அடங்கும். தலைமகள் தன்னைப் பழித்தது பற்றிப் பரத்தை அவளைப் பழித்ததும், தோழி தலைவி முதலியோர் வாயில்வேண்டியதால் மகனை மறுத் துரைத்ததும் புலவிவிராயபத்துளடங்கும். மருதத்துக்குச் சிறப்பாகவுள்ள எருமையை உள்ளுறையுவமைப் பொரு ளாகவைத்து வாயின்மறுத்தல் முதலியன எருமைப் பத்துள் அடங்கும். இதனுள் ஒவ்வொரு பாட்டிலும் எருமை கருப்பொருளாக அமைந்தது காண்க.

இவ்வாறே பிற திணைகளுக்குங் கண்டுகொள்க.

பதிற்றுப்பத்து √

பதிற்றுப்பத்து: சேர அரசர்கள் பதின்மரைப் பத்துப் புலவர்கள் தனித்தனி பாடிய பப்பத்து அகவற்பாக்களின்

தொகுதி. முதற்பத்தின் சில பகுதிகள் தொல்காப்பிய உரையிலும் புறத்திரட்டென்னும் நூலிலும் எடுத்துக் காட்டாகக் காட்டப்பட்டன. இது முழுவதுங் கிடைக்க வில்லை.

உ ஆம் பத்து: குமட்டூர்க்கண்ணனாரால் இயற்றப்பட்டது. இதற்குத் தலைவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். ஆசிரியர் அந்தணரென்பது ஐஞ்ஞூறு ஊர் பிரமதாயமாகப் பெற்றா ரென்பதால் விளங்கும். கண்ணனாரென்னும் புலவரின் இவர் வேறு என்று குறித்தற்கு இவருடைய ஊர் இவரது பெயருக்கு அடைமொழியாகச் சேர்க்கப்பட்டது. இப் பத்தினுள் வீரராகிய சான்றோரைப் பாதுகாக்குந் திறமை பற்றிச் 'சான்றோர் மெய்ம்மறை' என்ற பெயர் அரசனுக் கிடப்பட்டது. ஆதலின் இச் செய்யுளுக்குப் பெயர் 'சான்றோர் மெய்ம்மறை' என்று உ ஆம் பத்தின் பதிக முடிவிற் கூறப்பட்டது. இங்ஙனம் பாட்டிற்குப் பெய ரமைத்தல் புதிதாகத் தோன்றுகிறது. பதிற்றுப்பத்திற் சிறப்பாகக் காணப்படுவதியாதெனில், புலவர்க்குக் கொடுத்த பெரும் பரிசிலாகும். உ ஆம் பத்துப் பாடியவர் ஐஞ்ஞூறூர் பிரமதாயமாகவும், முப்பத்தெட்டாண்டு தென் னாட்டு வரும்படியில் ஒரு பகுதியும் பெற்றார்.

ங ஆம் பத்துப் பாடிய பாலைக்கௌதமனார், இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன்பால் மிகுந்த பொருள் பெற்று ஒன்பது பெருவேள்வி வேட்டுப் பத்தாம் பெரு வேள்வியில் வேள்வியின் பயனாை துறக்கத்தைத் தன் மனைவியோ டெய்தினாரெனத் தெரிகின்றது.

ச ஆம் பத்துச் சேரலாதன் புதல்வன் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் என்பவனைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடி யது. ரு ஆம் பத்துக் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்

மீது பரணரால் பாடப்பட்டது. ௬ ஆம் பத்துக் குடக்கோ நெடுஞ்சேரலாதன் புதல்வனைத் தொண்டி நகரத்தில் வீற்றிருந்த ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கை பாடினியார் பாடியது. ௭ ஆம் பத்துச் செல்வக் கடுங்கோவாழியாதனைக் கபிலர் பாடியது. ௮ ஆம் பத்தினைத் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையின்மீது அரிசில்கிழார் என்பவர் பாடியுள்ளார். இளஞ்சேரலிரும் பொறையைப் பெருங்குன்றூர்கிழார் என்பவர் பாடியது ௯ ஆம் பத்து. ௧0 ஆம் பத்துக் கிடைத்திலது.

## பரிபாடல்

பரிபாடல்: இது பரிபாடலென்னும் பாவகையாற் றொகுக்கப்பட்ட நூல்., இதனுட்போந்த பாடல்கள் இசைப்பாக்களாயிருத்தலான் அவற்றிற்கு இசைவகுக்கப் பட்டுள்ளன.

தொடக்கத்தில் இந்நூல் ௭0 பரிபாடல்கள் உடைத்தாயிருந்தது. இப்போது திருமாலுக்கு ௬-ம், முருகக் கடவுளுக்கு ௮-ம், வையைக்கு ௮-ம் உள்ளன. முதன் முதலில் திருமாலுக்கு ௮-ம், முருகனுக்கு ௩௧-ம், காடு கிழாளுக்கு ௧-ம், வையைக்கு உ௬-ம் மதுரைக்கு ௪-ம் இருந்தன வென்பர். அது,

> "திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்
> தொருபாட்டுக் காடுகாட் கொன்று—மருவினிய
> வையையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
> செய்யபரி பாடற் றிறம்."

என்றதால் விளங்கும்.

பரிபாடல் குறைந்தது உ௫ அடியும், மிகுந்தது ௪00 அடியும் உள்ளன என்ப. இந்நூலுள் ௧௪0 க்கு மேலுள்ள அடிகள்கொண்ட பாட்டுக்களில்லை.

திருமால் முதலியோரின் பாடல்கள் தனித்துத் தொகுக்கப்படவில்லை; விரவியே வருகின்றன. ஆசிரியர் நல்லந்துவனார் முருகக் கடவுளுக்கு ஒரு பாடலும் (அ) வையைக்கு மூன்று பாடலும் (சு, கக, உ௦) இயற்றினர்.

இளம்பெருவழுதியாரென்பவர் பாடிய பாடல் புறநானூற்றிலும் உள்ளது. இவர் அழகர் கோயிலிலுள்ள திருமாலுக்கு ஒரு செய்யுள் (கரு ஆம் பரிபாடல்) செய்துள்ளார். அதனுட் கண்ணபிரானையும் பலராமரையும் ஒருவராகவே கருதுகின்றார்.

கடுவன் இளவெயினனா ரென்பவர் திருமாலைப்பற்றி உ பாடல்களும் (ந, சு) முருகக்கடவுளைப்பற்றி யொன்றும் (ரு) இயற்றியுள்ளார். இளவெயினனாரென்னும் புலவர் நற்றிணையுள் ஒரு செய்யுள் செய்துள்ளார். அவரும் இவரும் வேறோ ஒருவரோ தெரியவில்லை.

கரும்பிள்ளைபூதனா ரென்பவர் வையைக்கு ஒரு பாடல் (க௦) செய்துள்ளார். இவர் பெயர் பிற நூல்களிற் காணப் படவில்லை. கீரந்தையா ரென்பவர் திருமாலுக்கு ஒரு வாழ்த்துக் (உ ஆம் பாடல்) கூறியுள்ளார். சிலப்பதிகாரம் உந ஆம் காதை சஉ ஆம் அடியில், கீரந்தையா ரென்னும் பெயருள்ளது. அவர் இவரோ வேறோ தெரியவில்லை. குன்றம்பூதனார் முருகக்கடவுளுக்கு உ பாட்டுக்கள் (கூ, கஅ) செய்துள்ளார். திருப்பரங்குன்றத்தைப் பாடியிருத்தல் பற்றி இவருக்குக் குன்றம் என்ற அடைமொழி கொடுக்கப் பட்டது போலும். பூதனா ரென்னும் புலவர் நற்றிணையில் பாலைத்திணையைப் பாடியுள்ளார். அவரும் இவரும் ஒருவரோ வேறோ தெரியவில்லை. கேசவனார் முருகக்கடவுளுக் குரிய ஒரு பாடல் (கச) இயற்றியுள்ளார். இவர் இசையிலும் வல்லவரென்பது பாட்டிற்கிசை வகுத்தமையால்

தெரிகின்றது. **நப்பண்ணனார்** திருப்பரங்குன்றத்து முருக னைப் (௧௯) பாடியுள்ளார். **நல்லச்சுதனார்** முருகக் கடவுளுக் குரிய ௨௧ ஆம் பாடல் பாடியவர். **நல்லழிசியார்** அல்லது நல்லெழினியார் வையைக்கு ஒரு பாடலும் (௧௬), முருக னுக்கு ஒரு பாடலும் (௧௭) செய்துள்ளார். எழினியென்ற சொல்லால், இவர் அதிகமானஞ்சியின் பரம்பரையைச் சார்ந்தவரென்பது தோன்றுகிறது. **நல்வழுதியார்** வையைக் குரிய ஒரு செய்யுள் (௧௨) செய்தனர். **மையோடக்கோவனார்** வையைக்குரிய ௭ ஆம் பாடலைச் செய்தவர். ஓடத்தைச் சிறப்பித்துப் பாடியதுபற்றி இவர் இப் பெயர் பெற்றன ரென்று பதிப்பாசிரியர் கருதுகின்றனர். மையோட மென்பது ஓர் ஊரராயு மிருத்தல் கூடும். பரிபாடற் கிசை வகுத்தோர் பதின்மர். கேசவனாரும் நல்லச்சுதனாரும் தாமே தம் பாடல்களுக்கு இசை வகுத்தனர். பிறர் பெயரை நூற்பதிப்பு முன்னுரையுட் காண்க.

**திருமாலைப்பற்றிய பாடல்கள்** ௧, ௨, ௩, ௪, ௫, ௧௩, ௧௫. அவற்றுள் (1) மூலப்பொருளினின்று ஆகாயமும், அதனி னின்று காற்றும், அதனினின்று நெருப்பும், அதனினின்று நீரும், அதனினின்று நிலமுந் தோன்றுவதற்குப் பல ஊழிகளாயின வென்றும், (2) ஞாயிறும் மதியுங் கெட்ட விடத்து விண்ணுலகும் மண்ணுலகும் மறைந்தொழிவன வென்றும், (3) ஊழிகளை எண்ணுவதற்கு நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம், கமலம், வெள்ளை யென்ற பெயர்களை யுடைய பல்வகை யெண்கள் அக்காலத்து வழங்கின வென்றும், நீரினின்று நிலத்தைக் கேழல் வடிவமாகத் திருமால் எடுத்தமையால், 'வராக கற்பம்' என்ற பெயர் அமைந்ததென்றும், அவர் முதியர்க்கு முதியராயும் இளையர்க்கு இளையராயும் உயர்ந்தோரால் ஆராய்ச்சியில் முடிவாய்க் கண்ட பொருளாயும் இருப்பதோடு செய்ய

மகளோடு நிலமகளையும் தேவியராக உடையவரென்றும், திருமாலின் சங்கம் முழங்குகின்ற இடியை ஒக்குமென்றும், அவர் பிறப்பறுக்கு முதல்வரென்றும் கூறப்பட்டன.

"அனைத்துநீ அனைத்தினுட் பொருளு நீயாதலி
னுறைவு முறைவது மிலையே யுண்மையு
மறவியில் சிறப்பின் மாயமா ரனையை."

என்றது காண்க.

முதன்முறை, இடைமுறை, கடைமுறை தொழிலில் 'பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோ ரிலையே' யென்றும், 'அவரவர் ஏவலாளனும் நீயே, அவரவர் செய்பொருட் காரணமும் நீயே' யென்றும், அயனை அரி தனது உந்திக் கமலத்திற் படைத்தோ னென்றும், பாற்கடல் நடுவில் ஆயிரந் தலையையுடைய அரவின்மேல் அறிதுயில் கொள்வோ னென்றும், திருமாலிருஞ்சோலையிலுள்ள சிலம்பாறு மிக அழகுள்ளதென்றுங் கூறப்பட்டன. ௧௫ ஆம் பாடலுள் திருமாலிருஞ்சோலையின் இயற்கை வளங்களை அழகாகப் பகர்ந்தமை காண்க.

**முருகக்கடவுளுக்குரிய பாடல்கள்** ௫, ௮, ௯, ௧௪, ௧௭, ௧௮, ௧௯, உ௧. அவற்றுள் முருகக்கடவுள் பார்மிகுந்த பனிக்கடலுள் யானையின்மேற் சென்று அமர்நடாத்திச் சூரனைக் கொன்ற வேலையுடையவரென்றும், மூவிருமுகமும் பன்னிருகையும் ஞாயிற்றின் எழுச்சிபோல் நிறவழகும் உடையராய்த் தாமரைப்பூவின்கட் டோன்றிய கடவுளென்றும், அழித்தற்கடவுளின் புதல்வரென்றும், வெறியயர் களத்தினில் வேலனாய் வருவரென்றும், எல்லாமாய் நின்றும் ஒன்றுமல்லாதவரென்றும், அவைகள் பகர்கின்றன. இன்னும் சிவபெருமானாற் றோன்றிய கருவை இந்திரன் வேண்ட, அவர் சிதைத்ததாகவும், சேதித்த பகுதிகளைத்

தெய்வ முனிவர்கள் எழுவர் அங்கிப்புத்தேளிடங் கொடுத்த தாகவும், அழல்வாய்ப் போந்த அவியினைக் கார்த்திகைப் பெண்கள் அயின்றாரென்றும், பின்னர்ச் சூல்கொண்டு இமயத்தில் நீலப்பைஞ்சுனையில், கமலப்பூம்பாயலில் ஆறு குழவியையும் ஒருங்கு பெற்றாரென்றும், பெற்ற அன்றே அம்மகவானது இந்திரன் வச்சிரத்தைக்கொண்டு எறிய அறுவராய்ப் பின்னும் ஒருவராயினரெனவும், தீக்கடவு ளிடங் கோழியையும், இந்திரனிடம் மயிலையும், ஞமனிடம் வெள்ளாட்டு மறியையும் ஏற்றுக்கொண்டு அமரர் தலைவ ராயினரெனவும், அவர் வீடுபெறும் நோக்கமுடைய பெரி யோரால் வணங்கப்படுவரல்லது தீயநெஞ்சினராலுங் கூடா வொழுக்கத்தவராலும், மறுபிறப்பில்லையென்று சொல்பவ ராலும் அறியப்படாரென்றுந் தெரித்துக் கடுவன்இள எயினனார் தாம் வேண்டுவது 'பொருளும் போகமும் பொன்னுமல்ல; நின்பால் அருளும் அன்பும் அறமும் மூன்றுமே' யென்றனர்.) பரிபாடல் அ ஆம் பாட்டினுள் செவ்வேளைக் காண்பதற்காக அயன் அரி அரன் மூவரும், வசு உருத்திரர் ஆதித்தராதி ௩௩ வரும், திசைகாப்போரும், அவுணரும், தவமுனிவருந் திருப்பரங்குன்றிற் காத்திருத் தலால் அது இமயக்குன்றத்தினுஞ் சிறந்ததென்றுங் கூறி, அகப்பொருட்டுறையை யமைத்தனர். அப்பாட்டினுள் அவர் இமயத்தில் நாணலிற் றோன்றியவரெனவும்,வள்ளியை மணந்து தெய்வயானைக்கு ஊடல் விளைத்தாரெனவுங் கூறி னர். நான்மறைப் பொருள் விரிக்கும் புலவர்க்குணர்த்து முகத்தால், களவொழுக்கஞ் சிறந்ததென்பதும், அக் களவிற் புணர்ச்சி யுடைமையால் வள்ளி சிறந்தவாறும், அது கூறுந் தமிழை ஆய்ந்தமையால் முருகன் சிறந்தவாறும் கூ ஆம் பாட்டினுள் விளக்கப்பட்டன. கச ஆம் பாட்டி னுள் தலைவன் வரவு ஏதுவாக முருகவேளைப் பரவியது

கூறப்பட்டது; பரங்குன்றின்கண் முருகனுக்குச் செய்யும் வழிபாட்டுச் சிறப்புக் கூறப்பெற்றது. பரங்குன்றின் சிறப்பு கஅ ஆம் பாட்டிலும் விரிவாகக் கூறப்பட்டது. பரங் குன்றில் வாழும் முருகப்பிரானை வழிபடாத மகளிர் தங் காதலரது முறுவற்றலையளி யெய்தாரெனவும், கன்னிமை கனிந்த காலத்திற் குறைவற்ற மைந்தர் தோளைக் கூடா ரெனவுங் கூறினர் புலவர். குன்றத்தின் வருணனையும் நயமாக அமைந்துள்ளது. உஉ ஆம் பாட்டுங் குன்றின் வாழ்த்தே யென்றுங் கூறலாம். அதனுள் திருப்பரங்குன் றத்தினை யானையாக உருவகஞ் செய்திருத்தல் காண்க.

வையையைப் பாடிய பாடல்களுள் அதன் புதுநீர் விழவின் கொண்டாட்டம் இனிதாகப் புனைந்துரைக்கப்பட் டது. புதுநீர் வரும்பொழுது நகரமாந்தர் தத்தமக்குள்ள ஊர்திகளிலேறிப் பொன்மீன் முதலியன கொண்டு ஆற்றி னுட் போடுவதாகவுந், தெப்பம் ஓடம் முதலியவைகளிலேறி நீர்விளையாடல் நடத்துவதாகவும், வையையின் பேருதவிக் குப் பாண்டியன் கொடையை உவமையாகவும் புலவர் கூறினர். மலையிலிருந்து பல்வகை மரங்களை வையையாறு அடித்துக்கொண்டு வருவதாகவும், ஆடவரும் பெண்களும் புதுப்புனலாடித் தம்முட் பலவகைச் செய்திகளையும் பேசி இசைக்கருவிகளையும் ஒலித்து முழக்கஞ் செய்வரெனவுங் கூறப்பட்டது.

## கலித்தொகை

**கலித்தொகை:** இது கலிப்பாவினால் ஐந்திணையைப் பற்றி இயற்றப்பட்ட செய்யுட்களின் தொகுதி. இது கருo செய்யுட்களையுடையது. முதலாவதாகிய **பாலை பெருங் கடுங்கோவினாலும்**, இரண்டாவதாகிய **குறிஞ்சி கபிலராலும்**, மூன்றாவதாகிய **மருதம் மருதன் இளநாகனாலும்**, நான்காவ

தாகிய முல்லை சோழன் நல்லுருத்திரனாராலும், ஐந்தாவதாகிய நெய்தல் ஆசிரியர் நல்லந்துவனாராலும் இயற்றப்பட்டன. 'கற்றறிந்தோ ரேத்துங் கலி' யென்றமையால், இதன்சிறப்பு நன்கு விளங்கும். இதுவும் அகவொழுக்கத்தின் பாலதே. பாலைக்கலி ௩௫ செய்யுட்களையுடையது. குறிஞ்சி உ௯, மருதம் ௩௫; முல்லை ௧௭, நெய்தல் ௩௩; காப்புச்செய்யுள் ௧.

காப்புச் செய்யுள் சிவபெருமானைக் குறித்தது. அவருடைய நடனத்திற்குத் துணையாகப் புரியப்படும் அம்மை திருச்செயல்களும் குறிக்கப்பட்டமையால், இருவர்க்குங் கூறிய வாழ்த்தாக அது கருதப்படும். இதனுட் சிவ பெருமான் முப்புரமெரித்தது கூறப்பட்டது.

பாலைக்கலியுள், பெரும்பாலும் தலைவனது செயலினை அழுங்குவித்தலே பொருளாகக் காணப்படும். தலைவன் வரவுணர்த்தித் தலைவியைத் தோழியர் மகிழ்விப்பதும் சில செய்யுட்களின் துறையாகும். தலைவியை உடன்கொண்டு சென்மின் என்று தலைவனை நோக்கிக் கூறுவதும், உடன் போக்குணர்ந்த செவிலியை முக்கோன் முனிவர் தெருட்டு வதும், பாணன் பாசறைக்கட் சென்று காலம் உணர்த்து வதும் பிற பாட்டுக்களுள் அமைந்துள்ளன. முக்கோலுங் கமண்டலமுமுடைய அந்தணரது இயல்பு இன்னவென்றும், கொடுங்கோலரசன் நாடு உலறின மரங்களையுடைய வெய்ய காட்டை யொக்குமென்றும் (௧௦), அறத்தா லீட்டிய பொருளைத் தக்கார்க்கும் வறியர்க்கும் ஈதல்வேண்டுமென் றும் அறநூலுண்மைகள் விளக்கப்பட்டன. கடுஞ்சுரத்தி னியல்பு இன்னதென்றும், பாண்டவர் இருந்த அரக்கு மாளிகையை நெருப்புச் சூழ்ந்தாற்போலக் களிறுகள் உள்ள மூங்கிற் காட்டில் அழல்பற்றிக்கொள்ளுந் தகைத்தென்றும், அரக்கு மாளிகையினின்று வீமன் ஏனையோரைக் காப்பாற்

றியதுபோலக் காட்டழலினின்றும் வன்மைமிக்க யானை யின் துணைகொண்டு பிற சில தப்பினவென்றுங் கூறிய பகுதிகள் இயற்கை நயஞ் சிறந்தன.

குறிஞ்சிக்கலியுள் வரைவு கடாதலே சிறந்த துறையாக வந்துள்ளது. அதில் தமர் வரைவு எதிர்தலும், தந்தையர் வரைவுக்கு உடன்பட்டமை கூறுதலும், குறை நயப்பித் தலும், ஏமஞ்சாலா இடும்பை யெய்திக் கூறுதலும், பெருந் திணைக் குறிப்பும், கூட்டமுண்மை யுணர்த்தலும், பிறவும் வந்துள்ளன. இறைவன் இறைவியோடு இமயத்திருந்த காலை இராவணன் வரையெடுத்தற்கு முயன்று வருந்திய தைப்போலப் பூத்த வேங்கை மரத்தைப் புலியெனத் திரியக் கொண்டு அதன் அடியிலே குத்திய கொம்பை எடுக்க மாட்டாது யானை வருந்துவதும், குறவர் மகளிர் தங்கணவ ரைத் தெய்வமென்று வணங்கி யெழுவதும், குறிஞ்சி நிலத்தார் முருகனைப் புகழ்ந்து பாடுதலும், குறிஞ்சியின் இயற்கை வனப்பும் (௪௫), இரவுக்குறிவருந் தலைவனது வழி யருமையும், பல்வகைப் பூக்களுக்குப் பல்வகைக் கடவுளை உவமித்துக் கூறுதலும் (௨௬), இளவேனிற்காலத்தியல்பும், கருப்பொருள்களின் காட்சி பிரிவின்கண் பலவாறு தலைவி யைத் துன்புறுத்துதலும் (௩௨), மடியிலான் செல்வம் போல மரங்களிற் பூக்கள் பெருகு மென்பதும், கருப் பொருள்களின் இயல்புகண்டு தலைவர் விரைவில் வருவா ரென்பதும், உயிர்ப்புக் கொள்ளுதல் வேள்வியில் எழும் புகைபோல்வ தென்பதும் (௨௫) கூறினமை காண்க. இதன் ௨௫ ஆம் பாட்டினுள் திருதராட்டிரனை 'வடமொழிப் பெயர் பெற்ற வயக்குறும் மண்டில முகத்தவன்' என்றது ஆய்த் தக்கது. பகனென்னும் ஆதித்தன் குருடானமையின் கண்ணாடிபோன்ற முகத்தையுடையவ னென்னும் பொரு ளில், 'தார்ப்பண ஆனனன்' என்னும் பெயர் அவற்கு வழங்கு

தலின், அங்ஙனங் கூறினர். கண்ணாடி பிறரைத் தான் காணுமைபோல இவனும் பிறரைக் காணுனென்பது கருத்து. மகளிர் ஐம்பால்வனப்பும், பொதியமலையின் சிறப்பும் (௬௨) தலைவன் தலைவி தம்முள் வழக்காடுவதும், பிறவும் இதனுட் காணப்படும்.

மருதக்கலி: இதனுள் பரத்தையிற்பிரிவு ஏதுவாயப் புலந்த தலைவியின் ஊடல்தீர்ப்பான் சொல்லியவைகளே மிகுதியாகவும், தலைவன் சிறைப்புறத்தானுகத் தலைவி மகனுக்கு உரைத்ததும், பரத்தையரை யானையாகவுங் குதிரையாகவும் பிறவாகவுந் தலைவி பழித்ததும், அரசன் தலைவியிற் பிரிந்தவழிச் சான்றோர் அவனுக்குக் கூறியதும், தோழிவாயிலாகவும் மகன் சார்புபற்றியும் ஆற்ருமையேதுவாகத் தலைவன் வாயில் நேர்ந்ததும், புதுப்புனலாடல் முதலியனவும் வந்துள்ளன. இதன்கண் உள்ளுறையுவமைகள் மிகவும் நயமாக அமைந்துள்ளன. இதனுள் வையையாற்றின் சிறப்புக் கூறப்பட்டது. பாட்டுடைத் தலைவனைக் (௬௮) கிளவித் தலைவனுகக் கூறுமிடத்து 'உலக முழுவதும் ஆளும் அரசர்க்கு அறிவுறுத்தும் அமைச்சரைப் போன்ற ஆசிரியர்களுடைய செவிகள் வாயிலாகவும் முன்னுள்ள சான்ருேர் செய்யுட்கள் நீராகவும், அறிவுடைய நாவாகிய ஏராலே உழுதுபெற்ற புலவருடைய புதிய கவிகளைக் கொள்ளைகொண்டுண்ணும் மதுரையையுடையவனே' என்றதுங் காண்க. மற்றும் அந்தணர் எரிவலஞ் செய்வதும், குழந்தையின் பல்வகை வனப்பைத் தாய் பாராட்டுதலும், சிறுதேருருட்டுதல் முதலிய குழந்தைகளின் செய்கைகளும், கோயில் வழிபாட்டிற்கும் விளையாட்டிற்கும் சேடியரோடு மக்களை யனுப்புதலும், மகளிரின் பல்வகை யணிகளும், அன்னம் தாமரை முதலிய கருப்பொருள்களைப்பற்றிய புனைந்துரையும் பகர்ந்தமை காண்க.

முல்லைக்கலியுள் ஏறுதழுவிக்கோடலும், கைக்கிளைப் பகுதியுமே மிகுதியாக வந்துள்ளன. இதனுள் ஆயர் வழக்கங்கள் நன்கு புலப்படுவன. ஆயர்குரவைக் கூத்தாட்டுங் கூறப்பட்டுள்ளது. க0ச இல் பாண்டிநாட்டினொரு பகுதியைக் கடல்கொண்டபோது பாண்டியன் சேர சோழரிடமிருந்து நிலங்கொண்டு குடிகட்குதவியது கூறப்பட்டது. இதில் வெள்ளையேற்றிற்குப் பலதேவன் நிறத்தையும், கரிய ஏற்றிற்குத் திருமால் நிறத்தையும், கபிலை ஏற்றிற்குச் சிவபெருமான் நிறத்தையும், சிவந்த ஏற்றிற்கு முருகனது வண்ணத்தையும் ஒப்பிட்டது காண்க. தலைவன் தலைவியர் இனிதிருக்குமாறு, காக்கின்ற பாண்டியன் நீடு வாழுமாறு அவர்கள் தெய்வத்தைப் பரவுதல் இதன்கண் கூறப்பட்டது. பெண்களுக்கு மூன்று உறுப்புக்கள் பெருத்திருத்தல் வேண்டுமென்றும், மூன்று உறுப்புக்கள் சிறுத்திருத்தல் வேண்டுமென்றும் க0அ இல் கூறப்பட்டது.

**நெய்தற்கலி:** இதனுள் தலைவி பிரிவாற்றாது மாலைப் பொழுதோடு புலந்ததும், தலைவனை வரைவுகடாயதும், தலைவன் மீண்டவிடத்துத் தலைவி ஆற்றாமைதீர்ந்தது கண்டு வாயில்கள் கூறியதும், கண்டார் கூறியதும், மடலேறுதல் முதலிய துறைகளும் வந்துள்ளன. நெய்தனிலக் கருப்பொருள்களின் வளம் இதனுள் நன்றாகப் புனைந்துரைக்கப்பட்டது. நாரைகள் அந்தியில் ஆரவாரமின்றி மணல்மேலிருத்தல் முக்கோலைக் கையிலே யுடையராகிய அந்தணராகிய துறவிகள் முதுமொழியாகிய பிரணவத்தை யெண்ணி அந்திக் காலத்தில் இருப்பதை யொக்குமென்றார். புலவர் நாரைக்கு மூக்கு நீண்டிருத்தலால், இதன் இருகாலும் மூக்கும் முக்கோலை யொத்திருக்கின்றன வென்றார் போலும். (கஉசு); உலகத்தைப்

படைப்பவனும் ஒடுக்குபவனும் ஒருவனென்பதை ௧௨௬ இல் விளக்கினார். அவர்,

"பல்வயின் உயிரெல்லாம் படைத்தான்கட்
பெயர்ப்பான் போல்"

என்றது காண்க.

புலவர் தென்முகத்தெய்வத்தைப்பற்றி ௧௩௩ இல் கூறியுள்ளார். அவர் 'சீர்மிகு சிறப்பினும் மரமுதற் கைசேர்த்த நீர்மலி கரகம்போற் பழந்தூங்கு முடத் தாழை,' என்றனர். அதனுள் 'சீர்மிகு சிறப்பினும்' என்ற தற்குப் புகழ்மிக்க தலைமையையுடைய தக்கணாமூர்த்தி தேவர் என்று நச்சினார்க்கினியர் பொருள்கூறினர். ஆற்று தல், போற்றுதல், பண்பு, அன்பு, அறிவு, செறிவு, நிறை, முறை, பொறை என்பவற்றின் சிறப்பியல்பு இப்பகுதியுட் கூறப்பட்டது.

"ஆற்றுத லென்பதொன் றலந்தவர்க் குதவுதல்
போற்றுத லென்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையார் சொன்னோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை
முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்."

திருமால் மல்லரை வென்றது ௧௩௪ இல் கூறப்பட்டது. தலைவன் மடலூர்தலைக் கண்டு தலைவியின் தமர் விரைந்து தலைவியைக் கொண்டுகொடுத்தல் ௧௪௧ஆவது பாட்டினால் வெளியாகின்றது. ௧௪௩ஆவது பாட்டினுள்,

"வேண்டுதல் வேண்டியாங் கெய்துதல் வாயெனின்
யாண்டு முடையே னிசை."

என்னும் பகுதி, திருக்குறளில்,

"வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்,''

என்பதை நினைவூட்டுகின்றது.

## 2. பத்துப்பாட்டு

**பத்துப்பாட்டு:** மிகுந்த அடிகளையுடைய பத்துச் செய்யுள் நூல்களின் தொகுதியாம். ஆசிரியப்பாவே இவற்றுட் பெரும்பாலும் பயின்றுவரும் வஞ்சியடிகளும் பட்டினப்பாலை முதலியவற்றுள் இடையிடையே வந்துள்ளன. இப்பத்தினுள்ளும் ஐந்து, ஆற்றுப்படை யென்னுஞ் செய்யுண் முறையைச் சார்ந்தன. பரிசில் பெற்ற ஒருவன் பெறுதவனைப் பரிசில் அளிப்பவன்பாற் சென்று பயிறுரு வண்ணங் கூறுவது. அது தொல்காப்பியப் புறத்திணையியல் ௩௬ ஆவது சூத்திரத்தில்,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்.''

என்றதாற் பெறப்படும்.

### திருமுருகாற்றுப்படை

இத்தொகுதியின் முதலினுள்ள **திருமுருகாற்றுப்படை** புலவராற்றுப்படை யெனப்படும். முருகக்கடவுளிடத்தே ஞானம் பெற்று நன்னெறியடைய விரும்புவோரை வழிப்படுத்தற்பொருட்டு ஆசிரியர் நக்கீரனாராற் பாடப்பெற்றது. இதனுள் முருகக்கடவுள் ஆறுபடைவீடுகளிலும் வீற்றிருக்கு முறைமை இனிதாகக் கூறப்பட்டது. முதற்படைவீடு திருப்பரங்குன்றம். சோலைவளமுஞ் சுனைவளமும் வானரமகளிர் முருகனைப் பாடுஞ்சிறப்பும் இதனுட் கூறப்பட்டன.

இரண்டாவது படைவீடு சீரலைவாய் என்னுந் திருச்செந்தூர். இங்கே முருகப்பெருமான் யானைமேல் ஆறுதிருமுகமும் பன்னிரண்டு திருக்கையு முடையவராய் யாவர்க்கும் பயனுதவும் வண்ணம் திருமேனிகொண்டெழுந்தருளு முறைமை கூறப்பட்டது. இதன் கருத்து பிற்காலத்தில் கந்தர்கலிவெண்பாவில் குமரகுருபர அடிகளால் நன்கு எடுத்தாளப்பட்டது. மூன்றாவது படைவீடு திருவாவினன் குடி. இது பழனி மலையின் அடிவாரத்தில் உள்ளது. இத னுட் பலவகை அடியவர் சிறப்பும் முருகனை வழிபடும் மும்மூர்த்திகளினியல்பும் விளக்கப்பட்டன. நான்காவது திருவேரகம். இஃது இப்பொழுது கும்பகோணத்திற் கருகே யுள்ள சுவாமிமலை யென்ப. இங்கே சிவபெருமானுக்கு முருகக்கடவுள் பிரணவப் பொருள் உரைத்ததாகப் புரா ணங் கூறும். இங்கே சச ஆண்டுவரை இல்லறம் புகாது நெறிநின்ற அந்தணர் ஈர உடையை ஈரம்புலரும்படி உடுத் துக்கொண்டு ஆறெழுத்து மறைமொழியை ஓதிவழிபடு முறை கூறப்பட்டது. ஐந்தாவது படைவீடு ஓரிடமாகத் தெரியவில்லை. குறிஞ்சிநில முழுவதும் முருகனுக்கு உரிய தாகலின், அஃது அனைத்துமே ஒரு படைவீடாகக் கொள் ளப்பட்டது. இதனுட் குன்றக்குறவரது தொண்டகப் பறைமுழக்கம் கூறப்பட்டது. பழமுதிர்சோலை யென்பது அழகர் கோயிலென்று சிலரும், பழனி என்று சிலருங் கூறு கின்றார்கள். இப்பகுதியுள் முருகனை வழிபடுமிடங்கள் பலவுஞ் சுட்டப்பட்டன. கடவுளில்லை யென்பார் அஞ்சும் படி முருகப்பிரான் வெளிப்பட்டருளுந் திறன் கூறப் பட்டது.

இது சமயநூலாகக் கருதப்பட்டு நாடோறும் பயன் விழைவோராற் பாராயணம் பண்ணப்பட்டு வருகின்றது.

### பொருநராற்றுப்படை

இரண்டாவது, பொருநராற்றுப்படை யென்பது. போர்க் களம், ஏர்க்களம் முதலியவற்றைப் பாடும் ஒருவகைப் பாவலர்களாகிய பொருநருள் பரிசில் பெற்றுனொருவன் பரிசில் பெறக்கருதிய ஒருவனைச் சோழன் கரிகால்வளவனிடத்தே செல்லும் முறை கற்பிப்பதாக முடத்தாமக்கண்ணியாரால் பாடப்பட்டது.

### சிறுபாணாற்றுப்படை

மூன்றாவது சிறுபாணாற்றுப்படை. இது பெரும்பாணாற்றுப்படையோ டொத்த சிறிய நூலாகக் கொண்டாடப் படும். இது உசுசு அடிகளையுடையது. ஒய்மானாட்டு நல் லியக்கோடன் என்னுங் குறுநில மன்னனைச் சிறப்பித்து இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது. இடைக்கழி நாடென்பது சென்னைக்குத் தென்மேற்கிலுள்ள ஒரு சிறு நாடென்று தெரிகிறது. நல்லூர் என்பது ஆசிரியர் ஊர். நத்தத்தனாரென்பது இயற்பெயர்.

### பெரும்பாணாற்றுப்படை

நான்காவது பெரும்பாணாற்றுப்படை. இது தொண்டை மானிளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது. வென்வேற்கிள்ளி என்பவனுக்குப் பீலிவளை என்னும் நாககன்னிகையிடம் பிறந்த புதல்வன் இளந்திரையன்.

### முல்லைப்பாட்டு

ஐந்தாவது முல்லைப்பாட்டு: இது போரின் பொருட்டுப் பிரிந்த தலைமகன் மீளுமளவுந் தலைவி யாற்றியிருந்தமையும், அவன் மீண்டதைக் கண்டு தோழி முதலிய வாயில்கள் மொழிந்தவற்றையுந் தெரிவிப்பது. இது காவிரிப்பூம்பட்டினம் பொன்வணிகர் மகனார் நப்பூதனார் பாடியது. இதுவே பத்துப் பாட்டில் மிகச் சுருங்கிய அளவை யுடையது; க0ங அடியுடையது. முகிலுக்குத் திருமாலை யுவமித்தல்

இதனுட் காணப்படுகின்றது. மழைபொழிந்த மாலைப் பொழுதின்கண் தலைவன் வருவதைப்பற்றி நல்லவுரை கிடைக்கின்றதாவென்று பார்த்து நல்லுரை பெற்றதும், அதனைக் கூறியவிடத்துந் தலைவி கண்ணீரோடிருந்ததும், பாசறையின் தலைவனது இயல்பும், யவனர் முதலியோர் மெய்ப்பை யணிந்து காவல்காத்த செய்கையும், தலைவன் மீண்டகாலை முல்லைநிலம் வளமாக இருத்தலையும், மான்கள் தம் பிணையோடு திரிவதையுங் கண்டு தலைவியைக் காணும் வேட்கையால் குதிரையை விரைந்தோட்டி மீண்டதையும் ஆசிரியர் செவ்விதின் நவின்றனர். இதனுள் யவனர் விளக்குத் தூக்கிச் செல்லுதலும், வாயாற் பேசாது கையாற் குறிகள் காட்டுஞ் சட்டையிட்ட மிலேச்சர் அரசன் பள்ளி கொள்ளுமிடத்தைக் காவல்காத்தலும், பாவைவிளக்கு எழுநிலை மாடம் என்பவைகளும் ஆயத்தக்கன.

**மதுரைக்காஞ்சி**

ஆறாவது மதுரைக்காஞ்சி: இது தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு மாங்குடி மருதனார் நிலையாமையை யறிவுறுத்தி வீடுபேற்றை நாடுவிக்குங் கருத்துடன் பாடியது. இது பத்துப் பாட்டு எல்லாவற்றிலும் அளவாற் பெரியது. எருஉ அடிகளையுடையது. இதனுட் பாண்டியனது முன்னோர்களுடைய பெருமை கூறுமிடத்து இராவணனை இசையில் வென்ற அகத்தியரைப் பொதியமலையிலுள்ள தொன்முது கடவுளென்றும், அவர்க்குப் பின் வைத்து எண்ணப்படும் மேன்மை பாண்டியனுக்கு இருப்பதாகவும் கூறினர். அவன் சேர சோழரையும் வேளிர் பலரையுஞ் செருவில் வென்றதுங் கூறப்பட்டது. வடிம்பலம்ப நின்ற பாண்டியனது பெருமையும், இமயமுங் குமரியுமாகிய தமிழ்நாட்டு எல்லைகளும், பாண்டியன் பாணர்க்குக் களிறு, பொற்றாமரை முதலியன கொடுத்ததும்,

அவன் கொற்கைக்குத் தலைவனென்பதும், தென் பரதவரைப் போரில் வென்றவனென்பதும், பகைவரை வென்று நாட்டை யழித்த அவனது வெற்றியும் கூறி, "அரசியல் பிழையா தறநெறி காட்டிப் பெரியோர் சென்ற வடிவழிப் பிழையாது குடமுதற்றோன்றிய தொன்றுதொழு பிறையின் வழிவழி சிறக்க" வென்று வாழ்த்தி, விண்ணவருலகத்தை அமிழ்தத்தோடு பெறுவதாயிருந்தாலும் பொய்புகலாத நெறியில் நிற்பவனென்றும், இவ்வுலகமும் விண்ணுலகமுந் திரண்டு வந்தாலும் பகைவர்க் கஞ்சாத ஆண்மையுடையவனென்றும், பழிநீக்கி ஈதலே மேற்கொண்டு இசைவிரும்புகின்றனன் எனவுங் கூறி, உலகப் பொருள்களின் நிலையாமை யுணர்த்தி நிலைபெற்ற பரம்பொருளை நாடவேண்டு மென்றுங் குறிப்பித்தார் ஆசிரியர். எத்தெய்வத்துஞ் சிவபெருமான் முதற்கடவு ளென்பது,

" நீரு நிலனுந் தீயும் வளியு
மாக விசும்போ டைந்துட னியற்றிய
மழுவா ணெடியோன் றலைவ னாக
மாசற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்
வாடாப் பூவி னிமையா நாட்டத்து
நாற்ற வுணவி னுருகெழு பெரியோர்க்கு
மாற்றரு மரபி னுயர்பலி கொடுமார்."

(மதுரைக் : சஙரு-சஙக)

என்றமையால் விளங்கும்.

அந்தணரிருக்கை, காவிதிப் பட்டம் பெற்ற வேளாளரிருக்கை, வணிகரிருக்கை, அமைச்ச ரொழிந்த நாற்பெருங் குழுவினரிருக்கை, தொழிலாளரிருக்கை, கடைத்தெரு, தெருக்களின் சிறப்பு முதலிய யாவும், அரசாங்கத்துக்குரிய பலவகைக் குழுவினரியல்பும் மிகவும் இனிய முறையிற் புனைந்துரைக்கப்பட்டன; முதுகுடுமி பல யாகங்கள்

செய்ததும், அவன் சங்கப் புலவரைப் பாதுகாத்து அவர்க ளால் மேலாகிய தத்துவக் கொள்கையை அறிந்த சிறப்பும் நிலந்தருதிருவிற் பாண்டியனது பெருமையும் எடுத்துக் கூறி, அவர்களைப்போலப் பாண்டியன் வாழவேண்டுமென்று அவர் வாழ்த்தினர். சங்கமென்பதைத் தனித் தமிழ்ச் சொல்லால் இனிது விளக்கியுள்ளார். தொல்லாணை நல்லா சிரியர் 'புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின் நிலந்தரு திருவிற் பாண்டியன் போல' என்றது காண்க. பாண்டியன் மரபில் வந்த மாறன் முதலிய குறுநில மன்னர் நெடுஞ் செழியனுக்குத் துணைவராக அவனைப் போற்றி நின்றன ரென்று இதனுட் காணப்படுகின்றது.

மாங்குடி மருதனாரின் சிறப்பு நெடுஞ்செழியன் கூறிய புறப்பாட்டினால் விளங்குதல் காண்க.

"ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
வுலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை."

(புறம்: எ௨)

இவருடைய செய்யுள் குறுந்தொகையிலும் ஒன்று வந்துள்ளது.

**நெடுநல்வாடை**

ஏழாவது **நெடுநல்வாடை**: இது தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தலைவிக்குப் போரின் பொருட்டுச் சென்ற அரசனது பிரிவாலுளதாகிய வருத் தம் நீங்கும்பொருட்டு அவன் விரைவில் வருவானென்று கொற்றவை பரவும் பெண்மணி கூறியதாக நக்கீரனாராற் செய்யப்பட்டது. இதன்கட் கூறப்பட்ட பிரிவு கூதிர்காலத் தில் நிகழ்ந்தது. அரசர்க்கு நயந்தருவதாய்த் தலைவிக்கு

நெடியதாய்த் தோன்றுதல் வாடைக்காலமாதலின், நெடுநல்வாடை என்ற பெயர் இந் நூலுக்கு வந்தது. கூதிர் காலத்தில் மழைத்துளிகள் மாருதிருப்பவும் அதனைச் சிறிதும் பொருட்படுத்தாது உடல்வலி மிக்க நகர்காவலராகிய மிலேச்சரென்பார், தமக்கு வேண்டிய இடத்திலே திரிவதும், இருப்பு விளக்கேற்றி நெல்லும் மலருந் தூவி இல்லுறை தெய்வத்தைக் கடைத் தெருவினர் வணங்குவதும், யவனருடைய ஓவியவேலையமைந்த பாவை விளக்குகள் பலவிடங்களில் ஏற்றப்பட்டிருப்பதும், பிரிவாற்ருமையால் வருந்திய தலைவி இருக்குமியல்பும், திங்களோடு உரோகிணி பிரியாதிருப்பதுபோலத் தாமும் தலைவரோடு பிரியாதிருக்கப் பெற்றிலோமே யென்ற நினைவால் தலைவி வாடுதலும், தலைவன் பாசறையிலிருந்த நிலையும், பாசறைத் தொழில் விரைவில் முடிவதாக வென்று கொற்றவையைப் பரவுவதும் இப் பாட்டின் முடிவில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

## குறிஞ்சிப்பாட்டு

<u>எட்டாவது குறிஞ்சிப்பாட்டு</u> : (இது தோழி செவிலிக்குத் தலைவியின் இயல்புகூறி அறத்தொடுநிற்குங் கூற்ருகக் **கபிலர்** பாடியது. இஃது ஆரியமன்னன் **பிரகத்தனுக்குத்** தமிழ்நயம் உணர்த்துங் கருத்தால் அவர் பாடியது.) இதனுள் தலைவனுந் தலைவியுந் தாமாகவே செய்யும் மணவியல்பும், பிரிந்த காதலன் வாரானாயினும் இறக்குந் துணையுந் துயரத்தைப் பொறுத்திருந்து மறுபிறப்பினும் அக்கூட்டத்தைக் கருதும் தலைவியியல்பும், தினைப்புனத்திற் கிளியோட்டு முறையும், மின்னல் மின்னுவது முருகவேளின் வேல் போல்வதும், குறிஞ்சிநிலத்திற்குரிய பலவகைப் பூக்களின் பெருக்கமும், பூக்களாலுந் தளிர்களாலும் மகளிர் அழகு செய்துகொள்ளு முறையும், குறிஞ்சிநிலத்துத் தலைவன்

ஆயத்தோடு நின்ற தலைவியைக் கண்டு வினவியதும், வேட்டைநாய்களை அவன் ஓட்டியதும், ஓடும் நீரிற் குதித்துக் கால் தளர்ந்தகாலை தலைவன் தலைவியைப் பாதுகாத்ததும், களவொழுக்கம் நிகழ்ந்ததும், குறிஞ்சிக் கடவுளாகிய முருகனை வாழ்த்தி வஞ்சினம் உரைத்ததும், மாலைக்கால இயல்பும் வரைவுகருதித் தலைவன் வாராமைபற்றித் தலைவி வருந்தியதுங் கூறப்பட்டன.

**பட்டினப்பாலை**

ஒன்பதாவது **பட்டினப்பாலை:** இதனைக் **கரிகால்வளவன்** மீது **கடியலூர் உருத்திரங்கண்ணனுர்** என்னும் புலவர் பாடிப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசு பெற்றார்.

**மலைபடுகடாம்**

பத்தாவது **மலைபடுகடாம்:** இது இரணியமுட்டத்துப் **பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனுர்** என்பவர் பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்துவேள் **நன்னன்சேய்நன்னனைப்** பாடியது.

## 3. முத்தொள்ளாயிரம்

சங்ககாலத்து நூல்களுட் பல மறைந்துவிட்டன. சிலவற்றில் ஒருபகுதியே கிடைக்கின்றது. தமிழ்நாட்டு மூவேந்தரது படை, கொடி, புகழ், வீரம், நாடு, நகர், திறை முதலியவற்றைப் பற்றிய மூன்று தொள்ளாயிரம் அல்லது இரண்டாயிரத்துஎழுநூறு வெண்பாக்களுடைய முத்தொள்ளாயிரமென்னு நூலில் நூற்றைந்து பாடல்களே கிடைத்துள்ளன. அவை மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரால் வெளியிடப்பட்டன. அந்நூல் இயற்றினர் யாரென்பதும், எக்காலத்தவரென்பதுந் தெளிவாக விளங்கவில்லை. (அது சேரமான் மாவெண்கோ, இராசசூயம் வேட்ட பெருநற்)

கிள்ளி, உக்கிரப் பெருவழுதி முதலிய மூவேந்தரும் ஒத்து வாழ்ந்த காலையில் இயற்றப்பெற்றிருக்கலாம். அதன் செய்யுட்கள் எடுத்துக் காட்டாகப் பல உரைகளில் எடுத்தாளப் பட்டிருக்கின்றன. இதனுள் இன்பப் பாடல்களும் வந்துள்ளன.

"திறந்திடுமின் றீயவை பிற்காண்டு மாத
ரிறந்து படிற்பெரிதா மேதம்—உறந்தையர்கோன்
தண்ணார மார்பன் தமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு." (முத்தொள். அ௫)

இச்செய்யுளுள், சோழமன்னன் தமிழர் பெருமானென விளிக்கப்பட்டது காண்க. இந் நூலாசிரியர் சைவரென்பது கடவுள் வாழ்த்தா லினிது விளங்கும். அவர் குமரவேள்பாற் பேரன்புடைய ரென்பது.

"மடங்கா மயிலூர்தி மைந்தனை நாளுங்
கடம்பப்பூக் கொண்டேத்தி யற்றாற்—றொடங்கமரு
ணின்றிலங்கு வென்றி நிறைகதிர்வேன் மாறனை
யின்றமிழால் யாம்பாடும் பாட்டு." (முத்தொள். உ)

என்பதால் விளங்கும்.

இந்நூலில் சேர அரசனை, முசிறியார் கோமான் என்றமையால், முசிறி யென்னுந் துறைமுகப்பட்டினச் சிறப்புக் குறித்தவாறும். அதில்,

"வேரறுகை பம்பிச் சுரைபடர்ந்து வேளைபூத்
தூரறிய லாகா கிடந்தவே—போரின்
முகையவிழ்தார்க் கோதை முசிறியார் கோமான்
நகையிலைவேல் காய்த்தினார் நாடு." (முத்தொள். கக௬)

என்றது காண்க.

## 4. சிலப்பதிகாரம்

கடைச்சங்கத்தார் காலத்திலே இயற்றப்பட்ட பெருந் தொடர்நிலைச்செய்யுள் மிகச் சிலவே. அவற்றுள் மிகச்

சிறந்தது முத்தமிழ்க்காப்பியமாகிய **சிலப்பதிகார**மென்பது. இது சேர அரசன் செங்குட்டுவனின் தம்பி துறவுபூண்டிருந்தவராகிய **இளங்கோவடிகள்** என்பவரால் இயற்றப்பட்டது. சிலப்பதிகாரக் கதையின் தலைவியாகிய கண்ணகி, இறந்த தன் கணவனோடு விண்ணிற் சென்ற காட்சியைக் கண்ட குன்றக்குறவர் இளங்கோவடிகட்கு அதனை உணர்த்த, அவரோடு உடனிருந்த மதுரைக்கூலவாணிகன் சாத்தனார் கண்ணகியால் மதுரைப்பதி தீப்பட்டதைத் தாம் நேரில் அறிந்ததாகச் சொல்லிக், கண்ணகி கதையின் நீதியை உலகத்திற்கு விளக்கும்பொருட்டு ஒரு பெருங்காப்பியம் நாட்டவேண்டுமென்று இளங்கோவடிகளை வேண்டிக் கொள்ள, அவ்வடிகள் சேரசோழ பாண்டியர்கள் மூவர்க்கும் பொதுவாகிய இக் கதையை முத்தமிழ் நயங்களும் விளங்க இயற்றியுள்ளார். கண்ணகியின் சிலம்பு காரணமாக இதன் முடிவு ஏற்பட்டதாகலின் இதற்குச் சிலப்பதிகாரம் என்னும் பெயர் அமைக்கப்பட்டது.

சிலப்பதிகாரத்தின் நோக்கமாவது, "அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉம், உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினை உருத்துவந் தூட்டு மென்பதும்" உணர்த்துதல் ஆம்.

சிலப்பதிகாரத்தாற் பண்டைத் தமிழ்மக்கள் கைத்தொழிற் சிறப்பு வெளியாகின்றது.

> "நூலினும் மயிரினும் நுழைநூற் பட்டினும்
> பால்வகை தெரியாப் பன்னூ றடுக்கத்து
> நறுமடி செறிந்த அறுவை வீதியும்."
>
> (சிலப். ஊர்காண், உ0௬-உ0௭)

அதனுட் பேசப்படுதல் காண்க.

உலோகத் தொழிலாளர், பல்வகை அணி அமைப்போர், ஓவியத்தொழிலாளர், தையல்வல்லுநர், மணிப்

பரிசோதகர், கிடைச்சு வேலைக்காரர், வளையற்காரர் முதலிய பல்வகைத் தொழிலாளிகள் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்து வந்தனர்.

மோதிரம், பீலி, பாடகம், சதங்கை, முத்துக்கோவைகள், ஆடகம், பொன்வளையல், சங்கவளையல், பவழவளையல், பொற்சங்கிலி, வைரமும் இந்திர நீலமும் பதித்த காதணி, பலவகை வாசனைப் பொருள்கள், மாடமாளிகைகள், கலங்கரை விளக்கம், தேவர் கோட்டங்கள் முதலியன காணப்படுகின்றன. சிலப்பதிகாரத்தின் காலம் கயவாகு காலத்தில் வைத்துத் தெளியப்படும்.

(செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில்கட்டித் திருவிழா நடத்தியபோது அக்காலத்திலிலங்கையில் ஆண்ட **கயவாகு மன்னன்** அவ் விழாவிற்கு வந்ததாகச் சிலப்பதிகாரங் கூறுகின்றது. **மகாவம்ச**மென்னும் புத்த சரித்திரப்படி கயவாகுவின் காலம் (கஎக-கக௯௫ A. D.) ஆகும்.)

செங்குட்டுவனுக்கு நண்பராயிருந்த **நூற்றுவர்கன்னர்** என்பார் அப் பெயருடைய வடநாட்டு அரச குடும்பத்தில் வந்த உ௫ மன்னனாகிய கௌதமபுத்திர யக்ஞஸ்ரீ என்பவனாவனென்று ஆராய்ச்சியால் புலனாகின்றது. அவன் காலம் கி. பி. க௬௯ க்கு மேலாகும். கி. மு. மூன்றாம் நூற்றாண்டினிறுதியில் சிமுகன் என்னும் மன்னன் மோரிய அரசர் ஒழிந்த பின்னர்ச் சதகர்ணி என்னும் அரச குடும்பத்தை நிலைநாட்டினனென்றும், அக்குடும்ப அரசர் ஐந்துநூற்றாண்டு அரசாண்டனரென்றும் ஆசிரியர் **இரேப்சன்** தமது **பழைய இந்தியா** என்னும் சரித நூலிற் கூறியுள்ளார்.)

இது புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்னும் மூன்றுபகுதிகளையுடையது. கதையின் தலைவனுந் தலைவியும் பிறந்து வளர்ந்து வாழ்ந்தவிடம் புகார்

என்னும் காவிரிப்பூம்பட்டினம். அது சோழநாட்டி லுள்ளது. கோவலன் சிலம்பு விற்கப்போய்க் கொலையுண்ட இடம் மதுரை. இது பாண்டிய நாட்டுத் தலைநகர். மதுரையைத் தீப்படுத்திய பின்னர்க் கண்ணகி சென்று தன் கணவனோடு விண்ணுலகஞ் சென்றவிடம் சேரநாட்டின் மலைப்பகுதி. அந் நாட்டின் தலைநகராகிய வஞ்சியின் கண்ணே கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவனால் கோயில் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, இக் காவியம் மூன்று நாட்டிற்கும் மூவேந்தர்க்கும் உரியதாகும். இது முத்தமிழ்க் காவியமாயும், நால்வகை உறுதிப் பொருளை யுணர்த்துவதாயும் இருத்தலால் இதற்குரிய பெருமை மற்றைக் காவியங்களுக்கில்லை. இது முப்பது காதைகளை யுடையது. காதை யென்பது கதை கூறும் பாட்டு.

முதலாவது **புகார்க்காண்டம்** பத்துப் பகுதிகளை யுடையது. முதற்பகுதியாகிய மங்கல வாழ்த்துப் பாடலில் திங்கள், ஞாயிறு, மாமழை, புகார் என்பவற்றின் வாழ்த்துக் கூறியபின், புகார் நகரத்தே வதிந்த **மாநாய்கன்** மகள் **கண்ணகி** என்பவளுக்கும், பெருங்குடி யென்னும் வணிக மரபினைச் சார்ந்த **மாசாத்துவான்** மகன் **கோவல**னுக்கும் மணம் நடந்தது கூறப்பட்டது. இதனுட் பொதியம், இமயம் என்னும் இருமலையின் சிறப்புந் தலைவன் தலைவி யர்க்கு மணஞ் செய்கின்ற காலத்து ஆண்டு முறையே பதினாறு பன்னிரண்டு என்பதும், பெண்மகள் அழகிற்குத் திருமகளையுங் கற்பிற்கு அருந்ததியையும், ஆண்மகன் அழகிற்குச் செவ்வேளையும் உவமைகூறும் வழக்கமும் அக் காலத்து மணச்சடங்கின் இயல்புங் காணப்படும்.

இரண்டாவது காதையில் கோவலனுங் கண்ணகியும் இல்லறம் நடத்தியது கூறுமுகத்தால், காவிரிப்பூம்பட்டினத்

தின் வளமும், இருவரது இன்ப வாழ்க்கையின் சிறப்பும், தலைவியைக் கோவலன் அன்பு பாராட்டுந்திறனும், அறவழி நிற்பார்க்கும இல்வாழ்க்கை பயன்படவேண்டுமென்பதும் விளக்கப்பட்டன.

மூன்றாவது அரங்கேற்று காதையில் அரசனது அவைக்களத்தே **மாதவி** யென்னும் பொதுமடந்தை மன்னற்குத் தன் ஆடல் பாடல் அழகுகளைக் காட்டிப் பரிசு பெற்றதைக் கூறுமுகத்தால், நாடகவியல்பனைத்தும் வகுத்தோதப்பட்டது. அவைக்கண் நாட்டியம் நடப்பதற்கு மூன் தலைக்கோலென்பதை இந்திரன் மகனாகக் கருதி யானை மேலேற்றி அதனை ஊர்வலம் செய்வித்தல் அக்காலத்து வழக்கமென்று தோன்றுகிறது. மாதவி யென்பாள் சோழ மன்னன் அவையில் தன் நாட்டியத்தைச் செவ்வையாக அரங்கேற்றி ஆயிரத்தெட்டுக்கழஞ்சு பொன்பெறும் மாலை ஒன்று பரிசாகப் பெற்றனள் என்றும், அத்துணைப் பொன் கொடுத்து அதனை வாங்கும் ஆடவனைத் தான் மணத்தல் கருதி மாதவி, அதனைக் கூனி யொருத்தியிடங் கொடுத்தா ளென்றும், அவ்வளவு பொன் கொடுத்துக் கோவலன் அதை வாங்கி மாதவியோடு கலந்து இன்பந்துய்த்து அவளை நீங்கா நிலையை யடைந்தன னென்றும் கூறப்பட்டது.

நான்காவது காதையுள் அந்திமாலைச் சிறப்புக் கூறுமிடத்துக் கண்ணகியைப் போலப் பிரிவுற்றார்க்கு அது துயரம் விளைத்தலும், கோவலன் மாதவி யென்னுங் காதலர்க்கு மகிழ்ச்சி யளித்தலும் விளக்கப்பட்டன.

ஐந்தாவது காதையுள் இந்திர விழவின் சிறப்புக் கூறுமிடத்துக் காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள பலவகைத் தொழிலாளர்களுடைய தெருக்களும் வீடுகளும் இத் தகைய வென்பதும், கரிகால்வளவன் இமயம்வரை படை

யெடுத்துச் சென்றகாலை அவன் வச்சிரம், மகதம், அவந்தி முதலிய வடநாட்டு மன்னரிடம் பெற்ற பரிசுகள் இன்ன வென்பதும், இலஞ்சிமன்றம், வெள்ளிடை முதலிய பல மன்றங்களின் சிறப்பும், பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவபெருமான் கோயிலும், அறுமுகச் செவ்வேள் அணி திகழ் கோயிலும், கண்ணன், பலதேவன், இந்திரன் முதலி யோர் கோயில்களும் அக்காலத்துச் சிறந்து விளங்கின என்பதுங் கூறப்பட்டன.

ஆறுவது கடலாடுகாதையில் இந்திரவிழவு இருபத் தெட்டு நாள் நடந்தபின்னர், நகரத்தார் கடலாடச் செல் லும் வழக்கமும், மாயோன் முதலிய பலவகைத் தேவர் களின் கூத்து வகைகளும், மாதவியின் பலவகை அணி களும், பல்வகைப் பண்டங்கள் விற்கும் வணிகர் செய லும், யவனர் முதலிய பலவகை அயல்நாட்டு மக்களின் வணிகமும், பலவகை விளக்குகளின் சிறப்புங் காணப் படும். மேலும் இதில் கோவலன் கோவேறு கழுதையிலும் மாதவி கொல்லாப்பாண்டியிலுங் கடற்கரை சென்று புன்னை நீழற்கீழ் புதுமணல் பரப்பிய இடத்தே இருவரும் இருந்தனர் என்பது கூறப்பட்டது.

ஏழாவது காதையில், கோவலன் காவிரியைப் பற்றியும் கடற்கரையைப் பற்றியும், வேறு மகளிரை விரும்பும் உள்ளத்தினன்போலப் பல வரிப்பாட்டுக்களைப் பாடினன். பின்னர் மாதவியும் அங்ஙனமே கோவலன் மேல் அன்பிலளாய் வேறொரு குறிப்புடையாள் போலச் சில வரிப்பாடல்களைப் பாடினள். உடனே கோவலன் மாதவி பொய்ம்மை மிக்க மாயத்தாள் என்று பிரிந்தான் என்பது கூறப்பட்டுள்ளது. இக் காதையுட் பலவகை இசைப்பாடல்கள் காணப்படுகின்றன.

எட்டாவது வேனிற்காதையுள் தமிழ்நாட்டெல்லையும் இளவேனிற் காலத்துக்குரிய காமன் சிறப்பும், பிரிந்தவர்களது துயரும், மாதவி விடுத்த தூதினைப் பொருட்படுத்தாது கோவலன் அவளை இகழ்ந்த செய்தியும் அது கேட்டு அவள் வருந்தியதும் கூறப்பட்டன.

ஒன்பதாவது கனாத்திறமுரைத்த காதையில், கண்ணகியின் பாங்கியாகிய தேவந்தி யென்பாள் கண்ட கனவு முதற்கட் கூறப்பட்டது. பின்னர், கோவலன் கண்ணகிபாற் சென்று, மாதவியின் பொருட்டுத் தன் முன்னோர் பொருட்குவையைத் தொலைத்ததைக் கூறி மனம் நொந்த காலை, இன்னும் மாதவிக்குக் கொடுக்கப் பொருள் வேண்டுமென்று கருதியதாக வெண்ணிய கண்ணகி, 'இன்னும் என் சிலம்புகள் இரண்டுள்ளன. அவற்றைக் கொள்க' என்று கோவலனுக்கு உரைப்ப, அவன் சிலம்பினை மதுரைக்குச் சென்று விற்றுப் பொருளீட்டி மீளுங் கருத்துடையே னென்று தெரிவித்து, அவளையும் உடனழைப்ப, அவளும் உடன்செல்லுதற்கு இசைந்தா ளென்பது தெரிவிக்கப்பட்டது.

பத்தாவது காதையுள், சித்திரைத்திங்கள் சோதி நாள் விடியற்காலம் மதிமறைந்து இருள் நிறைந்த பொழுதிற் புறப்பட்டுப் பல்வகைக் கோட்டங்களையுந் தொழுது போந்து ஒரு காத வழி சென்றவுடன், வழி நடப்பால் வருந்திய கண்ணகி 'மதுரை மூதூர் யா'தென்று புன்சிரிப்புடன் வினவினாள். கோவலன் மதுரை ஆறைங் காத வழியுள்ளது என்று சொன்னான். பின்னர் இருவருங் கவுந்தியடிகள் இருக்கின்ற பள்ளிக்குச் சென்று அவரை வணங்கவும், அவர் நீங்கள் உங்கள் உயர்நிலையை நீத்து யாண்டுச் செல்கின்றீரென வினவ, பொருளீட்டுதற்

பொருட்டு மதுரைக்குச் செல்வதாகக் கோவலன் கூறினன். கண்ணகி சீறடிக்குப் பருக்கைக் கற்கள் துன்பஞ் செய்யு மென்று உணர்த்தியும் இருவருந் தாம் மேற்செல்லுதலை யொழியாரென்று கண்ட கவுந்தியடிகள் தாமும் அவரோடு உடன்செல்வதாகப் புறப்பட்டனர். வழியின் கடுமை யெல்லாங் கவுந்தியடிகள் அவர்கட்கு விளக்கித் தக்க துணை யாகத் திகழ்ந்தனர். இப்பகுதியுள் வழியனைத்து மிக விளக்கமாகத் தெரிக்கப்பட்டது. அருகக் கடவுளது சிறப்பும் மிக விரிவாக இதனுட் கூறப்பட்டுள்ளது. காவிரிக் கரையிலுள்ள ஒரு பொழிலுள், கண்ணகியுங் கோவலனுந் தங்கியபோது அவர்களை இகழ்ந்துரைத்த ஒரு பரத்தையை யும் அவள் காதலனையும் நரியாகும்படி கவுந்தியடிகள் ஆணையிட்டனர். கோவலன் கண்ணகியென்பாருடைய வேண்டுகோளால் அவர்கட்குச் 'சாபம்' ஓராண்டில் நீங்கும் படி கவுந்தியடிகள் பணித்தார். இதனோடு புகார்க் காண்டம் முடிகின்றது.

இதற்கடுத்தது **மதுரைக் காண்டம்**. இக்காண்டத்துள் ௧௧ முதல் உ௨ வரையுள்ள காதைகள் அடங்கும்.

குமரிக்குத் தெற்கேயுள்ள தமிழ்நாட்டைக் கடல் கொண்ட செய்தியும், பாண்டிய மன்னரின் பெருமையும், கோவலனுக்குந் தென்னாடு முழுதுஞ் சுற்றிவந்த ஒரு மறையாளனுக்கும் நடந்த உரையாடலும், அவன் இட்ட **சித்தி, பவகாரணி, புண்ணிய சரவண** மென்னும் நீர்த் துறை முதலியவற்றின் பெருமை யுரைத்தலும், பின்னர்க் கவுந்தியடிகளோடு கோவலனுங் கண்ணகியும் ஒரு பொய் கையை யடைந்தகாலை, காட்டுத் தெய்வமொன்று மாதவி யின் தோழியாகிய வசந்தமாலையின் வடிவங்கொண்டு கோவலன் முன்னே தோன்ற, கவுந்தியடிகளின் போதனை

யால் உண்மையுணர்ந்து மந்திரத்தால் அதை விலக்கியதும், பின்பு அவர்கள் ஐயைகோட்ட மடைந்ததும் பதினோராவது காடுகாண் காதையிற் கூறப்பட்டது.

பன்னிரண்டாவது பகுதியுள் ஐயைகோயிலில் மறக்குடியிற் பிறந்த சாலினி யொருத்தி மிக முழக்கத்தோடு ஆடிக் கூறிய பாடல்களும், கண்ணகியை அவள் புகழ்ந்துரைத்ததும் பிறவுங் காணப்படும்.

பதின்மூன்றாவது காதையுள், வசந்தமாலை வாயிலாக மாதவி கோவலனுக்குத் தன்னுடைய கூந்தலை மண்ணிற் றொட்டுப் பொறித்த முத்திரையிட்ட முடங்கலை அனுப்பியதும், அதனுட் கோவலனடிக்கு வணக்கங் கூறிப் பெற்றோர்களது சொல்லையுங் கடந்து குலப்பிறப்பாட்டியாகிய கண்ணகியோடு இரவின்கண் ஊரை விட்டுப் போனதின் ஏது என்னவென்று கருதித் தன்னெஞ்சந் துன்பத்திலழுந்துவதாகவும், தன் புகழ்க்கு ஒரு குறைவில்லாது நடந்துகொள்ள வேண்டியதென்று மாதவி குறிப்பித்ததும், கோவலன் அம் முடங்கலுட் கண்டு மாதவியால் யாதுந் தீங்கில்லை யென்றுந் தன்னாற் செய்யப்பட்ட செய்கையே பிரிவிற்கு ஏதுவாயிற்றென்றும் உணர்ந்தன னென்பதும் அறியக் கிடக்கின்றன.

பின்னர் இருவரும் மதுரை சென்று இடைக்குடியுள் தமக்கோரிடம்பெற்றுத் தங்கியதும், மதுரையின் பல்வகைப் பகுதியின் வளப்பும், 13 பதின்மூன்று 14 பதினான்கு 15 பதினைந்தாங் காதைகளிற் கூறப்பட்டன.

பின்னர்க் 16 கொலைக்களக் காதையுள், ஆய்ச்சியர் கண்ணகிக்குச் சமையல் செய்வதற்கு வேண்டிய பொருள்களை உதவியதும், கண்ணகி சமைத்துக் கணவனுக்கு உணவு அளித்ததும், உணவருந்தி அடைக்காய் தின்னும்

பொழுது அவன் தனது முன்வாழ்க்கையை நினைந்து வருந்தித் தன்னை இகழ்ந்து கண்ணகியைப் புகழ்ந்ததும், அவனோடு உடன் புறப்பட்டுக் கண்ணகி வந்ததற்கு ஏதுக் கூறியதும், அவளை நன்மொழிகளாற் சிறப்பித்துச் சிலம்பொன்று பெற்று அதனை விற்று வருவதாகத் தான் புறப்பட்டதும் மிகவும் இரக்கத்தை விளைவிக்கத்தக்க பகுதிகளாகும்.

சிலம்பு கொண்டு வெளிப்போந்த கோவலன் தனக்கு எதிரே கொல்லேறு ஒன்று வருவது கண்டும் அவன் இடைக்குலத்தைச் சார்ந்தவனல்லனாதலின் அதைத் தீக்குறியென்றுணராது மேற்சென்று கடைத்தெருச் சேர்ந்தகாலை, நூறு பணியாளர் பின்செல்லச் சட்டையிட்டுப் போந்த பொற்கொல்லனொருவனிடம் தன் சிலம்பைக் காட்டி விலை மதிக்கும்படி கேட்டபொழுது, அப் பொற்கொல்லன் அரசன் மனைவியின் பொற்சிலம்பொன்றைத் தான் திருடிக் கொண்டமையை மறைத்தற் பொருட்டுக் கோவலன் கொணர்ந்த சிலம்பே அரசமாதேவி சிலம்பென்று கூறிக் கோவலனைக் கள்வனாக்கக் கருதினான். அத் தீயகருத்தோடு கோவலனை ஓரிடத்தில் நிறுத்திவிட்டு, அரண்மனைக்குச் சென்று காதலாற் றன் வயமிழந்த அரசனிடம் சிலம்பு திருடிய கள்வனைத் தான் கண்டதாகப் பொற்கொல்லன் கூறிய அளவில், அக் கள்வனைக் கொல்லுவதற்கு இங்கே கொண்டுவருகவென்று சொல்லக் கருதிய அரசன் சிறிது தவறி, அவனைக் கொன்று அச்சிலம்பைக் கொண்டுவருக என்று கட்டளையிட்டான். காவலாளரோடு சென்ற பொற்கொல்லன் கோவலனை அவர்களுக்குக் காட்டியபொழுது அவனுடைய முகக்குறி முதலியவற்றால் அவன் கள்வன் அல்லன் என்று காவலாளர்கள் சொன்னதைப் பொற்கொல்லன் மறுத்து அவன் கள்வனே என்று வற்புறுத்திய போது, அவர்களுட் கொலையஞ்சாத ஒருவன் விரைந்து

சென்று கோவலனை வெட்டி வீழ்த்தினன். அதனோடு கொலைக்களக் காதை முடிகின்றது.

பதினேழாங் காதை: இடையர் குடியிற் சில தீக்குறிகள் கண்ட பெண்டிர் அவற்றிற்குத் தணிவாகக் குரவைக் கூத்தாடினர். ஆய்ச்சியரின் இசைப்பாடல்கள் இப் பதினேழாவது பகுதியுட் காணப்படுகின்றன.

[? பின்னர்க் கோவலன் கொலையுண்ட செய்தியைக் கண்ணகி கேள்விப்பட்டுப் புலம்பிப் பின், கதிரவனை நோக்கி, என் கணவன் கள்வனோ வென்று வினவியகாலை 'நின் கணவன் கள்வனல்லன்: இவ்வூர் தீப்படும்' என்றதோர் ஒலி யெழுந்தது. இது பதினெட்டாவது பகுதியுட் காணப்படுகின்றது.

அதன் பின்னர்க் கண்ணகி எஞ்சிய சிலம்பொன்றைக் கையிலேந்தித் தன் கணவனைக் காணுதற் பொருட்டுப் புறப்பட்டுப்போய்த் தன் கணவனுடைய உடலைச் சிலர் காட்டக் கண்டு கழிபெருந் துயருற்று,

"உண்பதோர் வினைகாணு விதுவென உரையாரோ
பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல்
கொண்ட கொழுந ருறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல்
சான்றோரு முண்டுகொல் சான்றோரு முண்டுகொல்
ஈன்ற குழவி யெடுத்து வளர்க்குறூஉஞ்
சான்றோரு முண்டுகொல் சான்றோரு முண்டுகொல்
தெய்வமு முண்டுகொல் தெய்வமு முண்டுகொல்
வைவாளிற் றப்பிய மன்னவன் கூடலிற்
றெய்வமு முண்டுகொல் தெய்வமு முண்டுகொல்
என்றிவை சொல்லி." (ஊர்சூழ்வரி, ௫௦ - ௬௦)

அழுது கணவனது மார்பைத் தழுவிக்கொண்டகாலை, அவன் உயிர்பெற்றெழுந்து நின்று அவள் கண்ணீரை மாற்றி விட்புலஞ் சென்றனன்.

கண்ணகி 'இது என்ன மாயமோ?' என்று கருதி அரசனைக் கண்டு இதனைப்பற்றிக் கேட்கவேண்டுமென்று அரசன் அரண்மனை வாயில் அடைந்தாள். தன் வரவை அரசனுக்கு அறிவித்து உட்சென்று, அரசன் யாரென வினவ, அவள் தான் மனுமுறைகண்ட சோழன் மரபில் வந்த அரசர் ஆளும் புகாரென்னும் ஊரினளென்றும், அந் நகரத்து மாசாத்துவான் மகனும் ஊழ்வினையாற் கொலையுண்ட கோவலன் மனைவி தானென்றும் கூறினாள். கள்வனைக் கொல்லுதல் கடுங்கோ லன்றென்று அரசன் மொழிந்தகாலை அவள் தன் கணவன் கள்வன் அல்லன் என்று குறிப்பித்தற்குத் தன் சிலம்பினுள் வைக்கப்பட்ட மணி மாணிக்கமென்றாள். அரசியின் சிலம்பினுள் அமைக்கப்பட்டது முத்து என்றான் அரசன். கண்ணகி தன் காற்சிலம்பை உடைக்க, அதன் உள்மணி அரசன் வாயில் தெறித்து விழுந்தது. உடனே அரசன் தான் செய்தது தவறு என்றுணர்ந்து 'பொன்செய் கொல்லன் தன் சொல்கேட்ட யானோ அரசன், யானே கள்வன்' என்று கூறித் தன்னை இகழ்ந்து மயங்கி வீழ்ந்து இறந்தனன். உடனே அரசமாதேவியும் உயிர்துறந்தனள்.

பின்னர்க் கண்ணகி வஞ்சினங் கூறித் தன் இடமுலையைக் கையால் திருகி மும்முறை வலம்வந்து ஊர்மேலெறியத் தீக்கடவுள் அவட்குத் தோன்றி யாரைத் தவிர்க்கவேண்டுமென்று கேட்டகாலை, 'பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர், மூத்தோர், குழவி யென இவரைக் கைவிட்டுத் தீத்திறத்தார் பக்கமே சேர்க' என்று கண்ணகி உரைத்தனள். உடனே கூடல்நகர் தீப்பற்றியது. தீப்பற்றிய செய்தி இருபத்திரண்டாவது காதையுட் காணப்படும்.

மதுரைக் கதிபதியாகிய தெய்வம் கண்ணகிமுன் தோன்றிப் பாண்டிய மன்னரின் செங்கோன்மையை

யெடுத்துக் கண்ணகிக்குக் கூறிக் கோவலன் வெட்டுண்ட தற்கு ஏது சங்கமனென்னும் வணிகனை அவன் முற்பிறப்பிற் பகைவனுடைய ஒற்றனென்று பிடித்து அரசனுக்குக் காட்டிக் கொலைசெய்ததும், அச் சங்கமன் மனைவியாகிய நீலி யென்பவள் பதினான்கு நாள் பலவிடத்தும் அலைந்து பின்பு ஒரு மலைமேலேறிக் கணவனைச் சேர்தற்பொருட்டு உயிர்விடுங்காலை, 'தனக்குத் துன்பஞ் செய்தோர் இத் துன்பத்திற்கு ஆளாவார்' என்றதும் ஆம் என்றுரைத்து, 'நீ இன்னும் பதினான்குநாள் சென்று உன் கணவனைச் சேர்வா' யென்று பகர்ந்து மறைந்தது. பின்னர்க் கண்ணகி இருத்தலுமில்லாது, நிற்றலுமில்லாது மேற்றிசை வாயிலாகச் சென்று, வைகைக்கரை வழியாக நெடுந்தூரம் போய், மலை யேறி ஒரு வேங்கைமர நீழலில் நின்றகாலை, விண்ணினின் றிழிந்த ஊர்தியில் வந்த கோவலனோடு வானுலகம் புகுந் தனள். (அக்காலத்து மதுரையில் அரசாண்ட மன்னன் ஆரியப் படைகடந்த நெடுஞ்செழிய னென்பான்.) இத னோடு மதுரைக் காண்டம் முடிவுற்றது.

இனிக் கடைசி ஏழு காதையும் வஞ்சிக்காண்டமெனப் படும். கண்ணகி கணவனோடு விண்சென்ற காட்சியைக் கண்ட வேட்டுவர் வியந்து குரவைக் கூத்தாடியது உச ஆவது காதையிற் காணப்படும். அவ்வேடர்கள் சேரமன்ன னாகிய செங்குட்டுவனுக்கும் அவன் தம்பியாகிய இளங்கோ வடிகட்கும் இச்செய்தியைத் தெரிவித்தார்கள். அவ்வரசன் மலைவளங் காண்பான் தன் தேவியோடு ஆங்குச் சென் றிருந்தான். அக்காலத்தே கண்ணகிக்கு மதுரைத் தெய்வங் கூறியதை நேரிற்கேட்ட சீத்தலைச் சாத்தனார் மதுரைச் செய்தி அனைத்தையும் அவ்வரசனுக் குரைத்தார். அரசன் கண்ணகிக்குக் கோயில் கட்டக் கருதி அவள் வடிவம் செய் தற்குக் கல்கொண்டு வருதற்பொருட்டு இமயம் நோக்கித்

தன் சேனையோடு புறப்பட்டான். புறப்படு முன்னர், சிவபெருமானைத் தொழுது அவன் அவரது சேவடி சென்னி மேற்கொண்டனனென்பது கால் கோட்காதையில்,

"தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்." (கூச-கூரு)

என்றமையாற் புலனும்.

பின் அவன் திருமால் 'பிரசாதத்தை' வாங்கித் தோளிற் சாத்திக்கொண்டனனென்பது கூறப்பட்டது. பின்னர் வடநாட்டிற்குச் சென்று நூற்றுவர்கன்னர் என்னும் நட்பரசர்களது உதவியைக்கொண்டு ஓடமேறிக் கங்கையைக் கடந்து கனகன், விசயன், உத்தரன் முதலிய ஆரிய அரசர்களை வென்று இமயத்திற் கொண்ட கல்லைக் கனகன், விசயன் என்னும் ஆரிய அரசர் தலைமேலேற்றிக் (கங்கையை மீண்டுங் கடந்து கங்கைக்குத் தென்கரையில், சேனையோடு தங்கியகாலை, மாடலன் என்னும் மறையவனால் கோவலன் வரலாற்றையும், நெடுஞ்செழியனுக்குப் பின்பு மதுரையில் இளங்கோ வேந்தன் அரசாட்சி செய்ததையும் சேரன் கேள்விப்பட்டான்.) பின்னர், அவன் வஞ்சி நகரடைந்து மாடலனது நல்லுரை கேட்டுக் கனகவிசயரைத் தாம் வென்றதை இகழ்ந்த சோழ பாண்டிய மன்னர் பால் தான் கொண்ட சினந் தவிர்ந்து, சிறையில் வைத்த அவ்வாரிய மன்னரை விடுவித்துக் கண்ணகிக்குக் கோயிலமைத்து நாள்வழிபாடு, சிறப்பு வழிபாடுகள் நடைபெறும்படி ஏற்பாடு செய்தான். இச்செய்தி யெல்லாம் உணர்ந்த கண்ணகியின் பாங்கியாகிய தேவந்தியும், அவள் அடித்தோழியுங் கண்ணகி கோவிலுக்கு வந்து பிரிவாற்றாமையால் வருந்தியபோது கண்ணகி செங்குட்டுவனுக்குத் தெய்வமாக வெளிப்பட்டு அவனை வாழ்த்தினாள். இம்மூவ

னுடைய பிறப்பையும் தெய்வத்தின் உதவியால் அறிந்த செங்குட்டுவன், கண்ணகிக்கு நாள்வழிபாடு இயற்றும்படி தேவந்தியை வேண்டிக்கொண்டான். பத்தினிக் கடவுளை வணங்கியகாலை (அங்கு வந்திருந்த ஆரிய அரசரும், மாளவ மன்னனும், இலங்கை அரசனாகிய கயவாகுவுந் தாங்கள் தமதுநாட்டிற் செய்யும் பூசையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கண்ணகிபால் குறையிரந்தகாலை, அப்படியே வரந் தந்தேனென்று ஒரு குரலெழுந்ததைக் கேட்டு, எல்லோரும் மகிழ்ச்சி யடைந்தார்கள்.) பின்னர்ச் செங்குட்டுவன் ஒரு வேள்வி யியற்றச் சென்றான். இளங்கோவடிகள் தேவந்தி மேற்றோன்றிய கண்ணகியின் வாயிலாகத் தன் வரலாறுகளை உணர்ந்தார். (தங்கள் நாடுகளில் வறுமை நீங்கி மழை பொழிதற் பொருட்டுக் கொற்கையிலிருந்த இளஞ்செழியனென்னும் பாண்டியனும், உறையூரிலிருந்த சோழனாகிய பெருநற்கிள்ளியும், இலங்கைக் கயவாகுவுங் கண்ணகிக்குக் கோயில் கட்டுவித்து நாள்வழிபாடும், விழா முதலியவைகளும் நடத்தினார்கள். இளஞ்செழியன் கண்ணகிக்கு ஆயிரம் பொற்கொல்லரைப் பலியிட்டதாக வரலாற்றில் கூறப்பட்டுள்ளது. இதனோடு வஞ்சிக் காண்டம் முடிவு பெற்றது.)

## 5. மணிமேகலை

இப்பெருங் காப்பியம் சிலப்பதிகாரத்தோடு தொடர்புடையது. சிலப்பதிகாரங் கேட்ட மதுரைக் கூலவாணிகன் சாத்தனாரால் இயற்றப்பட்டது. சிலப்பதிகார வரலாற்றுத் தலைவராகிய கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலை யென்பாளது வரலாற்றைக் கூறுவது. "மணிமேகலை மேலுரைப் பொருண் முற்றிய சிலப்பதிகார முற்றும்" என்றமையால் சிலப்பதிகாரம் முடிவதற்குள் மணிமேகலை

இயற்றப்பட்டு முடிந்ததென்னலாம். இது முப்பது காதைகளையுடையது.[1] இதன் பதிகத்துள் காவிரிப்பூம்பட்டினத்துக்குக் காவற்றெய்வம் 'சம்பு' என்பவளென்றும்,[2] அவ்வேதுவினால் அப்பட்டினத்துக்குச் 'சம்பாபதி' என்று பேர் வந்ததென்றும்,[3] காவிரி, 'காந்த'னென்னுஞ் சோழன் வேண்டியபடி அகத்தியர் கமண்டலத்திலிருந்து புறப்பட்டு வந்ததென்றும்,[4] அது கடலொடு கலக்குமிடத்தே காவிரிப்பூம்பட்டினம் இருந்ததென்றும், புத்தர் கூறும் உலக அமைப்பு இன்னவென்ற குறிப்பும், மணிமேகலை வரலாற்றுப் பகுதிகளும் இளங்கோவடிகள் கேட்கச் சாத்தனார் கூறியதும் சுட்டப்பட்டது.

அகத்தியர் கட்டளைப்படி தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் என்னுஞ் சோழன், இந்திரனுக்கு உஅ நாள் விழா நடத்துங்கால் இந்திரனை, அவன் அந்நகரத்தில் உறைதல் வேண்டுமென்று கேட்டுக்கொண்டதும் அக்காலத்தே அந்நகரத்தே பிறர் அறியாது வேடம் பூண்டுவருந் தேவரும், மக்களுட் சிறந்த சமயவாதிகளும் பல மொழிகள் பேசுவோரும்,[1] அரசர்க்குரிய ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும் ஒருங்குகூடித் திருவிழாவைச் சிறப்பிப்பதும், [1] முசுகுந்தனுக்கு இடர்தீர்த்த அங்காடிப் பூதம்,[2] தீயமாக்களைப் புடைத்துண்ணுஞ் சதுக்கப் பூதம் என்பவற்றின் வரலாறும்,[3] இந்திரன் முரசினை யானைமேலேற்றி நகர்வலஞ் செய்வித்தலும்,[4] மழை பொழிக என்றும் செங்கோல் நிலைபெறுகவென்றும் வாழ்த்துச் செய்தலும், நிறைகுடம், பாவைவிளக்கு, கமுகு, வாழை, கரும்பு, முத்துமாலை முதலியவற்றால் நகரை அணிசெய்தலும், சிவபெருமான் கோயில் முதல் சதுக்கப் பூதத்துக் கோயில் ஈறாக எல்லா இடங்களிலுஞ் சிறந்த வழிபாடு இயற்றுத

லும், பகைவருந் தம்முட் கலகம் விளையாதிருத்தலும் முதற் காதையிற் கூறப்பட்டன.

விழாக்காலத்தே மாதவியும் மணிமேகலையும் தமது ஆடல் பாடல்களால் விழாவினைச் சிறப்பியாமை கண்டு, ஊரார் குறைகூறினும் மணிமேகலை அதனைப் பொருட்படுத் தாது துறவுநிலையே மேற்கொண்டனள். மணிமேகலை புத்தினிக்கடவுளாகிய கண்ணகியின் மகளாவள் என மாதவி கருதியதும், அறவண அடிகள்பால் ஐவகைச் சீலத்து அமைதி கேட்டு அவள் துறவு பூண்டதும், இரண் டாவது காதையில் வியக்கத்தக்க பகுதிகளாகும்.

சுதமதி யென்னும் பாங்கியோடு மணிமேகலை உவவனஞ் சென்று பூக்கொய்ததும், மணிமேகலையைத் தொடர்ந்துவந்த உதயகுமரன் கைப்படாவண்ணம் ஒரு பளிக்குமண்டபத்தே மணிமேகலை புகுந்து நின்றதும், யாரிடத்தும் விருப்பங் கொள்ளாத மணிமேகலைக்கு உதய குமரனைக் கண்டபோது விழைவு தோன்றியதும், சுதமதி உதயகுமரனுக்கு மணிமேகலையின் துறவியல்பினைக் கூறி, யாக்கை நிலையாமையை அறிவுறுத்தியதும் ௩, ச ஆவது காதையுட் காணப்படும்.

"வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
மூப்புவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
யவலக் கவலை கையா றழுங்க
றவலா வுள்ளந் தன்பா லுடையது
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து." (கக௩-கஉ0)

என்றது காண்க.

பின்னர்ச் சுதமதி தன் வரலாற்றினை உதயகுமரனுக்கு எடுத்துரைத்தபோது சமண முனிவரைப் பார்க்கினும் புத்த முனிவர் துக்க அருளுடையர் என்று குறிப்பித்தாள். உதயகுமரன் பூஞ்சோலையை விட்டு நீங்கிய பின்னர் மணிமேகலை பளிக்கறையினின்று வெளிவந்து உதயகுமரன்பால் தன் மனம் சென்றதைக் குறிப்பித்தாள். அப்போது மணிமேகலா தெய்வம் ஒரு மடந்தை வேடம் பூண்டு, அப்பளிக்கறையினிடத்தே யுள்ள புத்த பீடத்தை வலங்கொண்டு துதித்துநின்றது. பின்னர் அந்திப்பொழுது வரவே, திங்கள் தோன்றிற்று. மணிமேகலா தெய்வம் சுதமதியைப் பார்த்து அவர்கள் வெளியே சென்றால் உதயகுமரன் தொடர்வானென்றும், அவர்கள் அச்சோலையின் மேற்புறத்திலிருந்த சக்கரவாளக்கோட்டத்தில் தங்கினால் யாதொரு துன்பமும் அணுகாதென்றுங் கூறிற்று.

சுடுகாட்டுக் கோட்டமென்ற அச்சக்கரவாளக்கோட்டத்தின் இயல்பினைச் சுதமதி கேட்ப, மணிமேகலாதேவி செப்பியவிடத்தே, கூற்றத்தினியல்பும், யாக்கை நிலையாமையும் எடுத்து விளக்கும் பகுதியும், செத்தோரை எழுப்புதல் தேவர்க்குமாகாதென்று மணிமேகலா தெய்வம் சுதமதிக்கு விளக்கியதும் ஆயத்தக்கன. இருவரும் தூக்கங்கொண்டபோது மணிமேகலா தெய்வம், மணிமேகலையை எடுத்துக்கொண்டுபோய் மணிபல்லவமென்னுந் தீவினில் வைத்துவிட்டு மீண்டும் வந்து சுதமதியை எழுப்பித் தான் மணிமேகலையை மணிபல்லவத்திற்குக் கொண்டு போன செய்தியையும், அவள் ஏழுநாளில் தனது முற்பிறப்பின் நிகழ்ச்சிகளை அறிந்து மீள்வதாகவும், அதனை மாதவிக்குத் தெரிவிக்கவேண்டுமென்றும் மொழிந்தது. பின்னர் மணிபல்லவத்தில் விடப்பட்ட மணிமேகலை, துயில் நீங்கிப் பார்த்தபொழுது சுதமதியைக் காணாமல் தானிருக்கு

மிடம் புதிதாக இருக்கிறதென்று மயங்கித் தன் தந்தையை நினைத்து அழுதகாலை, பழம்பிறப்பைத் தெரிவிக்கும் புத்த பீடிகை தோன்றியது.)

ஒன்பதாவது காதையுள் மணிமேகலை முற்பிறப்பின் நிகழ்ச்சி யறிந்தமை கூறப்பட்டது. பின்னர்,

பத்தாவது காதையுள் மணிமேகலா தெய்வந் தோன்றிப் புத்த பீடிகையைத் தொழுது துதித்தது. அத்தெய்வத்தை மணிமேகலை வணங்கி முற்பிறப்பில் தன் கணவனுயிருந்த இராகுலன் இப்போது எங்கே பிறந்துளான் என்று கேட்டாள். அவ்விராகுலனே உதய குமரனுகப் பிறந்தான் என்று அத்தெய்வஞ் சொல்லிற்று. பசியில்லாமலிருக்கும் மந்திரத்தை அவளுக்கு அத்தெய்வம் கற்பித்தது. பின்னர்த் தீவதிலகையென்னுமோர் பெண் தெய்வம் மணிமேகலைக்குத் தோன்றித் தான் அத்தீவிலுள்ள தரும பீடிகையைப் பாதுகாப்பதாகவும், அதன் பக்கத்திலேயுள்ள பொய்கையில் 'அமுதசுரபி' என்னும் பாத்திரம் புத்ததேவன் பிறந்த நாளாகிய வைகாசிப் பௌர்ணமியில் தோன்றுமென்றும், அதிலிடப்பட்ட அன்னம் மேன்மேலும் பெருகிக்கொண்டே யிருக்குமென்றும், இந்நாள் அந்நாளென்றும் கூறவே, அப்பொய்கையின் கரையில் மணிமேகலை போய் நின்றவுடன் அமுதசுரபி என்னும் பாத்திரம் அவள் கையில் வந்து நின்றது. அதன் பெருமையையும், பசிப்பிணி தீர்க்கும் பேரறத்தையும், தீவதிலகை வாயிலாக அறிந்துகொண்டு விண்வழிச் செல்லும் மந்திரத்தையும் அவள்பாற் கற்று, விண்வழியாகப் புறப்பட்டுத் தன்னூர்க்கு மீண்டு மாதவி சுதமதியையும் அழைத்துக்கொண்டு, அறவண அடிகளைத் தொழச் சென்றாள். அறவண அடிகள் அவர்களது முற்பிறப்பை அறி

வுறுத்திப் புத்தனாயிறு தோன்றுங் காலமும் கூறி எல்லாருடைய பசிப்பிணியையும் தீர்க்கும்படி கட்டளையிட்டார். பின்னர்,

அந்த அமுதசுரபி ஆமகன் (ஆபுத்திரன்) என்பானிடம் முதலில் இருந்தமையால் அவனைப்பற்றிய வரலாறு முழுவதையும் அறவணவடிகள் மணிமேகலைக்குத் தெரிவித்தார் (ஆமகனென்பான் கன்னியா குமரிக்கு நீராடச்சென்ற ஒரு பார்ப்பனியின் மகன். அப்பார்ப்பனி அக்குழந்தையை ஓரிடத்து விட்டுவிட்டுப் போய்விடவே ஒரு பசு ஏழுநாள் பால் கொடுத்து அவனை வளர்த்தது. பின்னர் ஓர் அந்தணன் அக்குழந்தையை எடுத்து வளர்த்தான்; முதலிற் பசு வளர்த்தது பற்றி அவன் ஆமகன் என்னும் பெயர் பெற்றான். பின்னர் ஒரு பசுவினை யாகத்திற் கொலை செய்ய நினைத்த பார்ப்பார் சிலர்க்கும் அவனுக்கும் நடந்த வழக்கில், தன்னை இகழ்ந்துரைத்த அவர்களை நோக்கிப் பல முனிவர்கள் பல விலங்குகளுக்குப் பிறந்தவரென்பதை அவன் எடுத்துரைத்தான்; பின்னர்ப் பசுவையும் அவர் கையினின்று காப்பாற்றினான். பசுவைத் திருடினனென்று அவனைப் பார்ப்பார்கள் இகழ்ந்தனர். பின்னர் அவன் மதுரையை யடைந்து சிந்தாதேவியின் கோயிலிற் றங்கித் தனது பிச்சைப் பாத்திரத்தில் பிச்சை வாங்கிவந்த உணவை வருகிறவர் யாவர்க்கும் கூன், குருடு, முடம் முதலியோர்க்கும், அளித்து ஒழிந்த மிச்சத்தையே தான் உட்கொண்டு பிச்சை யோட்டைத் தலையணையாக வைத்துக்கொண்டு அவ்வம்பலத்தே தங்கிக் காலங்கழித்தான். ஒருநாள் இவனது அருஞ்செயலைக் கண்ட சிந்தாதேவி 'அட்சயபாத்திர' மொன்றை அவன் கையிற் கொடுத்தாள். அதனால் மிக மகிழ்ச்சியடைந்து அவன் எல்லா உயிர்கட்கும் உணவளித்து வந்தான். இந்திரன் அவனுக்கு வரங்கொடுக்க வந்தபோது

அவன், "விண்ணுலகத்தே இரவலர்க்கு உணவு கொடுத்துப் பெறுமின்ப மில்லை. ஆகையால், விண்ணுலகப் பதவி யொன்றும் வேண்டேன்"னென்றான்.

பின்பு, ஆமகன் சாவக நாட்டுமக்கள் வறுமையால் மடிகின்றார்களென்று கேள்வியுற்று அவர்களுக்கு உணவளிக்கும் பொருட்டுக் கப்பலேறிச் சென்றான். மணிபல்லவமென்னுந் தீவினருகே ஒருநாள் நின்ற கப்பல் அங்கு இறங்கிய ஆமகன் ஏறிவிட்டானென்றெண்ணி இரவிற் புறப்பட்டுச் சென்றது. அத்தீவில், அவன் தங்கிவிடவே உணவுகொள்வோர் ஒருவருமில்லாமையால் 'அட்சய பாத்திர'த்தை ஒரு பொய்கையிற் போட்டுவிட்டு, அது தக்க தகையாளர் கையிற் கிடைக்க வேண்டுமென்று சொல்லி, உறுதி கூறிவிட்டுப் பட்டினியாயிருந்து தான் உயிர்துறந்தான். அந்தப் பாத்திரமே, மணிமேகலை கையில் வந்ததாகும். (உயிர் துறந்த ஆமகனைப் பிறந்தவுடன் பாலூட்டி வளர்த்த பசுவானது சாவக நாட்டில் ஒரு முனிவனிடத்தே பொன் கொம்புகளோடுங் குளம்புகளோடுந் தோன்றி, எல்லா உயிர்களுக்கும் பால்சுரந்து கொடுத்துக் கொண்டிருந்தது. அதன் வயிற்றில் ஆமகன் பிறந்து, மகப்பேறு இல்லாத அந்நாட்டு அரசன் மகனாய் வளர்க்கப்பட்டு வந்தான். அவன் பெயர் புண்ணியராசனென்பது.)

இவ்வாறு ஆமகன் வரலாற்றை அறவணவடிகள் மணிமேகலைக்குக் கூறி இவ்வமுத சுரபியைப் பலர்க்கும் பயன்படுத்த வேண்டுமென்று கூற, அவள் ஐயம் எடுக்குந் துறவுவேடம் பூண்டு முதலில் ஆதிரை என்பாளிடம் பிச்சை ஏற்றாள். ஆதிரை என்பாளது கற்பின் பெருமை கசு ஆவது காதையுட் கூறப்பட்டது. கப்பலிற் சென்ற

தன் கணவன் இறந்துபோனு னென்றெண்ணித் தீயில் விழுந்ததும், தீ அவளைச் சுடாமலிருந்ததும், அவள் கணவன் மிலேச்சத் தன்மையுடைய நாகர்கள் கைப்பட்டு அவர்களுடைய மொழித்தேர்ச்சியாற் பிழைத்து மீண்டதும் இதன்கண் ஆராயத்தக்கன. மணிமேகலை அமுதசுரபியில் எடுக்க எடுக்கக் குறையாமல் மிகுதிப்படும் சோற்றுத்திரளை யாவர்க்கும் வழங்குதற் பொருட்டு உலகஅறவி என்னும் அம்பலத்துத் தங்கினள். அவள் காயசண்டிகை யென்னும் வித்தியாதர மங்கைக்கு அமுதசுரபியினின்றும் வழங்கிய சோற்றினல் 'யானைத் தீ' என்னும் நோயை நீக்கினுள். பின்னர் மணிமேகலையைத் தொடரும்படி உதயகுமரனை மாதவியின் தாயாகிய சித்திராபதி ஏவினள். உதயகுமரன் உலக அறவிக்குச் சென்று மணிமேகலையை நோக்கி, 'நீ தவக்கோலம் பூண்டது எதனு' லென்று வினவ, முற்பிறப்பிற் கணவனுயிருந்த அவனை, அவள் வணங்கி யாக்கை நிலையாமையையும் அறத்தின் சிறப்பையும் எடுத்துக் கூறினள். பின்னர் அவள் மந்திரவலியால் காயசண்டிகை வடிவமுற்றனள். அதனை யறியாத உதயகுமரன் தெய்வத்தை வணங்கி ஒருவாறு உண்மை உணர்ந்தான். பின்னர் மணிமேகலை சிறைச்சாலையை அறச்சாலை யாக்கியதும் கூறப்பட்டது. (காயசண்டிகை வேடம் பூண்ட மணிமேகலையைக் காயசண்டிகை யென்றே நினைத்து, அவள் கணவனுகிய காஞ்சனன், மணிமேகலை உதயகுமரனிடம் அறவுரைகளைக் காதலோடு எடுத்துக் கூறுவதைப் பார்த்து, உதயகுமரன்மேல் தீது கருதி ஒளித்திருந்தான். "மணிமேகலையைக் கைப்பற்றி அவள் கற்ற வித்தைகளையுங் கேட்கக் கருதி நள்ளிரவில் உலக அறவியில் உதயகுமரன் புகுந்தகாலை, காஞ்சனன் அவனை வெட்டி வீழ்த்திவிட்டு, மணிமேகலையைக் கைப்பற்றிக்கொண்டு விண்வழியே செல்லு

எண்ணியகாலை, கந்திற்பாவைத் தெய்வம் அவள் காய சண்டிகை யல்லள் என்று அவனுக்கு அறிவித்தது. பின்னர் அவன் அவளைத் தொடாது தன்னூர்க்குச் சென்றான்.)

(ஈதெல்லா முணர்ந்த மணிமேகலை பழம்பிறப்பை நினைத்து உதயகுமரன் இறந்ததற்கு வருந்தியகாலை கந்திற் பாவைத்தெய்வம் அவளை நோக்கிச் சொல்லியதாவது: 'நீயும் இவனுங் கணவனும் மனைவியுமாகப் பல பிறப்புக் களில் வாழ்ந்திருந்தபோதிலும், நீ பிறவித் துன்பத்தை ஒழிக்கக் கருதுவதால், இவனிறந்தது ஏதுவாகத் துயரப் படாதே' என்பதே.)

(உதயகுமரன் இவ்வாறு இறப்பதற்கு ஏது என்ன வென்று மணிமேகலை அத்தெய்வத்தை வினவியபோது "முற்பிறப்பொன்றில், இராகுலனை யிருந்தபோது முனிவர் ஒருவருக்கு விருந்து சமைக்கக் காலந்தாழ்த்திய ஏதுவால், சமையற்காரனை உதயகுமரன் வெட்டி வீழ்த்தினன். அத்தீவினைப் பயனே இப்போது இவனைச் சூழ்ந்தது" என்று அது கூறிற்று.) பின்னர் மணிமேகலைக்கு வருங்கால நிலையைத் தெரிவித்து அவள் கவலையை ஒழித்தது. பின்னர் மணிமேகலை சிறைப்பட்டதும் சிறை விடுவிக்கப்பெற்று இராசமா தேவியின் கட்டளைக்கு அடங்கி நின்று, அவளால் பலவகையாகத் துன்புறுத்தப்பட்டும் இடருறுதிருந்தது கண்டு நடுங்கி, அவளே தான் செய்த குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளும்படிவேண்ட, மணிமேகலை அவ ளுக்கு உதயகுமரனின் முற்பிறப்பு வரலாற்றைக் கூறி, ஐவகைச் சீலங்களின் பெருமையை யெடுத்து விளக்கினமை யும் உரைக்கப்பட்டது.

பின்னர் மணிமேகலை சாவகநாட்டிற்கு விண்வழியாகச் சென்று, ஒரு சோலையில் இறங்கிப் புண்ணிய இராசனது

வரலாற்றினை ஒரு முனிவர்பால் கேட்டனள். "புண்ணிய இராசனும் தருமசாவகன் என்னும் முனிவன் வாயிலாக மணிமேகலையின் பெருமையை யறிந்தான். பின்பு இருவரும் சந்தித்து அளவளாவி யிருந்தகாலை, அவள் புண்ணியன் மணிபல்லவஞ் சென்று புத்தபீடிகையை வழிபட்டால் முற்பிறப்புச் செய்திகளை அறியலாமென்றாள். மணிமேகலை விண்வழியாகவும், புண்ணிய மன்னன் கப்பலிலுஞ் சென்று மணிபல்லவத்தை யடைந்தார்கள்." புண்ணியன் புத்த பீடிகையைத் தரிசித்து முற்பிறப்பில் தான் சிந்தாதேவி யிடம் அமுதசுரபியைப் பெற்றதுணர்ந்தான். அவண், தீவதிலகை அவர்களுக்குத் தோன்றி ஆமகனது முற்பிறப்பையும், கப்பல் யாத்திரையையும், காவிரிப்பூம் பட்டினத்தைக் கடல்கொண்டதையும், அதற்கு ஏதுவையுந் தெரிவித்தாள். சோழமன்னன் நாகநாட்டரசன் மகளாகிய பீலிவளையிடந் தனக்குப் பிறந்த மகனைத் தேடியலைந்து இந்திர விழா நடத்தத் தவறினமையால் மணிமேகலா தெய்வம் வெவ்வுரை கூறக் காவிரிப்பூம்பட்டினம் கடல்வாய்ப் பட்டது. புண்ணியராசன் தனது பழைய யாக்கையின் எலும்பைக் கண்டு மயங்கியகாலை, மணிமேகலை அவனைத் தேற்றி அறிவுரை கூறி, அவனை அவன் நாட்டுக்கு அனுப்பி விட்டுத் தான் விண்வழியாக வஞ்சி நகரஞ் சென்றாள். அங்கே கண்ணகியைத் தொழுது அவள் மதுரையை யழித்ததற்கு ஏதுக் கேட்டனள். கண்ணகித் தெய்வம் தனது முன் வரலாற்றினையும், பின் நிகழ்வனவற்றையும், கணவனிறந்த துன்பம் பொறுக்கமாட்டாது மதுரையைத் தான் அழித்ததையுங் கூறினள். பின்னர் மணிமேகலை வஞ்சிநகரத்தினுள்ளே சென்று சைவவாதி, பிரமவாதி, வைணவவாதி, வேதவாதி, ஆசீவகர், நிகண்டர், சாங்கியர், பூதவாதி முதலியோர் கொள்கைகளைக் கேட்டறிந்தாள்.

அங்கே அவள் தவமியற்றிக் கொண்டிருந்த மாசாத்து வானைக் கண்டு அவன் வரலாற்றினை அறிந்துகொண்டு, அறவணவடிகளும், மாதவியும், சுதமதியும் கச்சிமாநகர் சென்றதறிந்து, தானுங் கச்சிநகர் சென்று அரசனால் கந்திற்பாவைத் தெய்வத்தின் கட்டளைப்படி யமைக்கப்பட்ட பொய்கையுஞ் சோலையுஞ் சூழ்ந்த இடத்திலிருந்து கொண்டு, புத்தபீடிகை, தீவதிலகை, மணிமேகலா தெய்வம் என்பவை களுக்குக் கோயிலும் அமைப்பித்துப், புத்தபீடிகையில் அமுதசுரபியை வைத்து எல்லா உயிர்க்கும் அமுதுதவினள். பின்னர் மணிமேகலை அறவணவடிகளைத் தொழுது புத்த சமயக் கொள்கைகளையும், புத்தர் பெருமையையும் ஐயந் திரிபற உணர்ந்து, பிறவித்துன்பம் ஒழியும்படி தவம் நோற்றுக்கொண்டிருந்தாள்.

## 6. பதினெண் கீழ்க்கணக்கு

**திருக்குறள் :**

ஆசிரியர் திருவள்ளுவனர் திருக்குறள் செய்தகாலம் இன்னதென்று தெளிவாக விளங்கவில்லை. ( திருவள்ளுவ மாலையுள் மாமூலனு ரென்பவர் பாடிய பாட்டுக் காணப் படுகின்றது.

( இப்புலவர் பரணர்க்கு முற்பட்ட காலத்தவர். திருவள்ளுவமாலையுட் போந்த கோதமனுரென்பவர் களங் காய்க்கண்ணி நார்முடிச்சேரலைப் பாடிய கோதமனுரெனின் அவர் காலத்திற்கு முன்பே திருக்குறள் இயற்றப்பட் டிருக்கவேண்டும்.) களங்காய்க் கண்ணியின் முன்னோனாகிய இமயவரம்பனுக்குச் சிலப்பதிகார வரலாற்றுத் தலைவ னாகிய கோவலன் குடும்பத்தில், ஒன்பது தலைமுறைக்கு முன்னிருந்த கோவல னென்பான் நண்பனென்று சிலப்பதிகாரங் கூறுகின்றது. [ சிலப்பதிகாரக் காலம்

கி. பி. ௩௪௪: சிலப்பதிகாரத்துக்கு ஏறக்குறைய உ௱ ஆண்டுகட்கு முன்னே திருக்குறள் இயற்றப்பட்டிருத்தல் கூடும். மணிமேகலை, சிலப்பதிகாரம் என்ற இரண்டு நூல்களிலும் திருக்குறளைப் பற்றிய குறிப்புக் காணப்படு கின்றது. கலித்தொகை முதலிய சங்க நூல்களிலுந் திருக்குறட் சொற்றொடர்களுங் கருத்துக்களும் வந் துள்ளன.

கோதமனா ரென்பவர் தருமரைப்பற்றிப் புறநானூற் றுள் ஒரு பாட்டுப் பாடியுள்ளார். அத்தருமரென்பவர் யாரென்று விளங்கவில்லை.

திருக்குறள் நூலுள் "ஆவோடல்லது யகரமுதலாது" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்துக்கு மாறாகிய சொல் லொன்றுங் காணப்படாமையாலும், நாற்குல முதலிய கொள்கைகள் திருக்குறளிற் காணப்படாமையாலும், முதுகுடுமியைப் பற்றிய புறநானூற்றுப் பாடலுள் 'யூப' முதலிய வடசொற்கள் காணப்படுகின்றமையாலும், அச் செய்யுள் எழுந்த காலத்துக்கு முன்பேயே திருக்குறள் இயற்றப்பட்டிருத்தல் கூடுமாதலாலும், முதுகுடுமி காலம் மிகப் பழமையுடையதாதலாலும், தொல்காப்பியத்திற்குப் பின் ஏற்பட்ட இலக்கியங்களுள் திருக்குறளே முதலாய நூல் என்று கருத இடமுண்டு. (முதுகுடுமியின் காலம் கி. மு. ௪ ஆம் நூற்றாண்டே யாயின், திருவள்ளுவர் காலம் அதற்கு முற்பட்டதாதல்வேண்டும். ஆகவே கி. மு. ரு ஆம் நூற்றாண்டில் திருவள்ளுவர் நூல் தோன்றியிருத்தல்கூடும். அது கலித்தொகை, சிலப்பதிகாரம் முதலிய நூல்கட்கு முற்பட்டதென்பது தெளிவு.)

(திருவள்ளுவர், கி. மு. உ௦௦ முதல் ௧௬௦ வரை (மகா வம்சத்தில் கூறியபடி) இலங்கையில் அரசாண்ட ஏலேல்,

சிங்கன் காலத்தவர் என்று கேட்கப்படுதலின், அவர் காலமும் அதுவேயா யிருக்கலாம். (திருவள்ளுவமாலை முற்றிலும் பிற்காலத்தில் புனையப்பட்ட நூலாயினும், இக்காலம் திருவள்ளுவர் காலம் என்பதற்குத் தடையில்லை.) திருவள்ளுவர் 'சிற்றுயிர்களைக் கொல்லக்கூடாது, பிறர் கொன்ற பிராணியின் ஊனைப் புசிக்கலாம்' என்னும் புத்த சமயத்தார் கொள்கையை மறுத்துள்ளாராகலின், இவர் புத்த காலத்திற்குப் பிற்பட்டவர் என்பது கருதத்தக்கது. அக்குறள் வருமாறு :

"தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவா ரில்." (குறள். உ௫சு)

ஆசிரியர் திருவள்ளுவரைப்பற்றித் தெளிவாகிய வரலாறு யாதுமில்லை. திருவள்ளுவமாலையுள் சில செய்திகள் அறியக்கிடக்கின்றன. திருவள்ளுவமாலையானது வெவ்வேறு காலத்திருந்த பல புலவர்களால் இயற்றப்பட்ட பாடல்களின் தொகுதியாகத் தோன்றுகிறது. நாமகள் முதலியோராற் கூறப்படுஞ் சிலபாடல்கள் பிறராற் சேர்க்கப் பட்டனவோ வென்ற ஐயம் நிகழக்கூடியதே. ஆராய்ச்சிக் காரர் சிலர், திருவள்ளுவமாலை முழுவதுமே வெண்பா யாப்பினால் ஒரே புலவரால் பல புலவர்கள் பாடியதுபோலப் பாடப்பெற்ற நூலென்று கருதுகிறார்கள். எவ்வாறாயினும், திருவள்ளுவரைப்பற்றி யறிவதற்கு அஃதோர் பண்டைக் கருவிநூலாகத் திகழ்கிறது. திருவள்ளுவர் ஆதிக்கும், பகவனுக்கும் பிறந்த எழு மக்களில் ஒருவரென்றும், அவர் வாசுகி யென்னும் வேளாளப்பெண்ணை மணந்தாரென்றும், ஏலேல சிங்கரென்னும் பெருஞ்செல்வரால் ஆதரிக்கப்பட்டாரென்றும், அவர் நெய்தற்றொழிலை மேற்கொண்டாரென்றும், அவர் மனைவி கற்புடைமையால் விந்தைச்செயல்கள் நிகழ்த்தினரென்றும் கபிலரகவல் என்ற நூலாலுங்

கேள்விக் கதைகளாலும் அறிகின்றோம். இவர் தமது நூலுள் வேளாண்மையையும் உழவையும் எடுத்துக் கூறிய வாறு, நெய்தற்றொழில் முதலியவற்றை எடுத்துக் கூறவில்லை. இவர் மனைவி வேளாண்மரபின ரென்னுங் கோட்பாடிருத் தலால், இவரும் பிறப்பால் வேளாள மரபினராயிருத்தல் கூடுமென்று சில அறிஞர்கள் கூறுகின்றார்கள். இவர் வள்ளுவர் மனையில் வளர்ந்திருத்தல்கூடும். மணிமேகலையுள், பசுவினாற் பாலூட்டி வளர்க்கப்பட்ட பார்ப்பனமகவு ஆமகன் என் றழைக்கப்பட்டதுபோல, வள்ளுவர் மனையில் வளர்ந்த இவரும் வள்ளுவர் என்ற பெயர் பெற்றிருத்தல் கூடும். 'மறந்தேயும் வள்ளுவ னென்பானோர் பேதை' என்ற மாமூலனார் திருவாக்கினாலும் அது விளங்கும். ஞானமிர்த நூலுள் யாளிதத்தன் என்பானுக்கு ஒரு புலைச்சிமாட்டு ஏழு புதல்வர்கள் பிறந்தனரென்று கூறப்பட்டது. அவ் வெழுவர் யாவரென்று கூறப்படவில்லை. யாளிதத்தன் என்பது வணிகப் பெயராகத் தோன்றுகின்றது. அக் காலத்தில் வேளாளரில் ஒரு பகுதியார் வணிகத்தை நடத்தின ரென்பது வேளாளர் சிறப்புக்கூறும் பட்டினப் பாலைப் பகுதியினால் இனிது விளங்கும். இவ்வெழுவருள் ஒளவையும் ஒருவராகக் கூறுவர். ஒளவையார் காலம் மாமூலனார் காலமே. யாளிதத்தன் வரலாற்றினால் அப் பெயருடைய வேளாள வணிக னொருவனுக்கும், புலைச்சி யொருத்திக்கும் பிறந்து வள்ளுவர் மனையில் வளர்ந்தவர் திருக்குறள் ஆசிரியரென்பது கருதப்படும். சிலப்பதிகாரக் காலத்துக்கு நெடுநாட்குப் பின்னிருந்த நக்கீரர் காலம்வரை ஆசிரியர் இருந்து உருத்திரசன்மரோடு சங்கப்பலகையில் வீற் றிருந்தாரென்று கொள்ளுதல் வரலாற்று முறைக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. இறையனாரகப்பொருள் தோன்றிய காலத்தே (உருத்திரசன்மரோடு ஆசிரியர்

திருவள்ளுவர் ஒருங்கிருந்தாரென்று கொள்ளுமிடத்து அக்காலத்தே நக்கீரர் முதலாயினோர் இருந்தாரென்று கொள்ள இடமில்லை. ஆனால் அக்கொள்கைப்படி திருவள்ளுவர் காலம் கி. மு. நாலாவது நூற்றாண்டு என்று கருத இடமுண்டு. ) ஏனெனில், ( இறையனாரகப்பொருள் தோன்றிய காலம் பன்னிரண்டாண்டு நிலைபெற்றிருந்த ஒரு பஞ்சத்தின் முடிவுக் காலமென்று அந்நூலுரையால் விளங்குகின்றது. அத்தகைய பஞ்சம் கி. மு. நான்காவது நூற்றாண்டில் நிகழ்ந்ததாக வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றார்களாதலினென்க. )

திருவள்ளுவர் கூறிய கருத்துக்கள் எச்சமயத்தாரும் ஏற்றுக்கொள்ளத் தக்கனவென்பது கல்லாடரியற்றிய திருவள்ளுவமாலை கூ ஆவது செய்யுளாலும், கல்லாடத்துள் 'சமயக் கணக்கர் மதிவழி கூறாது, உலகியல் கூறிப் பொருள்இது வென்ற, வள்ளுவ' னென்றமையாலுந் தெளியப்படும். ( சீத்தலைச் சாத்தனா ரென்பவர் 'மூன்று மன்னருக்குஞ் சென்னியில் அணியத்தக்க மாலை' யென்று திருக்குறளைச் சிறப்பித்தார். பரணர் பாடிய பாடலினால் உலகத்தார் மனத்திலுள்ளவற்றை யெல்லாம் இரண்டடிக் குறள் வெண்பாவால், திருமால் உலகளந்ததுபோல அளந்து கூறியுள்ளார் என்பது அறியக்கிடக்கின்றது. நக்கீரனார் இவரைச் சிறப்பிக்கும்பொழுது,

> 'தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்
> ஆனா அறமுதலா அந்நான்கும்—ஏனோருக்கு
> ஊழின் உரைத்தார்.''

என்றனர்.

வடமொழிப் பற்றுடையவர் சிலர் வேதக்கருத்துக்களை மிகத் தெளிவுபட ஆசிரியர் கூறியிருக்கின்றாரென்ப;

'தானே முழுதுணர்ந்து' என்றமையின் அது பொருந்தாது. 'பாவிற்கு வள்ளுவர் வெண்பா' வென்றனர் கவிசாகரப் பெருந்தேவனார். அறம் பொருள் இன்பம் என்ற மூன்று பாவிற்கும் இயலமைப்பு திருவள்ளுவமாலையில் உரு, உசு, உஎ ஆம் பாட்டுக்களுட் காணப்படும். உஅ ஆம் பாட்டினுள் திருக்குறள் அதிகாரம் கநந என்பது குறிக்கப்பட்டது. இது காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனாரால் பாடப்பட்டது. அவர் காலம் ஏறக்குறைய இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது. இக்காலத்தில் சிலர் முதல் மூன்றதிகாரமும் ஆசிரியரால் இயற்றப்படவில்லையென்று தமக்குத் தோன்றியவாறு கூறுகின்றார்கள். அதற்குப் போதிய ஏதுக்களில்லை.

பண்டைத் தமிழ்மறைகள் மறைந்தபின் அவை கூறிய அறம் பொருளின்பம் வீடென்னும் நான்கினையுந் தெள்ளிதிற் றெரிக்கும் பொதுமறை திருவள்ளுவர் நூலேயாமென்றுணர்க. இந் நூலுட் கடவுட் கொள்கை பற்றிய சொற்கள் யாவுஞ் செந்தமிழிலே யமைந்து நூலின் பொதுத் தன்மையை விளக்குவன வாயிருக்கின்றன. பிரமம், ஆன்மா, தத்துவம், ஞானம், வருணம், ஆசிரமம், வேதம், சாத்திரம், யாகம், விட்ணு முதலிய சொற்கள் இதன்கட் காணப்படவில்லை. இல்லறம் துறவறமென்று மக்கள் வாழ்வு பிரிக்கப்பட்டதே யொழிய வடநூலிற் கூறும் நால்வகை நிலைபற்றி அப் பகுப்பு அமையவில்லை. நால்வகைக் குலமும் இந் நூலுள் விதந்தோதப்படவில்லை. பண்டைத் தமிழரது கடவுட் கொள்கையை நன்கு அறிந்து கொள்வதற்கு இந் நூலே தக்க கருவியாம்.

ஆரியக் கருத்துக்கள் சிலவே இந்நூலுட் காணப்படினும், அவை பெரிதுந் தழுவிக் கொள்ளப்படவில்லை. அவற்றுள் வேள்வி ஒன்று.

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணுமை நன்று." (குறள். உருக)

என்றது காண்க.

'மானம்' என்னும் அதிகாரத்தில்,

"இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல்." (குறள். கூகக)

என்னுந் திருக்குறளுக்கு உரை கூறுமிடத்து ஆசிரியர் பரிமேலழகியார்,

'இறப்ப வருவழி இளிவந்தன செய்தாயினும் உய்க' எனும் வடநூன் முறையை மறுத்து 'உடம்பினது நிலையின்மையையும், மானத்தினது நிலையுடைமையையுந் தூக்கி அவை செய்யற்க என்பதாம்' என்றது காண்க. இவ்வாறே,

"ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. (குறள். கூருசு)

என்றவிடத்து ஆரிய அறநூற் பொதுவிதி வினைத்தூய்மை யுடையவனுக்கு எய்தாமையைப் பரிமேலழகர் விதந் தோதினமை காண்க. அறநூற் பொதுவிதியாதெனில், "இறந்த மூப்பினராய இருமுதுகுரவருங், கற்புடை மனைவி யுங், குழந்தையும் பசியான் வருந்து மெல்லைக்கண் தீயன பலவுஞ் செய்தாயினும் புறந்தருக" வென்பதாம் (ஆசிரியர் பரிமேலழகருரை.)

சாணக்கியரும் சுக்கிரநீதி நூலுடையாருந் தத்தம் பொருள்நூல்களிற் கள்ளினைச் சிறிதளவுண்ண இடங் கொடுத்திருக்க, ஆசிரியர் திருவள்ளுவனார் பொருட்பாலுட் கள்ளுண்ணாமையை நன்கு வற்புறுத்திப் போந்தனர். சுக்கிரநீதியுள் முதல் அத்தியாயம் கoசு, ககக ஆம்

சுலோகங்களில் சிறிதளவு உண்ணப்படுங் கள் மதிநுட்பத்தையுந், தூயஅறிவையும் தருவதாகும் என்றது காண்க. ஆசிரியர் திருவள்ளுவனார்,

"துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்." (குறள். ௯௨௬)

என்றது உற்றுநோக்கத்தக்கது. பிறவும் அன்ன.

திருக்குறள் கூறும் பொருள் இந்நாட்டிற் பலரும் அறிந்ததே. அந்நூலை நன்கு கற்பதனால் அது அறியத் தக்கது.

பாயிரத்துட் கடவுள் வாழ்த்தும், மழையைச் சிறப்பிக்கும் முகத்தால் அக்கடவுளின் அருட் 'சக்தி' வணக்கமும், நீத்தார் பெருமையில், கடவுள் அருள் பெற்று உலகத்துக்குள்ளதை உள்ளவாறுணர்த்தும் கடவுளடியார் வணக்கமுங் கூறியபின்னர், எடுத்துக்கொண்ட பொருளாகிய அறத்தின் றன்மை விளக்கப்பட்டது. அறத்துப்பாலின் எஞ்சிய பகுதியினுள் இல்லறவியலும் துறவறவியலுங் கூறப்பட்டன.

இல்லறவியலுள் இல்வாழ்க்கை, நன்மனைவி, நன்மக்கட்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றியறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, தீவினையச்சம், ஒப்புரவறிதல், ஈகை, புகழ் என்னும் பொருள்களைப் பப்பத்துக் குறள்களா லமைத்த அதிகாரங்களுள்ளன. இல்லறவியலினாலே ஒருவன் கற்புடைய *நன்மனைவியோடு இல்லறம் நடத்தி நன்மக்கட்பேறுடையவனாய் மனக்குற்றம், மொழிக்குற்றம், மெய்யால் நிகழும் ஒழுக்கக் குற்றம் முதலியன இல்லாதவனாய்ச்

சுற்றத்தார்பால் அன்பும், விருந்தினர்மாட்டு விருந்தோம்பலும், உலகத்தார்மாட்டு ஒப்புரவறிதலும், வறியார்மாட்டு ஈகையு முடையவனு யிருத்தல் வேண்டும் என்பதும், இவ்வுலக வாழ்க்கைக்கு ஈண்டுப் பெறும்பயன் புகழ் என்பதும் அறியற் பாலன.

துறவறவியல் பன்னிரண்டு அதிகாரங்களையுடையது. இல்லறத்திற் குயிராக அன்பினையும், துறவறத்திற் குயிராக அருளினையும் ஆசிரியர் மேற்கொண்டனர். துறவறவியலுள் அருளொழுக்கத்தையே ஒன்பது அதிகாரங்களில் (உ௫ முதல் ௩௩ வரை) பலவாறுக அவர் வற்புறுத்தினர். அவர் துறவிகளின் போலித் தோற்றத்தையும், அதற்கேற்ற புறவொழுக்கத்தையுங் கடிந்துள்ளார்.

"மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்."

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின்." (குறள். உ௭௮, உ௮0)

என்பன காண்க.

தவத்தினுல் கூற்றத்தையும் வெல்லலா மென்று இவர் கூறுதலால், இவர் யோகப்பயிற்சியைத் தழுவிக்கொண்டன ரென்பு.

"காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே."

என்னுந் திருமந்திரக் கருத்து,

"கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு." (குறள். உ௬௯)

என்ற திருக்குறட் கருத்தினை வற்புறுத்துதல் காண்க.

தவத்தினல் வேண்டிய வேண்டியாங் கெய்தலாம் என்றமையால், பயன்கருதிய இறைவழிபாடு குறிக்கப் பட்டமை காண்க.

துறவறவியலில் இறுதியில் நின்ற நான்கதிகாரங்களும், உலக நிலையாமை கண்டு யான் எனது என்னுஞ் செருக் கற்று, எப்பொருட்குஞ் சார்பாய் நிற்கும் பற்றற்ற மெய்ப் பொருளினைப் பற்றிநின்று, கண்டு கேட்டுத் தெளிந்து அதனோடு சார்புற்று, முக்குற்ற மறவொழுகி இடையரு இன்ப வாழ்க்கையாகிய பேரா வாழ்வினைப் பெற முயல்வதே, புலம்புரிந் துறையும் பேரறமா மென்று அறிவுறுத்தல் காண்க.

ஊழின்வலியைப்பற்றிக் கூறும் அதிகாரத்தோடு அறத்துப்பால் முடிகின்றது.

பொருட்பாலுள் அரசன், அமைச்சன், படை, நாடு, அரண், பொருள், நட்பு என்னும் பகுதிகளைக் கூறு மதிகாரங்கள் எழுபது உள்ளன. வடமொழி ஆசிரியர்கள் போல அரசன் முதலியோர் கடமைகளை மிக விரித்துக் கூறாது, அன்னோர்க்கு இன்றியமையாச் சிறப்பினவாய விழுமிய கொள்கைகளை மட்டும் திருவள்ளுவனார் செவ்விதிற் றெரித்துள்ளார். பிறநூல்களுட் கூறிய இழிவு மிக்க சூழ்ச்சிகளை இவர் யாண்டுங் கூறிற்றிலர்.

மன்னனுக்கும் மன்னுயிர்கட்கும் ஒரு தலையான் வேண்டப்படுவனவாகிய கல்வி, கேள்வி, பகுத்தறிவு, குற்ற நீக்கம், நல்லாரிணக்கம், சிற்றினஞ்சேராமை, இடமுங் காலமுந் தம்வலியும் நோக்கித் தெரிந்து செயல், சோர் வின்மை முதலியவற்றையும், அரசர்க்கே சிறக்குஞ் செங் கோன்மை, ஒற்றாடல் முதலியவற்றையும் வள்ளுவனார் அரசியலுள் விதந்தனர். அமைச்சர்க்கு இன்றியமையாத

வினைத்திட்பம், வினைத்தூய்மை, குறிப்பறிதல், அவையறிதல், அவையஞ்சாமை, தூது, மன்னரைச் சேர்ந்தொழுகல் முதலியவற்றை வகுத்தோதிய பின்னர்; நன்னாடு, நல்லரண், நற்படை இவற்றினியல்பையும்; பொருள் செயல்வகை, நன்னட்புக்கோடல், தீநட்புவிலக்கல், கயமை, பெரியாரைப் பிழையாமை என்பவற்றையும்; குடிமை, பெருமை, மானம், சான்றாண்மை, பண்புடைமை, நாணுடைமை, குடிசெயல் வகை, உழவு முதலிய குடிகட்கு இன்றியமையாது வேண்டப்படுங் குணஞ்செயல்களையும்; வாழ்க்கைக்கு இடையூறான இருமனப்பெண்டிர், கவறு, கள், பெண்வழிச் சேறல், நன்றியில் செல்வம், இரவு, இரவச்சம் முதலியவற்றையும் : நல்வாழ்வுக்கிடையூறாகிய பிணியினை நீக்கும் மருந்தினையும் அவர் இனிதெடுத் தியம்பினர்.

காமத்துப்பால் உரு அதிகாரங்களாற் கூறப்பட்டது, அவர் 'காமத்துப்பா'லுட் களவுங் கற்புங் கூறுமிடத்து முதல் ஐந்ததிகாரத்துள் புணர்ச்சியினையும், ஏனையவற்றுள் பிரிவினையுமே சிறப்பித்தனர். குறிப்பறிதற்கண் மொழியினும் நோக்கே சிறந்ததென்பதைக்,

> " கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
> என்ன பயனு மில." (குறள். கசOO)

என்னுந் திருக்குறளினாலே ஆசிரியர் அறிவித்தார்.

> " கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
> ஒண்டொடி கண்ணே யுள." (குறள். கசOக)

என்னுந் திருக்குறளானது பல பெரும்புலவர்களால் எடுத்தாளப்பட்டது. சேரமான் பெருமாணயனார் ஆதியுலாவில் இதனை இனிதெடுத்தாண்டனர். ஆசிரியர் மெய்கண்டாரும்,

> " கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனைக்
> கண்டடனாய் மன்னுதலைக் காண்."

என்றது காண்க.

ஆசிரியர் திருவள்ளுவனார் புதிது புதிதாகப் பெறும் அறிவினால் வரும் இன்பத்தை அங்ஙனம் பெறுங் காம இன்பத்திற்கும் நன்னட்பின் இனிமைக்கும் உவமித்தன ரென்பது,

" அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு." (குறள். ௧௧௧0)

" நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு." (குறள். எ௮௩)

என்றமையால் விளங்கும்.

பிரிவாற்றாமைக்கண், தலைவி கூறுங்கூற்று மிகவும் நயம்பெற அமைக்கப்பட்டது.

" செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை." (குறள். ௧௧௫௧)

பொழுதுகண்டிரங்கல் என்னும் அதிகாரத்துள், காதல் நோய் மிக அழகிய மலராக உருவகிக்கப்பட்டது.

" காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்." (குறள். ௧உஉ௭)

குழலிசையானது காதல் நோயை வளர்க்கு மென்னுங் கருத்தினை வள்ளுவனார்,

" அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலுங் கொல்லும் படை." (குறள். ௧உஉ௮)

என்றனர்.

உழுவலன்பின் சிறப்பினைப் புலவி நுணுக்கத்துட் போந்த ஒரு திருக்குறளால் ஆசிரியர் குறிப்பித்தனர்.

" இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்." (குறள். ௧௩௧௫

ஊடலின் சிறப்பினை நகைச்சுவை விளக்குமோர் குறளால் ஆசிரியர் விளக்கினர்.

" ஊடலிற் றோற்றவர் வென்றார் அதுமன்னுங்
கூடலிற் காணப் படும்.'' (குறள்: ௧௩௨௭)

திருக்குறளின் நயங்களைப்பற்றியும், ஆசிரியருக்கும் நூலுக்குமுள்ள பெயர்களைப்பற்றியும், பல அறிஞர் கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளாராதலின், அவற்றைப்பற்றிக் கூறாது விரிவஞ்சி விடுத்தாம்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் இதனை ஒன்றாகக் கூறக்கூடாதென்பது காலஞ்சென்ற திரு. தாமோதரம் பிள்ளையவர்கள் முதலிய சில அறிஞர்களின் கருத்து. முப்பாலென்று வேறு நூல் காணப்படாமையின் இவர்கள் கருத்தைத் தழுவிக்கொள்ள முடியவில்லை. முப்பாலென்பது திருக்குறளென்று பலரும், அஃதன்றென்று சிலருங் கருதுகின்றார்கள். திரு. தாமோதரம் பிள்ளையவர்கள் முப்பாலென்பது வேறு நூலென்று வற்புறுத்தினர். அவர் "திருக்குறளே முப்பாலாயின், அஃது எல்லாக் கீழ்க் கணக்கு நூல்களுக்கும் முற்பட்ட முதல் கீழ்க்கணக்காகும். அது நான்கு உறுதிப்பொருளையும் கூறுவதாய் ஏனைக் கீழ்க்கணக்குகள்போல ஐந்நூறு செய்யுட்களுக்குள் ளடங்காது ஆயிரத்தின் மேற்பட்ட குறள் வெண்பாக்களால் அமைந்திருப்பதால், அது கீழ்க்கணக்காகா" தென்பர். திருவள்ளுவ மாலையிற் பல பாடல்களில் முப்பால் என்ற பெயர் காணப்படுகின்றது. கல்லாடர், சீத்தலைச் சாத்தனார், மருத்துவன் தாமோதரனார், நாகன் தேவனார், கோதமனார், முகையலூர்ச் சிறு கருந்தும்பியார் முதலியோர்களாற் கூறப்பட்ட பாடல்களுள் 'வள்ளுவர் முப்பால்' என்ற சொற்றொடர் வருகின்றது. நல்லந்துவனார், கீரந்தையார்

முதலியோர் பாடல்களில், முப்பாலென்ற சொற்றொடர் தனியேயுங் காணப்படுகின்றது. 'முப்பா'லென்று வேறு நூல் காணப்படாமையின் திருவள்ளுவர் நூலே 'முப்பா' லெனக் கொள்ளத்தக்கது.)

ஏனைக் கீழ்க்கணக்கு நூல்களாவன: நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, களவழி நாற்பது, கார் நாற்பது, ஐந்திணையைப்பற்றிய திணைமொழியைம்பது, திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணையைம்பது, ஐந்திணை யெழுபது என்ற நான்கு நூல்கள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்ச மூலம், இன்னிலை, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி என்பன.

# இலக்கிய வரலாறு
## இரண்டாம் பகுதி

இவ் வரலாற்றின் முதற்பகுதிக்கண் அமைந்துள்ள ஏழு தலைப்புக்களும் பெரும்பான்மையும் தமிழகத் தொன்மையும், முச்சங்க முதன்மையும், அக்கால இலக்கண இலக்கியப் பெருமையும், புலவர் மன்னர் மாந்தர் வாழ்வுகளும் ஆய்வு முறையாகக் கிளர்ந்தெடுத்தோதுகின்றன.

இரண்டாம் பகுதிக்கண் மாணிக்கவாசகர் காலம், சமணர் ஆட்சிக்காலம், ஆழ்வார்காலம், உரையாசிரியர் காலம், தத்துவ நூல்கள் முதலிய பதினெட்டுத் தலைப்புக்கள் அமைந்துள்ளன. இவை பெரும்பாலும் சமயத் தொடர்பும், பண்டைப் பழந் தமிழ் உரையாசிரியர்களின் நுட்பதிட்ப விளக்கம் வாய்ந்த பேருரைப் பெருமையும், மெய்யறிவுப் பொருள் நூல்களின் சொல்லொணு மேன்மையும் விளக்குகின்றன.

அதனுல் இவற்றை இரண்டாம் பகுதிக்கண் தொடர்புற அமைத்து வெளியிடலாயிற்று.

இலக்கிய வரலாறு

முதற்பகுதி

முற்றும்.

கழக வெளியீடு: ௲௧௪

பதிப்பாளர்:
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்.,
1/140, பிராட்வே, சென்னை - 1.

தலைமை நிலையம்:
98, கீழைத் தேர்த்தெரு, திருநெல்வேலி-6.

விலை ரூ. 3-00.

அப்பர் அச்சகம், சென்னை-1.